# ප්‍රගති වාර්තාව

## முன்னேற்ற அறிக்கை

# Progress Report

අයවැය කාරක සභා අවස්ථාව
வரவுசெலவுத் திட்ட குழுநிலை
**Budget Debate Committee Stage**

# 2025

වැය ශීර්ෂ අංක
செலவுத் தலைப்பு இலக்கம்
**Expenditure Head No** **118**

**කෘෂිකර්ම, පශු සම්පත්, ඉඩම් හා වාරිමාර්ග අමාත්‍යාංශය**
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு
**Ministry of Agriculture, Livestock, Lands and Irrigation**

**කෘෂිකර්ම සහ පශු සම්පත් අංශ**
கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் பிரிவு
Agriculture and Livestock Divisions

# முன்னேற்ற அறிக்கை

## வரவுசெலவுத் திட்ட குழுநிலை *2025*

# கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

*இல. 80/5, கொவிஜன மந்திரய, ரஜமல்வத்த ஒழுங்கை, பத்தரமுல்ல*

*முன்னேற்ற அறிக்கை*

*வரவுசெலவுத் திட்ட குழுநிலை 2025*

*(2024.12.31 வரை கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் 2025 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் இலக்குகள் என்பவற்றை உள்ளடக்கிய முன்னேற்ற அறிக்கை )*

*அமைச்சின் செலவுத் தலைப்பு - இலக்கம் 118*

*கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு*

- *கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் – கௌரவ திரு. கே.டீ லால் காந்த அவர்கள்*
    - *கமத்தொழில் மற்றும் கால்நடை வள அபிவிருத்தி பிரதி அமைச்சர் – கௌரவ திரு. நாமல் கருணாரத்ன அவர்கள்*
    - *காணி மற்றும் நீர்ப்பாசனப் பிரதி அமைச்சர் – கௌரவ திரு. சுசில் ரணசிங்க அவர்கள்*
- *அமைச்சின் செயலாளர் - திரு. டீ.பீ. விக்கிரமசிங்க அவர்கள்*

| | |
|---|---|
| *தொலைபேசி* | *011-2034300* |
| *தொலைநகல்* | *011-2868910* |
| *மின்னஞ்சல் முகவரி* | *info@agrimin.gov.lk* |
| *இணையத்தளம்* | *www.agrimin.gov.lk* |

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| அறிமுகம் | *04* |
| கமத்தொழில் பிரிவு மற்றும் கால்நடை வளங்கள் பிரிவு | *08* |
| *2024* ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் அவற்றின் நிதிசார் முன்னேற்றம் (செலவுத் தலைப்பு இலக்கம் *118* இன் கீழ், *31/12/2024* ஆம் திகதி வரை) | *09* |
| *2025* ஆம் ஆண்டில் அபிவிருத்தித் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் மற்றும் பௌதீக இலக்குகள் | *12* |
| கமத்தொழில்ப் பிரிவு | *16* |
| செலவுத் தலைப்பு இலக்கம் *118* இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம் | *17* |
| செலவுத் தலைப்பு இலக்கம் *118* இன் கீழ் மீண்டுவரும் செலவுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பிரதான நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் | *22* |
| கமத்தொழில் அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட விஷேட செயற்திட்டங்கள் | *23* |
| *2024* ஆம் ஆண்டில் வெளிநாட்டு நிதியுதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்திட்டங்களின் முன்னேற்றம் | *24* |
| கமத்தொழில் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களால் செயற்படுத்தப்படும் பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் | *38* |
| கால்நடை வளங்கள் பிரிவு | *123* |
| செலவுத் தலைப்பு இலக்கம் *118* இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பிரதான அபிவிருத்தித் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம் | *124* |
| *2024* ஆம் ஆண்டில் வெளிநாட்டு நிதியுதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்திட்டங்களின் முன்னேற்றம் | *130* |
| கால்நடை வளங்கள் பிரிவின் கீழ் உள்ள நிறுவனங்களின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் பிரதான அபிவிருத்தித் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம் | *131* |

# அறிமுகம்

*2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் திகதி இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 2412/08 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு நிறுவப்பட்டது.*

*இந்த அமைச்சு 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் 23 ஆம் திகதி இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2355/10 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாக கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு என நிறுவப்பட்டிருந்ததுடன் அதனைத் தொடர்ந்து இது 2024 செப்டம்பர் 27 ஆம் திகதி இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2403/53 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் திருத்தப்பட்டு கமத்தொழில், காணி, கால்நடை வளங்கள், நீர்ப்பாசனம், மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சு என நிறுவப்பட்டது. பின்னர் 2412/08 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு, நிர்வாக வசதிக்காக விவசாயம், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசனம் என நான்கு துறைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.*

*அதன்படி, இந்த அறிக்கையில், விவசாயம் மற்றும் கால்நடை வளங்கள் ஆகிய துறைகள் மற்றும் அந்தத் துறைகளின் கீழ் உள்ள நிறுவனங்கள் ஆகியவற்றின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் நிகழ்ச்சித் திட்டங்களின் 31.12.2024 ஆம் திகதி வரையிலான நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் மற்றும் 2025 ஆம் ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக இலக்குகள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன. காணி மற்றும் நீர்ப்பாசனத் துறைகள் தத்தமது முன்னேற்ற அறிக்கைகளைத் தனித்தனியாகத் தயாரித்து பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கவுள்ளன.*

- *கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் பிரிவுடன் தொடர்பான கடமைகளும் பணிகளும் (2024 நவம்பர் மாதம் 25 ஆம் திகதிக்குரிய 2412/08 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமாணி அறிவித்தலுக்கு அமைவாக )*

1 *அரசினால் செயற்படுத்தப்படும் தேசியக் கொள்கைகளின் அடிப்படைக்கமையத் தாபிக்கப்பட்ட கமத்தொழில் மற்றும் நீர்ப்பாசனம் பற்றிய விடயத்துடனும் மற்றும் II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களுடனும் தொடர்பான விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைத் தயாரித்தலும், நடைமுறைப்படுத்தலும், தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்*

2 *அமைச்சுக்களின் விடய எல்லைக்குள் வருகின்ற பொதுமக்கள் சேவைகளை வினைத்திறமையாகவும் மனிதநேயரீதியிலும் பெற்றுக்கொடுத்தல்*

3 *ஊழலும், வீண்விரயமும் இல்லாதொழிக்கப்படுகின்ற அதேவேளை, அமைச்சின் பணிகள் நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்தி, நவீன முகாமைத்துவ நுணுக்கங்களையும் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தி அனைத்து முறைமைகளையும் நடைமுறைகளையும் மறுசீரமைத்தல்.*

4 *நாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் உணவு உற்பத்தி செய்தல்.*

5 *தரமான விவசாய உற்பத்திகள் மூலம் பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான உணவு வழங்குதலை உறுதி செய்தல்.*

6 *உள்நாட்டில் பயனுள்ளவாறு பயிரிட முடியுமான உணவு உற்பத்தியை ஊக்குவித்தல்.*

7 *இறக்குமதி செய்யப்படும் பயிர்களுக்குப் பொருத்தமான பதிலீட்டுப் பயிர்களை உள்நாட்டில் உற்பத்தி செய்தலை ஊக்குவித்தல்.*

8 *ஏற்றுமதி விவசாய கிராமங்களை மேம்படுத்தல்.*

9 தற்கால விவசாய தரவு முறைமையை நடைமுறைப்படுத்தல்.

10 இருப்பைக் கையாளுவதற்கும் மற்றும் வழங்கல் நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதற்காக நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்

11 பயிர் பல்வகைப் படுத்துகையின் அடிப்படையிலான கமத்தொழில் உற்பத்திகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கை எடுத்தல்

12 உள்நாட்டு கமத்தொழில் உற்பத்திகளின் தரத்தை நுகர்வோருக்கு உறுதிப்படுத்து வதற்குரிய திறமுறைகளைத் தயாரித்தல்.

13 பாரம்பரிய விவசாயிகளை, இளைஞர்களை மற்றும் மாணவர்களை நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய விவசாய கற்கைகளுக்காக வழிப்படுத்துதல்.

14 இளம் விவசாய தொழில் முயற்சியாளர்களை உருவாக்குதல்.

15 இரசாயனக் பீடைநாசினிகள் மற்றும் ஏனைய இரசாயனக் கலவைகள் குறித்த தரத்துடன் பயன்படுத்துவதற்கு ஒழுங்குறுத்தல்.

16 விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோருக்கு பயிர்ச்செய்கை காப்புறுதி முறைமை மற்றும் விவசாய ஓய்வ{தியத் திட்டங்களை விஸ்தரித்தல்.

17 விநியோகச் சங்கிலிகளை வலுவ{ட்டுவதன் மூலம் விவசாயிகளின் உற்பத்திகளுக்கு நியாயமான விலையை உறுதிப்படுத்தல்.

18 காலநிலை மாற்றங்கள் மற்றும் வான்pலை தொடர்பான நாளாந்த தகவல்களை விவசாயிகளுக்கு வழங்குவதன் மூலம் இயற்கை அனர்த்தங்களினால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைத்துக்கொள்ளுதல்.

19 தரமான விதைகள், கன்றுகள் என்பவற்றை விவசாயிகளுக்கு வழங்குவதற்கான வழிமுறைகளை நடைமுறைப்படுத்துதல்.

20 நீர் முகாமைத்துவம் மற்றும் விவசாயிகளின் தேவைகளுக்கேற்ப நீர் வழங்கல் முகாமைத்துவம் .

21 விவசாய அபிவிருத்தி வலயங்கள், விவசாயக் கிராமங்கள், விவசாயி நிருவகிக்கின்ற கூட்டுறவு சங்கங்கள் மற்றும் விவசாய கம்பனிகள் *((farmer-administered co-operatives and farmer companies))* போன்றவற்றை பிரபலப்படுத்துதல்.

22 சிறிய அளவிலான விவசாயத் தொழில் முயற்சிகள் மற்றும் அமைப்புகளை எழுச்சிபெறச் செய்வதற்கும், மேம்படுத்துவதற்குமான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

23 சேதனப் பசளைப் பயன்பாடு மற்றும் நச்சுத்தன்மையற்ற உணவு உற்பத்தி தொடர்பில் அதிகளவில் ஈடுபாடு கொள்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை விஸ்தரித்தலும் ஊக்குவித்தலும்.

24 தரமான உர இறக்குமதி, விநியோகம் என்பவற்றை அரச நிவாரண கொள்கைத் திட்டத்திற்கமையச் செயல்திறனுடன் நடைமுறைப்படுத்துதல்

25 சிறந்த தரத்திலான இரசாயனப் பசளைகள் மற்றும் சூழலுக்குச் சாதகமான சேதனப் பசளைகளை உரிய நேரத்தில் பகிர்ந்தளிப்பதற்கான வழிமுறைகளைத் தயாரித்தல்

26 உள்நாட்டு மூலப்பொருட்களைப் பயன்படுத்தி சர்வதேச தரத்துக்கமைவான சேதனப் பசளை உற்பத்தியை ஊக்குவித்தல்.

27 உள்நாட்டு விவசாயிகள் மற்றும் நுகர்வோர் திருப்தியடையும் வகையில நியாயமான விலைகளுக்கான கொள்கையொன்றையும் பயிர்ச்செய்கைக்கான பல்லினத்தன்மை வேலைத்திட்டமொன்றையும் நடைமுறைப் படுத்துதல்.

28 மேலதிக உற்பத்திகளைக் களஞ்சியப்படுத்துவதற்கு முறையான பொறிமுறையொன்றை நடைமுறைப்படுத்துதல்

29 விவசாய உற்பத்திகளைப் பெறுமதிசேர்த்து ஏற்றுமதி செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்.

30 சர்வதேச மட்டத்திலான தரமான விதை உற்பத்திகளுக்காக உள்நாட்டு விதைக் கொள்கைத் திட்டமொன்றை அறிமுகப்படுத்துதல்

31 தரமான விதைகள் மற்றும் பயிர்ச்செய்கைக்கான உற்பத்திகளுக்காக தனியார்துறையினரை

ஊக்குவித்தல்.

32 அரச விவசாயப் பண்ணைகள் மற்றும் விதை உற்பத்தி விவசாயப் பண்ணைகளை அபிவிருத்தி செய்தல்

33 உள்நாட்டு உற்பத்திகளை அதிகரிப்பதன் மூலம் உணவுப் பயிர்களை இறக்குமதி செய்தலைக் குறைத்தல்

34 கால்நடைவளப் பிரிவின் உற்பத்திகளை அதிகரிப்பதற்குத் தேவையான வசதிகளைச் வழங்குதல்.

35 கால்நடை நலன்புரி மற்றும் அவை தொடர்பான செயற்பாடுகள்

36 தரமான உற்பத்தியினைப் போதுமான அளவில் மேற்கொள்வதற்கு இட்டுச்செல்கின்ற நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கால்நடை வளம் தொடர்பான ஆராய்ச்சிப் பிரிவினை விரிவுபடுத்துவதற்குத் தேவையான நடவடிக்கையை நடைமுறைப்படுத்துதல்.

37 கால்நடைகளின் இனப்பெருக்கத்தை அதிகரிப்பதற்காக விஞ்ஞானரீதியில் இனவிருத்தி முறைகளை பிரபல்யப்படுத்தலும் மற்றும் அத்தகைய கால்நடைகளை நோய்களிலிருந்து பாதுகாப்பது மற்றும் தனிமைப்படுத்துவது தொடர்பான செயற்பாடுகள்

38 பல்வேறு வகையான பூகோளத் தேவைகளுக்கமைய சிறிய மற்றும் நடுத்தர அளவிலான விவசாயப் பண்ணை அபிவிருத்தியை ஊக்குவித்தல்.

39 கால்நடைவளத் துறையைச் சேர்ந்த உற்பத்திகளை மேம்படுத்தலும் அவற்றை ஏற்றுமதிக்காக ஊக்குவிததலும்

40 நடுத்தர மற்றும் பாரிய அளவிலான கால்நடைப் பண்ணைகளை நிருமாணிப்பதற்குத் தேவையான காணிகளையும் முதலீட்டு வசதிகளையும் வழங்குதல்.

41 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான உற்பத்தியாளர்களை மேம்படுத்துவதன்மூலம் உள்நாட்டு உற்பத்திகளையும் நுகர்வுக்கான வாய்ப்புகளையும் அதிகரித்தல்.

42 இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரச் சேவையின் நிருவாகமும் ஆளணி முகாமைத்துவமும்.

43 விலங்கு உணவு உள்ளடங்கலாக உள்நாட்டுக்குத் தேவையான சோளத்தை நாட்டிற்குள் பயிரிடுவதற்கு வசதியேற்படுத்துதல்.

44 இலங்கை கமத்தொழில் சேவையின் நிருவாகமும் ஆளணி முகாமையும்

45 நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுடன் தொடர்பான நடவடிக்கைகள்

46 அனைத்து நிறுவனங்களையும் மேற்பார்வை செய்தல்.

- கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் பிரிவின் கீழுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள்

1. விவசாயத் திணைக்களம்
2. கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்
3. கமநல அபிவிருத்தித் திணைக்களம்
4. ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்
5. தேசிய அறுவடைக்குப் பிந்தைய முகாமைத்துவ நிறுவனம்
6. கமத்தொழில் மற்றும் கமநல சேவைகள் காப்புறுதிச் சபை
7. நெல் சந்தைப்படுத்தல் சபை
8. ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்
9. இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கைகளுக்கான மன்றம்
10. தேசிய கமத்தொழில் பல்வகைப்படுத்துகையும், குடியேற்ற அதிகாரசபையும் (ஹதபிம அதிகாரசபை)

11. தேசிய உரச் செயலகம்
12. ஸ்டேட் பர்ட்டிலைசர் கம்பனி லிமிட்டெட்
13. இலங்கைத் தேசிய பட்டினி ஒழிப்புச் சபை (தேசிய உணவு மேம்பாட்டுச் சபை)
14. தேசிய கால்நடைவளங்கள் அபிவிருத்திச் சபையும் இணைக் கம்பனிகளும்
15. மில்கோ (பிறைவேட்) லிமிட்டெட்
16. வரையறுக்கப்பட்ட மகாவலி லைவ்ஸ்ரொக் என்ரபிரய்ஸ் கம்பனி

- கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் பிரிவின் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள்

1. 1999 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சட்டம்
2. 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டம்
3. 1982 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க கிராமோதய சபைச் சட்டம்
4. 1951 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க மரங்களை வெட்டிச் சாய்த்தல் (கட்டுப்பாட்டுச்) சட்டம்
5. 2003 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க விதை நெல் சட்டம்
6. 1996 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க மண்வளம் பேணல் சட்டம்
7. 1971 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க நெல் சந்தைப்படுத்தல் சபைச் சட்டம்
8. 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கமத்தொழில் அலுவல்கள் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனச் சட்டம்
9. 1987 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க விவசாய ஆராய்ச்சிக் கொள்கைகளுக்கான இலங்கை மன்றச் சட்டம்
10. 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க அரச கமத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டம்
11. 1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பீடைநாசினி கட்டுப்படுத்தல் சட்டம்
12. 1999 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தாவர பாதுகாப்புச் சட்டம்
13. 1988 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க பசளைகள் ஒழுங்குபடுத்தற் சட்டம்
14. 1973 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க இலங்கைத் தேசிய பட்டினி ஒழிப்புச் சபை சட்டம்
15. 1992 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க விலங்கு நோய்ச் சட்டம்
16. 1986 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க விலங்கு தீனிச் சட்டம்
17. 1958 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க விலங்குகள் சட்டம்
18. 1956 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க விலங்கு மருத்துவ தொழில்துறைச் சட்டம்
19. 1992 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஏற்றுமதி விவசாய ஊக்குவிப்புச் சட்டம்
20. வேறு அமைச்சரொருவரின் கீழ் குறிப்பாக ஒதுக்கப்படாத விடயங்களுடன் தொடர்பான ஏனைய அனைத்து நியதிச் சட்டங்களும்

# கமத்தொழில் பிரிவு மற்றும் கால்நடை வளங்கள் பிரிவு

- தொலைநோக்கு

*“உணவுப் பாதுகாப்பையும் தேசிய சுபீட்சத்தையும் நோக்காகக் கொண்ட வினைத்திறன் மிக்கதும், விளைவுப் பெருக்கமுடையதும், பலமானதுமான விவசாயத்துறை”*

- செயற்பணி

*“இயற்கை வளங்களை நிலைபேறான விதத்தில் முகாமை செய்வதினூடாக சமூக ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட புதுவடிவமுடையதும் வர்த்தக நோக்கத்துடன் கூடியதுமான, பூகோல ரீதியில் போட்டிமிகு உற்பத்திகளை மேற்கொள்ளும் தொழில்முயற்சி விவசாயத்துறையொன்றை அடைதல்”*

நோக்கங்கள்

1 உணவு மற்றும் இவை சார்ந்த விவசாயப் பயிர்த்துறைக்கு கொள்கை ஒத்துழைப்பை வழங்குதல்.
2 உணவு மற்றும் போசாக்குப் பாதுகாப்பை உறுதி செய்தல்.
3 விவசாய உற்பத்திகளுக்கான தளம்பலற்ற விலையை முன்னெடுத்துச் செல்லல்.
4 நெல் இருப்புக்களை கொள்வனவு செய்தலும் சந்தை நிகழ்ச்சித்திட்டங்களை வினைத்திறன் மிக்க வகையில் முகாமை செய்தலும்.
5 கருத்திட்டங்களை உரிய வேளையில் அமுல் செய்தல்.
6 தெரிவு செய்யப்பட்ட பயிர் வகைகளின் உற்பத்தியை அதிகரித்தல்.
7 துரித உணவு உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்தை வினைத்திறன் மிக்க வகையிலும், விளைவுப் பெருக்கமுள்ளதாகவும் அமுல் செய்தல்.
8 வெளிநாட்டு நிதி அமைப்புக்களை வினைத்திறன் மிக்க வகையிலும் விளைவுப்பெருக்கமுள்ளதாகவும் ஈடுபடுத்தல்.
9 சேவை வழங்குணர்களுக்கு நட்புறவுடனான மற்றும் சிறந்த பெறுபேறுகளை நோக்காகக் கொண்ட நிருவாக முறையொன்றை அமுல் செய்தல்.
10 முழு அரச சேவையிலும் விளைவுப் பெருக்கமுள்ள முகாமைத்துவத்தை ஏற்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்தல்.

- அமைச்சினால் நடைமுறைப்படுத்த வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

1. இலக்கு 2 - பட்டினிக்கு முடிவுகட்டுவதன் மூலம் உணவுப் பாதுகாப்பு மற்றும் உயர் போசணைத் தரத்தை அடைவதற்காக நிலைபேறான விவசாயத்தை ஊக்குவித்தல்.
2. இலக்கு 5 - பாலின சமத்துவத்தை அடைவது மற்றும் அனைத்து பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளை வலுவூட்டல்.
3. இலக்கு 12 – நிலைபேறான நுகர்வு மற்றும் உற்பத்தி முறைகளை உறுதி செய்தல்.

## *2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் அவற்றின் நிதிசார் முன்னேற்றம்*
## *(செலவுத் தலைப்பு இலக்கம் 118 இன் கீழ் கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் பிரிவுகளின் - 31.12.2024 ஆம் திகதி வரையில்)*

| தொடர்/ இல | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா) | திருத்தப்பட்ட தொகை (மில். ரூபா) | செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதிசார் முன்னேற்றம்% |
|---|---|---|---|---|---|
| 1. | மூலன செலவு | 37,712.67 | 37,914.22 | 23,932.56 | 63 |
| 2 | மீண்டுவரும் செலவு | 48,389.80 | 52,909.08 | 51,657.33 | 98 |
| | மொத்த வரவுசெலவு | 86,102.47 | 90,823.30 | 75,589.89 | 83 |

*கமத்தொழில் பிரிவு - செலவுத் தலைப்பு இலக்கம் 118 இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பிரதான அபிவிருத்தித் திட்டங்களின் நிதிசார் முன்னேற்றம்*

| தொடர்/ இல | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா) | திருத்தப் பட்ட தொகை (மில். ரூபா) | செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதிசார் முன்னேற்றம்% |
|---|---|---|---|---|---|
| | மீண்டுவரும் செலவுகள் | | | | |
| | உரமானிய நிகழ்ச்சித் திட்டம் | 36,050.00 | 39,584.00 | 39,579.41 | 100 |
| | மூலதன செலவுகள் | | | | |
| 1. | உணவுப் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப ஊக்குவிப்பு விஷேட நிகழ்ச்சித் திட்டம் | 300.00 | 300.00 | 221.51 | 74 |
| 2. | விவசாய மற்றும் கடற்றொழில் நவீனமயமாக்கல் நிகழ்ச்சித் திட்டம் | 2,500.00 | 2,500.00 | 668.51 | 27 |
| 3. | மேலதிக பயிர் வளர்ப்பு நிகழ்ச்சித் திட்டம் | 150.00 | 150.00 | 149.80 | 100 |
| 4. | ஆடு வளர்ப்புச் செயற்திட்டம் | 200.00 | 200.00 | 170.32 | 85 |
| 5. | பல்கலைக்கழகங்களுடன் இணைந்து தேசிய விவசாயக் கொள்கையை தயாரித்தல் | 20.00 | 20.00 | 14.76 | 74 |
| 6. | விவசாயிகளுக்கான பங்களிப்பு காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் | 1,000.00 | 1,000.00 | 1,000.00 | 100 |
| | உப கூட்டுத்தொகை – i | 4,170.00 | 4,170.00 | 2,224.90 | |
| | வெளிநாட்டு நிதியுதவிச் செயற்திட்டங்கள் | | | | |
| 1. | * காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயச் செயற்திட்டம் (CSIAP) - உலக வங்கிக் கடன் | 11,800.00 | 11,350.00 | 6,002.26 | 53 |
| 2. | சிறிய அளவிலான விவசாய வியாபர பங்குடைமை நிகழ்ச்சித் திட்டம் (SAPP) – IFAD | 7,024.00 | 7,024.00 | 4,777.39 | 68 |
| 3. | விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்திட்டம் (ASMP) - உலக வங்கிக் கடன் | 7,250.00 | 7,700.00 | 6,937.09 | 90 |
| 4. | சிறிய அளவிலான விவசாய வணிகத்திற்கான பாதகமான தாக்கங்களைக் குறைப்பதற்கான செயற்திட்டம் (SARP) | 2,836.00 | 979.50 | 447.02 | 46 |

| தொடர்/இல | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா) | திருத்தப்பட்ட தொகை (மில். ரூபா) | செலவு செய்த தொகை (மில்.ரூபா) | நிதிசார் முன்னேற்றம் % |
|---|---|---|---|---|---|
| 5. | கொழும்பு – கட்டுநாயக்க தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவையின் உபகரணங்களை புதுப்பித்தல் மற்றும் மீள்நிறுவுதல். (JICA) | 14.17 | 14.17 | 7.93 | 56 |
| 6. | இலங்கை தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவையை (KOICA) நவீனமயமாக்கல் | 22.50 | 28.20 | 28.03 | 100 |
| உப கூட்டுத்தொகை – ii | | 28,946.67 | 27,095.87 | 18199.72 | |
| அமைச்சின் விடயப் பரப்பின் கீழ் உள்ள நிறுவனங்கள் | | | | | |
| 1. | ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம் | 30.00 | 30.00 | 23.53 | 78 |
| 2. | அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்ப நிறுவனம் | 35.00 | 35.00 | 25.30 | 72 |
| 3. | இலங்கை ஹதபிம அதிகாரசபை | 220.00 | 220.00 | 220.71 | 100 |
| 4 | இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபை | 30.00 | 30.00 | 21.18 | 71 |
| 5 | விஷேட பொருளாதார மத்திய நிலைய அபிவிருத்தி நடவடிக்கைகள் | 50.00 | 50.00 | 7.05 | 14 |
| 6 | தேசிய கால்நடை அபிவிருத்தி சபையின் மறுசீரமைப்பு செயல்முறையை எளிதாக்குதல் | 143.59 | 143.59 | 126.99 | 88 |
| உப கூட்டுத்தொகை – iii | | 508.59 | 508.59 | 424.76 | |
| மொத்த கூட்டுத்தொகை - (i+ii+iii) | | 33,625.26 | 31,774.46 | 20,849.38 | |

*கால்நடை வளங்கள் பிரிவு – செலவுத் தலைப்பு இலக்கம் 118 இன் கீழ் கீழ் மேற்கொள்ளப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் முன்னேற்றம்*

| தொ/இல | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா) | செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதிசார் முன்னேற்றம் % | பிற காரணிகள் |
|---|---|---|---|---|---|
| 1. | விலங்கு இனவிருத்தி மற்றும் பண்ணை அபிவிருத்தி | 50.00 | 21.45 | 43 | 2025 ஆம் ஆண்டில் நிதிப் பொறுப்பாக 6.43 மில். ரூபாய் செலுத்த வேண்டியுள்ளது. |
| 2. | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கால்நடை வள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | 150.00 | 27.46 | 18 | 2025 ஆம் ஆண்டில் நிதிப் பொறுப்பாக 13.90 மில். ரூபாய் செலுத்த வேண்டியுள்ளது. |
| 3 | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கால்நடை வள அபிவிருத்தி | 100.00 | 82.96 | 83 | 2025 ஆம் ஆண்டில் நிதிப் பொறுப்பாக |

| தொ/இல | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா) | செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதிசார் முன்னேற்றம் % | பிற காரணிகள் |
|---|---|---|---|---|---|
| | நிகழ்ச்சித் திட்டங்கள் (அபிவிருத்தி உதவிகள்) | | | | 2.49 மில். ரூபாய் செலுத்த வேண்டியுள்ளது. |
| உப கூட்டுத்தொகை – i | | 300.00 | 131.87 | | |
| வெளிநாட்டு நிதியுதவிச் செயற்திட்டங்கள் | | | | | |
| 1. | சிறிய அளவிலான பால் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களை அபிவிருத்தி செய்யும் கால்நடை வள அபிவிருத்தி செயற்திட்டம் (பிரான்ஸ் நாட்டு நிதியுதவி) | 10.00 | 0.60 | 6 | |
| உப கூட்டுத்தொகை – ii | | 10.00 | 0.60 | | |
| மொத்த கூட்டுத்தொகை - (i+ii) | | 310.00 | 310.00 | | |

## *2025 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தித் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் மற்றும் பௌதீக இலக்குகள்*

*கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் 2025 ஆம் ஆண்டுக்கான நிதிசார் இலக்குகள்*

| தொ/ இல | பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபா) |
|---|---|---|
| 1 | மூலதனச் செலவு | 112,119.91 |
| | கமத்தொழில் மற்றும் கால்நடை வளத்துறை | 33,206.17 |
| | நீர்ப்பாசன பிரிவு | 72,877.05 |
| | காணிப் பிரிவு | 6,036.69 |
| | | |
| 2 | மூலதனச் செலவு | 72,083.21 |
| | கமத்தொழில் மற்றும் கால்நடை வளத்துறை | 65,936.08 |
| | நீர்ப்பாசன பிரிவு | 5,553.91 |
| | காணிப் பிரிவு | 593.22 |

## *01. கமத்தொழில் பிரிவு*

- *2025 ஆம் ஆண்டுக்கான நிதி இலக்குகள்*

| தொ/ இல | செயற்திட்டம் | தேவையான ஒதுக்கீடு (மில். ரூபா) |
|---|---|---|
| 1 | உணவுப் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான விஷேட நிகழ்ச்சித் திட்டம் | 3,600.00 |
| 2 | விவசாய நவீனமயமாக்கல் மற்றும் இளைஞர் விவசாய தொழில் முனைவோர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 3,050.00 |
| 3 | பயிர்க் காப்பீட்டிற்கான அரசின் பங்களிப்பு | 2,200.00 |
| 4 | தேசிய விவசாய ஆராய்ச்சி திட்டத்தை நடைமுறைப்படுத்தல் | 118.00 |
| 5 | மேலதிகப் உணவுப் பயிர் வளர்ப்புத் திட்டம் | 150.00 |
| 6 | ஆடு வளர்ப்பு மூலம் வாழ்வாதார அபிவிருத்தி | 200.00 |
| | மொத்தம் | 9,318.00 |

- உணவுப் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான விஷேட நிகழ்ச்சித் திட்டம்

| # | நோக்கம் | செயற்திட்டம் | ஒதுக்கீடு (மில். ரூபா) | |
|---|---|---|---|---|
| | | | செலவுத் தலைப்பு 118-2-03-020-2202 (மானிய) | செலவுத் தலைப்பு 118-2-03-020-2509 (மானியமல்லாத) |
| 1 | தெரிவு செய்யப்பட்ட 05 பயிர் வகைகளின் தேசிய தேவையை பூர்த்தி செய்தல். | விஷேட பயிர் வகைகளின் உற்பத்திப் பயனுறுதித் தன்மையை அதிகரித்தல் மற்றும் உற்பத்தியை அதிகரித்தல் (உருளைக் கிழங்கு,, மிளகாய், பாசிப்பயறு, தெரிவு செய்யப்பட்ட காய்கறி வகைகள் மற்றும் பழங்கள் மற்றும் உள்நாட்டு கிழங்கு வகைகள்) | 75.00 | 150.00 |
| 2 | விவசாயத்தில் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல். | உயர் தொழில்நுட்பப் பயன்பாட்டினை ஊக்குவிப்பதன் மூலம் உற்பத்திப் பயனுறுதித் தன்மையை அதிகரித்தல். | 100.00 | 100.00 |
| 3 | விவசாயத்தை அடிப்படையாகக்கொண்ட ஏற்றுமதி வருமானத்தை 5% அதிகரித்தல் | விவசாய ஏற்றுமதித் தொழிற்துறையை ஊக்குவித்தல் மற்றும் தொழில்முனைவுத் துறைகளை விருத்தி செய்தல். | 175.00 | - |
| 4 | வனவிலங்குகளால் ஏற்படும் சேதத்தை 5% ஆல் குறைத்தல் | பயிர்ப் பாதுகாப்பு (உயிரியல் மற்றும் உயிரற்ற காரணிகள் காரணமாக பயிர்களுக்கு ஏற்படும் சேதங்களைக் குறைத்தல், வனவிலங்குகளால் ஏற்படும் சேதங்கள், படைப்புழுவினால் ஏற்படும் சேதங்கள் என்பவற்றைக் குறைத்தல்) | 75.00 | 100.00 |
| 5 | இளைஞர்களை தொழில்முனைவோராக மாற்றுதல் | இளைஞர் விவசாய தொழில்முனைவுக் கிராம நிகழ்ச்சித் திட்டம் (200 கிராமங்கள்) | 2000.00 | - |
| 6 | இயற்கை அனர்த்தங்களுக்கு முன் ஆயத்தமாக இருத்தல் | காலநிலை மாற்றத்தின் காரணமாக பயிர் உற்பத்தியில் ஏற்படும் இடர்நேர்வுகளை முகாமை செய்தல். | 25.00 | 50.00 |
| 7 | சூழல் நட்பு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாடு | விவசாயத் துறையில் புதுப்பிக்கத்தக்க சக்தி மற்றும் ஏனைய சூழல் நட்பு தொழில்நுட்பங்களின் பயன்பாட்டை ஊக்குவித்தல் | 50.00 | 358.00 |
| 8 | பெண்களுக்கு உறுதியான பொருளாதாரத்தை உருவாக்கிக் கொடுத்தல் | விவசாய தொழில் முனைவோர் அபிவிருத்தி மூலம் பெண்களை பொருளாதார ரீதியாக வலுவூட்டல் | 25.00 | - |
| 9 | நவீன தொழில்நுட்பத்தின் பயன்பாடு | வினைத்திறனான விவசாய இயந்திரமயமாக்கலை | 75.00 | 150.00 |

| # | நோக்கம் | செயற்திட்டம் | ஒதுக்கீடு (மில். ரூபா) | |
|---|---|---|---|---|
| | | | செலவுத் தலைப்பு 118-2-03-020-2202 (மானிய) | செலவுத் தலைப்பு 118-2-03-020-2509 (மானியமல்லாத) |
| | | ஊக்குவித்தல் | | |
| 10 | புதிய எளிய நுட்பங்களை அடையாளம் காணுதல் | விவசாய புத்தாக்கத்தை ஊக்குவித்தல் | - | 5.00 |
| 11 | நவீன விவசாய தொழில்நுட்பங்களை பரவலாக்கம் செய்தல் | விவசாய விரிவாக்கம், புதிய தொழில்நுட்ப ஊக்குவிப்பு என்பவற்றின் ஊடாக உற்பத்திப் பயனுறுதித் தன்மையை அதிகரித்தல் (பயிற்சி நிகழ்ச்சிகள், கள நாட்கள், பிரச்சார நடவடிக்கைகள், கருத்தரங்குகள், விவசாயிகளுடனான சந்திப்புகளை செயல்விளக்கத்துடன் கூடியதாக மாவட்ட ரீதியாக நடாத்துதல்.) | - | 50.00 |
| 12 | வெளியீடு செய்யப்படும் விவசாய ஆராய்ச்சி முடிவுகளை பயிர் செய்கைக்கு ஏற்றவிதத்தில் மாற்றியமைத்தல் | செயற்திட்டத்தின் பின்தொடர்தல், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு (விவசாயிகளின் மற்றும் மக்கள்மயப்படுத்தப்பட்ட விவசாய தொழில்நுட்பங்களை மதிப்பீடு செய்தல்) | - | 25.00 |
| 13 | மாவட்ட செயற்திட்டங்களுக்கான நேரடி பிந்தைய மதிப்பீடு | மாவட்ட விவசாயக் குழுக் கூட்டங்கள் | - | 5.00 |
| 14 | சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் உரிய நேரத்தில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளல் | வருடாந்த பயிர் உறபத்தித் திட்டம் | - | 2.00 |
| 15 | உர முகாமைமைத்துவத்தை வினைத்திறனாக்கல் | தேசிய உரத் தகவல் முகாமைத்துவத் தொகுதி | - | 5.00 |
| | | மொத்தம் | 2600.00 | 1000.00 |

- மேலதிகப் உணவுப் பயிர் வளர்ப்புத் திட்டம்

| நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | அலகு ஒன்றுக்கான செலவு | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|
| பயிர் வளர்ப்புச் செயற்திட்டம் | பயனாளர் குடும்பங்களின் எண்ணிக்கை | 20,000 | பயனாளர் குடும்பம் ஒன்றுக்கு ஒரு ஏக்கருக்கு அதிகபட்சம் 13,000/- ரூபாய். | 150.00 |
| | பயிரிடப்பட்ட நிலத்தின் பரப்பளவு - ஹெக்டயர் | 4,000 | | |
| | அறுவடை மெ. தொன் | 3,100 | | |

- ஆடு வளர்ப்பு மூலம் வாழ்வாதார அபிவிருத்தி

| நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | அலகு ஒன்றுக்கான செலவு | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|
| ஆடு வளர்ப்புச் செயற்திட்டம் | பயனாளர் குடும்பங்களின் எண்ணிக்கை | 1,280 | பயனாளர் குடும்பம் ஒன்றுக்கு 5 ஆடுகளுக்கு 150,000/- வீதம் | 200.00 |
| | பகிர்ந்தளிக்கப்பட உத்தேசித்துள்ள ஆடுகளின் எண்ணிக்கை | 6,400 | | |

## 02. கால்நடை வளங்கள் பிரிவு

- 2025 ஆம் ஆண்டுக்கான நிதி இலக்குகள் (நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்)

| தொ/ இல | செலவுத் தலைப்பு | பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | மதிப்பிடப்பட்ட தொகை (மில். ரூபாய்) |
|---|---|---|---|
| 01 | 118-2-03-078-2507 | விலங்கு இனவிருத்தி மற்றும் பண்ணை அபிவிருத்தி | 100.00 |
| 02 | 118-2-03-079-2506 | சிறு மற்றும் நடுத்தர கால்நடை வள அபிவிருத்தி (உள்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்) | 150.00 |
| | | கால்நடை வள அபிவிருத்தி இடைக்கால நிகழ்ச்சித் திட்டம் | 40.00 |
| | | கறவை மாடு வளர்ப்புத் துறை | 100.00 |
| | | திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 10.00 |
| 03 | 118-2-03-079-2202 | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கால்நடை வள அபிவிருத்தி (அபிவிருத்தி நிதியுதவி) | 310.00 |
| | | கறவை மாடு வளர்ப்பு | 200.00 |
| | | கோழி வளர்ப்புத் துறை | 50.00 |
| | | ஆடு வளர்ப்புத் துறை | 35.00 |
| | | பன்றி வளர்ப்புத் துறை | 25.00 |
| 04 | 118-2-03-056-2506 | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான பால் பதனிடும் நிலையங்களை நிறுவுதல் | 5.00 |
| மொத்தம் | | | 565.00 |

# கமத்தொழில் பிரிவு

# செலவுத் தலைப்பு இலக்கம் 118 இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பிரதான அபிவிருத்தித் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்

## 01. உணவுப் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப ஊக்குவிப்பு விஷேட நிகழ்ச்சித் திட்டம் - செலவுத் தலைப்பு இலக்கம் 118-2-03-020-2509/2202

2024 ஆம் ஆண்டுக்கு உணவுப் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப ஊக்குவிப்பு விஷேட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் 300.00 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அந்த நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தியதன் பிரதான நோக்கங்கள் பின்வருமாறு அமைகின்றன.

- i.) உணவு பாதுகாப்பை உருவாக்குதல் மற்றும் தொழில்நுட்ப ஊக்குவிப்பு
- ii.) உணவுப் பணவீக்கத்தைக் குறைத்தல்
- iii.) அந்நியச் செலாவணி சேமிப்பு
- iv.) இளைஞர் சமுதாயத்தை விவசாயத்தின்பால் ஈர்த்தல்
- v.) புதிய தொழில்நுட்பத்தை நோக்கி விவசாய சமூகத்தை வழிநடத்துதல்.

இந்த நோக்கங்களை அடைந்துகொள்ளும் பொருட்டு, அடையாளம் காணப்பட்ட விஷேட பயிர்களின் (களப் பயிர்கள், கிழங்குப் பயிர்கள், காய்கறி வகைகள்) உற்பத்திப் பயனுறுதித் தன்மையை அதிகரித்தல், விவசாயத்தில் உயர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதை ஊக்குவித்தல், விவசாயத் தொழிற்துறை மற்றும் தொழில் முனைவு அபிவிருத்தி, நீர் முகாமைத்துவம், பயன்படுத்தப்படாத நிலங்களை அபிவிருத்தி செய்தல், காலநிலை மாற்றத்தைக் குறைக்கும் பொருட்டு மேற்கொள்ளும் பயிர் பாதுகாப்புத் நிகழ்ச்சித் திட்டங்கள், விவசாய செயற்திட்ட நடவடிக்கைகள், விவசாயப் புத்தாக்க நடவடிக்கைகள் மற்றும் அறுவடைக்குப் பிந்தைய முகாமைத்துவம் ஆகிய துறைகளின் கீழ் செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்கள் கமத்தொழில் அமைச்சு, மாவட்ட விவசாயப் பணிப்பாளர் அலுவலகங்கள், விஷேட செயற்திட்டங்களுக்கான மாகாண விவசாய பணிப்பாளர் அலுவலகங்கள், விவசாய திணைக்களம் மற்றும் அறுவடைக்குப் பிந்தைய முகாமைத்துவ நிறுவனம் ஆகியவற்றின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டன. செயற்திட்டங்களின் முன்னேற்றக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் விவசாய அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த செயற்திட்டத்தின் நிதிசார் முன்னேற்றம் கீழ்க்கண்டவாறு அமையும். இதன் கீழுள்ள அனைத்து செயற்திட்டங்களினதும் கள செயல்பாடுகளின் முன்னேற்றங்கள் கீழ்க்கண்டவாறு அமையும்.

பௌதீக முன்னேற்றம்

| தொ/ இல | செயற்திட்டங்களை செயல்படுத்திய நிறுவனம் | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபாய்) | முன்னேற்றம் (%) | |
|---|---|---|---|---|---|
| | | | | நிதி | பௌதீக |
| 1 | கமத்தொழில் அமைச்சு | 11 | 52.20 | 221.51 | 96 |
| 2 | விவசாயத் திணைக்களம் | 19 | 108.21 | | |
| 3 | மாவட்ட விவசாயப் பணிப்பாளர் அலுவலகங்கள் (18 ஊடாக) | 34 | 91.26 | | |

| தொ/ இல | செயற்திட்டங்களை செயல்படுத்திய நிறுவனம் | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபாய்) | முன்னேற்றம் (%) | |
|---|---|---|---|---|---|
| | | | | நிதி | பௌதீக |
| 4 | தேசிய அறுவடைக்குப் பிந்தைய முகாமைத்துவ நிறுவனம் | 5 | 32.70 | | |
| 5 | மாகாண சபை (ஊவா, மேல்) | 2 | 4.15 | | |
| 6 | தேசிய உரச் செயலகம் | 1 | 3.49 | | |
| 7 | நெல் சந்தைப்படுத்தும் சபை | 1 | 4.02 | | |
| | மொத்தம் | 73 | 296.03 | | |

*புகைப்பட இலக்கம் 01 - 03*

**02.** விவசாய நவீனமயமாக்கல் நிகழ்ச்சித் திட்டம் - செலவுத் தலைப்பு இலக்கம் 118-2-03-088-2509

*2024 வரவுசெலவுத் திட்ட உரையின் 36 ஆம் இலக்க முன்மொழிவின் கீழ், விவசாயம் மற்றும் மீன்பிடித் தொழிற்துறையை நவீனமயமாக்கும் சபையை வலுவூட்டுவதற்கு 2,500.00 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதன்படி, ஜனாதிபதி செயலகத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள "விவசாய நவீனமயமாக்கல் மையத்தின்" (Agriculture Modernization Hub) ஊடாக இந்த முன்னோடி நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதன்போது 25 மாவட்டங்களில் உள்ள 25 பிரதேச செயலகங்கள் மற்றும் 5 நிறுவனங்கள் ஊடாக ஜனாதிபதி செயலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்ட முன்மொழிவுகள் மேலதிக நடவடிக்கைகளுக்காக அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. பின்னர் குறித்த செயற்திட்ட முன்மொழிவுகள் மாவட்ட செயலகங்களினால் நடைமுறைப்படுத்தப்பட்டன.*

*இந்த நிகழ்ச்சித் திட்டம் பின்வரும் 03 முக்கிய கூறுகளின் கீழ் செயல்படுத்தப்பட்டது.*

*i.) கடன் திட்டம்*

*ஜனாதிபதியின் செயலாளரின் 2024.07.22 ஆம் திகதிக்குரிய PS/APL/Circular/6/2024 எனும் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள பிரகாரம் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்திற்கான வட்டியில்லா கடன் வழங்கும் திட்டமானது, இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கி ஆகிய வங்கிகளுக்கு ஊடாக செயற்திட்டப் பிரதேசங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது.*

| வங்கி | பயனாளர் எண்ணிக்கை | விடுவிக்கப்பட்டுள்ள கடன் தொகை (மில். ரூபாய்) |
|---|---|---|
| இலங்கை வங்கி | 151 | 91.30 |
| பிரதேச அபிவிருத்தி வங்கி | 71 | 70.33 |
| மக்கள் வங்கி | 12 | 7.44 |
| மொத்தம் | 234 | 169.07 |

*i.) நிறுவனங்களால் செயல்படுத்தப்படும் திட்டம்*

*விவசாயத் திணைக்களம், ஏற்றுமதி விவசாயத் திணைக்களம், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், கறுவா அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றால் இந்தத் செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த ஒவ்வொரு நிறுவனத்திற்கும் 35.00 மில். ரூபா வீதம்*

வழங்கப்பட்டு குறித்த நிறுவனங்களின் நோக்கெல்லையுடன் தொடர்பான செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

| நிறுவனம் | செயற்திட்டப் பொழிப்பு | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) | முன்னேற்றம் (%) | |
|---|---|---|---|---|
| | | | நிதிசார் முன்னேற்றம் (மில். ரூபாய்) | பௌதீக முன்னேற்றம் (%) |
| விவசாயத் திணைக்களம் | நெற் செய்கையின் உற்பத்தித்திறனை அதிகரித்தல் - அனுராதபுர சிவலக்குள பிரிவில் நடைமுறைப்படுத்தப்பட்டது. | 13.28 | 10.15 | 100 |
| | சிறு போகத்தில் சோள உற்பத்திக்கு வயற் காணிகளை பன்முகப்படுத்துதல் - ஹம்பாந்தோட்டை மற்றும் பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டன. | 21.60 | 21.58 | 100 |
| ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் | அறுவடைக்குப் பிந்தைய உபகரணங்களைப் பயன்படுத்துவதை பிரபல்யப்படுத்துவதன் மூலம் ஏற்றுமதி விவசாயப் பயிர்களின் தரத்தை மேம்படுத்துதல். | 10.60 | 6.62 | 85 |
| கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் | புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் சிறிய அளவிலான பாற் பண்ணை தொழில்முனைவோரை உருவாக்குதல். | 35.00 | 27.10 | 90 |
| கறுவா அபிவிருத்தித் திணைக்களம் | இலங்கை மெய் கறுவா உற்பத்தியை உயர்த்துவதற்கான பல்திசை அணுகுமுறை. | 35.00 | 31.76 | 95 |
| இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை | தற்போதுள்ள அலங்கார மீன் பண்ணைகளில் உயர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இனப்பெருக்கம் மற்றும் வளர்ப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் அலங்கார மீன்களின் உற்பத்தியை அதிகரித்தல் | 35.00 | 34.65 | 100 |

*i.). இளைஞர் விவசாய தொழில்முனைவோர் கிராமத் திட்டம்*

இளைஞர் சமூகத்தை விவசாயத் துறையை நோக்கி ஈர்ப்பதன் ஊடாக அவர்களின் பொருளாதார நிலையை விருத்தி செய்வதற்கு பிரதான வருமான வழிகளை உருவாக்குவதன் மூலம் இளம் விவசாய தொழில்முனைவோர் சமூகத்தை உருவாக்குவது இந்த செயற்திட்டக் கூறின் நோக்கமாகும்.

2024 ஆம் ஆண்டில் காணப்பட்ட ஒதுக்கீட்டை சிறந்த முறையில் பயன்படுத்தி தேர்ந்தெடுக்கப்பட்ட 160 கிராமங்களில் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டது.

*அதன்படி, 367.58 மில். ரூபாய் செலவிடப்பட்டு 118 கிராமங்களில் 520 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.*

*புகைப்பட இலக்கம் 04 - 08*

**03.** மேலதிகப் பயிர் வகைகளைப் பயிரிடுவது தொடர்பான நிகழ்ச்சித் திட்டம் - செலவுத் தலைப்பு *118-2-03-071-2202*

*2024 ஆம் ஆண்டுக்கான அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடு 150.00 மில். ரூபாய் ஆகும். அந்த ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி 18,345 பயனாளர்களுக்கு சுமார் 4,504 ஹெக்டயர் நிலப்பரப்பில் உளுந்து மற்றும் பாசிப்பயறு செய்கை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் இதன் மூலம் சுமார் 2,200 மெற்றிக் தொன் அறுவடை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வருடத்தில் நிலவிய மோசமான காலநிலை காரணமாக அறுவடையில் வீழ்ச்சி காணப்படுவதாக அவதானிக்கப்பட்டுள்ளது. செயற்திட்டத்தின் நிதி முன்னேற்றம் 98% ஆகக் காணப்படுவதுடன் பௌதீக முன்னேற்றம் சுமார் 90% ஆகும். மாவட்ட செயலாளரின் நெறிப்படுத்தலின் கீழ் பிரதேச செயலகங்களின் ஒருங்கிணைப்பின் ஊடாக மாவட்ட விவசாயப் பணிப்பாளரினால் செயற்றிட்டங்களை அமுல்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போது சிறு போகத்திற்கான அறுவடை கிடைத்துள்ளதுடன் பெரும் போகத்திற்கான பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அறுவடை கிடைக்கப்பெற்று வருகிறது.*

*உளுந்துப் பயிர்ச் செய்கை -*

*யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, குருநாகல், பொலன்னறுவை, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களுக்கு 56.00 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் கீழ், 7,686 பயனாளிகளுக்கு 43,407 கிலோ கிராம் விதை வழங்கப்பட்டு 1,736 ஹெக்டயர் நிலப் பரப்பில் உளுந்து செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

*பாசிப்பயறுச் செய்கை -*

*யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, குருநாகல், பொலன்னறுவை, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மொனராகலை, அனுராதபுரம் மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களுக்கு 94.00 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் கீழ், 10,659 பயனாளிகளுக்கு 69,201 கிலோ கிராம் விதை வழங்கப்பட்டு 2,768 ஹெக்டயர் நிலப் பரப்பில் பாசிப்பயறுச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

*புகைப்பட இலக்கம் 09*

**04.** ஆடு வளர்ப்புச் செயற்திட்டம் - செலவுத் தலைப்பு இலக்கம் *118-2-03-080-2202*

*2024 ஆம் ஆண்டுக்கான அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடு 200.00 மில். ரூபாய் ஆகும். 2024 ஆம் ஆண்டுக்கான மீதமுள்ள ஒதுக்கீடு 199.71 மில். ரூபாய் ஆகும். அந்த ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி 18 மாவட்டங்களின் மாவட்ட செயலாளரின் மேற்பார்வையின் கீழ் பிரதேச செயலாளர்/கால்நடை வைத்திய அதிகாரிகளாலும், கண்டி, நுவரெலியா மற்றும் மாத்தளை மாவட்டங்களில் மத்திய மாகாண பிரதம செயலாளரின் மேற்பார்வையின் கீழ் கால்நடை வைத்திய அதிகாரிகளாலும் இந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஒரு பயனாளிக் குடும்பத்திற்கு மூன்று ஆடுகளைக் கொள்வனவு செய்யும் இத்திட்டத்திலிருந்து 85,000.00 ரூபாய்*

ஒதுக்கப்பட்டது. அதற்கு அமைவாக, இந்த திட்டத்தின் மூலம் 21 மாவட்டங்களில் உள்ள 2025 பயனாளிக் குடும்பங்களுக்கு உதவி வழங்கப்பட்டுள்ளது. இந்த செயற்திட்டத்தின் நிதி முன்னேற்றம் 65% ஆகக் காணப்பட்டதுடன் பௌதீக முன்னேற்றம் சுமார் 70% ஆகும்.

புகைப்பட இலக்கம் 10

**05.** பல்கலைக்கழகங்களுடன் இணைந்து தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் - செலவுத் தலைப்பு இலக்கம் 118-2-03-026-2507 (SLCARP))

நிறுவனம் பற்றிய பகுதியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

**06.** இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கை சபை - செலவுத் தலைப்பு இலக்கம் 118-2-03-065-2201

நிறுவனம் பற்றிய பகுதியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

**07.** விவசாயிகளுக்கான பங்களிப்புக் காப்புறுதித் திட்டம் ஒன்றை அறிமுகம் செய்தல் - செலவுத் தலைப்பு இலக்கம் 118-2-03-043-2202

நிறுவனம் பற்றிய பகுதியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

## செலவுத் தலைப்பு இலக்கம் 118 மீண்டுவரும் செலவுகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதான நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம்

### *1. உர மானிய நிகழ்ச்சித் திட்டம்*

*2024 ஆம் ஆண்டிற்கு 118-02-03-2-021-1504 ஆம் செலவுத் தலைப்பின் கீழ் 36,050 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக ஒதுக்கீடாக 3,533.60 மில். ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, 2024 ஆம் ஆண்டுக்கான மொத்த ஒதுக்கீட்டுத் தொகை 39,583.60 மில். ரூபாய் ஆகும்.*

*1. வயற் காணிகளில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு நிதி மானியம் வழங்குதல்*

| போகம் | மானிய நிதி | செலுத்திய தொகை (ரூபா) | ஹெக்டயர் அளவு | பயனாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 2023/24 பெரும் போகம் | அதிகபட்சம் இரண்டு ஹெக்டயருக்கு உட்பட்டு ஒரு ஹெக்டயருக்கு 15,000 ரூபாய் நிதி மானியம் வழங்கல். | 23,506 | 740,223.01 | 1,602,347 |
| 2024 சிறு போகம் | அதிகபட்சம் இரண்டு ஹெக்டயருக்கு உட்பட்டு ஒரு ஹெக்டயருக்கு 15,000 ரூபாய் நிதி மானியம் வழங்கல். | | 454,048.21 | 964,082 |
| 2024/25 பெரும் போகம் (2024.12.31 ஆம் திகதி வரை) | அதிகபட்சம் இரண்டு ஹெக்டயருக்கு உட்பட்டு ஒரு ஹெக்டயருக்கு, நெற் செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு 25,000 ரூபாய் நிதி மானியம் வழங்கல். | | 497,306.10 | 682,194 |

*2. உலக உணவுத் திட்டத்தின் கீழ் மியூரேட் ஆஃப் பொட்டாஷ் (MOP) உரத்தை இலவச விநியோகம் செய்தல்.*

*2.1. உலக உணவுத் திட்டத்தின் கீழ் மியூரேட் ஆஃப் பொட்டாஷ் (எம்ஓபி) உரம். 54,930.68 மெற்றிக் தொன் இலங்கை துறைமுகத்திற்கு 11.12.2024 அன்று வந்து சேர்ந்தது. இதில் 23,127 மெற்றிக் தொன் அளவான உரம் கமநல சேவை நிலையங்கள் மூலம் நேரடி உரமாக விநியோகிக்கப்பட்டது. மீதமுள்ள உரத்தை 2025 ஆம் ஆண்டில் தென்னை விவசாயிகளுக்கு கலப்பு உரமாக வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.*

*2.2. உலக உணவுத் திட்டத்தின் கீழ் மியூரேட் ஆஃப் பொட்டாஷ் (எம்ஓபி) உரத்தை இறக்குமதி செய்வதற்கு செலுத்தப்பட்ட மொத்த பெறுமதி சேர் வரி 1,283.60 மில். ரூபாய் ஆகும்.*

*3. இலங்கை உரக் கம்பனி மற்றும் கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி ஆகியவற்றினால் இறக்குமதி செய்யப்பட்ட உரங்களுக்காக மக்கள் வங்கியினால் திறக்கப்பட்ட கடன் கடிதங்களுக்கு செலுத்த வேண்டிய தொகை நீண்ட காலக் கடனாக மாற்றப்பட்டதனால், 2024*

ஆம் ஆண்டில், மாதாந்த தவணைக் கட்டணம் மற்றும் வட்டியாக 14,512.50 மில். ரூபாய் செலுத்தப்பட்டுள்ளது.

4. தேசிய உர செயலகத்தில் உர மாதிரி ப்பரிசோதனைகளுக்காக 0.69 மில். ரூபாய் செலுத்தப்பட்டது.
5. முந்தைய ஆண்டுகளின் கடமைகள் மற்றும் பொறுப்புகளாக 276.33 மில். ரூபாய் செலுத்தப்பட்டுள்ளது.

## விவசாயப் பிரிவின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட விஷேட செயற்திட்டங்கள்

### 1. "தேசிய விவசாயக் கொள்கையை" உருவாக்குதல்

அரச கொள்கை பிரகடனத்தின் நோக்கங்களுக்கு இணங்க, உணவுப் பாதுகாப்பு, விவசாய தொழில்முனைவு, விவசாய ஏற்றுமதியை ஊக்குவித்தல் என்பவற்றை இலக்காகக்கொண்டு தேசிய விவசாய கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. மேலும், உணவுத் தொகுதிகளை நிலைபேறான விதத்தில் பாதுகாத்தல், பசுமை விவசாயத்தை ஊக்குவித்தல், இரசாயன உரங்களின் பயன்பாட்டைக் குறைத்தல் மற்றும் அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பம் போன்றவற்றை பிரபலப்படுத்துவதில் விஷேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

- பௌதீக முன்னேற்றம்

10 தலைப்புகளின் கீழ் 13 இலக்குகளை பூர்த்தி செய்வதற்காக தயாரிக்கப்பட்ட "தேசிய விவசாய கொள்கை" அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 2024 ஆம் ஆண்டில் வெளிநாட்டு நிதியுதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற் திட்டங்களின் முன்னேற்றம்

*01. விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்திட்டம் (ASMP)*

*1.1 எதிர்பார்க்கப்படும் இலக்குகள்*

*i.) நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி போட்டித்தன்மைமிக்க மற்றும் சந்தைப்படுத்தக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்யும் முறைகள் (உற்பத்தித்திறனை மேம்படுத்துதல்)*

*ii.) சிறந்த சந்தை வாய்ப்புகளுக்கு பதிலளிப்பதற்கான அவர்களின் திறன்களை விருத்தி செய்தல் (தயாரிப்பு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல்)*

*iii.) விவசாய வணிகமயமாக்கலை நோக்கி நகர்தல் (விவசாயம் ஒரு வணிகமாக)*

*1.2 செயல்படுத்தும் நிறுவனம் - கமத்தொழில் அமைச்சு*

*1.3 மதிப்பிடப்பட்ட மொத்த வரவுசெலவுத் தொகை - 63.64 மில்லியன் அமெ. டொலர் + 23.13 மில்லியன் யூரோ*

*1.4 செயற்திட்ட காலம் - 17.01.2017 முதல் 31.12.2024 வரை*

*1.5. 2025 ஆம் ஆண்டின் நிதி இலக்குகள்*

| தொ/ இல | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | மதிப்பிடப்பட்ட தொகுதி (மில். ரூபாய்) | | |
|---|---|---|---|---|
| | | உலக வங்கி | ஐரோப்பிய ஒன்றியம் | இலங்கை அரசு |
| 1 | மூலதன செலவுகள் | 600.00 | 600.00 | 60.00 |

*1.6. 2025 ஆம் ஆண்டின் பௌதீக இலக்குகள்*

| | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | அலகு ஒன்றுக்கான செலவு (மில். ரூபா.) | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|---|
| 1 | உலக வங்கி | % | - | - | - |
| 2 | ஐரோப்பிய ஒன்றியம் | % | - | - | - |

*1.7. நிதி முன்னேற்றம் (31.12.2024 ஆம் திகதி வரை)*

| | நிகழ்ச்சித் திட்டம் | 2024 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கிய தொகை (மில். ரூபாய்) | 2024.09.30 ஆம் திகதி வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | நிதி முன்னேற்றம் % |
|---|---|---|---|---|
| 1 | உலக வங்கி | 4,370 | 4,300.51 | 98.41 |
| 2 | ஐரோப்பிய ஒன்றியம் | 3,300 | 3,271.87 | 99.75 |

*1.8. 2024 ஆம் ஆண்டின் இறுதியளவில் செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம்*

*2024 ஆம் ஆண்டிற்கு செயற்திட்டத்திற்காக 7,670 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், 2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரை 7,572.38 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இது சதவீதமாக 98.72% ஆகும்.*

*12 செயற்திட்ட மாவட்டங்களில் 72 பயிர்ச் செய்கைக் கொத்தணிகள் வெற்றிகரமாக நிறுவப்பட்டுள்ளன. இது வரை, இந்த செயற்திட்டத்தின் மூலம் 35,152 பேர் பயனடைந்துள்ளதுடன் 60 பட்டியலிடப்படாத நிறுவனங்களை (PUC) நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டில் இந்த செயற்திட்டம் நிறைவு செய்யப்படும்.*

*1.9. பிரதான பயிர்ச் செய்கை கொத்தணிகள் தொடர்பான சுருக்கம்*

| பயிர் கொத்தணி | மாவட்டம் | பயனாளிகளின் எண்ணிக்கை | ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபாய்.) | பயிர்ச் செய்கை மேற்கொண்ட நிலப்பரப்பு (ஹெக்டயர்) | பெற்றுக் கொண்ட அறுவடை (மெற்றிக் தொன்) | பெறுமதி (மில். ரூபாய்.) |
|---|---|---|---|---|---|---|
| கவன்டிஷ் வாழை | மொனராகலை | 650 | 450. 00 | 131.58 | 287 | 31.57 |
| TEJC மாம்பழம் | மொனராகலை | 240 | 400. 00 | 56.68 | 91 | 18.20 |
| கொடித் தோடை | மொனராகலை | 175 | 106.17 | 35.43 | 995 | 107.50 |
| மிளகாய் | பதுளை | 300 | 240. 00 | 60.73 | 123 | 64.40 |
| விதை உருளைக்கிழங்கு | பதுளை | 400 | 147. 00 | 121.46 | 4,000 | 980.00 |
| மாதுளை | மட்டக்களப்பு | 205 | 307.13 | 41.5 | 16 | 176.20 |
| நிலக்கடலை | மட்டக்களப்பு | 262 | 299.03 | 106.7 | 3,022 | 1,215.93 |
| பச்சை வெள்ளரி | மட்டக்களப்பு | 500 | 311.77 | 202.43 | 14,872 | 487.88 |
| ஜம்போ நிலக்கடலை | அம்பாறை | 600 | 276.54 | 242.91 | 2,210 | 330.08 |
| மிளகாய் | அம்பாறை | 270 | 455.16 | 54.66 | 3,650 | 817.26 |
| TEJC மாம்பழம் | மாத்தளை | 430 | 227.37 | 176.92 | 88 | 47.92 |
| கொய்யா | மாத்தளை | 200 | 164.01 | 40.48 | 11 | 0.93 |
| கொடித் தோடை | மாத்தளை | 100 | 60.62 | 20.24 | 366 | 374.15 |
| புளி வாழைப்பழம் | அனுராதபுரம் | 500 | 268.32 | 127.53 | 3,195 | 287.55 |
| மிளகாய் | அனுராதபுரம் | 420 | 265.95 | 82.02 | 3,955 | 988. 00 |
| கொய்யா | அனுராதபுரம் | 300 | 185.66 | 60.72 | 29 | 10.33 |
| மிளகாய் | பொலன்னறுவை | 380 | 234.04 | 76.92 | 107 | 26.75 |
| TEJC மாம்பழம் | யாழ்ப்பாணம் | 378 | 241.19 | 67 | 334 | 148.30 |
| மிளகாய் | யாழ்ப்பாணம் | 170 | 265.06 | 30 | 66 | 11.88 |
| கொடித் தோடை | கிளிநொச்சி | 200 | 169.76 | 40 | 488 | 154.35 |
| ஜம்போ நிலக்கடலை | கிளிநொச்சி | 530 | 149.71 | 60 | 103 | 122.95 |
| நிலக்கடலை | முல்லைத்தீவு | 300 | 263.56 | 80 | 1,205 | 286.04 |
| கோலிக்குட்டு வாழைப்பழம் | முல்லைத்தீவு | 120 | 30.12 | 24 | 70 | 16.45 |
| சோள விதைகள் | வவுனியா | 74 | 49.50 | 40 | 41 | 54.70 |
| மிளகாய் | வவுனியா | 300 | 354.36 | 30 | 1,555 | 371.25 |

*புகைப்பட இலக்கம் 11 – 13*

## *02. காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டம் (CSIAP)*

*2.1. அறிமுகம்*

*இலங்கையில் தெரிவு செய்யப்பட்ட காலநிலைத் தாக்கங்களால் பாதிக்கப்படக்கூடிய முக்கிய வலயங்களில் உள்ள சிறிய அளவிலான காணி உடமையாளர் சமூகத்தினரின், காலநிலை மாற்றங்களை எதிர்கொள்ளும் ஆற்றலை விருத்தி செய்தல் மற்றும் நீர்ப்பாசன விவசாயத்தின் உற்பத்தித்திறனை மேம்படுத்தல் என்பவற்றை பிரதான நோக்கமாகக் கொண்ட காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டம், உலக வங்கியின் நிதியுதவியுடன் (125 மில். டொலர்) ஜூன் 2019 முதல் கமத்தொழில் அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படுகிறது. விவசாய உற்பத்தியை மேம்படுத்துவதன் மூலமும், காலநிலைக்கு ஈடுகொடுக்கக்கூடிய விவசாய முறைகள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி விவசாய பயனுறுதித்தன்மையை அதிகரித்தல் மற்றும் இலக்காகக்கொண்ட சிறு விவசாய உற்பத்திச் சமூகத்திற்கு சந்தை அணுகலை மேம்படுத்துதல் என்பவற்றின் மூலம் இந்த நோக்கத்தை அடையக்கூடியதாக இருக்கும்.*

*இலங்கையின் வடக்கு மாகாணம் (கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு), கிழக்கு மாகாணம் (மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை), வடமத்திய மாகாணம் (அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை), வடமேல் மாகாணம் (குருணாகல் மற்றும் புத்தளம்), தென் மாகாணம் (ஹம்பாந்தோட்டை) மற்றும் ஊவா. மாகாணம் (மொனராகலை) ஆகிய 6 மாகாணங்களை உள்ளடக்கும் வகையில் 11 நிர்வாக மாவட்டங்களில் காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்படக்கூடிய தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் உள்ள காலநிலை மாற்றத்தின் தாக்கங்களால் பாதிக்கப்படக்கூடிய 350,000 இற்கும் அதிகமான சிறிய அளவிலான (பயிர்ச் செய்கை நிலப் பரப்பு 2 ஹெக்டயரிற்கும் குறைவான) விவசாயிகளுக்கும் சுமார் 60,000 விவசாயக் குடும்பங்களுக்கும் நேரடிப் பயனை வழங்கும் வகையில் 375,000 ஹெக்டயர் நிலப்பரப்பில் பயிர்ச் செய்கை மேற்கொள்வதே இந்த செயற்திட்டத்தின் இலக்காகும். உலக உணவுத் திட்டம், சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனம் மற்றும் கமநல அபிவிருத்தித் திணைக்களம் ஆகியவை இணைந்து நடத்திய கூட்டு ஆய்வுக்கு அமைவாக, காலநிலை மாற்றத்தின் தீவிர மாறுதல்களுக்கு உட்படும் பகுதிகளை அடிப்படையாகக்கொண்டு இந்த செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் கிராம சேவகர் பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய நடைமுறைகளை பின்பற்றுதல் மற்றும் வினைத்திறனான நீர் முகாமைத்துவம் என்பவற்றின் மூலம் நம்பகமான பாசன நீர் விநியோகத்தை உறுதி செய்வதே இச்செயற்திட்டத்தின் நோக்கமாகும்.*

*2.2. 2025 ஆண்டில் நிதி இலக்கு*

| தொ/இல | பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபா) |
|---|---|---|
| 1 | மூலதன செலவுகள் | 8,250.00 |

*2.3. 2025 ஆண்டில் பௌதீக இலக்குகள் (நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள்)*

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | அலகு ஒன்றுக் கான செலவு | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|---|
| 1 | செயற்திட்டக் கூறு 1 : விவசாய உற்பத்தி | | | | 1,382.27 |

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | அலகு ஒன்றுக் கான செலவு | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|---|
| | மற்றும் சந்தைப்படுத்தல் | | | | |
| *1.1* | விவசாய உற்பத்தி | விவசாயிகளின் எண்ணிக்கை | *42,000* | ** | *1,144.68* |
| *1.2* | சந்தைப்படுத்தல் | விவசாயிகளின் எண்ணிக்கை | *18,000* | | *237.59* |
| *2* | செயற்திட்டக் கூறு - *2* : விவசாயத்திற்கான நீர் | | | | *6,992.53* |
| *2.1* | நீர்ப்பாசனத் தொகுதிகளை மறுசீரமைத்தல் | நீர்ப்பாசனத் தொகுதிகள் | *205* | ** | *6,128.74* |
| *2.2* | நீர்ப்பாசனத் தொகுதிகளின் செயல்பாடு மற்றும் பராமரிப்பு | நீர்ப்பாசனத் தொகுதிகள் | *205* | | *863.79* |
| *3* | செயற்திட்டக் கூறு - *3* : செயற்திட்ட முகாமைத்துவம் | - | - | - | *1,225.20* |
| மொத்தக் கூட்டுத்தொகை *(மில். ரூபாய்)* | | | | | *9,600.00* |

*** ஓரலகுக்கான செலவு விடயங்களைப் பொறுத்து மாறுபடும்*

குறிப்பு: *2024* ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட உள்நாட்டு நிதியிலிருந்து *1,250* மில்லியன் ரூபாயை *2025* ஆம் ஆண்டு வரை முன்னெடுத்துச் செல்வதற்கான செயற்திட்ட முகாமைத்துவம் முன்வைத்த வேண்டுகோளுக்கு அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர், *2025* ஆம் ஆண்டிற்கான செலவு *8,750* மில்லியன் ரூபாய் ஆகும். இதற்கு மேலதிகமாக, *2024* ஆண்டின் மீதமுள்ள ஒதுக்கீட்டுத் தொகையான *850* மில்லியன் ரூபாயுடன், *2025* ஆம் ஆண்டிற்கான மொத்த ஒதுக்கீடு *9,600* மில்லியன் ரூபாய் ஆகும்.

*2024.12.31 ஆம் திகதி வரையிலான நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி முன்னேற்றம்*

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | *2024* ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு செய்த தொகை *(மில். ரூபா)* | *2024.12.31* வரை செலவு செய்த தொகை *(மில். ரூபா)* | நிதிசார் முன்னேற்றம் சதவீதத்தில் *(%)* |
|---|---|---|---|---|
| *1* | *02.* காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டம் *(CSIAP)* | *11,800.00* | *6,008.82* | *51* |

*அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் 2024.12.31 ஆம் திகதி வரையிலான பௌதீக முன்னேற்றம்*

1) *2024* ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி *11,800* மில். ரூபாய் ஆகும். மேலும், அதில் *1,520* மில். ரூபாய் கடந்த ஆண்டின் செலவுகளைத் தீர்க்க பெற்றுக்கொள்ளப்பட்டதால் *2024* ஆம் ஆண்டுக்கு செயற்திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட தொகை *10,280* மில். ரூபாய் எனக் கொள்ளப்பட்டு வருடாந்த செயல் திட்டம் தயாரிக்கப்பட்டது. *2024* ஆம் ஆண்டின் டிசம்பர் மாத இறுதியளவில், *6,008.82* மில். ரூபாய் நிதி செலவிடப்பட்டுள்ளது. அதன்படி, மொத்த செயற்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு *37,014* மில். ரூபாய் (அமெரிக்க டொலர் ஒன்றின் சராசரி பெறுமதி ரூ. *300/=* எனக் கருதி) *24,115.14* மில். ரூபாய் செலவிடப்பட்டுள்ளது (அது சதவீதமாக *65 %* ஆகும்.).
2) டிசம்பர் மாத இறுதியில், செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் *76%* ஆக இருந்தது.

3) காலநிலைக்கு ஏற்ற விவசாய நடைமுறைகள் குறித்த பயிற்சி நிகழ்ச்சிகளால் பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை 53,058 ஆகும். விவசாய உள்ளீடுகள் மற்றும் உபகரணங்களைப் பெற்று வீட்டுத் தோட்டச்செய்கையில் ஈடுபட்ட மொத்த பயனாளிகளின் எண்ணிக்கை 66,039 ஆகும். சிறு போக மற்றும் பெரும் போகத்தில் முறையே, 2,840 மற்றும் 20,027 ஹெக்டயர் நிலப்பரப்பில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இடைப் போகத்தில் பயிர்ச் செய்கை மேற்கொள்வதை விவசாயிகளுக்கு மத்தியில் ஊக்குவிக்கும் வகையில் 5,033 ஹெக்டயரில் ஏனைய களப் பயிர்கள் வெற்றிகரமாக பயிரிடப்பட்டுள்ளன.
4) காலநிலைக்கு சீரமைவான உழவர் பயிற்சிப் பாடசாலையில் 97 நிகழ்ச்சிகளில் 2,163 விவசாயிகள் பயிற்சி பெற்றுள்ளதுடன் அவர்கள் பெற்ற அறிவை அவர்களை அண்டிய விவசாய சமூகத்துடன் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. விவசாய வணிகப் பாடசாலை தொடர்பான 12 தொகுதிகளைக் கொண்ட பொதியொன்று உருவாக்கப்பட்டு, 113 விவசாய ஆலோசகர்கள் மற்றும் 46 விவசாய உதவியாளர்கள் பயிற்சியாளர்களாகப் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். மேலும் அவர்களைக்கொண்டு 22,000 விவசாயிகளைப் பயிற்றுவிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குறித்த பயிற்சியை தற்போது 6,365 விவசாயிகள் பயிற்சி பெற்று வருவதுடன் 7,047 விவசாயிகள் மேற்படி பயிற்சிநெறியை நிறைவு செய்துள்ளனர்.
5) 572 விவசாய உற்பத்திச் சங்கங்கள் மற்றும் இந்தச் சங்கங்களைத் தகுந்தவாறு இணைத்து 45 உற்பத்தி நிறுவனங்கள் என்பவை நிறுவப்பட்டு அவற்றின் உறுப்பினர்களுக்குப் பயிற்சி வழங்கப்படுகிறது. அறுவடை விற்பனை மற்றும் போட்டிச் சந்தை விலையை இலக்காக்கொண்டு, இந்த உற்பத்தி நிறுவனங்கள் பெரிய வணிக நிறுவனங்களுடன் வணிக உறவுகளை உருவாக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன் இதுவரை உற்பத்தி நிறுவனங்களுடன் நிறுவப்பட்ட வியாபர உறவுகளின் எண்ணிக்கை 16 ஆகும். விவசாயத் திணைக்களம் உட்பட Plenty foods, Golden Foods, CW Mackie, Cargills, CBL, Prima போன்ற பிரதான வணிக நிறுவனங்கள் இதில் உள்ளடங்குகின்றன.
6) நெல் மற்றும் தானிய வகைகளை களஞ்சியப்படுத்தி வைக்கும் நோக்கில் 12 தனியார் களஞ்சிய வசதிகள் மற்றும் வட மாகாணத்திற்கான பொதுக் களஞ்சிய வசதிகள் (சுமார் 1,000 மெற்றிக் தொன்) என்பவை உருவாக்கப்பட்டுள்ளன.
7) வினைத்திறனான பாசன நீர்ப் பாவனையை இலக்காகக் கொண்டு லேசர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நெல் வயல்களை மட்டப்படுத்தும் திட்டத்தின் ஆரம்ப கட்டமாக 25 ஹெக்டயர்களைக் கொண்ட நிலப்பரப்பில் திட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதுவரை வடமத்திய மற்றும் வட மாகாணங்களில் உள்ள விவசாயிகளுக்கு இது தொடர்பாக அறிவூட்டப்பட்டு இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக கிழக்கு மற்றும் வடமேல் மாகாணங்களுக்கு அறிவிக்கப்பட்டு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுள்ளன.
8) உற்பத்தி பதனிடும் கிராமங்களை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதுடன், ஆரம்ப கட்ட விழிப்புணர்வு செய்யப்பட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுள்ளன.
9) செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் 06 மாகாணங்களில் உள்ள 47 கமநல சேவை நிலையங்களுக்கு விவசாய இயந்திரங்கள் மற்றும் உள்ளீடுகள் வழங்கப்பட்டுள்ளன. செயற்திட்டத்தின் தொடக்கத்திலேயே அனைத்து சேவை மையங்களும் நவீனமயமாக்கப்பட்டன.
10) 57 கிலோமீட்டர் நீளமான விவசாயப் பாதைகள் புனரமைக்கப்பட்டு, விவசாயிகள் சந்தையுடன் தொடர்புபடுதல் இலகுபடுத்தப்பட்டுள்ளது.
11) 1,149 விவசாயக் கிணறுகள் புனரமைக்கப்பட்டு அவற்றின் கீழ் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் பிரதானமாக காய்கறிகள் மற்றும் கீரை வகைகள் பயிரிடப்பட்டுள்ளன. சூரிய சக்தியில் இயங்கும் நீர் இறைக்கும் முறையை அறிமுகப்படுத்தியதன் மூலம், 212 விவசாயிகள் தற்போது அந்த முறையில் நீரைப் பெற்று தங்கள் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை வெற்றிகரமாக நடத்தி வருகின்றனர். இதன் கீழ் சுமார் 207 ஹெக்டயரில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
12) பயனாளிக் குடும்பங்கள் மற்றும் பயிர் நிலங்களின் பாதுகாப்புக்காக, 1,100 கி.மீ. நீளமான பயிர் பாதுகாப்பு மின் வேலி அமைக்கும் பணி நிறைவுற்றுள்ளதுடன் விவசாயிகளின்

கோரிக்கைக்கு அமைவாக மேலும் 400 கி.மீ. நீளமான பகுதியை பாதுகாப்பதற்கான பெறுகை நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

13) மேற்கொள்ளப்படும் அனைத்து செயற்திட்ட நிர்மாணப் பணிகளுடன் தொடர்பான 518 சமூக கணக்காய்வுக் குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன.
14) நீர்ப்பாசன விவசாயத்தின் அபிருத்திக்காக 72 குள அடுக்கைத் தொகுதிகளில் புனரமைப்பு செய்யத் திட்டமிட்ட குளங்களின் எண்ணிக்கை 476 ஆகும். அதில் 451 குளங்களின் புனரமைப்பு நடவடிக்கைகள் நிறைவுற்றுள்ளன. மீதமுள்ள 25 குளங்களின் புனரமைப்புப் பணிகளை விரைவில் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றில், 50% க்கும் அதிகமான புனரமைப்புப் பணிகளை துரிதமாக நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றுள் 50% இற்கும் வேலிகள் நிறைவுற்றுள்ள நீர்ப்பாசன அமைப்புகளின் எண்ணிக்கை 23 ஆகும்.
15) செயற்திட்ட காலத்தை 18 மாதங்களால் நீடித்து, செயற்திட்ட நிதியில் இருந்து முதலில் குறைக்கப்பட்ட 25 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மீண்டும் செயற் திட்டத்திற்குத் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பூர்வாங்க ஆய்வுகள் நிறைவு செய்யப்பட்ட 205 நீர்ப்பாசனத் தொகுதிகளை (குளங்களை) புனர்நிர்மாணம் செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அந்த 205 குளங்களில் 104 குளங்களுக்கான பெறுகை நடவடிக்கைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. மீதமாகவுள்ள 24 குளங்களுக்கான உலக வங்கி பெறுகை நடைமுறைக்கு அமைவாக ஒப்புதலைப் பெறுவதற்கு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அதன்படி, புதிதாக 128 நீர்ப்பாசனத் தொகுதிகளை செயல்படுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
16) அதற்கமைவாக, செயற்திட்டத்தின் ஊடாக புனரமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தேசித்துள்ள மொத்த நீர்ப்பாசனத் தொகுதிகளின் எண்ணிக்கை தற்போதுள்ள ஒதுக்கீட்டின்படி 604 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த புனரமைப்புப் பணிகள் 31.12.2025க்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.
17) செயல்பாட்டு முகாமைத்துவம் மற்றும் நிலைபேறானதன்மை என்பவற்றை நோக்கமாகக் கொண்டு 61 குள அடுக்கைத் தொகுதி முகாமைத்துவக் குழுக்கள் செயற்திட்டப் பிரதேசங்களில் நிறுவப்பட்டுள்ளன. 06 மாகாணங்களில் பங்குதாரர்களின் பங்கேற்புடன் கள விஜயங்கள் (Exposure Visit) மேற்கொண்டு உருவாக்கப்பட்ட குள அடுக்கைத் தொகுதிகளின் விபரங்களுக்கு அமைவாக தயாரிக்கப்படவுள்ள 61 குள அடுக்கைத் தொகுதிகளின் முகாமைத்துவ திட்டங்களில், இதுவரை 29 பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அத்திட்டங்களில் 11 திட்டங்களுக்கு முன்னுரிமைப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.
18) சூழல் மற்றும் சமூகப் பாதுகாப்பின் கீழ், 175 சாத்தியக்கூற்று ஆய்வு அறிக்கைகள் ஆரம்ப கட்டத்திலும் 170 அறிக்கைகள் இரண்டாம் கட்டத்திலும் தயாரிக்கப்பட்டுள்ளன. நீர்ப் பிடிப்புப் பிரதேச முகாமைத்துவத்தை இலக்காகக்கொண்டு மர நடுகைத் திட்டங்களுக்கு ஊடாக மீள் காடு வளர்ப்பு, விவசாய காடுகளை பாதுகாத்தல், காற்று தடுப்புகளை அமைத்தல், கட்டகடுவ பிரதேச அபிவிருத்தி, இழப்பீட்டு மரங்களை நடல் ஆகியன உள்ளிட்ட இதுவரை சுமார் 18,000 மரங்கள் நடப்பட்டுள்ளன.
19) செயற்திட்டத்தின் ஆண் பெண் பாலினம் தொடர்பான நிகழ்ச்சிகள் செயல்படுத்தப்பட்டதுடன், செயற்திட்டத் தலையீடுகளில் 40% பெண்களின் பங்களிப்பு எட்டப்பட்டுள்ளது.
20) பயனாளிகள் முன்வைத்த குறைகளுக்கு தீர்வு வழங்குவதற்கான பொறிமுறையின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட 279 பிரச்சனைக்குரிய விடயங்களில் 263 இற்கு தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.
21) இதுவரை செயற்திட்டத் தலையீடுகள் தொடர்பான 2,100 விழிப்புணர்வு நிகழச்சிகள் மற்றும் தகவல் தொடர்பு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

புகைப்பட இலக்கம் 17 - 18

## 03. சிறிய அளவிலான விவசாய வியாபர கூட்டாண்மை நிகழ்ச்சித் திட்டம் (SAPP)

### 3.1. அறிமுகம்

நாடு முழுவதும் உள்ள 57,500 சிறிய அளவிலான விவசாயப் பயனாளிகளின் வருமானத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் நிலைபேறான வகையில் உயர்த்துவதை பிரதான நோக்கமாகக் கொண்டு செயற்படும் சிறிய அளவிலான விவசாய கூட்டாண்மை நிகழ்ச்சித் திட்டத்திற்கு (SAPP) இலங்கை அரசாங்கம் (GOSL) மற்றும் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் (IFAD) என்பன இணைந்து நிதியுதவி வழங்குகின்றன. அரச, தனியார், உற்பத்தியாளர் மற்றும் கூட்டாண்மை ஆகிய 4P அணுகுமுறையின் மூலம் சிறிய அளவிலான விவசாயப் பயனாளிகளுக்கு சலுகை வட்டி விகிதத்தில் மானியங்கள் மற்றும் கடன்கள் வழங்கப்படுகின்றன. SAPP பிரதான செயற்பாடுகளாக, சிறு அளவிலான விவசாயிகளுக்கு அவர்களின் விவசாய அமைப்புகளை வலுப்படுத்துவதற்கு பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்தல் மற்றும் தொழில்நுட்ப அறிவை வழங்கல் மற்றும் விவசாயப் பாதைகள், அணைக்கட்டுகள் போன்ற உள்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் சாதகமான கொள்கை சூழலை உருவாக்கப் பங்களிப்பு செலுத்தல் என்பன காணப்படுகின்றன.

### 3.2. 2025 ஆண்டின் நிதி இலக்கு

| தொ/இல | பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபா) |
|---|---|---|
| 1 | மூலதன செலவுகள் | 3,556.00 |

### 3.3. 2025 ஆண்டில் பௌதீக இலக்குகள் (நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள்)

| தொ/இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | அலகு ஒன்றுக்கான செலவு (மில். ரூபா.) | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|---|
| 1 | வணிக கூட்டாண்மைகளுக்கான அணுகல் (4P செயற்திட்டங்கள் மூலம்) | பயனாளர் எண்ணிக்கை | 3,725 | 0.41 | 1,159.00 |
| 2 | கிராமப்புற நிதிக்கான அணுகல் (4P செயற்திட்டங்கள், இளைஞர்கள் மற்றும் வருமானம் ஈட்டும் கடன்கள் மூலம்) | பயனாளர் எண்ணிக்கை | 3,294 | 0.29 | 1,821.00 |
| 3 | பண்ணைக்கு வெளியே உள்ள வசதிகளை அபிவிருத்தி செய்தல் | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | 14 | 4.85 | 79.00 |
| 4 | இளைஞர் தொழில்முனைவு அபிவிருத்தி | பயனாளர் எண்ணிக்கை | 300 | 0.28 | 195.00 |

*3.4. 31/12/2024 திகதியளில் நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் முன்னேற்றம்*

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | 2024 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு செய்த தொகை (மில். ரூபா) | 2024.12.31 வரை செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதிசார் முன்னேற்றம் சதவீதத்தில் (%) |
|---|---|---|---|---|
| 1 | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | 5,000.00 | 2,960.00 | 59 |
| 2 | நுண் நிதித் திட்டங்கள் | 2,024.00 | 2,012.00 | 99 |
| | மொத்தம் | 7,024.00 | 4,972.00 | 71 |

*3.5. 13/12/2024 வரையிலான அபிவிருத்தித் நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதீக முன்னேற்றம்*

*சிறிய அளவிலான விவசாய வியாபாரக் கூட்டாண்மை நிகழ்ச்சித் திட்டம் (SAPP) 105.00 மில்லியன் அமெரிக்க டாலர்கள் செலவில் 2017 ஆம் ஆண்டில் ஆறு ஆண்டு செயற்திட்டமாக ஆரம்பிக்கப்பட்டது. . இலங்கை அரசாங்கம் (GOSL), விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் (IFAD), தனியார் துறையினர் (விவசாய வணிக நிறுவனங்கள்), சிறு காணி உடமையாளர்கள் மற்றும் பங்கேற்பு நிதி நிறுவனங்கள் (PFIs) என்பன கூட்டாக இணைந்து நடைமுறைப்படுத்தும் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய நோக்கங்களாக 57,500 சிறு விவசாய தொழில் முனைவோரை சந்தை வாய்ப்புகளுடன் இணைப்பதன் மூலம் அவர்களின் வருமானத்தை அதிகரிக்க உதவுதல் மற்றும் மற்றும் அதற்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் என்பன காணப்படுகின்றன.*

*இந்த நோக்கங்களை அடைய, SAPP பிரதானமாக அரச மற்றும் தனியார் இணைப்புகளுடன் விவசாய தொழில்முனைவோருக்கு வழங்கும் தொடர்ச்சியான பயிற்சிகள் மூலம் விவசாய இயந்திரங்கள் மற்றும் தொழில்நுட்ப அறிவை வழங்குவதன் ஊடாக மிகவும் சிறந்த சந்தை வாய்ப்புகளை பெற்றுக் கொடுக்க SAPP கவனம் செலுத்துகிறது.*

*இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் தொடக்கத்தில் இருந்தே, தனியார் விவசாய நிறுவனங்கள் மற்றும் விவசாய உற்பத்தியாளர் சங்கங்களுடன் இணைந்து பால் உற்பத்தி, வாசனைப் பொருட்கள், தானியங்கள் மற்றும் அவரையினப் பயிர் வகைகள், தேயிலை, மலர் வளர்ப்பு மற்றும் காய்கறி வகைகள் போன்ற பிரதான விவசாயத் துறைகளை உள்ளடக்கும் வகையில் 37 4P (பொது, தனியார், உற்பத்தியாளர். கூட்டாண்மை) செயற்திட்டங்களை நிறுவுவதில் SAPP வெற்றி கண்டுள்ளது.*

*சமீபத்திய பொருளாதார நெருக்கடியை அடுத்து, SAPP ஆனது கிராமிய விவசாய தொழில் முனைவோருக்கு 10.00 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான விஷேட சோள செயற்திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இந்த செயற்திட்டத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்ட சோள செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு உயர்தர கலப்பின விதைகள், இரசாயன உர வகைகள், நிலப் பண்படுத்தலுக்குத் தேவையான வசதிகள் மற்றும் நிதி வசதிகள் என்பன வழங்கப்படுகின்றன. சோள செயற்திட்டத்தின் பெறுகை நடவடிக்கைகள் நிறைவுற்ற பின்னர், விதைகள் மற்றும் உர வகைகளை விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த சோள செயற்திட்டத்தில் இலக்காகக்கொள்ளப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை 40,000 ஆக உள்ளது, இதுவரை 15,905 ஹெக்டயர் நிலப்பரப்புக்குறிய 39,156 பயனாளிகளுக்கு விதைகள் வழங்கப்பட்டுள்ளன. 38,962 பயனாளிகளுக்கு அடிகாட்டுப் பசளையும் (Basal fertilizer), 38,638 பேருக்கு மேல் உரமும் (Top dressing fertilizer), 38,076 பேருக்கு நிலத்தை பண்படுத்துவதற்கும் (Land*

*preparation)* மானியங்கள் வழங்கப்பட்டு, இந்த சோள செயற்திட்டம் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

சிறிய அளவிலான விவசாய வியாபர கூட்டாண்மை நிகழ்ச்சித் திட்டத்தின் (SAPP) கீழ் 2024 டிசம்பர் மாதம் 31 திகதியளவில், 46,759 பயனாளிகள் 4P பெறுமதி சங்கிலி, இளைஞர்கள் மற்றும் வருமானம் ஈட்டும் கடன் மூலம் பயனடைந்துள்ளனர். இது மொத்த செயற்திட்ட இலக்கான 57,500 விவசாயத் தொழில்முனைவோரின் 81.32 சதவீதமாகும்.

2024 டிசம்பர் மாதளவில் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் 4P மாதிரியின் ஊடாக இலக்காகக் கொள்ளப்பட்ட 43,000 பயனாளர்களில் 36,671 பயனாளர்களுக்கு உதவி வழங்கப்பட்டுள்ளது. இளைஞர் தொழில் முனைவோர் அபிவிருத்தி (YED) நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 3,452 SAPP இளைஞர் பயனாளிகளுக்கும் வருமான பிறப்பாக்கக் கடன் திட்டம் (IG) மூலம் 5,783 பயனாளிகளுக்கும் உதவி வழங்கப்பட்டுள்ளது.

இளைஞர் விவசாய தொழில் முனைவோர் அபிவிருத்தி (YED) செயற்திட்டத்தின் கீழ் 3,452 SAPP இளைஞர் பயனாளிகளும், வருமான பிறப்பாக்கக் கடன் திட்டம் (IG) மூலம் 6,904 பயனாளிகளும் பயனடைந்துள்ளனர்.

மேலும், கால்வாய்கள் மற்றும் விவசாய பாதைகள் புனரமைப்பு போன்ற பண்ணைக்கு வெளியே உள்ள விவசாய உள்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளுக்கு திட்டமிடப்பட்ட 98 திட்டங்களில் 58 திட்டங்களை 2024 டிசம்பர் மாத இறுதிக்குள் SAPP இனால் தொடர்புடைய நிறுவனக்களின் உதவியுடன் வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது. இதற்காக இதுவரை 195.50 மில். ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

இவற்றுக்கு மேலதிகமாக, விவசாய உற்பத்தியாளர் அமைப்புகளை மிகவும் நிலைபேறான வர்த்தக நிறுவனங்களாக மாற்றுவதற்கு SAPP செயற்திட்டம் மூலம் வழங்கப்படும் நிறுவன வலுவூட்டல் (IS) சேவைகளின் கீழ் 07 நடவடிக்கைகள் தேவையான வெளியீடுகளுடன் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மேலும் இதுபோன்ற 13 IS சேவைகள் 2024 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டு வருவதுடன் அவற்றை 2024 ஆம் ஆண்டில் நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது செயற்திட்டத்தின் இந்தக் கூறின் கீழ் 133.00 மில். ரூபாய்க்கும் அதிகமான முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது.

முழு SAPP செயற்திட்டத்திற்கும் IFAD இன் ஒதுக்கீட்டு இலக்கான 54.40 மில்லியனில் 37.80 மில்லியன் முதலீடு செய்யப்பட்டு 69% நிதி முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது. 13.62 மில்லியன் பயனாளிகள் மற்றும் ஊக்குவிப்பாளர்களிடமிருந்து செயற்திட்டத்திற்கான மேலும் கிடைத்த பங்களிப்பு. 68.18 மில்லியன் ஆகும். GoSL, IFAD மற்றும் பங்களிப்பு இலக்கான 105 மில்லியன் ரூபாயில் 2024 டிசம்பர் அளவில் 68.18 மில்லியன் ரூபாய் (65%) செலவிடப்பட்டுள்ளது.

புகைப்பட இலக்கம் 16 – 18

## 04. சிறிய உழைப்பாளி வேளாண் மற்றும் உறுதியாக்க திட்டம் (SARP)

### 4.1. அறிமுகம்

இலங்கையின் புத்தளம், குருநாகல், மாத்தளை, அநுராதபுரம், வவுனியா மற்றும் மன்னார் ஆகிய 06 உலர் வலய மாவட்டங்களையும் அந்த மாவட்டங்களில் உள்ள மல்வத்து ஓயா, தெதுரு ஓயா மற்றும் மீ ஓயா ஆகிய ஆறுகளின் நீர்பிடிப்புப் பகுதிகளில் அமைந்துள்ள குள அடுக்கைத் தொகுதிகளையும் அடிப்படையாகக் கொண்டு இந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. பண்ணை வணிகமயமாக்கலை ஊக்குவிக்கும் அதேவேளை, 40,000 சிறிய அளவிலான விவசாய குடும்பங்கள் அல்லது 180,000 தனிநபர்களுக்கு காலநிலை மாற்றத்தால் ஏற்படும் சவால்க களை எதிர்கொள்ளும் வகையில் நிலைபேறான தீர்வுகளை வழங்குவதையும் இந்த செயற்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

செயற்திட்டத்தின் பிரதான கூறாக, காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் திறனை விருத்தி செய்வதற்கு சேவை வழங்கும் நிறுவனங்கள் மற்றும் செயற்திட்டப் பயனாளிகளின் திறன் விருத்தி மற்றும் தெரிவு செய்யப்பட்ட உள்கட்டமைப்பு வசதிகளை புதிதாக உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கு முதலீடு செய்தல் காணப்படுகிறது. விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் (IFAD) இலங்கை அரசாங்கத்திற்கு நிதியளித்து செயற்படுத்தும் இந்தச் செயற்திட்டத்திற்கு ஊடாக 82.00 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், அவற்றின் செயற்திட்ட காலம் 06 வருடங்களாகும். இந்த செயற்திட்டம் 20.01.2022 அன்று ஆரம்பிக்கப்பட்டது. ***proof basir…upto

### 4.2. 2025 ஆண்டிற்கான நிதிசார் இலக்குகள்

| தொ/இல | பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபா) |
|---|---|---|
| 1 | மூலதன செலவுகள் | 5,670.00 |

### 4.3. 2025 ஆண்டில் பௌதீக இலக்குகள் (நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள்)

| தொ/இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | அலகு ஒன்றுக்கான செலவு | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|---|
| 1 | காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் திறனை விருத்தி செய்வதற்கு சேவை வழங்கும் நிறுவனங்கள் மற்றும் விவசாயிகளின் எதிர்கொள்ளும் திறனை விருத்தி செய்தல். | நிகழ்ச்சிகள் | 1,771 | 0.16 | 285.32 |
| 2 | விவசாயத்துடன் தொடர்பான பெறுமதிச் சங்கிலி அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான திறன்களை வலுப்படுத்தல். | நிகழ்ச்சிகள் | 41 | 0.60 | 24.56 |
| 3 | காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் உற்பத்திகள் மற்றும் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளில் முதலீடு செய்தல் | வீட்டு அலகுகள் | 10,930 | 0.32 | 3,404.26 |
| 4 | பெறுமதிச் சங்கிலி அபிவிருத்திக்கு முதலீடு செய்தல் | வீட்டு அலகுகள் | 586 | 5.68 | 3,332.60 |

*4.4. 31.12.2024 ஆம் திகதி வரையிலான நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் முன்னேற்றம்*

| நிகழ்ச்சித் திட்டம் | 2024 ஆம் ஆண்டுக்கு வரவுசெலவு மூலம் ஒதுக்கீடு செய்த தொகை (மில். ரூபா) | திருத்தப்பட்ட ஒதுக்கீடு | 2024.12.31 வரை செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதிசார் முன்னேற்றம் சதவீதத்தில் (%) |
|---|---|---|---|---|
| 04. சிறிய அளவிலான விவசாய வணிகம் மற்றும் மீண்டெழல் செயற்திட்ட (SARP) மூலதன செலவு. | 2,836.00 | 979.53 | 505.5 | 51.61 |

- *குளங்களை புனரமைக்கும் பணிகள்*

*இந்த செயற்திட்டத்தினூடாக 173 குளங்கள் புனரமைக்க திட்டமிடப்பட்டுள்ளதுடன் அதில் குருநாகல் மாவட்டத்தில் 14 குளங்களின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு அதன் பௌதீக முன்னேற்றம் சுமார் 95% ஆக உள்ளது. வவுனியா மாவட்டத்தில் 16 குளங்களின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றில் 12 குளங்களின் பௌதீக முன்னேற்றம் 79% ஆகும். மேலும் அநுராதபுரம் மாவட்டத்தில் 07 குளங்களின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு அதன் பௌதீக முன்னேற்றம் 80% ஆக உள்ளது. மன்னார் மாவட்டத்தில் 5 குளங்களின் நிர்மாணப் பணிகள் இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் ஆரம்பமாகியுள்ளன. மேற்கண்ட 42 குளங்களுக்குமான மொத்த ஒப்பந்தத் தொகையான 520,684,574.30 ரூபாயிலிருந்து டிசம்பர் 31 வ 205,483,765.00 ரூபாய் செலுத்தப்பட்டுள்ளது. புகைப்பட இலக்கம் 19*

- *நீர்பிடிப்புப் பிரதேசங்களில் மீள் காடு வளர்ப்பு*

*இந்தச் செயற்திட்டத்தின் ஊடாகப் புனரமைக்கப்படும் குளங்களைச் சூழவுள்ள 562 ஹெக்டயர் நிலப்பரப்பை உள்ளடக்கும் வகையில் நீர் பிடிப்புப் பகுதிகளில் மீண்டும் காடுகளை வளர்க்கும் திட்டத்தின் கீழ் இலுப்பை, வெண் மருது, கருங்காலி மற்றும் புங்கை ஆகிய மரங்களை நடும் பொருட்டு வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு 13.53 மில்லியன் ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளதுடன் குறித்த மர வகைகளை நடும் பணியை அத்திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. மேலும் புனரமைக்கப்பட்ட குளங்களைச் சூழவுள்ள காட்டுப் பகுதிகளை உள்ளடக்கும் வகையில் வர்த்தக ரீதியாக பெறுமதியுள்ள கமுகு மரங்களை வளர்க்கும் பணி செயற்திட்டப் பயனாளிகளின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் கீழ் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்த 19 குளங்களில் 3,500 கமுகு மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.*

*புகைப்பட எண் 20*

- *நன்னீர் மீன் வளர்ப்பு*

*இந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பகுதிகளில் உள்ள மக்களின் ஊட்டச்சத்து தேவையை பூர்த்தி செய்யும் வகையில் நன்னீர் மீன் வளர்ப்பை விரிவுபடுத்தத் தேவையான நன்னீர் மீன் வளர்ப்பு 72 குளங்களை உள்ளடக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் 20 குளங்களில் நன்னீர் மீன் வகைகள் அறிமுகம் செய்யும் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. தற்போது அவற்றில் மீன் அறுவடை பெறும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தக் குளங்கள் வவுனியா, புத்தளம், குருநாகல் மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ளன. இது தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அதற்காக இதுவரை 5.00 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.*

*புகைப்பட எண் 21*

- உளுந்துச் செய்கைத் செயற்திட்டம்

வவுனியா மாவட்டத்தை மையமாக கொண்டு 600 விவசாயிகளுக்கு உளுந்துச் செய்கைச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் விவசாயிகளுக்கு தேவையான விதைகள் வழங்கல் மற்றும் விவசாயக் களப் பாடசாலைகளுக்கு ஊடாக தேவையான நடைமுறைப் பயிற்சிகள் வழங்கல் மற்றும் உளுந்து விளைச்சலுடன் தொடர்பான பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை சந்தைக்கு அறிமுகப்படுத்தல் ஆகியவற்றுக்காக இந்த வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த செயற்திட்டத்திற்கு செலவிடப்பட்ட தொகை 7.50 மில்லியன் ரூபாய் ஆகும்.

- பாசிப்பயறுச் செய்கை செயற்திட்டம்

குருநாகல் மற்றும் புத்தளம் மாவட்டங்களில் பாசிப்பயறு பயிரிடும் விவசாயிகளின் வருமானத்தைப் அதிகரித்தல் மற்றும் உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்தல் உட்பட அப்பிரதேசங்களில் வாழும் வறிய மக்களின் போசாக்கு மட்டத்தை அதிகரித்தல் ஆகிய நோக்கங்களுடன் இந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த இரண்டு மாவட்டங்களிலும் 750 விவசாயிகள் மற்றும் 391.5 ஏக்கர் பரப்பளவில் இந்த செயற்திட்டம் செயல்படுத்தப்பட்டது. அதன் மூலம் 2024 ஆண்டு சிறு போகத்தில் புத்தளம் மாவட்டத்தில் 13,400 கிலோ கிராம் அறுவடையும் குருநாகல் மாவட்டத்தில் 32,615 கிலோ கிராம் அறுவடையும் கிடைத்துள்ளது.

புகைப்பட எண் 22

- சீமை வெள்ளரி (Gherkin) செய்கை செயற்திட்டம்

ஏற்றுமதி சந்தைகளுக்கு பெறுமதி சேர்க்கப்பட்ட சீமை வெள்ளரி உற்பத்திகளை வழங்குவதற்கான தனியார் துறையுடன் இணைந்து ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இதற்காக குருநாகல் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 209 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு விதைகள் மற்றும் சொட்டு நீர்ப்பாசனத் தொகுதிகள் வழங்கப்பட்டன.

புகைப்பட எண் 23

- நிலக்கடலைச் செய்கை செயற்திட்டம்

புத்தளம், குருநாகல், வவுனியா, மன்னார் மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களை மையமாகக் கொண்டு 1500 விவசாயிகளுக்காக 750 ஏக்கரில் நிலக்கடலைச் செய்கை செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் கீழ், தேவையான விதைகள் மற்றும் விவசாயிகள் களப் பாடசாலைகள் மூலம் விவசாயிகளுக்கு தேவையான நடைமுறை பயிற்சிகள் என்பன வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நிலக்கடலையின் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை சந்தைக்கு அறிமுகப்படுத்துவதற்கான திட்டமும் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த செயற்திட்டத்திற்கு செலவிடப்பட்ட தொகை 25 மில்லியன் ரூபாய் ஆகும். விவசாயிகளுக்கு 30,000 கிலோ கிராம் விதைகள் விவசாயிகளுக்கு மத்தியில் விநியோகிக்கப்பட்டதுடன் அந்த விவசாயிகள் அனைவரும் நிலக்கடலை செய்கையை ஆரம்பித்துள்ளனர். தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த நிலக்கடலை செய்கையிலிருந்து 2024/ 25 பெரும் போகத்தில் ஒரு ஏக்கருக்கு 800 கிலோ கிராம் விளைச்சல் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

புகைப்பட எண் 24

- திறந்த சூழலில் மேற்கொள்ளும் கோழி வளர்ப்பு

இந்த செயற்திட்டம் வவுனியா, புத்தளம், குருநாகல், அனுராதபுரம், மன்னார் மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களை மையமாகக்கொண்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதன் கீழ் தெரிவு செய்யப்பட்ட 550 விவசாயக் குடும்பங்களுக்கு கோழிக் குஞ்சுகள் மற்றும் கோழிக் கூண்டுகள் உள்ளிட்ட தேவையான பொருட்களை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த

*செயற்றிட்டம் குறைந்த வருமானம் பெறும் பெண்களை இலக்காகக் கொண்டுள்ளதுடன் குடும்பங்களின் ஊட்டச்சத்து தேவைகளை பூர்த்தி செய்வதையும் குடும்பங்களின் வருமானத்தை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை 47 மில்லியன் ரூபாய் ஆகும். தற்போது பயனாளிகளைத் தெரிவு செய்யும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.*

• *நெற் செய்கைக்கு மாதிரி வயல்களை அமைத்தல்*

*வவுனியா, புத்தளம், குருநாகல், அநுராதபுரம், மன்னார் மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களை மையப்படுத்தி இந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதன் கீழ், 17 மாதிரிக் களங்கள் நிறுவப்பட்டுள்ளன. காலநிலை மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கும் தன்மைகளைக் கொண்ட நெல் வர்க்கங்களான பிஜி 374, பிஜி 366, பிஜி 409, பிஜி 310, பிஜி 369 மற்றும் ஏடீ 362 ஆகியவை இந்த மாதிரிக் களங்களில் செய்கை செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம்., குறித்த பிரதேசங்களுக்கு மிகவும் பொருத்தமான மேம்படுத்தப்பட்ட அதிகபட்ச விளைச்சலைத் தரக்கூடிய நெல் வர்க்கங்கள் விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தபாட்டன. இதன் கீழ் விதைகளைக் கொள்வனவு செய்யும் பொருட்டு 0.60 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டது. புகைப்பட எண்*

*05. கொழும்பு – கட்டுநாயக்க தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவையின் உபகரணங்களை புதுப்பித்தல் மற்றும் மீள்நிறுவுதல். (JICA) - செலவுத் தலைப்பு இலக்கம் 118-2-03-041-2507*

*விவசாய திணைக்களத்தின் கட்டுநாயக்க தேசிய தாவர தனிமைப்படுத்தல் நிலையத்தினால் இந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. சர்வதேச தாவர பாதுகாப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ள ஒரு பங்காளராக இலங்கை காணப்படுகிறது. இதன் காரணமாக, தாவரப் பகுதிகள் அல்லது விவசாய உறபத்திகளை நிர்ணயித்த தரநிலைகளுக்கு அமைவாக ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்வது இலங்கையின் தனிமைப்படுத்தல் விடயப் பரப்பினுள் உள்ளடங்குகிறது. அதேபோன்று, விவசாயிகளின் வறுமையை குறைத்தல், வெளிநாட்டு நாணயமாற்றை ஈட்டுவதை அதிகரித்தல் போன்ற நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு மிகவும் பொருத்தமானதும் உயர் வினைத்திறனுடன் பேணி தாவரத் தனிமைப்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொள்வதும், ஏற்றுமதி அல்லது இறக்குமதி சர்வதேச சந்தைகளுடன் ஒருங்கிணைந்து செயற்படும் போது பொருட்களின் தரங்களை மிகவும் துல்லியமாக அடையாளம் காணுவதற்கான ஆற்றலை மேம்படுத்த, தாவரத் தனிமைப்படுத்தல் சேவையில் ஏற்கனவே காணப்படும் உபகரணங்களை புதுப்பித்தல் மற்றும் மீல்நிறுவுதல் என்பவற்றுக்கு 259.60 மில். ரூபாய் மானியத்தை ஜப்பானிய அரசாங்கத்தால் (JICA) 2017 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டு இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இச்செயற்திட்டம் 2024 ஆம் ஆண்டில் நிறைவடைவதுடன், இதுவரை செலவிடப்பட்ட தொகை 253.36 மில்லியன் ரூபாய் ஆகும். 2024 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட தொகை 14.17 மில். ரூபாய் ஆகும். இதில் இதுவரை 7.93 மில். ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.*

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | 2024 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு செய்த தொகை (மில். ரூபா) | 2024.12.31 வரை செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதிசார் முன்னேற்றம் சதவீதத்தில் (%) |
|---|---|---|---|---|
| 1. | தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவையின் உபகரணங்களை புதுப்பித்தல் மற்றும் மீள்நிறுவுதல். (JICA) | 14.17 | 8.04 | 57 |

*06.* தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவையின் ஆராய்ச்சி வசதிகளை விருத்தி செய்தல் - *(KOICA)* – செலவுத் தலைப்பு இலக்கம் *118-2-03-046-2509*

இந்த செயற்திட்டத்திற்கு கொரிய அரசினால் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதுடன், *KOICA* நிறுவனத்தின் ஊடாக இதன் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பொருட்களின் இறக்குமதிக்கான வரி செலுத்தல் மற்றும் இலங்கையில் நடைமுறையில் உள்ள சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு ஏற்ப இந்த செயற்திட்டத்தை செயல்படுத்துவதற்கு தேவையான சூழலை உருவாக்குதல் என்பன தேசிய தாவர தனிமைப்படுத்தல் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன. கொரிய அரசினால் இந்த செயற்திட்டத்திற்கு *7.20* மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதுடன், இலங்கை அரசாங்கத்தினால் இதற்காக செலவிடப்பட்ட தொகை *74.61* மில். ரூபாய் ஆகும். மூன்று வருடங்களில் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த இந்த செயற்திட்டம் தற்போது நிறைவுக்கு வந்துள்ளது.

கொழும்புத் துறைமுக வளாகத்தின் தாவரத் தனிமைப்படுத்தல் நிலையத்திற்குத் தேவையான கட்டிடம் ஒன்றை நிர்மாணித்தல் மற்றும் தொழில்நுட்ப உபகரணங்களை வழங்கல் ஆகியவற்றின் மூலம் தாவரத் தனிமைப்படுத்தலின் திறனை அதிகரிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

கொழும்பு துறைமுகத்தை மையமாகக்கொண்டு மேற்கொள்ளும் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செயற்பாடுகளை முறையாகவும் செயற்திறனுடனும் மேற்கொள்வதற்கு இது உதவியாக அமையும்.

| தொ/ இல | நிகழ்ச்சி திட்டம் | *2024* ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு செய்த தொகை *(மில். ரூபா)* | *2024.12.31* வரை செலவு செய்த தொகை *(மில். ரூபா)* | நிதிசார் முன்னேற்றம் சதவீதத்தில் *(%)* |
|---|---|---|---|---|
| *1.* | தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவையின் ஆராய்ச்சி வசதிகளை விருத்தி செய்தல் *(KOICA)*. | *28.20* | *28.03* | *99* |

# கமத்தொழில்ப் பிரிவின் கீழ் உள்ள நிறுவனங்களின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் பிரதான அபிவிருத்தித் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம்

## *01. விவசாயத் திணைக்களம் (DOA)*

*1.1. தொலைநோக்கு*

*"தேசிய சுபீட்சத்திற்காக விவசாயத்தில் மேன்மையினை அடைந்து கொள்ளல்."*

*1.2. செயற்பணி*

*சமமானதும் நிலைபேறானதுமான விவசாய அபிவிருத்தியை அடைதல், மேம்படுத்தப்பட்ட விவசாய தொழில்நுட்பத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் விரிவாக்கம் செய்வதன் ஊடாக நாட்டு மக்களுக்கு உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் மற்றும் விவசாயிகள் மீது அதிக கவனம் செலுத்தி அனைத்துத் தரப்பினர்களுக்கும் உரிய சேவைகளை வழங்குதல்.*

*1.3. குறிக்கோள்கள்*

*விவசாயிகளின் வருமானம் மற்றும் வாழ்க்கைத்தரம் என்பவற்றினை விருத்தி செய்தல் மற்றும் நுகர்வோர் ஏற்கக் கூடிய விலை ஒன்றிற்கு உணவுப் பொருட்களை வழங்குவதற்காக உணவுப் பயிர்கள் பிரிவின் பயனுறுதி மற்றும் உற்பத்தி என்பவற்றினைப் பேணி வருதல் மற்றும் விருத்தி செய்தல்.*

*1.4. பிரதான செயற்பாடுகள்*

- *விவசாய ஆராய்ச்சி*
- *தொழிநுட்ப விரிவாக்கல்*
- *விதை மற்றும் நடுகைப் பொருள் உற்பத்தி மற்றும் பகிர்ந்தளித்தல்*
- *ஒழுங்குபடுத்தும் சேவைகள்*

*1.5 2025 ஆம் ஆண்டுக்கான நிதி இலக்குகள்*

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | மதிப்பிடப்பட்ட தொகை (மில். ரூபாய்) |
|---|---|---|
| 1 | மூலதன செலவு | 1,333.70 |
| 2 | மீண்டுவரும் செலவு | 6,909.27 |

*1.6 2025 ஆம் ஆண்டிற்கான பௌதீக இலக்குகள் (DOA இன் செலவுத் தலைப்பின் கீழ் உள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்/ செயற்திட்டங்கள்)*

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | அலகு | இலக்கு | அலகொன்றுக்கான செலவு (ரூபாய்) | மொத்த செலவு (ரூபாய்) |
|---|---|---|---|---|---|
| | I. விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | | | | |
| | அ). தொடர் செயற்திட்டங்கள் | | | | |
| 1 | தேசிய விவசாய ஆராய்ச்சி திட்டத்தை (NARP) செயல்படுத்துதல் | ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை | 30 | - | 115.00 |
| 2 | சிறிய அளவிலான | ஆராய்ச்சிகளின் | 17 | - | 125.00 |

| தொ/இல | நிகழ்ச்சித் திட்டம் | அலகு | இலக்கு | அலகொன்றுக்கான செலவு (ரூபாய்) | மொத்த செலவு (ரூபாய்) |
|---|---|---|---|---|---|
| | ஆராய்ச்சி செயற்திட்டங்கள் | எண்ணிக்கை | | | |
| 3 | JICA | பயிற்சி மற்றும் கள பயணங்கள் எண்ணிக்கை | பயிற்சி நிகழ்ச்சிகள் - 20 கள பயணங்கள் - 25 | - | 15.50 |
| 4 | மண் பாதுகாப்புச் சட்டத்தை செயல்படுத்துதல் | மாகாணங்களின் எண்ணிக்கை | 03 | - | 5.00 |
| 5 | புதிய கலப்பின மற்றும் திறந்த மகரந்தச் சேர்க்கை செய்யப்பட்ட மிளகாய், சோளம் மற்றும் வெங்காய வகைகளை உருவாக்குதல் மற்றும் விதைகளை உற்பத்தி செய்தல் | ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை | 69 புதிய திறந்த மகரந்தச் சேர்க்கை மற்றும் கலப்பின வகை மேம்பாட்டு ஆராய்ச்சிகள் (களப் பயிர்கள் - 12, காய்கறிகள் - 21, பழங்கள் -30, நெல் - 06) | - | 150.00 |
| 6 | இலங்கையில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு உணவுப் பயிர் உற்பத்திக்கான காலநிலைக்கு ஏற்ற பசுமை தொழில்நுட்பங்களை விருத்தி செய்தல் | ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை | காலநிலை மாற்றத்தை எதிர்க்கும் வகைகளின் உற்பத்தி தொடர்பான 42 ஆராய்ச்சிகள் (களப் பயிர்கள் - 06, காய்கறிகள் - 18, பழங்கள் -10, நெல் - 08) | - | 62.00 |
| | a. கோரப்பட்டுள்ள புதிய செயற்திட்டங்கள் | | | | |
| 7 | அதிக விளைச்சல் தாக்கமுடைய தாங்குதிறன்கொண்ட வர்க்கங்கள் மற்றும் பக்காக்க தொழில்நுட்பங்கள் ஊடாக நிலைபேறான காய்கறி உற்பத்தியை அடைதல். | சதவீதம்/ எண்ணிக்கை | உற்பத்திப் பயனுறுதித் தன்மையை 15% முதல் 30% ஆகவும், ஏற்றுமதியை 3% ஆகவும் அதிகரித்தல் 4 தொழில்நுட்ப தொகுப்புகளை உருவாக்குதல் | - | 100.00 |
| 8 | நிலைபேறான காய்கறி பெறுமதிச் சங்கிலிகளுக்காக உணவு பதப்படுத்தும் மையம் மூலம் தொழில்நுட்பங்களைப் பரப்புதல் மற்றும் SMEகளை வலுவூட்டுதல் | எண்ணிக்கை | 20 பதிவுசெய்யப்பட்ட தொழில்முனைவோர், 12 ஆராய்ச்சி திட்டங்கள், 10 வெளியீடுகள் | - | 23.20 |

| தொ / இல | நிகழ்ச்சித் திட்டம் | அலகு | இலக்கு | அலகொன்றுக்கான செலவு (ரூபாய்) | மொத்த செலவு (ரூபாய்) |
|---|---|---|---|---|---|
| 9 | தரவு சார்ந்த விவசாயத்திற்கு முறையான பயிர் வெட்டு பரிசோதனைகளை மேற்கொள்வதன் மூலம் ஏனைய களப் பயிர்களின் விளைச்சல் மதிப்பீடு செய்தல். | எண்ணிக்கை | பயிர் கணக்கெடுப்பு - 2000 | - | 8.00 |
| | II. விரிவாக்கம் மற்றும் பயிற்சி | | | | |
| | அ). தொடரும் செயற்திட்டங்கள் | | | | |
| 10 | விவசாயப் பாடலைகளை விருத்தி செய்தல் | விவசாயப் பாடசாலைகளின் எண்ணிக்கை | 11 விவசாயப் பாடசாலைகளில் உள்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் | - | 420.00 |
| 11 | ஊடக நிகழ்ச்சிகள் | வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | 1604 நிகழ்ச்சிகளை தயாரித்தல் (வானொலி - 1452 தொலைக்காட்சி – 152 விவசாயத் தொலைக்காட்சி தொழில்நுட்ப குறுஞ் செய்திகள், வணிக குறுஞ் செய்திகள் மற்றும் 1920 இல் கிடைத்த உழவர் பிரச்சினைகள் அடிப்படையிலான குறுஞ் செய்திகள்) | - | 66.00 |
| 12 | விவசாயத் திணைக்களத்தின் வருடாந்த மாநாடு (ASDA) | மாநாட்டு எண்ணிக்கை | விவசாயத் திணைக்களத்தின் வருடாந்த மாநாட்டை (ASDA) நடாத்தல் | - | 7.50 |
| 13 | விவசாயத் தொழில்நுட்ப பூங்காக்களைப் பராமரித்தல். | விவசாயத் தொழில்நுட்ப பூங்காக்களின் எண்ணிக்கை | கன்னோருவை, பட்டஅத்த மற்றும் தியகம ஆகிய 3 விவசாய தொழில்நுட்ப பூங்காக்களை செயல்விளக்க மாதிரிகளாக பராமரித்தல் | - | 12.00 |
| 14 | மண் வளத்தை பரிசோதிக்கும் வசதிகளை மேம்படுத்துதல் | மண் சுகாதார அட்டைகளின் எண்ணிக்கை | 15,000 | - | 30.00 |

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | அலகு | இலக்கு | அலகொன்றுக்கான செலவு (ரூபாய்) | மொத்த செலவு (ரூபாய்) |
|---|---|---|---|---|---|
| 15 | சிறந்த விவசாய நடைமுறைகள் (GAP) மற்றும் தொழில்முனைவோர் அபிவிருத்தி என்பவற்றின் மூலம் நச்சுத்தன்மையற்ற உணவு உற்பத்திக்கு உதவுதல் | GAP சான்றிதழ் எண்ணிக்கை, விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் | GAP சான்றளிக்கப்பட்ட பண்ணைகள் – 2500 | - | 60.00 |
| | ஆ). கோரப்பட்டுள்ள புதிய செயற்திட்டங்கள் | | | | |
| 16 | நெல் மற்றும் ஏனைய களப் பயிர்கள் அபிவிருத்தித் திட்டம் | சதவீதம் | நெல் மற்றும் மேலதிக உணவுப் பயிர்களின் உற்பத்திப் பயனுறுதித் தன்மையை 20% வீதத்தால் அதிகரித்தல் | - | 1,000.00 |
| 17 | உணவுப் பயிர்களின் விவசாய தொழில்நுட்ப பரவலை வலுப்படுத்துதல் | ஹெக்டயர் | உற்பத்திப் பயனுறுதித் தன்மையை நிலப்பரப்பு - 200,000 | - | 545.00 |
| 18 | பண்ணை முதல் சந்தை வரை இலங்கை பழப் பெருமதிச் சங்கிலியை வலுப்படுத்துதல் | எண்ணிக்கை | சான்றளிக்கப்பட்ட நடுகைப் பொருட்களை விநியோகம் செய்தல்- 1,500,000, செயல்விளக்கங்கள் -100, தொழில்முனைவோர் -2000 | - | 130.00 |
| 19 | விவசாயத் தகவல் பகிர்வுக்காக 24x7 மணிநேர பிரத்தியேக Peo TV அலைவரிசையை நிறுவுதல் | தொலைக்காட்சி அலைவரிசை எண்ணிக்கை | Peo TV ஒரு தொலைக்காட்சி அலைவரிசை | - | 32.50 |
| | III. விதைச் சான்றுப்படுத்தல் மற்றும் தாவரப் பாதுகாப்பு | | | | |
| | a. நடைபெற்று வரும் திட்டங்கள் | | | | |
| 20 | விதை உற்பத்தி மற்றும் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டம் | பதிவு செய்யப்பட்ட மற்றும் சான்றளிக்கப்பட்ட விதைகளின் அளவு | 700 மெட்ரிக் தொன் ஏனைய களப் பயிர் விதைகள், 40,000 புஷல் நெல் விதைகள் மற்றும் 50 மெட்ரிக் தொன் காய்கறி விதைகள். | - | 1,250.00 |
| 21 | விதைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல் | எண்ணிக்கை | விதை சட்டம் பற்றிய | - | 40.00 |

| தொ / இல | நிகழ்ச்சித் திட்டம் | அலகு | இலக்கு | அலகொன்றுக்கான செலவு (ரூபாய்) | மொத்த செலவு (ரூபாய்) |
|---|---|---|---|---|---|
| | | | விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் - 60, அமைவிட பரிசோதனைகள் - 3200 மற்றும் 1600 புதிய பதிவுகளை நடத்துதல் | | |
| 22 | துரித விதைப் பண்ணை அபிவிருத்தித் திட்டம் | விதை பண்ணைகளின் எண்ணிக்கை | 29 விதை பண்ணைகளின் உள்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் | - | 625.00 |
| 23 | விதைச் சான்றுப்படுத்தல் நடவடிக்கைகளை வலுப்படுத்துதல் | எண்ணிக்கை | மகாஇலுப்பல்லம விதை பரிசோதனை ஆய்வுகூட வசதிகளை அபிவிருத்தி செய்தல், கன்னொருவை விதை சுகாதார பரிசோதனை பிரிவில் நாற்று இல்லமொன்றை நிறுவுதல் | - | 120.00 |
| 24 | விவசாய இரசாயனங்களின் சாத்தியமான பாதகமான விளைவுகளைக் குறைத்தல் | எண்ணிக்கை | ASTA பயிற்சி வகுப்புகள், பறிமுதல் செய்யப்பட்ட பூச்சிக்கொல்லிகளை அழித்தல் மற்றும் கன உலோகங்களுக்கான மாதிரிகளின் பகுப்பாய்வு | - | 35.00 |
| 25 | உள்நாட்டு விதை உருளைக்கிழங்கு உற்பத்தியை ஊக்குவித்தல் | எண்ணிக்கை | 3 விதை உருளைக்கிழங்கு பண்ணைகளின் உள்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் | - | 40.00 |
| 26 | PGRC இல் உள்ள தற்போதைய தாவர மரபணு வள வங்கியைப் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் | எண்ணிக்கை | மரபணு வங்கியை திருத்தியமைத்தல் | - | 8.00 |

| தொ / இல | நிகழ்ச்சித் திட்டம் | அலகு | இலக்கு | அலகொன்றுக்கான செலவு (ரூபாய்) | மொத்த செலவு (ரூபாய்) |
|---|---|---|---|---|---|
| *27* | இறக்குமதி மற்றும் ஏற்றுமதியின் போது சர்வதேச தரங்களுக்கு அமைவாக உயர் தாவர சுகாதாரப் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு விமான நிலைய தனிமைப்படுத்தல் நுழைவுப் புள்ளியில் காணப்படும் வசதிகளை விருத்தி செய்தல் | எண்ணிக்கை | விமான நிலைய தவர தனிமைப்படுத்தல் நிலைய வசதிகளை விருத்தி செய்தல் | - | *30.00* |
| | *b. கோரப்பட்டுள்ள புதிய செயற்திட்டங்கள்* | | | | |
| *28* | தரமான விதை மற்றும் நடுகைப் பொருட்களின் விற்பனை மற்றும் விநியோக வலையமைப்பை வலுப்படுத்துதல். | எண்ணிக்கை | அபிவிருத்தி செய்யப்படும் விற்பனை நிலையங்கள் - 2, புதிய விற்பனை நிலையங்கள் -1, | - | *76.50* |
| *29* | நிலைபேறான நடவடிக்கைகள் மூலம் தாவர பாதுகாப்பு திட்டத்தை வலுப்படுத்துவதன் மூலம் இலங்கை முழுவதும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல். | எண்ணிக்கை | உயிரியல் முகவர்கள் - 25, செயல்விளக்கங்கள் - 15, அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்கள் - 150, விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் – 50 | - | *20.00* |
| *30* | இலங்கையில் உயிரியல் பாதுகாப்பை உறுதிசெய்தல் மற்றும் தாவர சுகாதாரத் தேவைகளைப் பின்பற்றும் அதே வேளையில், தாவர மற்றும் தாவரப் பொருட்களின் எல்லை கடந்த வர்த்தகத்தை வலுப்படுத்துதல் | எண்ணிக்கை | தாவர சுகாதார சான்றிதழ்கள் - 100,000, தாவரங்கள் மற்றும் தாவர பொருட்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி பங்குகளை ஆய்வு செய்தல் - 98,000 மாதிரிகள் | - | *30.00* |

*1.7 2024 ஆம் ஆண்டு இறுதியில் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி முன்னேற்றம்*

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | 2024 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு செய்த தொகை (மில். ரூ) | 2024.12.31 வரை செலவு செய்த தொகை (மில். ரூ) | செலவு சதவீதத்தில் (%) |
|---|---|---|---|---|
| 1 | மீண்டுவரும் செலவுகள் | 6,566.32 | 6,210.17 | 95 |
| 2 | மூலதன செலவுகள் | 732.83 | 651.22 | 89 |
| 3 | விவசாயத் திணைக்கள செலவுத் தலைப்பின் கீழ் விஷேடத் திட்டங்கள் (285) | | | |
| 3.1 | விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | 138.0 | 122.22 | 89 |
| | விரிவாக்கம் மற்றும் பயிற்சி | 432.0 | 329.19 | 76 |
| | விதைச் சான்றுப்படுத்தல் மற்றும் தாவர பாதுகாப்பு | 2,000 | 1,902.04 | 95 |
| 3.2 | தேசிய விவசாய ஆராய்ச்சி செயற்திட்டங்கள் | 75.0 | 59.01 | 79 |
| 3.3 | சிறிய அளவிலான செயற்திட்டங்கள் | 113.0 | 103.92 | 92 |
| | மூலதனம் - உப கூட்டுத்தொகை | 3,490.83 | 3,167.6 | 91 |
| 4 | விவசாய அமைச்சு செலவுத் தலைப்பின் கீழ் விஷேட செயற்திட்டங்கள் | 146.762 | 121.274 | 84 |
| | மொத்தக் கூட்டுத்தொகை | 10,203.91 | 9,499.04 | 93 |

*1.8. விவசாயத் திணைக்களத்தின் (285) செலவினத் தலைப்பின் கீழ் விஷேட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் 31/12/2024 வரையிலான பௌதீக முன்னேற்றம் – ஒட்டுமொத்த நிகழ்ச்சித் திட்டங்களின் பொழிப்பு*

*ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு*

*1. மிளகாய், சோளம், வெங்காயம், காய்கறிகள் மற்றும் பழங்கள் ஆகியவற்றின் புதிய கலப்பின மற்றும் திறந்த மகரந்தச் சேர்க்கை வர்க்கங்களை விருத்தி செய்தல் மற்றும் மற்றும் விதை உற்பத்தி*

*களப் பயிர்கள்*

- *மிளகாய், சோளம் மற்றும் வெங்காயம் ஆகியவற்றின் புதிய திறந்த மகரந்தச் சேர்க்கை மற்றும் கலப்பின வர்க்கங்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு ஆராய்ச்சிக் கள மட்டத்தில் புதிய குறுக்கு சேர்க்கைகள் உருவாக்கப்பட்டு பரிசோதிக்கப்படுகின்றன.*
- *இந்தப் பயிர்களின் பிரதான பீடைகள் மற்றும் நோய்களுக்கான எதிர்ப்புத் திறனை மதிப்பிடுவதற்கான மதிப்பீடுகள் நடத்தப்படுகின்றன. ஆரம்ப கட்டத்தில் வெங்காய ஆந்த்ராக்னோஸ் மற்றும் பூஞ்சை குமிழ் அழுகலைக் கட்டுப்படுத்த FCRDI, MI ஆல் உருவாக்கப்பட்ட டிரைக்கோடெர்மாவை அடிப்படையாகக்கொண்ட உயிரியல் பீடைகொல்லியைப் பயன்படுத்தி ஒருங்கிணைந்த நோய் முகாமைத்துவ தொழில்நுட்பம் உருவாக்கப்பட்டது.*
- *வெங்காய அறுவடை மற்றும் ஏனைய களப் பயிர்களின் விதைப்புக்குப் பொருத்தமான உபகரணங்களை அடையாளம் கண்டு அறிமுகப்படுத்துவதற்கான பண்ணை இயந்திரங்களில் ஆராய்ச்சி நடத்தப்பட்டு வருகிறது. ஆரம்ப வடிவமைப்பு நிறைவடைந்துள்ளதுடன், நாற்று நடும் அலகு வடிவமைப்பு புதுப்பிக்கப்பட்டு அதன் உற்பத்தி நடைபெற்று வருகிறது.*

நெல்

- *அதிக விளைச்சல் தரவல்ல புதிய நெல் வர்க்கங்களின்/ விருத்தி செய்யப்பட்ட இனப்பெருக்கக் வழிகளின் 4-4½, 3½, 3 மற்றும் 2½ மாத கால குழுக்களை உருவாக்குதல் மற்றும் அவற்றின் ஏனைய குறிப்பிட்ட பண்புகளான உவர்தன்மை, இரும்பு நச்சுத்தன்மை, வறட்சி தாங்குதிறன், நீரில் மூழ்குவதைத் தாங்கும் தன்மை மற்றும் BPH (பழுப்பு நிறத் தாவரத்தத்தி), RGM (நெல் கொம்பன் பூச்சி), நெல் வெடிப்பு மற்றும் பாக்டீரியா இலை வெளிறல் (BLB) ஆகிய பிரதான பீடை மற்றும் நோய் என்பவற்றிற்கான எதிர்ப்புத் திறன் என்பவற்றை மதிப்பீடு செய்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு வர்க்க விருத்தி ஆராய்ச்சித் நிகழ்ச்சித் திட்டம் நடத்தப்பட்டது.*
- *NCRVT (தேசிய ஒருங்கிணைந்த நெல் வர்க்கப் பரிசோதனை), PYT (ஆரம்பநிலை அறுவடைப் சோதனைகள்), MYT (பிரதான அறுவடை சோதனைகள்) மற்றும் OYT (கண்காணிப்பு அறுவடை சோதனைகள்) உள்ளிட்ட பல்வேறு சோதனை நிலைமைகளின் கீழ் 200 வர்க்கங்கள் மற்றும் இனப்பெருக்கக் வழிகளின் பௌதீக மற்றும் பௌதீக-இரசாயன பண்புகள் மதிப்பிடப்பட்டுள்ளன.*
- *மேலும், பரிந்துரைக்கப்பட்ட நாற்பது நெல் வர்க்கங்களுக்கான இனப்பெருக்க விதைகள் உற்பத்தி செய்யப்பட்டன. நடத்தப்பட்டது.*
- *3 ½ மாத வயதுடைய புதிய நெல் வர்க்கம் "BG 382 Fr" (சுவந்த கெக்குழு) எனும் பெயரில் வெளியிடப்பட்டது. இது ஒரு நீண்ட, வெள்ளை நிற, நடுத்தர அளவிலான, நறுமணம் கொண்ட, சராசரியாக 4.6 /ஹெக்டயர் விளைச்சல் தரக்கூடிய ஒரு அரிசி வர்க்கமாகும்.*
- *கலப்பின நெல் இனப்பெருக்கத் திட்டம் தொடர்ந்து நடைபெறுகிறது. மேலும் ஏழு நம்பிக்கைக்குரிய கலப்பின வரிகள் (F1) தற்போது PYT யில் மதிப்பீடு செய்யப்படுகின்றன. மேலும், ஏழு F1 வரிகள் அவற்றின் விளைச்சல் மற்றும் ஏனைய உழவியல் பண்புகளை தீர்மானிக்கும் நோக்கில் OYT யில் மதிப்பீடு செய்யப்படுகின்றன. பின்கலப்பு முறையைப் பயன்படுத்தி உயிரணுக்கணிக ஆண் மலட்டுத்தன்மையின் (CMS) விருத்தி நடைபெற்று வருவதுடன் அது BC3 தலைமுறையை எட்டியுள்ளது.*

காய்கறிகள்

- *நாடு முழுவதுமுள்ள விவசாயிகளுக்கு செய்கை செய்வதற்கு ஏற்ற இரண்டு புதிய காய்கறி வர்க்கங்கள் (HORDI கத்திரிக்காய் கலப்பினம் - 4 மற்றும் HORDI வெள்ளரிக்காய் - 4) வெளியிடப்பட்டன. மூலவுயிர்முதலுரு சேகரிப்பு, கலப்பினமாக்கல் மற்றும் கள மதிப்பீட்டு சோதனைகள் உள்ளிட்ட 14 காய்கறி பயிர்களுக்கான அடிப்படை தொகை விருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன, 52 புதிய மூலவுயிர்முதலுரு வரிசைகள் மதிப்பீடு செய்யப்பட்டன.*
- *புதிய வர்க்க விருத்திச் செயல்பாட்டின் மூலம் இருநூற்று ஐம்பது புதிய இனப்பெருக்கக் வரிகள் மற்றும் நம்பிக்கைக்குரிய வரிகள் என்பன கள மதிப்பீடு செய்யப்பட்டன. செயற்திறன் தரவு சேகரிக்கப்பட்டு, பகுப்பாய்வு செய்யப்பட்டு, தற்போதைய பருவத்திலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படவுள்ளது.*
- *வர்க்க வெளியீட்டு செயல்பாட்டின் மூலம் 24 சோதனைகளுடன், 13 நம்பிக்கைக்குரிய வரிசைகளுக்கு பல் இடம் சார்ந்த சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. வெளியீட்டு செயல்பாட்டின் ஊடாக 13 நம்பிக்கைக்குரிய வரிகளுக்கு 24 சோதனைகள் பல இட சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன (NCVT, VAT)*
- *இருபத்தைந்து காய்கறி வகைகளுக்கு இனப்பெருக்க விதை மற்றும் மூல விதைகள் உற்பத்தி செய்யப்பட்டதுடன் விதை உற்பத்தி தொழில்நுட்பப் பரவல் நடவடிக்கைகள் காய்கறிச் செய்கை மேற்கொள்ளும் விவசாயிகள், அரச மற்றும் தனியார் துறையுடன் மேற்கொள்ளப்பட்டன.*
- *தெரிவு செய்யப்பட்ட காய்கறி பயிர் வகைகளுக்கு மண் ஊட்டச்சத்து முகாமைத்துவம் மற்றும் புதிய உரப் பயன்பாட்டு சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன*

- *நிலைபேறான பீடை மற்றும் நோய் முகாமைத்துவம் தொழில்நுட்பங்களை (ஒட்டுதல், எதிர்ப்பு இனப்பெருக்கம் மற்றும் இரசாயன சோதனைகள்) விருத்தி செய்வதற்காக சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.*
- *காய்கறி வகைகளுக்கு தர மதிப்பீடு, பதப்படுத்தும் தொழில்நுட்ப விருத்தி மற்றும் உணவு மாசாக்கிகளுக்கான பரிசோதனை நடவடிக்கைகள் ஆகியன மேற்கொள்ளப்பட்டன. (பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை பரிசோதித்தல் மற்றும் கன உலோக மாசுபடுத்திகளை பகுப்பாய்வு செய்தல்)*
- *• தர மதிப்பீடு, பதப்படுத்தும் தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் காய்கறிகளுக்கான உணவு மாசுபடுத்தி சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. (மதிப்பு கூட்டப்பட்ட தயாரிப்பு சோதனை மற்றும் கன உலோக மாசு பகுப்பாய்வு)*

*பழங்கள்*

- *தொகையை விருத்தி செய்தல் மற்றும் அதிக விளைச்சல் தரும், தரமான பழ வகைகள் அல்லது கலப்பினங்களைத் தேர்ந்தெடுத்தல் ஆகியவற்றை இலக்காகக்கொண்டு 14 பழப் பயிர்களின் நம்பிக்கைக்குரிய இனப்பெருக்கக் வரிகளின் விருத்தி மற்றும் மதிப்பீடு என்பன சோதனை நிலையத்திலும் பல இட சோதனைகள் மூலமும் தொடர்ச்சியாக மேற்கொள்ளபடுகிறது.*
- *நம்பிக்கைக்குரிய பலாப்பழ வகையான ஹொரன ஜாக் - 01 மற்றும் சப்போட்டா வகையான 'கன்னொருவ சப்போட்டா – 01' ஆகியன 2024 ஆம் ஆண்டில் வர்க்க வெளியீட்டுக் குழுவால் வெளியிடப்பட்டன.*
- *ஹொரன பப்பாளி F1 ஹைப்ரிட் 01 இன் தாய் விதைகள் , ஹொரன கோல்ட் கொடித்தோடையின் விதைகள் உற்பத்தி, மற்றும் வெளியிடப்பட்ட வர்க்கங்களின் 5,930 அரும்பு ஒட்டு மற்றும் கிளை ஒட்டுக் கன்றுகள், 2,150 பதி வைக்கப்பட்ட கன்றுகள் மற்றும் 6,000 இழைய வளர்ப்பு செய்யப்பட்ட வாழைச் செடிகள் ஆகியவற்றின் உற்பத்தி வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளன.*
- *ஹொரன மற்றும் குண்டசாலையில் இரண்டு பழ மூலவுயிர்முதலுருத் தோட்டங்கள் நிறுவப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் 150-200 தாய்த் தாவரங்களை கொண்டுள்ளன.*

**2.** *இலங்கையில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக உணவுப் பயிர் உற்பத்திக்கு காலநிலை எதிர்ப்புத் தன்மை கொண்ட பசுமை தொழில்நுட்ப மேம்பாடு*

*நெல்*

- *உயிரில்லாத அழுத்தங்களுக்கு சகிப்புத்தன்மை கொண்ட நெல் வரிசைகளை விருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.*
- *நீரில் மூழ்குவதற்கு சகிப்புத்தன்மைகொண்ட மற்றும் நீர் தேங்கு நிலைமைகளுக்கு ஏற்ப இசைவடையும் தன்மை கொண்ட நெல் வரிசைகளை விருத்தி செய்வதுடன் தொடர்பான முயற்சிகளின் கவனம் செலுத்தப்படுகின்றன.*
- *வறட்சி, வெப்பம், இரும்பு நச்சுத்தன்மை மற்றும் உவர்தன்மை ஆகியவற்றுக்கு தாங்குதிறன் கொண்ட மற்றும், காற்றில்லா சூழலில் முளைக்கும் ஆற்றலுள்ள நெல் வர்க்கங்களை அடையாளம் காண்பதற்கு உயர் திரையிடல் சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன..*
- *மேலும், பீடை எதிர்ப்பு நெல் வர்க்கங்களை விருத்தி செய்வதற்கான ஆராய்ச்சிகள், குறிப்பாக பழுப்பு நிறத் தாவரத் தத்தி, நெல் கொப்புள ஈ மற்றும் அந்துகள் ஆகியவற்றிற்கு எதிர்ப்புத் திறன்கொண்ட வர்க்கங்களை விருத்தி செய்யும் ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.*

*ஏனைய களப் பயிர்கள்*

- *விவசாய நடைமுறைககள் மற்றும் ஏனைய களப் பயிர்களின் வறட்சி தாங்குதிறன் என்பவற்றை மேம்படுத்தும் நோக்கில் தற்போது மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இதன் கீழ், இருபது நிலக்கடலை, 15 பாசிப்பயறு மற்றும் 10 துவரை வகைகள் வறட்சி எதிர்ப்பிற்காக சோதிக்கப்படுகின்றன.*
- *பெரிய விதை நிலக்கடலை வகைகளுக்கான ஊட்டச்சத்து மேலாண்மை உத்திகளை உருவாக்கவும், எள் மற்றும் விரல் தினைகளில் விதை தரத்தை மேம்படுத்துவதற்கான முறைகளை சரிபார்க்கவும் ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் விவசாயிகளின் வயல்களில் சோதனைகள் நடத்தப்படுகின்றன.*
- *பெரிய விதை நிலக்கடலை வகைகளுக்கான போசணை முகாமைத்துவ உத்திகளை உருவாக்குவதற்கும், எள் மற்றும் கேழ்வரகு விதைகளின் தரத்தை மேம்படுத்துவதற்கான தொழில்நுட்ப தொகுப்புகளை சரிபார்க்கவும் ஆராய்ச்சி மற்றும் விவசாயிகள் காலங்களில் பரிசோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன.*
- *மேலும், மூன்று நம்பிக்கைக்குரிய துவர பருப்பு வரிகள் மைசூர்ப் பருப்புக்கு சாத்தியமான மாற்றீடாக மதிப்பிடப்படுகின்றன.*
- *அவரையினத் தாவர வகைகள் மற்றும் எண்ணெய்ப் பயிர்களில் மண்ணிலிருந்து பரவும் நோய்க்கிருமிகளுக்கு எதிராக உயிரியல் கட்டுப்பாட்டு முகவர்களைப் பயன்படுத்துதல் மற்றும் வறட்சி அழுத்தத்திற்கு துவரம் பருப்பின் பௌதீக மற்றும் உருவவியல் துலங்கல்களை ஆய்வு செய்வதும் இந்த ஆராய்ச்சியில் அடங்கும்.*
- *வறட்சி சகிப்புத்தன்மைக்காக ஐந்து சோயாபீன் வகைகள் பரிசோதிக்கப்படுகின்றன, மேலும் மிளகாய் வகைகளில் ஸ்கிர்டோத்ரிப்ஸ் டோர்சலிஸ் என்ற பூச்சியின் தாக்கம் வானிலை காரணிகள் தொடர்பாக மதிப்பீடு செய்யப்படுகிறது.*
- *ஐந்து சோயா போஞ்சி வரிகள் அவற்றின் வறட்சி தாங்குதிறனுக்காக பரிசோதிக்கப்படுகின்றன, மேலும் மிளகாய் வர்க்கங்களில் ஸ்கிர்டோத்ரிப்ஸ் டோர்சலிஸ் (Scirtothrips dorsalis) என்ற பீடையின் தாக்கத்தை வானிலை காரணிகளை அடியொற்றி மதிப்பீடு செய்யப்படுகிறது.*

*<u>காய்கறி</u>*

- *தக்காளி, கறிமிளகாய், கத்திரிக்காய், போஞ்சி, கோவா மற்றும் இராசவள்ளிக் கிழங்கு வகைகள் ஆகியவற்றின் உற்பத்தித்திறன் மற்றும் விளைச்சல் தரம் என்பவற்றை அதிகரிப்பதுடன் தொடர்பான கள மற்றும் பசுமை இல்ல பயிர்ச் செய்கை தொழில்நுட்பங்களை அடையாளம் காண்பதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.*
- *தக்காளி மற்றும் பீர்க்கு என்பவற்றின் பசுமை இல்ல விதை உற்பத்தியுடன் தொடர்பான உழவியல் தொகுப்பு விருத்தி செய்யப்பட்டது.*
- *களத்தில் உள்ள பிரதான பிரச்சனையை தீர்க்க ஒட்டு நாற்றுகளை உற்பத்தி செய்வதற்கான ஒரு நுட்பம் கண்டறியப்பட்டது.*
- *உள்நாட்டு விதைகளைப் பயன்படுத்தி நுண் கீரைகள் உற்பத்தி செய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. பாதகமான காலநிலைக்கு ஏற்றவாறு கத்தரிக்காய் வரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் போஞ்சி மதிப்பீடு செய்யப்பட்டது.*
- *காய்கறிகளுக்கான போசணை முகாமைத்துவ தொகுப்புகள் மதிப்பீடு செய்யப்பட்டன.*
- *மாறிவரும் காலநிலையின் கீழ் புதிய உணவுப் பயிர்கள், புதிய உணவுப் பொருட்கள் மற்றும் பெறுமதி சேர்க்கும் நுட்பங்களின் பயன்பாடு மற்றும் அறிமுகம் என்பன நிறைவு செய்யப்பட்டன.*
- *புதிய பதப்படுத்தும் முறைகள் உருவாக்கப்பட்டதுடன் உணவு பதப்படுத்தும் துறையில் ஈடுபட்டுள்ளோருக்காக 127 தரப் பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.*

- *கத்திரிக்காய், அவரை, தக்காளி மற்றும் கோவா ஆகியவற்றின் இராசயனக் கட்டுப்பாடு மற்றும் கத்தரித்தல் உள்ளிட்ட நோய் முகாமைத்துவ நுட்பங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் பொன்னாங்கணி யில் ஏற்படும் பழுப்பு நிற புள்ளி மற்றும் வெள்ளை துரு ஆகியவற்றைக் கட்டுப்படுத்த தொகுப்புகள் உருவாக்கப்பட்டன.*
- *நூற்புழு மற்றும் வெள்ளை புழு கட்டுப்பாட்டு முறைகள் மேம்படுத்தப்பட்டன.*

*<u>பழங்கள்</u>*

- *பல்வேறு விவசாய-சூழல் வலயங்களில், உயிரற்ற அழுத்தங்களிற்கு அவற்றின் தாங்குதிறனை மதிப்பிடுவதற்காக, மாம்பழத்தின் பல சேர்க்கைகள், இரண்டு அன்னாசி வர்க்கங்கள், பதினொரு ரம்புட்டான் வர்க்கங்கள், எட்டு துரியன் வர்க்கங்கள், மங்குஸ்தான் மற்றும் ஏழு ஆனைக்கொய்யா சேர்க்கைகள் உள்ளிட்ட பல்வேறு பழப் பயிர்களை மதிப்பீடு செய்வதற்கான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன்.*
- *பல்வேறு விவசாய-சூழல் வலயங்களில் இரண்டு மாம்பழ சேர்க்கைகள் மற்றும் ஒரு மாம்பழ வர்க்கம் (மாம்பழ GN 01) என்பன நிறுவப்பட்டன.*
- *அன்னாசி, ரம்புட்டான், துரியன் மற்றும் மங்குஸ்தான் ஆகியவற்றின் வெப்ப சகிப்புத்தன்மை கொண்ட பேதங்களை அடையாளம் காணும் பொருட்டு மதுருகெட்டியவில் களங்களை நிறுவும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன.*
- *அதிக அடர்த்தி நிலையில் (இரண்டு இடைவெளி - 5x5 மீ மற்றும் 7x7 மீ) ஆனைக்கொய்யாச் செய்கைக்கான உழவியல் தொகுப்பை உருவாக்க இரண்டு ஆனைக்கொய்யா வர்க்கங்களின் (ஹாஸ் மற்றும் டவர் டு) எழுபது தாவரங்களுடன் பண்டாரவளை RARDC யில் களம் நிறுவும் பணிகள் நிறைவடைந்துள்ளன.*
- *அறுவடை சுட்டிகளை அடையாளம் காண்பதற்கு மில்லாவ சுவந்தல் வர்க்கம் களத்தில் நிறுவப்பட்டதுடன் அத்தாவரங்கள் காய்க்கும் நிலையில் உள்ளன.*
- *பலாப் பழங்களின் வறட்சி தகவமைப்புத் தன்மையை ஆராய்வதற்காக இரண்டு பலாப்பழ சேர்க்கைகள் (40 தாவரங்கள்) ஹொரண FRDI மற்றும் அங்குனுகொலபெலஸ்ஸ GLORDC ஆகியவற்றில் உள்ள கண்களில் நிறுவப்பட்டதுடன் அவற்றின் விளைச்சல் மற்றும் தரம் என்பன தொடர்பான தரவு சேகரிப்பு நிறைவடைந்துள்ளது.*

**3.** *மண் பாதுகாப்பு சட்டம்*

- *மண் பாதுகாப்பு மூலம் பண்ணை நிலங்களின் நிலைபேறான உற்பத்தித்திறனைப் பேணும் பொருட்டு, ஊவா, மத்திய மற்றும் சபரகமுவ மாகாணங்களில் 82 கள செயல்விளக்கங்கள் நிறைவடை செய்ப்பட்டுள்ளன.*
- *மொனராகலை, கேகாலை, நுவரெலியா மற்றும் மாத்தளை மாவட்டங்களில் உள்ள விவசாய ஆலோசகர்களுக்கு மண் பாதுகாப்பு மற்றும் நில மேம்பாடு மற்றும் GPS & GIS தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி தரவு கண்காணிப்பு மற்றும் தரவுத்தள முகாமைத்துவம் என்பன குறித்து பயிற்சித் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.*

*விவசாய விரிவாக்கம் மற்றும் பயிற்சி*

*4. விவசாயப் பாடசாலை அபிவிருத்தி*

- *11 விவசாயப் பாடசாலைகளின் (பெல்வெஹெர, குண்டசாலை, வவுனியா, அங்குணகொலபெலஸ்ஸ, கரபிஞ்சா, அனுராதபுரம், பிபில, வாரியபொல, லபுதுவ, பாலமுனை மற்றும் பரந்தன்) கல்வி நடவடிக்கைகளுக்கான உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு ஆகியவை மேற்கொள்ளப்பட்டன.*

- அங்குணகொலபெலஸ்ஸ விவசாயப் பாடசாலையில் விசேடமாகப் விடுதிகள் புனரமைக்கப்பட்டன, குழாய்க் கிணறு மற்றும் இழைய வளர்ப்பு ஆய்வுகூடம் அமைக்கப்பட்டன மற்றும் கால்நடை வளர்ப்புப் பிரிவு புதுப்பிக்கப்பட்டது..
- மேலும், லபுதுவ விவசாயப் பாடசாலையின் புதிய பெண்கள் விடுதியின் கீழ் மாடி மற்றும் காளான் உற்பத்தி அலகு என்பவற்றை அமைக்கும் பணிகள் நிறைவுற்றுள்ளதுடன் பண்ணை இல்லை அலுவலகத்தைப் புதுப்பிக்கும் பணிகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன
- வாரியபொல விவசாயப் பாடசாலையில் அதிபர் அலுவலக அறை மற்றும் நிர்வாகப் பிரிவு என்பன பழுதுபார்க்கப்பட்டுள்ளதுடன் பாதுகாப்பு வேலியும் அமைக்கப்பட்டது.
- குண்டசாலை விவசாயப் பாடசாலையில் உணவு விஞ்ஞான ஆய்வகத்தின் கூரை மற்றும் பிரதான திருத்தியமைப்பு வேலைகள் நிறைவடைந்துள்ளதுடன் அபேவர்தன விடுதியின் கழிப்பறைத் தொகுதியும் பழுதுபார்க்கப்பட்டன.

5. விவசாயப் பாடசாலை பண்ணை அபிவிருத்தி

- டிப்ளோமா மாணவர்களுக்கான நடைமுறை பயிற்சி திறனை மேம்படுத்துவதற்காக 11 விவசாயப் பாடசாலைகளில் (பெல்வெஹெர, குண்டசாலை, வவுனியா, அங்குணகொலபெலஸ்ஸ, கரபிஞ்சா, அனுராதபுரம், பிபில, வாரியபொல, லபுதுவ, பாலமுனை மற்றும் பரந்தன்) பண்ணை வசதிகளை அபிவிருத்தி செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வனைத்து நடவடிக்கைகளும் ஏற்கனவே நிறைவு செய்யப்பட்டுள்ளன.
- வவுனியா விவசாயப் பாடசாலையில் விசேடமாக, பாடசாலை பண்ணையைச் சுற்றியுள்ள வேலிகளை மேம்படுத்தும் பணிகள், ஆய்வுகூட உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் உயிரியல் மற்றும் இரசாயனவியல் ஆய்வகங்களில் ஆய்வுகூட வசதிகளை மேம்படுத்தல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
- மேலும் லபுதுவ மற்றும் வாரியபொல ஆகிய விவசாயப் பாடசாலையின் விடுதிக்கு கணினிகள், மல்டிமீடியா ப்ரொஜெக்டர்கள், பண்ணை உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் என்பன கொள்வனவு செய்யப்பட்டன.

6. விவசாயத் திணைக்களத்தின் வருடாந்தக் கருத்தரங்கு (ASDA)

- விவசாயத் திணைக்களத்தின் வருடாந்தக் கருத்தரங்கு 2024 செப்டம்பர் மாதம் 13 அன்று வெற்றிகரமாக நடைபெற்றது.

7. ஊடக நிகழ்ச்சிகள்

- 1,554 வானொலி நிகழ்ச்சிகளை ஒலிபரப்புதல் (கொழும்பு – 650, ரஜரட்டை – 206, கந்துரட்டை – 284, ருஹுன – 362, யாழ்ப்பாணம் – 52, குறுஞ்செய்திகள் - 988) மற்றும் 147 தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை ஒளிபரப்புதல் (கொவிபிமட்ட அருணலு– 50, மிஹிகத்த தினுவோ – 46, உயிரும் உழவும் – 51) ஆகியன நிறைவு செய்யப்பட்டுள்ளன.
- 156 க்ருஷி தொலைக்காட்சி தொழில்நுட்ப குறுஞ்செய்திகளையும், 26 வணிக குறுஞ்செய்திகளையும், 130 1920 விவசாயி கேள்வி சார்ந்த குறுஞ்செய்திகளையும் தயாரித்து வெளியிடப்பட்டது.
- மொத்த பார்வையாளர்களின் எண்ணிக்கை: மிஹிகத்த தினுவோ - 33,629, கொவிபிமட்ட அருணலு - 57,160, உயிரும் உழவும் - 27,858, யூடியூப் - 113,899 மற்றும் பேஸ்புக் - 472,902.
- 32,436 புத்தகங்கள் மற்றும் 128,846 துண்டுப்பிரசுரங்கள் அச்சிடப்பட்டன. வெளியீடுகளின் விற்பனையிலிருந்து கிடைத்த வருமானம் - 2,438,542.00 ரூபாய் ஆகும்.

8. விவசாயத் தொழில்நுட்ப பூங்காக்களின் பராமரிப்பு

- மாதிரி செயல்விளக்கங்களாக சமூகத்திற்கு முறையான விவசாய தொழில்நுட்பங்களைப் பரப்புவதற்காக கன்னோருவ, பட்டஅத்த மற்றும் தியகம ஆகிய இடங்களில் அமைந்துள்ள

*விவசாயத் தொழில்நுட்ப பூங்காக்களைப் பராமரிக்கும் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகிறன. மொத்த பார்வையாளர்களின் எண்ணிக்கை - கன்னொருவாவிற்கு 60,564 (உள்ளூர் - 59,892, வெளிநாட்டினர் - 672) மற்றும் பட்டஅத்தவிற்கு 58,185 (உள்ளூர் - 57616, வெளிநாட்டினர் - 569).*

- *கன்னோருவ பூங்காவிலிருந்து 2,682,580.00 ரூபாய் மற்றும் பட்டஅத்த பூங்காவிலிருந்து 6,428,316.99 ரூபாயும் வருமானமாக (டிக்கெட்/ பண்ணை உற்பத்தி/ மீன் சிகிச்சை) ஈட்டப்பட்டது.*

*9. மண் வளத்தை பரிசோதிக்கும் வசதிகளை மேம்படுத்துதல்*

- *நெல் நிலங்களுக்கு மண் பரிசோதனை அடிப்படையிலான உர பரிந்துரைகளை அறிமுகப்படுத்துவதற்காக 2,650 மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டன, மேலும் மாதிரிகளை பகுப்பாய்வு செய்வதற்காக இரசாயனப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன.*

*10. சிறந்த விவசாய நடைமுறைகள் (GAP) மற்றும் தொழில்முனைவோர் விருத்தி என்பன மூலம் நச்சுத்தன்மையற்ற உணவுகளை உற்பத்தி செய்வதற்கு விவசாயிகளுக்கு உதவுதல்*

- *சிறந்த விவசாய நடைமுறைகள் GAP 'சஹல் யாய' நிகழ்ச்சித் திட்டத்தை செயல்படுத்துவதற்கு விவசாயிகளுக்கு தொழில்முனைவோர் விருத்தித் திட்டம் நிறைவு செய்யப்பட்டுள்ளது.*
- *513 சிறந்த விவசாய நடைமுறைகள் (GAP) சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.*

*11. உணவுப் பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல்*

- *புதிய வர்க்கங்கள், அதிக விளைச்சல் தரும் தொகுப்புகள் மற்றும் ஏனைய புதிய விதை உற்பத்தி தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் நெல், சோளம், மிளகாய், வெங்காயம், பசிப்பயறு, உளுந்து, நிலக்கடலை, சோயா போஞ்சி, கேழ்வரகு, எள், பழம் மற்றும் காய்கறிகளின் தரமான விதை உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.*
- *நெல் - சுய விதை நெல் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு 1,800 ¼ ஏக்கர் செயல்விளக்கங்கள் நடாத்தப்பட்டன. இதன்போது, 5,400 கிலோ கிராம் பதிவு செய்யப்பட்ட விதைகள் மற்றும் 180,000 பாராஷூட் தட்டுகள் வழங்கப்பட்டன.*
- *சோளம் – உள்நாட்டு கலப்பின சோள வர்க்கங்களை ஊக்குவிக்கும் வகையில், பெற்றோர் விதைகளை வழங்குவதன் மூலம் 100 ஏக்கர் பரப்பளவில் உள்நாட்டு கலப்பின சோள விதைகள் உற்பத்தி செய்யப்பட்டன, மேலும் ஒரு அரச - தனியார் கூட்டுத் திட்டமாக 2830 ஒரு ஏக்கர் செயல்விளக்கங்கள் விவசாயிகள் குழுக்களுடன் நடத்தப்பட்டன.*
- *பெரிய வெங்காயம் - பெரிய வெங்காயத்தின் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் பொருட்டு 82 நீர்ப்பாசன அலகுகள் மற்றும் நாற்றுமேடைத் தயாரிப்புக்கான மானியங்களை வழங்குவதன் மூலம் 270 ¼ ஏக்கர் செயல் விளக்கங்களை நடாத்தி, அதிக விளைச்சல் தரக்கூடிய தொழில்நுட்ப தொகுப்புகள் விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டன. 240 புதிய விவசாயிகள் அடையாளம் கணப்பட்டு, தொழில்நுட்ப தொகுப்புடன் பெரிய வெங்காயச் செய்கையை ஊக்குவிக்க மானியங்கள் வழங்கப்பட்டன.*
- *2025 ஆம் ஆண்டு சிறு போகத்திற்குத் தேவையான மெய் விதைகளை உற்பத்தி செய்வதற்கு அவசியமான தாய்க் குமிழ்த் தேவையை பூர்த்தி செய்வதற்கு மானியங்களை வழங்குவதன் மூலம் விவசாயிகள் 85,000 கிலோ கிராம் தாய்க் குமிழ்களை களஞ்சியப்படுத்த ஊக்குவிக்கப்பட்டனர்.*

- *விதை உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு UV பதப்படுத்தப்பட்ட பொலித்தீன் மற்றும் ஏனைய பொருட்களை வழங்குவதன் மூலம் 6 நிரந்தர மழைக் காப்புக் கூடாரங்கள் நிர்மாணிக்கப்பட்டதுடன் 20 நிரந்தர மழை காப்புக் கூடாரங்கள் மறுசீரமைக்கப்பட்டன. மேலும், தற்காலிக மழைக் காப்புக் கூடாரங்களை நிர்மாணிக்க 740 விவசாயிகளுக்கு பொலித்தீன் வழங்கப்பட்டது.*
- *சிறிய வெங்காயம் -. 514 விவசாயிகள் மற்றும் ஒவ்வொன்றும் 1000 சதுர மீட்டர் செயல் விளக்கக் களங்களைக் கொண்டுள்ள DOA இன் 10 பயிற்சி மையங்களுடன் சிறிய வெங்காய உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்தும் நோக்கில் மெய் விதை உற்பத்தி மற்றும் விதைக் குமிழ் உற்பத்தித் திட்டங்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன. இதன்போது, நீர் பயன்பாட்டு திறன் மற்றும் சேமிப்பு திறனை மேம்படுத்த முறையே 15 தெளிப்பு நீர்ப்பாசன அலகுகளும், 07 குமிழ் களஞ்சிய கொட்டில்களும் வழங்கப்பட்டன.*
- *மிளகாய் - இலங்கையின் மிளகாய் தேவையை பூர்த்தி செய்யும் நோக்கில், வீட்டுத் தோட்ட அளவில் உலர் மிளகாய் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக 10,000 கிலோ OPV மிளகாய் விதைகள், 2000 கிலோ கலப்பின மிளகாய் விதைகள் மற்றும் 150,000 வளர்ப்பு பைகள் வழங்கப்பட்டன.*
- *பாசிப்பயறு – 5,885 கிலோ கிராம் விதைகள் மற்றும் பிற உள்ளீடுகளை வழங்குவதன் மூலம் 360 ஹெக்டயரில் சுய விதை உற்பத்தி ஊக்குவிக்கப்பட்டது.*
- *நிலக்கடலை - விதை உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக 52 ஹெக்டயரில் சான்றளிக்கப்பட்ட விதை உற்பத்திக்காக 3,540 கிலோ கிராம் பதிவு செய்யப்பட்ட விதைகள் வழங்கப்பட்டன மற்றும் கரடியனாறு ஆராய்ச்சி நிலையத்தில் இனப்பெருக்க விதை உற்பத்திக்காக தெளிப்பான் நீர்ப்பாசன அலகுகள் நிறுவப்பட்டன.*
- *எள் - சான்றளிக்கப்பட்ட மற்றும் சுய விதை உற்பத்திக்காக 1,573.75 கிலோ கிராம் பதிவு செய்யப்பட்ட விதைகள் விநியோகிக்கப்பட்டன*
- *உளுந்து - விதை உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக 220 ஹெக்டயர் பயிரிடப்பட்டது, 45 கையால் இயக்கும் சுழல் விதைப்பான்கள் கொள்வனவு செய்யப்பட்டு செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பகுதிகளுக்கு விநியோகிக்கப்பட்டன. 10 OFC உற்பத்தி செய்யும் விவசாயிகள் அமைப்புகள் உருவாக்கப்பட்டதுடன், 20 தார்பாய்கள், 200 பிளாஸ்டிக் கேன்கள் கொள்வனவு செய்யப்பட்டு விவசாயிகளிடையே விநியோகிக்கப்பட்டன.*
- *சோயா போஞ்சி - விதை உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக 1 ஏக்கர் அளவிலான 440 செயல்விளக்கங்களுக்கு 8796 கிலோ கிராம் பதிவு செய்யப்பட்ட விதைகள் விநியோகிக்கப்பட்டன.*
- *கேழ்வரகு - 32 ஹெக்டயரில் சுய விதை உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு, சான்றளிக்கப்பட்ட/பதிவு செய்யப்பட்ட விதை விநியோகம் நடைபெற்று வருகிறது.*
- *தட்டைப்பயறு - 100 ஹெக்டயரில் விதை உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு, 2042 கிலோ கிராம் பதிவு செய்யப்பட்ட விதைகள் வழங்கப்பட்டதுடன் 30 தட்டைப்பயறு பிரித்தெடுப்பான் இயந்திரங்கள் விநியோகிக்கப்பட்டன*
- *பழம் - புதிதாக வெளியிடப்பட்ட வர்க்கங்களின் நடுகைப் பொருட்களின் உற்பத்தியை வலுப்படுத்துவதற்காக, ஏற்கனவே உள்ள பழத்தோட்டங்களின் 3,500 தாய்த் தாவரங்களைப் பராமரிக்கும் செயற்பாடுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றதுடன் செயல்விளக்க பழத் தோட்டங்களாகப் பயன்படுத்த 5 பழத்தோட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன.*
- *காய்கறி பயிர்கள் - புதிதாக வெளியிடப்பட்ட காய்கறி வகைகளின் விதை உற்பத்தியை விருத்தி செய்யும் பொருட்டு 75 கிலோ கிராம் கெகுலு இனப்பெருக்க விதைகள் மற்றும் 53.5*

*கிலோ கிராம் HORDI பொக்குரு இனப்பெருக்க விதைகள் என்பன வெற்றிகரமாக உற்பத்தி செய்யப்பட்டு விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி மையத்திற்கு (SPMDC) சமர்ப்பிக்கப்பட்டன.*

- *எதிர்கால மேம்பாடுகளுக்காக 100 கிராம் முள்ளங்கி போல விதைகளை சுத்திகரிப்பதை இலக்காகக் கொண்ட முள்ளங்கி விதை உற்பத்தி நடைபெறுகிறது. சீத்தஎலிய ARS இல் விதைகள் நிறுவப்படுகின்றன.*
- *50 கிலோ கிராம் பயற்றங்காய் (A9) இனப்பெருக்க விதைகளை உற்பத்தி செய்யும் இலக்குடன் பயற்றங்காய் விதை உற்பத்தி நடைபெறுகிறது. விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி மையத்திற்கு (SPMDC) 5 கிலோ கிராம் A-9 பயற்றங்காய் இனப்பெருக்க விதைகள் சமர்ப்பிக்கப்பட்டன.*
- *கலப்பின விதை உற்பத்திக்கான பெற்றோர் மூலங்களை வழங்கும் பொருட்டு ஒவ்வொரு பெற்றோர் வரியிலிருந்தும் (OK-11, OK-45, மற்றும் OK-12) 20 கிலோ வெண்டி இனப்பெருக்க விதைகளை உற்பத்தி செய்தல்.*

*விதைச் சான்றுப்படுத்தல் மற்றும் தாவரப் பாதுகாப்பு*

*12. தேசிய விதை உற்பத்தி மற்றும் கொள்வனவு செய்யும் செயற்திட்டம்*

- *விவசாயிகளிடையே தரமான விதைகளின் கிடைக்கும் தன்மையை அதிகரிக்கும் நோக்கில் ஒப்பந்தத்தில் வளர்க்கப்பட்ட (பதிவுசெய்யப்பட்ட மற்றும் சான்றளிக்கப்பட்ட) 832 மெட்ரிக் தொன் OFC விதைகள், ஒப்பந்தத்தில் வளர்க்கப்பட்ட பதிவுசெய்யப்பட்ட மற்றும் சான்றளிக்கப்பட்ட விதை நெல் 31,712 பூசல் மற்றும் ஒப்பந்தத்தில் வளர்க்கப்பட்ட தரமான காய்கறி விதைகள் 51,415 கிலோ கிராம் ஆகியன கொள்வனவு செய்யப்பட்டன.*
- *ஸ்டிக்கர்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள் என்பன கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன் விதை களஞ்சியப்படுத்தலுக்கான புகையூட்டல் மற்றும் போக்குவரத்துப் பணிகள் என்பன நிறைவடைந்துள்ளன.*

*13. துரிதப்படுத்தப்பட்ட விதைப் பண்ணை மேம்பாட்டுத் திட்டம்*

- *இங்கினிமிட்டியவில் விவசாயக் கிணறுகள் நிர்மாணித்தல், பட்டஅத்த மற்றும் கரடியனாறுவில் குளங்களைப் புனரமைத்தல், மல்வத்த, பொலன்னறுவை, வல்பிட்ட மற்றும் சீதாஎலியவில் தெளிப்பான் நீர்ப்பாசனத் தொகுதிகளை நிறுவுதல், கந்தபொல மற்றும் மல்வத்தவில் அதிக திறன் கொண்ட நீர் பம்புகளைக் கொள்வனவு செய்தல், நீர்ப்பாசனத் தொகுதிகளுக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் இதர பொருட்களை கொள்வனவு செய்தல் ஆகிய செயற்பாடுகள் ஏற்கனவே நிறைவடைந்துள்ளன.*
- *அம்பேபுஸ்ஸ மற்றும் வீரபனை ஆகிய இடங்களில் மழைநீர் சேமிப்புக் கூடங்களை நிர்மாணித்தல், வால்பிட்ட, பஸ்யால மற்றும் அம்பேபுஸ்ஸ ஆகிய இடங்களில் மழைநீர் சேமிப்புக் கூடங்கள் மற்றும் வலை இல்லங்களை புதுப்பிப்பதற்கான பொருட்களை கொள்வனவு செய்தல், மித்தெனியவில் பதனிடும் அலகை புதுப்பித்தல், கஹகொல்லவில் ஒரு அலுவலக கட்டிடத்தை நிர்மாணித்தல் மற்றும் மஹஇலுப்பல்லம DDA அலுவலக கட்டிடத்தை புதுப்பித்தல் ஆகியவை நிறைவடைந்துள்ளன.*
- *அம்பேபுஸ்ஸ, அளுத்தாராம, பட்டஅத்த, மித்தெனிய, வீரபனை, பெல்வெஹர ஆகிய இடங்களில் தேவையான நில அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் சீத்தாஎலிய, பட்டஅத்த மற்றும் பொலன்னறுவை ஆகிய இடங்களில் தேவையான பாதை அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன.*
- *முருங்கன் மற்றும் வவுனியாவில் சூரிய மின் உற்பத்தி அமைப்புகளை நிறுவுதல், பொலன்னறுவை, நிக்கவெரட்டிய, எலுவன்குளம், இங்கினிமிட்டிய, கரடியனாறு, நுவரெலியா பிராந்தியத்தில் சூரியசக்தி மின் தெரு விளக்குகளை நிறுவுதல், பொலன்னறுவை விதை உற்பத்தி பண்ணையில் கூட்டு அறுவடை இயந்திரங்கள் மற்றும் சுழல் கலப்பைகளை*

*கொள்வனவு செய்தல் மற்றும் தேவையான பண்ணை இயந்திரங்கள், கருவிகள், உபகரணங்கள், சூரியசக்தி மின் தொகுதிகள் என்பவற்றைக் கொள்வனவு செய்தல் மற்றும் ஏற்கனவே காணப்படும் பண்ணை இயந்திரங்களைப் பழுதுபார்த்தல் ஆகிய நடவடிக்கைகள் ஏற்கனவே நிறைவு செய்யப்பட்டுள்ளன.*

*14. உள்நாட்டு விதை உருளைக்கிழங்கு உற்பத்தியை ஊக்குவித்தல்*

- *சீதாஎலிய பசுமை இல்ல வளாகத்தில் உள்ள பழைய தாவர இல்லங்கள் மற்றும் வலை இல்லங்கள் என்பவற்றை மறுசீரமைத்தல், உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் பழுதுபார்த்தல், நடுகைப் பொருட்கள் உற்பத்திக்கான இரசாயனப் பொருட்களைக் கொள்வனவு செய்தல், சீதாஎலிய ஆராய்ச்சி நிலையத்தில் இழைய வளர்ப்பு ஆய்வகம், வலை இல்லங்கள் மற்றும் குளிர் அறையை உருவாக்குதல் மற்றும் பண்டாரவளை ஆராய்ச்சி நிலையத்தில் உருளைக்கிழங்கு RSC தாவர உற்பத்தி அமைப்பு, வலை இல்லங்கள், இரசாயனப் பொருட்கள், உரம் மற்றும் தினசரி பராமரிப்பு ஆய்வகத்தை உருவாக்குதல் ஆகியவை ஏற்கனவே நிறைவு செய்யப்பட்டுள்ளன.*

*15. விதை சான்றுப்படுத்தல் நடவடிக்கைகளை வலுப்படுத்துதல்*

- *மஹாஇலுப்பல்லமவில் விதை பரிசோதனை ஆய்வக வசதிகளை மேம்படுத்துவதுடன் தொடர்பான 80% வீதமான பணிகள் நிறைவடைந்துள்ளன.*
- *கன்னொருவவில் உள்ள விதை சுகாதார சோதனை அலகில் தாவர இல்லங்களை நிர்மாணித்தல் மற்றும் பட்ட அத்தவில் உள்ள விதை சோதனை ஆய்வகத்தின் நாற்றுமேடை கொட்டிலை நிர்மாணித்தல் ஆகிய பணிகள் நிறைவடைந்துள்ளன*

*16. விதைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் விதை மற்றும் நடுகைப் பொருட்களின் தர உறுதி*

- *விதைச் சட்டத்தின் கீழ் 2,401 சான்றிதழ்கள் வழங்கப்பட்டன, (பதிவு செய்யப்பட்ட 1,285 விதை கையாளுபவர்கள் மற்றும் புதுப்பிக்கப்பட்ட 1,116 விதை கையாளுபவர் பதிவுகள்).*
- *மொத்தம் 1,765 விதை லேபிள்கள் அங்கீகரிக்கப்பட்டன, மேலும் 1,181 விதை கையாளுபவர் வளாகங்கள் எழுமாறான முறையில் பரிசோதிக்கப்பட்டன.*
- *விதைச் சான்றுப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டு 11,877.17 மெற்றிக் தொன் விதை நெல், 558.15 மெற்றிக் தொன் OFC விதைகள் 64.5 மெற்றிக் தொன் காய்கறி விதைகள் மற்றும் 484.24 மெற்றிக் தொன் விதை உருளைக்கிழங்குடன் 2,168,077 சிறு கிழங்கு என்பன 6,539.67 ஹெக்டயர் விதை நெல் வயல்கள், 1,370.85 ஹெக்டயர் OFC களங்கள், 1,64.37 ஹெக்டயர் காய்கறி களங்கள் மற்றும் 80.04 ஹெக்டயர் விதை உருளைக்கிழங்குக் களங்கள் என்பன சான்றளிக்கப்பட்டன.*
- *13,660 ஆய்வுகூடப் பரிசோதனைகள் மற்றும் பகுப்பாய்வுகள் மற்றும் 1,978 கட்டுப்பாட்டுக்குப் பிந்தைய விதைப் பரிசோதனைகள் நடத்தப்பட்டன.*
- *687 தாய்த் தாவரங்கள், 316 நாற்றுமேடைகள் மற்றும் 827,364 பழக் கன்றுகள் என்பவற்றை பதிவு செய்ததன் மூலம் பழத் தாவரங்களின் சான்றளிப்பு மேற்கொள்ளப்பட்டது.*
- *அனைத்து பங்குதாரர்களிடையேயும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் விழிப்புணர்வு திட்டங்கள் நடத்தப்பட்டன.*

*17. மனித ஆரோக்கியம் மற்றும் சுற்றுச்சூழலில் வேளாண் - ரசாயனங்களின் சாத்தியமான பாதகமான விளைவுகளைக் குறைத்தல்*

- *சிறு போகத்தில் யார் நீட்டளவு பயற்றங்காயில் தெரிவு செய்யப்பட்ட பீடைகொல்லிகளின் அதிகபட்ச எச்ச அளவு (MRL) மற்றும் அறுவடைக்கு முந்தைய இடைவெளி (PHI)*

*என்பவற்றை மதிப்பீடு செய்தல் (8 பீடைகொல்லிகள் மதிப்பீடு செய்யப்பட்டதுடன் 26 மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன).*

- *பீடைகொல்லி எச்சங்களின் அளவுகளை மதிப்பீடு செய்வதற்கு நீர், பழங்கள் மற்றும் காய்கறிகள் என்பவற்றில் எழுமாறன பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. (195 பழங்கள்/ காய்கறி வகைகள் மற்றும் 88 நீர் மாதிரிகள்) மற்றும் 17 கன உலோகங்கள் மற்றும் 203 பீடைகொல்லிகளில் (139 பழங்கள்/காய்கறி மற்றும் 80 நீர் மாதிரிகள்) கன உலோக கொள்ளடக்கம் பற்றிய மதிப்பீடு.*
- *சேவை ஒப்பந்தம், பயிற்சி மற்றும் உபகரண அளவுத்திருத்தம் உள்ளிட்ட ஆய்வக நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் ISO17025:2017 அங்கீகாரத்தின் தேவைக்கேற்ப ஆய்வக வசதிகளை வலுப்படுத்துதல். (கணக்காய்வுத் திகதி 2024.04.24/25/26 மற்றும் மொத்த செலவு - 2227910.80 ரூபாய்)*
- *பறிமுதல் செய்யப்பட்ட 4.06 மெற்றிக் தொன் பீடைகொல்லிகள் எரிக்கப்பட்டன.*
- *மஹாஇலுப்பள்ளமவில் பறிமுதல் செய்யப்பட்ட பீடைகொல்லி கடை சுற்றியுள்ள வேலி முழுமையாக மாற்றப்பட்டு பழுதுபார்க்கப்பட்டது.*
- *நாடு முழுவதும் விவசாய இரசாயன விற்பனை மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களுக்கான 14 பயிற்சித் திட்டங்கள் நிறைவு செய்யபட்டன..*

*18. விநியோகச் சங்கிலி கட்டமைப்பை (JICA) வலுப்படுத்துவதன் மூலம் சிறு மற்றும் நடுத்தர அளவிலான விவசாய உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல்*

- *சந்தை மைய பொருட்கள், பயிற்சியாளர் பயிற்சி (TOT) திட்டங்கள், விவசாயிகள் பயிற்சித் திட்டங்கள், AI மற்றும் TA க்களுக்கான செயலமர்வுகள், அதிகாரிகளுக்கான விழிப்புணர்வுத் திட்டங்கள், ஊடாடும் செயலமர்வுகள், அடிப்படை கணக்கெடுப்பு மற்றும் பாலின விழிப்புணர்வுத் திட்டங்கள் மற்றும் சந்தை ஆய்வுகள் என்பன நடத்தப்பட்டதுடன் 70 கள விஜயங்களும் நிறைவு செய்யபட்டன.*

*1.9 உணவுப் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான விஷேட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விவசாயத் திணைக்களம் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள்*

- *31.12.2024 ஆம் திகதியில் நிதி முன்னேற்றம்*

| தொ / இ ல. | செயற்திட்டம் | ஒதுக்கீடு (மில். ரூபா) | 31.12.2024 வரையான மொத்த செலவு (மில். ரூபாய்) | செலவு % |
|---|---|---|---|---|
| | செலவுத் தலைப்பு - 118-02-03-020-2202 | | | |
| 1 | தேன் வளர்ப்புத் தொழிலை சாத்தியமான பகுதிகளில் பிரபலப்படுத்துவதன் மூலம் தேனீ தேன் உற்பத்தியை அதிகரித்தல் - பகுதி 1 | 5 | 4.279 | 86 |
| | செலவுத் தலைப்பு - 118-02-03-020-2509 | | | |
| 2 | தேன் வளர்ப்புத் தொழிலை சாத்தியமான பகுதிகளில் பிரபலப்படுத்துவதன் மூலம் தேனீ தேன் உற்பத்தியை அதிகரித்தல் - பகுதி 1 | 7 | 6.155 | 96 |
| 3 | இலங்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பழப் பயிர்களின் உற்பத்தி, உற்பத்தித்திறன் மற்றும் தரத்தை விருத்தி செய்வதற்கு மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களை செயல் விளக்கமளித்தல் மற்றும் பரப்புதல் | 10 | 4.767 | 48 |
| 4 | வர்த்தக ரீதியான பழ உற்பத்தி தோட்டங்களை நிறுவுவதற்கு சமீபத்தில் பரிந்துரைக்கப்பட்ட வர்க்கங்களைப் பயன்படுத்தி விளாம்பழம், மாம்பழம் மற்றும் தோடம்பழம் ஆகியவற்றின் வெளிப்புற கள மரபணு வங்கிகளை விருத்தி செய்தல் மற்றும் | 5 | 4.615 | 92 |

| தொ / இல. | செயற்திட்டம் | ஒதுக்கீடு (மில். ரூபா) | 31.12.2024 வரையான மொத்த செலவு (மில். ரூபாய்) | செலவு % |
|---|---|---|---|---|
| | விரிவுபடுத்துதல். | | | |
| 5 | நிலைபேறான விவசாயத்தை மேம்படுத்தும் பொருட்டு ஆய்வக வசதிகளை விருத்தி செய்தல் மற்றும் குறைந்த செலவிலான போசணை முகாமைத்துவ நடைமுறைகளை உருவாக்குதல் - கட்டம் III | 15 | 14.955 | 100 |
| 6 | சூழலுக்கு ஏற்ற காலநிலைக்கு சீரமைவான விவசாய தொழில்நுட்பங்களைப் பரப்புதல் | 7 | 5.386 | 77 |
| 7 | பீடைகள் மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்துதல், ஏனைய களப் பிரச்சினைகளைத் தீர்த்தல் மற்றும் உணவுப் பயிர்த் துறையில் தொழில்நுட்ப பரவலை மேம்படுத்துதல் | 10 | 7.187 | 72 |
| 8 | விவசாய அறிவுப் பரவலை ஊக்குவிப்பதற்காக கன்னோருவவில் உள்ள விவசாய தொழில்நுட்ப பூங்காவின் வசதிகளை வலுப்படுத்துதல் | 9.5 | 7.795 | 91 |
| 9 | விவசாய அறிவு பரவலை ஊக்குவிப்பதற்காக பட்டஅத்தவில் உள்ள விவசாய தொழில்நுட்ப பூங்காவின் வசதிகளை வலுப்படுத்துதல் | 9.5 | 5.095 | 54 |
| 10 | விவசாய சுற்றுலா மற்றும் விவசாய அறிவுப் பரவலை ஊக்குவிப்பதற்காக சசூழல் நட்பு விவசாய தொழில்நுட்ப பூங்காவின் வசதிகளை வலுப்படுத்துதல் | 3.5 | 1.748 | 50 |
| 11 | கமத்தொழில், காணி, கால்நடை வளங்கள், நீர்ப்பாசன , கடற்றொழில் மற்றும் நீர்வள அமைச்சில் நகர்ப்புற விவசாய செயல்விளக்கத்தை நிறுவுதல் | 3.5 | 1.016 | 29 |
| 12 | 'நெகத்தட்ட பெலயக்' தேசிய மர நடுகை நிகழ்ச்சித் திட்டம் | 0.864 | 0.864 | 100 |
| 13 | 'வசத் சிரிய' தேசிய புத்தாண்டு விழா | 0.44 | 0.438 | 100 |
| 14 | 'ஹம்பந்தோட்டை மாவட்டத்தில் ஏற்றுமதிக்காக வாழை செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளை இலக்காகக் கொண்டு, அம்புல் வர்க்க வாழைபழங்களைப் பொதி செய்வதற்கான ஒரு அலகை நிறுவுதல் | 0.194 | 0.116 | 61 |
| 15 | பல்வேறு பங்குதாரர்களின் ஆதரவுடன் கண்டுபிடிப்பாளர்களை வெற்றிகரமான தொழில்முனைவோராக மாற்றுதல் (நிபுணர்களின் பரிந்துரையின்படி தேர்ந்தெடுக்கப்பட்ட கண்டுபிடிப்புகளை உருவாக்குதல்) | 1.909 | 1.67 | 87 |
| | உப கூட்டுத்தொகை | 88.406 | 66.09 | 76 |
| | செலவுத் தலைப்பு - 118-02-03-088-2509 | | | |
| 16 | 2024 சிறு போகத்தில் பிரதான நீர்ப்பாசனப் பகுதிகளில் நெற் செய்கையில் உற்பத்தித்திறன் மேம்பாடு | 13.281 | 10.146 | 76 |
| 17 | 2024 சிறு போகத்தில் சோள உற்பத்தி மேற்கொள்வதற்கு நெல் வயல்களைப் பன்முகப்படுத்துதல் | 21.6 | 21.568 | 100 |
| | உப கூட்டுத்தொகை | 34.881 | 31.714 | 91 |
| | செலவுத் தலைப்பு - 118-01-02-001-2509 | | | |
| 18 | FAO ஏற்பாடு செய்த 37வது ஆசிய பசிபிக் மாநாட்டின் உறுப்பினர்களின் களச் சுற்றுப்பயணத்தை எளிதாக்குவதற்காக, பட்டஅத்த விவசாய தொழில்நுட்ப பூங்காவின் உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் செயல் விளக்கக் களங்களை விருத்தி செய்தல் | 11.492 | 11.492 | 100 |

| தொ / இல. | செயற்திட்டம் | ஒதுக்கீடு (மில். ரூபா) | 31.12.2024 வரையான மொத்த செலவு (மில். ரூபாய்) | செலவு % |
|---|---|---|---|---|
| 19 | புதிதாக மேம்படுத்திய தொழில்நுட்பங்களைப் பரப்புவதற்கான நிறுவன மற்றும் ஆராய்ச்சி கள வசதிகளை விருத்தி செய்தல் | 2.157 | 2.157 | 100 |
| 20 | FAO-வின் 37வது ஆசிய பசிபிக் பிராந்திய உச்சிமாநாட்டின் பிரதிநிதிகளின் சுற்றுப்பயணத்திற்கு இணையாக முன்மொழியப்பட்ட கள நாள் நிகழ்ச்சி - பிப்ரவரி 22, 2024 அன்று பட்டஅத்தவில் உள்ள விவசாய தொழில்நுட்ப பூங்கா | 9.573 | 9.571 | 100 |
| 21 | FAO-வின் 37வது ஆசிய பசிபிக் பிராந்திய உச்சிமாநாட்டிற்கு உணவுப் பயிர்களைக் கொண்டு நில அலங்காரத்தை மேற்கொள்ளல் | 0.252 | 0.250 | 99 |
| | உப கூட்டுத்தொகை | 23.474 | 23.470 | 100 |
| | மொத்தம் | 146.762 | 121.274 | 84 |

2. 2024.12.31 ஆம் திகதி வரையிலான பௌதீக முன்னேற்றம்

| செயற்திட்டம் | முன்னேற்றம் | நடைமுறைப்படுத்திய பிரதேசங்கள் | பயனாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. தேன் வளர்ப்புத் தொழிலை சாத்தியமான பகுதிகளில் பிரபலப்படுத்துவதன் மூலம் தேனீ தேன் உற்பத்தியை அதிகரித்தல் - பகுதி 1 | • தரமான தேன் உற்பத்தியை ஊக்குவித்தல், தேர்ந்தெடுக்கப்பட்ட 12 சாத்தியமான பகுதிகளில் 330 விவசாயிகளுக்கு 50% மானியத்துடன் தேனீ வளர்ப்புப் பெட்டிகள், தேனீக் கூட்டங்கள் மற்றும் பிற உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டன.<br>• நான்கு தேன் சேகரிப்பு மற்றும் பதப்படுத்தும் அலகுகளை நிறுவுவதற்காக பிந்துனுவெவ பகுதியில் 8 விவசாயிகளுக்கு 50% மானியத்துடன் தொற்று நீக்கித் நீர்த் தொட்டி அமைத்தல், களஞ்சியத் தாங்கிகள் மற்றும் உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டன.<br>புகைப்பட இலக்கம் 25 | கண்டி, நுவரெலியா, மாத்தளை, குருநாகல், கேகாலை, இரத்தினபுரி, பதுளை, மொனராகலை, களுத்துறை, கம்பஹா, கொழும்பு மாவட்டங்கள் மற்றும் மாகாணங்களுக்கு இடையேயான பகுதிகள். | 338 விவசாயிகள் |
| 2. தேன் வளர்ப்புத் தொழிலை சாத்தியமான பகுதிகளில் பிரபலப்படுத்துவதன் மூலம் தேனீ தேன் உற்பத்தியை அதிகரித்தல் - பகுதி 2 | • பிந்துனுவெவ மற்றும் வாரியப்பொல தேனீ வளர்ப்பு அலகுகளுக்கு உபகரணங்களை வழங்கியதன் மூலம் பயிற்சி வசதிகள் மேம்படுத்தப்பட்டன.<br>• வாரியபொல தேனீ வளர்ப்பு அலகின் தேனீ வளர்ப்புக் கட்டிடத்தை புனரமைத்தல்.<br>• தேனீ வளர்ப்புத் தொழில் குறித்த விழிப்புணர்வை அதிகரிக்கும் பொருட்டு உலக தேனீ தினத்துடன் தொடர்புடையதாக 22 துணை நிகழ்ச்சிகள், 18 பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் 8 கண்காணிப்பு சுற்றுப்பயணங்கள் நடத்தப்பட்டதுடன் விவசாயிகளிடையே 2000 சிற்றேடுகள் மற்றும் 24000 கையேடுகள் என்பன விநியோகிக்கப்பட்டன.<br>• புகைப்பட எண். தீவு முழுவதும் (மாகாண | நாடு முழுவதும் (மாகாண மற்றும் மாகாணங்களுக்கு இடையே), பிந்துனுவெவ மற்றும் வாரியப்பொல தேனீ வளர்ப்பு அலகுகள் | விவசாயிகள், பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள், அதிகாரிகள், தொழில்முனைவோர் |

| செயற்திட்டம் | முன்னேற்றம் | நடைமுறைப்படுத்திய பிரதேசங்கள் | பயனாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| | *மற்றும் மாகாணங்களுக்கிடையில்), நீர்ப்பாசனம் மற்றும் பூண்டுன்வெவ தேனீ கட்டுப்பாட்டு அலகுகள் விவசாயிகள், பள்ளி மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள், அதிகாரிகள், தொழில்முனைவோர்*<br>*புகைப்பட இலக்கம் 26-27* | | |
| *3.* இலங்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பழப் பயிர்களின் உற்பத்தி, உற்பத்தித்திறன் மற்றும் தரத்தை விருத்தி செய்வதற்கு மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களை செயல் விளக்கமளித்தல் மற்றும் பரப்புதல் | • *50 பழத்தோட்டங்களை நிறுவுவதற்கான நடுகைப் பொருட்களின் உற்பத்தி நிறைவடைந்துள்ளது. 2 களங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 20 களங்கள் தயார்படுத்தப்படுகின்றன.*<br>• தாய்தாவர பழப் பயிர் கன்றுகள் பராமரிக்கப்பட்டு, நடுகைப் பொருட்கள் *உற்பத்திக்கு பயன்படுத்தப்படுகின்றன.*<br>• தற்போதுள்ள பழத்தோட்டங்களில் தொழில்நுட்ப சிக்கல்களைத் தீர்ப்பது மற்றும் பின்தொடர் சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. *30* சோதனை மற்றும் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.<br>• *550 விவசாய விரிவாக்க அதிகாரிகள் 60 விவசாயிகள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.*<br>*புகைப்பட எண் 28-29* | ஹம்பாந்தோட்டை, அனுராதபுரம், புத்தளம், குருநாகல், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, நுவரெலியா, களுத்துறை, கம்பஹா, மொனராகலை, பதுளை, கேகாலை | |
| *4.* வர்த்தக ரீதியான பழ உற்பத்தி தோட்டங்களை நிறுவுவதற்கு சமீபத்தில் பரிந்துரைக்கப்பட்ட வர்க்கங்களைப் பயன்படுத்தி விளாம்பழம், மாம்பழம் மற்றும் தோடம்பழம் ஆகியவற்றின் வெளிப்புற கள மரபணு வங்கிகளை | • விளாம்பழம், மாம்பழம் மற்றும் தோடை வகையின் கள மரபணு வங்கிகளை விஸ்தரிப்பதற்கு *10* ஹெக்டயர் நிலத்தை வெற்றிகரமாக சுத்தம் செய்து அபிவிருத்தி செய்தல் மற்றும் புதிதாக அபிவிருத்தி செய்யப்பட்ட *10* ஹெக்டயர் நிலத்தில் ஒட்டுப் பழச்செடிகளை நடுதல்.<br>• உள்கட்டமைப்பு அபிவிருத்தியின் கீழ் முட்கம்பி வேலிகள் அமைத்தல் மற்றும் நீர் விநியோக முறையை விரிவுபடுத்துதல்.<br>• களப் பராமரிப்பு, உழவியல் முறைகள், மற்றும் அவற்றை மதிப்பீடு செய்தல், விளாம்பழம், மாம்பழம் மற்றும் தோடை வகையினங்களின் கள மரபணு பல்வகைமையை மதிப்பீடு மற்றும் மதிப்பீடு ஆகியவை தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.<br>• *8000 ஒட்டுக் கன்றுகள் உற்பத்தி செய்யும் பணிகள் நிறைவுற்றுள்ளன. (3000 விளாம்பழம், 2500 மாம்பழ, 2500 தோடை இனப் பயிர்கள்)*<br>• வர்த்தக ஆராய்ச்சி மற்றும் செயல்விளக்கத்திற்காக *5* ஹெக்டயர் நிலப் பரப்பு அபிவிருத்தி செய்யப்பட்டு களம் நிறுவப்பட்டுள்ளது. | தானிய பருப்பு மற்றும் எண்ணெய் பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம், அங்குனுகொலபெலஸ்ஸ, களப் பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் | பழ உற்பத்தியாளர்கள், விவசாயிகள் |

| செயற்திட்டம் | முன்னேற்றம் | நடைமுறைப்படுத்திய பிரதேசங்கள் | பயனாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| விருத்தி செய்தல் மற்றும் விரிவுபடுத்துதல் | • பழைய தண்ணீர் இழுவண்டித் தாங்கி திருத்தியமைக்கப்பட்டுள்ளதுடன் மற்றும் கள மரபணு வங்கிகளுக்கு மேலதிக நீர் விநியோகம் வழங்கப்பட்டுள்ளது.<br>புகைப்பட இலக்கம் 30-32 | | |
| 5. நிலைபேறான விவசாயத்தை மேம்படுத்தும் பொருட்டு ஆய்வக வசதிகளை விருத்தி செய்தல் மற்றும் குறைந்த செலவிலான போசணை முகாமைத்துவ நடைமுறைகளை உருவாக்குதல் - கட்டம் III | • மண் இரசாயன ஆய்வகத்தின் மேல் மாடியின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்தல் மற்றும் ஆய்வகத்தில் வேலை செய்வதற்குத் தேவையான வசதிகளை மேம்படுத்துதல் – பட்டறை, நீர் வழங்கல், குளிரூட்டிகளைத் திருத்துதல் உள்ளிட்ட வசதிகள் விருத்தி செய்யப்பட்டுள்ளன.<br>• மண்ணின் தரம் மற்றும் மாற்று போசணை ஆதாரங்கள், வளர்ப்பு ஊடகங்களின் தரம் பற்றி பகுப்பாய்வு செய்தல் மற்றும் பாதுகாப்பான சூழல் நிலைமைகளின் கீழ் பரிசோதனை செய்தல்.<br>• மண், சேதன உரங்கள், தாவர பகுப்பாய்வு மற்றும் நுண்ணுயிரியல் மதிப்பீடுகளுக்கு பயன்படுத்தப்படும் ஆய்வக உபகரணங்களை பழுதுபார்த்தல்.<br>• உயிரியல் உர வகைகளை விருத்தி செய்யும் பொருட்டு இயற்கையான வாழ்விடங்களிலிருந்து (அடையாளப்பட்ட தாவரங்களின் ரைசோஸ்பியர்களில் இருந்து) N நிலைநாட்டும், P ஐக் கரைக்கக்கூடிய மற்றும் K ஐக் கரைக்கக்கூடிய, நன்மை பயக்கும் நுண்ணுயிரிகளை தனிமைப்படுத்துதல்.<br>• சிறிய வெங்காயம் மற்றும் சோளத்திற்கான இரசாயனப் பொருட்களின் பயன்பாட்டைக் குறைக்கும் நோக்கில் சூழல் நட்பு மாற்று ஆதாரங்களைப் பயன்படுத்தி, சூழல் நட்பு போசணை முகாமைதத்துவ தொகுப்புகளை உருவாக்குதல்.<br>புகைப்பட இலக்கம் 33-35 | நிலைபேறான விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம், மாகந்துறை, குருநாகல் மற்றும் கம்பஹா மாவட்டங்கள் | 05 விவசாயத் துறைகளைச் சேர்ந்த விவசாயிகள் நேரடிப் பலன்களைப் பெறுவதுடன் ஈர மற்றும் இடைநிலை வலயங்களில் உள்ள விவசாயக் களங்களில் உள்ள விவசாயிகள் மறைமுகப் பலன்களைப் பெறுவார்கள். |

| செயற்திட்டம் | | முன்னேற்றம் | நடைமுறைப்படுத்திய பிரதேசங்கள் | பயனாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 6. | சூழலுக்கு ஏற்ற காலநிலைக்கு சீரமைவான விவசாய தொழில்நுட்பங்களைப் பரப்புதல் | • நிலைபேறான வீட்டுத் தோட்டச் செய்கைகளை உருவாக்குதல், சேதன உர உற்பத்தி, கூடுப்பசளை உற்பத்தி மற்றும் காளான் உற்பத்தி ஆகியவை தொடர்பான 86 பயிற்சிகள் நடத்தப்பட்டு 3824 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டனர்.<br>• நில மேம்பாடு நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் பயிர்களை நிறுவும் பணிகள் நடைபெற்று வருகின்றன.<br>• காளான் ஆராய்ச்சிப் பிரிவின் வளர்ப்பு இல்லம் புனரமைக்கப்பட்டுள்ளது<br>• புதிய கூட்டுப்பசளை அலகு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது..<br>• மண்புழு உர உற்பத்தித் தொழிற்சாலை பழுதுபார்க்கப்பட்டுள்ளது.<br>• 5 மாகாணங்களில் தரவு சேகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் ஏனைய மாகாணங்களுக்கான தரவு சேகரிப்பு நடைபெற்று வருகிறது<br>புகைப்பட இலக்கம் 36-38 | நிலைபேறான விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம், மாகந்துரை, மற்றும் அனைத்து மாகாணங்களிலும் உள்ள மாகாண விவசாய திணைக்களங்கள் | 3824 |
| 7. | உணவுப் பயிர்களில் பீடைகள் மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்துதல், ஏனைய களப் பிரச்சினைகளைத் தீர்த்தல் மற்றும் உணவுப் பயிர்த் துறையில் தொழில்நுட்ப பரவலை மேம்படுத்துதல் | • களப் பிரச்சினைகள் தொடர்பான 100 உழவர் பயிற்சி மற்றும் 15 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. விழிப்புணர்வை அதிகரிக்க 38,000 துண்டு பிரசுரங்கள் அச்சிடப்பட்டன.<br>• பீடை மற்றும் நோய்க் கட்டுப்பாடு தொடர்பான 400 செயல்விளக்கங்கள் நடத்தப்பட்டன.<br>• 6 மாகாணங்களுக்கு இடையே பகுதிகளில் புதிதாக வெளியிடப்பட்ட வர்க்கங்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் செயல்விளக்கம் நடத்தப்பட்டதுடன் 1650 கலப்பின மரக்கறி விதைப் பொதிகள் மற்றும் 27 பூச்சி விரட்டி மஞ்சள் பல்புகள் விநியோகிக்கப்பட்டன.<br><br>புகைப்பட இலக்கம் 39 | 9 மாகாணங்கள் மற்றும் 6 மாகாணங்களுக்கு இடையிலான பிரதேசங்கள், விவசாயத் திணைக்களத்தின் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் | அனைத்து விவசாயிகளுக்கும் |
| 8. | விவசாய அறிவுப் பரவலை ஊக்குவிப்பதற்காக கன்னோருவவில் உள்ள விவசாய | • மண் பாதுகாப்பு அலகுக்கு அருகில் கழிப்பறை வளாகம் கட்டும் பணி பகுதியளவில் நிறைவடைந்துள்ளது.<br>• விவசாயப் பூங்காவில் உள்ள தகவல் பலகைகளை பழுதுபார்ப்பதற்கான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு பலகைகள் தயார் செய்யப்பட்டது.<br>• தற்போது காணப்படும் | கன்னோருவை | விவசாயப் பூங்கா மூலம் அறிவைப் பெற்றுக் கொள்ளும் அனைவரும் |

| செயற்திட்டம் | முன்னேற்றம் | நடைமுறைப்படுத்திய பிரதேசங்கள் | பயனாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| தொழில்நுட்ப பூங்காவின் வசதிகளை வலுப்படுத்துதல் | அருங்காட்சியகத்தைப் நவீனமயப்படுத்தல் மற்றும் புதுப்பித்தல் ஆகியவற்றிற்காக பொருட்கள் (தரை ஓடு பதித்தல், சீலிங் தயாரித்தல், சுவர் பூசுதல் மின்சார வேலைகள்) கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.<br>• அருங்காட்சியகத்தில் உள்ள சுவரோவியங்களைப் பாதுகாக்க மரத்தாலான கைப்பிடி அமைத்தல்.<br>• அருங்காட்சியக கேட்போர்கூடத்திற்கு மாநாட்டு நாற்காலிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.<br>• அருங்காட்சியக காட்சிப் பொருட்கள் மற்றும் மாதிரிகளுக்கு 05 சுய-கற்றல் ஆதரவு அமைப்புகளை நிறுவுதல்.<br>• அருங்காட்சியகத்தின் விவசாய ஆலோசனை அறை பகுப்பிக்கப்பட்டது.<br>புகைப்பட இலக்கம் 40-41 | | |
| 9. விவசாய அறிவு பரவலை ஊக்குவிப்பதற்காக பட்டஅத்தவில் உள்ள விவசாய தொழில்நுட்ப பூங்காவின் வசதிகளை வலுப்படுத்துதல் | • விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்காக 10,000 துண்டுப் பிரசுரங்கள் அச்சிடப்பட்டன.<br>• தகவல் பலகைகள் மற்றும் காட்சி அலகு என்பன திருத்தியமைக்கப்பட்டுள்ளன..<br>• சுகாதாரமான குடிநீரைப் பெறுவதற்கு தொழிற்சாலை நீர் வடிகட்டி கொள்வனவு செய்யப்பட்டு நிறுவப்பட்டுள்ளது.<br>• இரசாயனப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன் ஏனைய உள்ளீடுகளின் கொள்வனவு நடவடிக்கைகள் நிறைவுற்றுள்ளன.<br>• நீர் வழங்கல் அமைப்புகளை விருத்தி செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.<br>• அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பப் பிரிவை அபிவிருத்தி செய்யும் பணிகள் பகுதியளவில் நிறைவடைந்துள்ளன.<br>• நெடுஞ்சாலையின் வெளியேறும் இடத்திற்கு அருகில் விளம்பர பலகைகள் நிறுவப்பட்டன.<br>புகைப்பட எண் 42 - 44 | பட்டஅத்த | விவசாயப் பூங்கா மூலம் அறிவைப் பெற்றுக் கொள்ளும் அனைவரும் |
| 10. விவசாய சுற்றுலா மற்றும் விவசாய அறிவுப் பரவலை ஊக்குவிப்பதற்காக சசூழல் நட்பு | • தியகம பிரதேசத்தில் விவசாய சுற்றுலா வியாபாரம் மற்றும் விவசாய அறிவைப் பரப்புதல் என்பவற்றுக்கு ஒரு பகுதி அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. | தியகம | விவசாயப் பூங்கா மூலம் அறிவைப் பெற்றுக் கொள்ளும் அனைவரும் |

| செயற்திட்டம் | முன்னேற்றம் | நடைமுறைப்படுத்திய பிரதேசங்கள் | பயனாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| விவசாய தொழில்நுட்ப பூங்காவின் வசதிகளை வலுப்படுத்துதல் | | | |
| 11. கமத்தொழில், காணி, கால்நடை வளங்கள், நீர்ப்பாசன, கடற்றொழில் மற்றும் நீர்வள அமைச்சில் நகர்ப்புற விவசாய செயல்விளக்கத்தை நிறுவுதல் | • காய்கறிச் செய்கை நிலங்களில் மீள் நடுகை, நில வடிவமைப்பைத் திட்டமிடல், பூங்கா கொட்டகைகளை திருத்தியமைத்தல் மற்றும் நீர் விநியோகத் தொகுதியொன்றை நிறுவுதல் ஆகிய பணிகள் நிறைவுற்றுள்ளன. | கமத்தொழில் அமைச்சு வளாகம் | |
| 12. 'நெகத்தட்ட பெலயக்' தேசிய மர நடுகை நிகழ்ச்சித் திட்டம் | • 200 முள் சீத்தாப் பழ (விதைக் கன்றுகள்), 200 கொய்யா (விதைக் கன்றுகள்) மற்றும் 600 அகத்தி கன்றுகள் என்பவற்றை அம்பத்தன்ன விதைப்பண்ணை மூலம் விவசாய அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளன.<br>• தெலிஜ்ஜவில விதைப் பண்ணையிலிருந்து கமநல சேவை நிலையங்கள் (ரத்கம, யக்கலமுல்ல) மற்றும் தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை என்பவற்றுக்கு 3550 கலமென்ஸி வகைத் தோடை மற்றும் 200 பலா (ஒட்டுரக நாற்றுகள்) வழங்கிப்பட்டுள்ளன.<br>• பட்டஅத்த விதைப் பண்ணை மூலம் விவசாய அமைச்சுக்கு 100 உயர்தர ஒட்டுரக செடிகள் வழங்கிப்பட்டுள்ளன.<br>• பல்வெஹெர விதைப்பண்ணை மூலம் 200 அகத்தி செடிகள், 450 நெல்லி (விதைக் கன்றுகள்), 50 பலா (ஒட்டுக் கன்றுகள்), 100 மாதுளை செடிகள் மற்றும் 200 எலுமிச்சைக் கன்றுகள் என்பவற்றை வாரியப்பொல கமத்தொழில் இராஜாங்க அமைச்சுஅலுவலகத்திற்கு வழங்கிப்பட்டுள்ளன.<br>• விவசாய அமைச்சு 792 கலமென்ஸி வகைத் தோடை கன்றுகளை கொழும்பு பிரதி விவசாய பணிப்பாளர் (விதைகள்) அலுவலகத்திற்கு வழங்கியது.<br>• வழங்கப்பட்ட மொத்த பழச்செடிகளின் எண்ணிக்கை 6642. | | விவசாய அமைச்சு, கமநல சேவை நிலையங்கள் (ரத்கம, யக்கலமுல்ல), தேசிய கால்நடை அபிவிருத்தி சபை, விவசாய இராஜாங்க அமைச்சரின் அலுவலகம், வாரியபொல |

| செயற்திட்டம் | முன்னேற்றம் | நடைமுறைப்படுத்திய பிரதேசங்கள் | பயனாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 13. 'வசத் சிரிய' தேசிய புத்தாண்டு விழாவுக்கு சந்தையை அமைத்தல் | • 2024 கொழும்பு 'வசத் சிரிய' தேசிய புத்தாண்டு விழாவிற்காக பாரம்பரிய சந்தையை நிர்மாணித்தல் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.<br><br>புகைப்பட இலக்கம் 45 | கொழும்பு | |
| 14. பிரதான நீர்ப்பாசனப் பகுதிகளில் நெற் செய்கையில் உற்பத்தித்திறன் மேம்பாடு | • நிலப் பண்படுத்தல் மற்றும் களங்களை நிறுவுதல்: 525 ஏக்கர் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. (பொலன்னறுவை மாகாண இடை வலயம் – 153 ஏக்கர், ஹம்பாந்தோட்டை பகுதி – 72, அம்பாறை மாகாண இடை வலயம் – 300 ஏக்கர்)<br>• பரசூட் தட்டுகள் - 38,000 கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. (பொலன்னறுவை மாகாண இடை வலயத்திற்கு 14,000, அனுராதபுரத்திற்கு 24,000 வழங்கப்பட்டன.)<br>• எரிக்கப்பட்ட உமி: 137.5 மெற்றிக் தொன் பயன்படுத்தப்பட்டது (பொலன்னறுவை மாகாண இடை வலயத்திற்கு 38.25 மெற்றிக் தொன், ஹம்பாந்தோட்டைக்கு 24.25 மெற்றிக் தொன், அம்பாறை மாகாண இடை வலயத்திற்கு 75 மெற்றிக் தொன்).<br>• விதை நெல்: 6,804 கிலோ கிராம் வழங்கப்பட்டது.<br>• இலை வண்ணக் குறிகாட்டி: 300 விநியோகிக்கப்பட்டது.<br>• விவசாயாக களப் பாடசாலைகள்: 170 நடத்தப்பட்டது.<br>• பயிர் விளைச்சல் ஆய்வுகள்: 225 நடத்தப்பட்டது.<br><br>புகைப்பட இலக்கம் 46-48 | பொலன்னறுவை, அனுராதபுரம், ஹம்பாந்தோட்டை மாகாண இடை வலயம் மற்றும் மாகாணங்கள் | விவசாய சமூகம் |
| 15. 2024 சிறு போகத்தில் சோள உற்பத்தி மேற்கொள்வதற்கு நெல் வயல்களைப் பன்முகப்படுத்துதல் | உயர் அடர்த்தி மாதிரிகள்::<br>• 100 ஏக்கர் (பெரிய அளவிலான) நிறைவு செய்யப்பட்டுள்ளது.<br>• 879 ஏக்கர் (சிறிய அளவிலான) நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் அதிக மழை காரணமாக வயல்களுக்கு பாதிப்பு ஏற்பட்டதன் காரணமாக உயர் நிலம் பயன்படுத்தப்பட்டது.<br>• அதிக அடர்த்தி கொண்ட சோள உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு ½ ஏக்கர் மாதிரி நிறுவப்பட்டது.<br>• உள்கட்டமைப்பு வசதிகள்: சோளத்தை உலர்த்துவதற்கு சீமெந்து கதிரடிக்கும் தளம் தயார் செய்யப்பட்டது. | அனுராதபுரம், ஹம்பாந்தோட்டை | விவசாய சமூகம் (650) |

| செயற்திட்டம் | முன்னேற்றம் | நடைமுறைப்படுத்திய பிரதேசங்கள் | பயனாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| | • விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்: 50 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன; 10,000 பிரசுரங்கள் அச்சிடப்பட்டன.<br>• பயிர் விளைச்சல் ஆய்வுகள்: 25 நடத்தப்பட்டது.<br>புகைப்பட இலக்கம் 49-51 | | |
| 16. FAO ஏற்பாடு செய்த 37வது ஆசிய பசிபிக் மாநாட்டின் உறுப்பினர்களின் களச் சுற்றுப்பயணத்தை எளிதாக்குவதற்காக, பட்டஅத்த விவசாய தொழில்நுட்ப பூங்காவின் உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் செயல் விளக்கக் களங்களை விருத்தி செய்தல் | • பொது கழிப்பறைத் தொகுதி, கேட்போர்கூடம், பொது வசதிகள் பகுதி, நிரந்தர பயிர் சிகிச்சை கட்டிடம் மற்றும் முன்புற வேலி என்பன பழுதுபார்க்கப்பட்டன.<br>• உள்ளக வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டன.<br>• விருந்தினர்கள் வரவேற்பு, விருந்தினர்களுக்கான போக்குவரத்து வசதிகள், கலாச்சார அம்சங்கள் மற்றும் விருந்தினர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு உணவு வழங்குதல்<br>புகைப்பட இலக்கம் 52-54 | பட்டஅத்த | தொழில்நுட்ப பூங்காவிற்கு 'Agro tech 2024' கண்காட்சியைபார்வையிட வருகைதந்த பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் |
| 17. புதிதாக மேம்படுத்திய தொழில்நுட்பங்களைப் பரப்புவதற்கான நிறுவன மற்றும் ஆராய்ச்சி கள வசதிகளை விருத்தி செய்தல் | • ஆராய்ச்சிக் களங்களுக்கான நுழைவுப் பாதைகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் கள காட்சி பலகைகள் தயாரிக்கப்பட்டு நிறுவப்பட்டுள்ளன.<br>• பிரதான கட்டிடத்தின் முன்பகுதியின் தோற்றத்தை மேம்படுத்தி கழிப்பறை வசதிகள் விருத்தி செய்யப்பட்டுள்ளன.<br>• தொழில்நுட்பத் தகவல்களை பரப்புவதற்காக ஒரு அலகு அமைக்கப்பட்டுள்ளதுடன் அலுவலக வளாகமும் அமைக்கப்பட்டுள்ளது. | தானிய பருப்பு மற்றும் எண்ணெய் பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம், அங்குனுகொலபெலஸ்ஸ | |
| 18. FAO-வின் 37வது ஆசிய பசிபிக் பிராந்திய உச்சிமாநாட்டின் பிரதிநிதிகளின் சுற்றுப்பயணத்திற்கு இணையாக முன்மொழியப்பட்ட கள நாள் | "Agri tech 2024" கண்காட்சியுடன் இணைந்து பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.<br>• 50 கண்காட்சிச் சாவடிகள் வழங்கப்பட்டு பொருத்தப்பட்டுள்ளன.<br>• வரவேற்பு நடவடிக்கைகள், பொதுத் அறிவித்தல் தொகுதிகளை வாடகைக்கும் பெறல், கலாச்சார நிகழ்சசிகளை நடத்துதல். | பட்டஅத்த | Agri-Tech 2024 கண்காட்சி மூலம் அறிவைப் பெற்றுக் கொண்ட அனைவரும் |

| செயற்திட்டம் | முன்னேற்றம் | நடைமுறைப்படுத்திய பிரதேசங்கள் | பயனாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| நிகழ்ச்சி - பிப்ரவரி 22, 2024 அன்று பட்டஅத்தவில் உள்ள விவசாய தொழில்நுட்ப பூங்கா | • விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், கழிவுகளை அகற்றுதல் மற்றும் நடமாடும் கழிப்பறைகள் மற்றும் குடிநீர் தொட்டிகள் நிறுவுதல் என்பன மேற்கொள்ளப்பட்டன.<br><br>புகைப்பட இலக்கம் 55 | | |
| 19. FAO-வின் 37வது ஆசிய பசிபிக் பிராந்திய உச்சிமாநாட்டிற்கான உணவுப் பயிர்களைக் கொண்டு நில அலங்காரத்தை மேற்கொள்ளல் | கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்ற 37வது ஆசிய பசுபிக் உச்சி மாநாட்டிற்கான கண்கவர் அமைப்பை உருவாக்க பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.<br>• அலங்காரத்திற்காக காய்கறிச் செடிகளை தயார் செய்தல், அசையும் தாவர அடுக்கு அமைத்தல், நாற்று அடுக்கின் பக்க சுவர்களுக்கு ஸ்டிக்கர் ஒட்டுதல் | கொழும்பு ஹில்டன் ஹோட்டல் | Agri-Tech 2024 கண்காட்சி மூலம் அறிவைப் பெற்றுக் கொண்ட அனைவரும் |

## 02. கமநல அபிவிருத்தி திணைக்களம்

2.1. திணைக்களம் பற்றிய சிறிய அறிமுகம்

இலங்கையின் விவசாயிகளுக்குத் தேவையான வசதிகளை வழங்கும் நோக்கில் 1957 ஒக்டோபர் 01 ஆந் திகதி அப்போது இருந்த உணவுத் திணைக்களத்தைக் கலைத்து, கமநல சேவைகள் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது. 1958 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வயற் காணிச் சட்டத்தின் மூலம் பலப்படுத்தப்பட்ட இத்திணைக்களம் தற்போது 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களுக்கு இணங்க கமநல அபிவிருத்தித் திணைக்களம் என்ற பெயரில் இயங்கி வருகின்றது.

2.2. 2025 ஆம் ஆண்டின் நிதி இலக்குகள்

| தொ/ இல | பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | மதிப்பிடப்பட்ட தொகை (மில். ரூபாய்) |
|---|---|---|
| 1 | மூலதன செலவுகள் | 6,829.03 |
| 2 | மீண்டுவரும் செலவுகள் | 11,528.88 |

2.3. 2025 ஆம் ஆண்டின் பௌதீக இலக்குகள் (நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள்)

| தொ / இ ல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|
| 1 | சிறிய நீர்ப்பாசனத் தொகுதிகளை புனரமைத்தல் மற்றும் தரிசு நிலங்களில் மீண்டும் பயிரிடல் (காணி மற்றும் காணி அபிவிருத்தி) | | | |
| | குறை பாவனை மற்றும் பயன்படுத்தப்படாத விவசாய நிலங்களின் உற்பத்தித் திறனை அதிகரித்தல் | ஏக்கர் அளவு | 1,500 ஏக்கர் | 32.00 |
| | கைவிடப்பட்டுள்ள குளங்களைப் புனரமைப்புச் செய்யும் நிகழ்ச்சித் திட்டம் | குளங்களின் எண்ணிக்கை | 27 செயற்திட்டங்கள் | 511.00 |
| | சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களில் சிறிய புனரமைப்பு வேலைகள் (Kick Start) | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | 1190 செயற்திட்டங்கள் | 545.75 |
| | வெள்ள அழிவு புனரமைப்பு | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | 344 செயற்திட்டங்கள் | 801.78 |
| | குளங்கள் மற்றும் அணைகளைப் புனரமைப்பு செய்யும் நிகழ்ச்சித் திட்டம் | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | 455 செயற்திட்டங்கள் | 1,189.92 |
| | விவசாய வீதிகளின் திருத்த வேலை | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | 412 செயற்திட்டங்கள் | 922.88 |
| | பயிர்ச் செய்கைக் கிணறுகளின் திருத்தவேலை | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | 233 செயற்திட்டங்கள் | 168.20 |
| | சீரமைவான கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | 108 செயற்திட்டங்கள் | 184.00 |
| | சோலா நீர்ப்பாசனத் திட்டம் மற்றும் நீர்வாழ் தாவரங்களை அகற்றுதல் | | 5 அலகுகள் 5 குளங்கள் | 4.50 |

| தொ / இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|
| | வீட்டுத் தோட்டச் செய்கைக்கு நுண் நீர்ப்பாசனத் தொகுதிகளை அறிமுகம் செய்தல். | | 50 செயற்திட்டங்கள் | 10.75 |
| | மொத்தம் | | | 4,370.78 |
| 2 | தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகம் புதுப்பித்தல் | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | 33 செயற்திட்டங்கள் | 254.00 |
| 3 | வாகனங்களைத் திருத்துதல் | வாகனங்களின் எண்ணிக்கை | தேவைக்கு ஏற்ப | 25.00 |
| 4 | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் (தலைமை அலுவலகம்) | அலகுகளின் எண்ணிக்கை | தேவைக்கு ஏற்ப | 14.00 |
| 5 | பயிற்சி மற்றும் திறன் விருத்தி | நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | 16 நிகழ்ச்சிகள் | 20.00 |
| 6 | கமநல சேவை நிலையங்கள் மற்றும் உரக் களஞ்சியங்களைப் புதுப்பித்தல் | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | 323 செயற்திட்டங்கள் | 998.70 |
| 7 | இயந்திரங்களைப் திருத்துதல் | எண்ணிக்கை | 38 இயந்திரங்கள் | 72.00 |
| 8 | வாகனங்களைத் திருத்துதல் | எண்ணிக்கை வாகனங்கள் | தேவைக்கு ஏற்ப | 38.00 |
| 9 | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் (மாவட்ட அலுவலகம்) | அலகுகளின் எண்ணிக்கை | தேவைக்கு ஏற்ப | 97.50 |
| 10 | இயந்திரங்களை கையகப்படுத்துதல் | இயந்திரங்களின் எண்ணிக்கை | 2 சிறிய அகழ்வு இயந்திரம் | 30.00 |
| 11 | கட்டிடங்களின் புதிய நிர்மாணம் | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | 33 செயற்திட்டங்கள் | 598.05 |
| 12 | கட்டிடங்களின் புதிய நிர்மாணம் (உரக் களஞ்சியங்கள்) | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | 40 செயற்திட்டங்கள் | 261.00 |
| 13 | பயிர் பல்வகைத்தன்மை (Sensor Based Automated Irrigation Facility to Green house) | திட்டங்களின் எண்ணிக்கை | 4 திட்டங்கள் | 50.00 |

*2.4. 2024.12.31 ஆம் திகதி வரையிலான நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்*

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | 2024 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கிய தொகை (மில். ரூபாய்) | 31/12/2024 ஆம் திகதி வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | நிதி முன்னேற்றம் % |
|---|---|---|---|---|
| 1 | மூலதன செலவுகள் | 3,855.36 | 2,930.04 | 76 |
| 2 | மீண்டுவரும் செலவுகள் | 11,116.47 | 10,864.44 | 98 |

| செயற்பாடு | 2024 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கிய தொகை (மில். ரூபாய்) | 31/12/2024 ஆம் திகதி வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | நிதி முன்னேற்றம் % | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| *சிறிய நீர்ப்பாசனத் தொகுதிகளை புனரமைத்தல் மற்றும் தரிசு நிலங்களில் மீண்டும் பயிரிடல் (காணி மற்றும் காணி அபிவிருத்தி)* | | | | |
| குறை பாவனை மற்றும் பயன்படுத்தப்படாத விவசாய நிலங்களின் உற்பத்தித் திறனை அதிகரித்தல் | *12.50* | *10.21* | *80* | இதன் கீழ் நெல் வயல்களில் மேலதிக உணவுப் பயிர்கள் செய்கை செய்யப்படுகிறன. இதன் கீழ் மன்னார் / திருகோணமலை / அநுராதபுரம் / பொலன்னறுவை / இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் 600 ஏக்கர் பாசிப்பயறு, கௌபி, உளுந்து மற்றும் நிலக்கடலை ஆகிய மேலதிக உணவுப் பயிர்கள் பயிரிடப்பட்டன. |
| வீட்டுத் தோட்டச் செய்கையை ஊக்குவித்தல் | *188.00* | *118.60* | *63* | ஒரு லட்சம் வரத்தக ரீதியான வீட்டுத் தோட்டங்களை உருவாக்க திட்டமிடப்பட்டதுடன், தற்போது 77,137 வரத்தக ரீதியான வீட்டுத் தோட்டங்கள் உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. |
| கைவிடப்பட்டுள்ள குளங்களைப் புனரமைப்புச் செய்யும் நிகழ்ச்சித் திட்டம் | *76.00* | *57.51* | *75* | 10 செயற்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இதில் 5 செய்றதிட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன |
| சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களில் சிறிய புனரமைப்பு வேலைகள் *(Kick Start)* | *345.00* | *335.51* | *97* | 950 செயற்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. 939 செயற்திட்ட நடவடிக்கைகள் ங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன |
| வெள்ளத்தால் சேதமடைந்த சிறு நீர்ப்பாசனத் தொகுதிகளின் உள்கட்டமைப்பு வசதிகளை புனரமைப்பு செய்தல் மற்றும் விஷேட வெள்ள சேத திட்டம் | *228.50* | *217.67* | *95* | 144 செயற்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. 131 செயற்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள செயற்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. |
| சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களின் குளங்கள் மற்றும் அணைகளைப் புனரமைப்பு செய்யும் நிகழ்ச்சித் திட்டம் | *915.00* | *838.28* | *90* | 346 செயற்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. 341 செயற்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள செயற்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன |

| செயற்பாடு | 2024 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கிய தொகை (மில். ரூபாய்) | 31/12/2024 ஆம் திகதி வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | நிதி முன்னேற்றம் % | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| தேர்ந்தெடுக்கப்பட்ட சிறு நீர்ப்பாசன குளங்களின் பராமரிப்புக்கான நிதியமொன்றை உருவாக்குதல். | 20.00 | 16.30 | 80 | தற்போது கிளிநொச்சி / மட்டக்களப்பு / திருகோணமலை / புத்தளம் / வவுனியா / ஹம்பாந்தோட்டை / குருநாகல் / மொனராகலை / அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களுக்கு 167 குளங்களுக்கான ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன. |
| விவசாய வீதிகளின் திருத்த வேலை | 175.00 | 162.75 | 93 | 92 செயற்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. அனைத்து செயற்திட்டங்களும் நிறைவடைந்துள்ளன. |
| பயிர்ச் செய்கைக் கிணறுகளின் திருத்தவேலை | 15.50 | 13.54 | 90 | 62 செயற்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. 54 செயற்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள செயற்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன |
| சீரமைவான கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 335.00 | 67.05 | 20 | அனைத்து செயற்திட்டங்களும் நடைபெற்று வருகின்றன |
| டிஜிட்டல் விவசாய நில ஆவணங்களைத் தயாரித்தல் | 30.00 | 25.06 | 83 | 130,247 அளவிடப்பட்ட நெற்பயிர்களுக்கு பணம் செலுத்தப்பட்டுள்ளது |
| நீர் முகாமைத்துவ செயற்பாடுகள் | 87.35 | 61.72 | 70 | உலர் வலயத்தில் மாதிரி குள செயற்திட்டம், விவசாய வானிலை தரவுகள் மற்றும் மழை வீழ்ச்சித் தரவுகள் சேகரிப்பு மற்றும் வயல் கண்காணிப்பாளர் பயிற்சி மற்றும் 2023 ஆம் ஆண்டின் பெறுப்பு செயற்திட்டங்கள் |
| பரஷூட் செய்கையை ஊக்குவித்தல் | 236.00 | 63.05 | 30 | 3,980,977 பரஷூட் தட்டுகள் மாவட்டங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன |
| அலங்கார மலர்ச் செய்கை செயற்திட்டம் நுவரெலியா மாவட்டம் | 30.00 | 31.44 | 100 | பசுமை இல்லங்களின் நிர்மாணப் பணிகள் 75% நிறைவடைந்துள்ளன. |
| பருவகால பயிர் பாதுகாப்பு வேலி அமைத்தல் | 25.00 | 24.55 | 98 | ஏயர்திட்டப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. |
| மீதமுள்ள ஒதுக்கீடுகள் | 28.65 | 0.00 | 0 | |
| 2023 ஆம் ஆண்டில் கையிலுள்ள விலைப்பட்டியல்களைத் | 131.50 | 125.30 | 95 | கையிலுள்ள விலைப்பட்டியல்களைத் தீர்த்து இது நிறைவு செய்யப்பட்டுள்ளது. |

| செயற்பாடு | 2024 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கிய தொகை (மில். ரூபாய்) | 31/12/2024 ஆம் திகதி வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | நிதி முன்னேற்றம் % | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| தீர்த்தல் | | | | |
| 2023 ஆம் ஆண்டிற்கான பொறுப்புகள் செயற்திட்டங்கள் | 65.00 | 57.19 | 88 | 9 விவசாய பாதைகள், 6 சிறு நீர்ப்பாசனத் தொகுதிகள் மற்றும் 5 கைவிடப்பட்ட குளங்கள் என்பவற்றின் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. |
| செயற்திட்ட உதவிச் செலவு | 56.00 | 40.31 | 72 | |
| மொத்தம் | 3000.00 | 2266.76 | | |
| | | | | |
| தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களைப் புதுப்பித்தல் | 20.00 | 19.24 | 96 | 18 செயற்திட்டங்களின் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. |
| வாகனங்களைத் திருத்துதல் | 32.00 | 17.89 | 55 | தேவைக்கேற்ப பழுதுபார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் (தலைமை அலுவலகம்) | 8.00 | 7.43 | 92 | தேவைகளுக்கு ஏற்ப கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. |
| வாகன குத்தகை தவணைகளை செலுத்துதல் | 3.86 | 3.86 | 100 | 21 வாகனங்களின் குத்தகை தவணைகள் செலுத்தப்பட்டுள்ளன. |
| பயிற்சி மற்றும் திறன் விருத்தி | 10.00 | 2.40 | 25 | அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, தேவையான வசதிகள் வழங்கபட்டுள்ளன.. |
| கமநல சேவை நிலையங்கள் மற்றும் உரக் களஞ்சியங்களைப் புதுப்பித்தல் | 600.00 | 523.04 | 87 | தலைமை அலுவலகம் உட்பட 204 கமநல சேவை மையங்கள் மற்றும் உரக் களஞ்சியங்கள் |
| இயந்திரங்களைப் திருத்துதல் | 71.50 | 30.79 | 43 | தேவைக்கேற்ப பழுதுபார்க்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| வாகனங்களைத் திருத்துதல் | 35.00 | 3.71 | 10 | தேவைக்கேற்ப பழுதுபார்க்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் (மாவட்ட அலுவலகம்) | 10.00 | 6.29 | 62 | தேவைகளுக்கு ஏற்ப கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. |
| இயந்திரங்களை கையகப்படுத்துதல் | 5.00 | 0.00 | 0 | செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில் லை. |

| செயற்பாடு | 2024 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கிய தொகை (மில். ரூபாய்) | 31/12/2024 ஆம் திகதி வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | நிதி முன்னேற்றம் % | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| புதிய கட்டிடங்களின் நிர்மாணம் | 10.00 | 4.65 | 46 | ஒரு செயற்திட்டத்தின் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மீதமாகவுள்ள செயற்திட்டத்தின் பணிகள் நடைபெற்று வருகின்றது. |
| பயிர் பல்வகைத்தன்மை (Sensor Based Automated Irrigation Facility to Green house) | 50.00 | 43.98 | 87 | நுவரெலியா, கிளிநொச்சி, மட்டக்களப்பு, புத்தளம் ஆகிய மாவட்டங்களில் 4 மாதிரி குளங்களை உருவாக்குதல் மற்றும் நுவரெலியா மாவட்டத்தில் ஸ்ட்ராபெரி மாதிரி செய்கைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல். |

புகைப்பட இலக்கம் 56 - 58

## 03. ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்

3.1 அறிமுகம்

1971 ஆம் ஆண்டின் தேசிய விவசாயக் கொள்கையின் மூலமும் பின்னர் 1972 ஆம் ஆண்டு அமைச்சரவைப் பத்திரம் மூலம் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் கீழ் சிறு ஏற்றுமதி பயிர்கள் திணைக்களம் நிறுவப்பட்டது. 1975 ஆம் ஆண்டு இத்திணைக்களமானது கமத்தொழில் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது. உலக உணவுத் திட்டம் (WFP) மற்றும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் நிகழ்ச்சித் திட்டம் (UNDP). ஆகியவற்றால் ஆரம்பிக்கப்பட்ட பயிர் பல்வகைப்படுத்தல் அபிவிருத்தித் திட்டத்தின் செயற்பாடுகளின் ஒரு பகுதியைத் திணைக்களத்திடம் ஒப்படைத்ததன் மூலம், ஏற்றுமதி விவசாயத் திணைக்களம், வாசனைப் பொருட்கள் சார்ந்த பயிர் அபிவிருத்தியை அடிப்படையாகக்கொண்ட ஏற்றுமதி அபிவிருத்தியின் முன்னோடியாக செயற்பாட்டு வருகிறது..

1992 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டம், திணைக்களத்தை ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் என மறுபெயரிட்டது. இதன்மூலம், வாசனைப் பொருட்கள் மற்றும் பிற விவசாயப் பயிர்கள் ஏற்றுமதி தொடர்பான சட்டப்பூர்வ அதிகாரம் இத் திணைக்களமத்திற்கு வழங்கியுள்ளது.

கறுவா, மிளகு, கிராம்பு, ஜாதிக்காய், ஏலக்காய், கோப்பி, கொக்கோ, வெற்றிலை, பாக்கு, வெண்ணிலா, சிட்ரோனெல்லா, லெமன்கிராஸ், குடம்புளி, இஞ்சி மற்றும் மஞ்சள் போன்ற வாசனைப் பொருட்கள், பானப் பயிர்கள் மற்றும் ஊக்கப் பயிர்களின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் பிரதான இலக்காகக் கொண்டுள்ளது.

ஏற்றுமதி விவசாய பயிர்கள் பயிரிடும் நிலப்பரப்பை அதிகரித்தல், ஏற்கனவே உள்ள பயிர்களின் உற்பத்தித்திறனை அதிகரித்தல், அறுவடைக்கு பிந்தைய தொழில்நுட்பத்தை விருத்தி செய்தல் போன்ற அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் புதிய வர்க்கங்களை அறிமுகப்படுத்துதல் போன்ற புதிய தொழில்நுட்ப அறிவு மற்றும் கண்டுபிடிப்புகளை ஏற்றுமதி விவசாயப் பயிர்த் துறைக்கு அறிமுகம் செய்தல் என்பன இத்திணைக்களத்தின் பெறுப்புகளாகக் காணப்படுகின்றன.

*3.2. 2025 ஆம் ஆண்டின் நிதி இலக்குகள்*

| தொ/ இல | பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | மதிப்பிடப்பட்ட தொகை (மில். ரூபாய்) |
|---|---|---|
| 01. | மூலதன செலவுகள் | 1,449.00 |
| 02. | மீண்டுவரும் செலவுகள் | 1,164.60 |

*3.3. 2025 ஆம் ஆண்டின் பௌதீக இலக்குகள் (நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள்)*

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|
| 1 | பயிர்ச் செய்கை பரப்பை விரிவுபடுத்துதல் | ஹெக்டயர் / கன்றுகள் | 10,500 - ஹெக்டயர் - 500,000 - கன்றுகள் | 624.00 |
| 2 | மத்திய தாவர நாற்றுமேடை அபிவிருத்தி | கிலோ மிராம்/ விதை/ கியூப் | 9,000 கிலோ மிராம்<br>250,000 விதை<br>600 கியூப் | 36.00 |
| 3 | ஏற்றுமதி விவசாய பயிர் நில உற்பத்தித் திறனை அதிகரித்தல் | ஹெக்டயர்/ அலகு | 4,000 - ஹெக்டயர்<br>250 - அலகுகள் | 150.00 |
| 4 | பயிர் பெறுமதிச் சங்கிலி அபிவிருத்தித் திட்டம் | அலகு | 450 - அலகுகள் | 85.00 |
| 5 | ஊடக மற்றும் தொடர்பாடல் | நிகழ்ச்சிகள்/ அலகு | 300 - நிகழ்ச்சிகள்<br>600,000 - அலகுகள் | 40.00 |
| 6 | திறன் விருத்தித் திட்டம் | நிகழ்ச்சிகள் | 2,200 - நிகழ்ச்சிகள் | 35.00 |
| 7 | நிர்வாக செலவுகள் | | | 30.00 |
| 8 | கட்டிடங்களைப் பழுதுபார்த்தல் 2001 | கட்டிடங்கள் | 44 | 50.00 |
| 9 | இயந்திரங்கள் மற்றும் இயந்திரங்களைப் பழுதுபார்த்தல் 2002 | இயந்திரங்கள் (பண்ணை, அலுவலக, ஆய்வக) | 22 | 12.00 |
| 10 | வாகனங்களைப் பழுதுபார்த்தல் 2003 | வாகனங்கள் | 42 | 20.00 |
| 11 | அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்தல் 2102 | அலுவலக உபகரணங்கள் | 54 | 22.00 |
| 12 | இயந்திரங்கள் மற்றும் | உபகரணங்கள் | 18 | 13.00 |

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|
| | உபகரணங்களை கொள்வனவு செய்தல் 2103 | (அலுவலக, ஆய்வக) | | |
| 13 | புதிய கட்டிட நிர்மாணம் 2104 | கட்டிடங்கள் (புதிய) | 13 | 60.00 |
| 14 | காணி மற்றும் காணி அபிவிருத்தி 2105 | அபிவிருத்தி செய்யப்படும் காணிகள் | 24 | 210.00 |
| 15 | பணியாளர்களுக்கான பயிற்சி 2401 | பயிற்சி நிகழ்ச்சிகள் | 21 | 3.00 |
| 16 | உள்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் 2506 | அபிவிருத்தி செய்யப்பட்ட உள்கட்டமைப்பு வசதிகள் | 27 | 34.00 |
| 17 | ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி 2507 | ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக் காக மேற்கொள்ளும் கொள்வனவுகள் | 45 | 25.00 |

*3.4. 31.12.2024 ஆம் திகதிக்கான நிறுவனத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் முன்னேற்றம்*

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | 2024 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கிய தொகை (மில். ரூபாய்) | 31/12/2024 ஆம் திகதி வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | நிதி முன்னேற்றம் சதவீதத்தில் (%) |
|---|---|---|---|---|
| 1 | மூலதன செலவுகள் | 517.00 | 470.71 | 91 |
| 2 | மீண்டுவரும் செலவுகள் | 1,036.49 | 932.61 | 90 |
| | | | | |
| | அபிவிருத்தி நிகழ்ச்சிகள் | | | |
| 1 | ஏற்றுமதி விவசாயப் பயிர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 400.00 | 369.93 | 93 |
| 2 | ஏற்றுமதி விவசாயப் பயிர் ஆராய்ச்சி மற்றும் ஒருங்கிணைந்த நோய்/ பீடைக் கட்டுப்பட்டுத் திட்டம் | 18.00 | 13.173 | 73 |
| 3 | ஏனையவை ( 2001, 2104, 2105, 2506, 2002, 2003, 2102, 2103 மற்றும் 2401 ஆகிய செலவுத் தலைப்புகளுக்கு ) | 99.00 | 87.607 | 89 |

*3.5. 31.12.2024 ஆம் திகதிக்கான நிறுவனத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதீக முன்னேற்றம்*

*2024 ஆம் ஆண்டிற்கு, திணைக்களம் தொடர்பாக நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்கு 517.00 மில். ரூபாய் ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டதுடன் அந்த ஒதுக்கீட்டிலிருந்து திணைக்களம் 2024 ஆம் ஆண்டில் 470,715 மில். ரூபாய் நிதிச் செலவை மேற்கொண்டிருந்தது.*

*கண்டி, நுவரெலியா, பதுளை, கம்பஹா, கொழும்பு, களுத்துறை, ஹம்பாந்தோட்டை, மாத்தளை, மாத்தறை, பொலன்னறுவை, அம்பாறை, அநுராதபுரம், இரத்தினபுரி, மொனராகலை, கேகாலை, காலி மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் அந்த வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதுடன், மொத்தம் 354,709 பயனாளிகள் இநிகழ்ச்சித் திட்டத்துடன் தொடர்புபட்டுள்ளனர்.*

*திணைக்களத்துடன் தொடர்பான ஒட்டுமொத்த அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு தனித்தனியாக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள் நிதி முன்னேற்றம் மற்றும் பௌதீக முன்னேற்றம் பின்வருமாறு.*

- *ஏற்றுமதி விவசாயப் பயிர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் 31/12/2024 ஆம் திகதி வரையிலான முன்னேற்றம்*

| *நிகழ்ச்சித் திட்டம்/ செயற்திட்டம்* | *ஒதுக்கிய தொகை (மில். ரூபாய்)* | *செலவு செய்த தொகை (மில். ரூபாய்)* | *பௌதீக முன்னேற்றம்* |
|---|---|---|---|
| *01. ஏற்றுமதி விவசாயப் பயிர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்* | | | |
| *1.1 ஏற்றுமதி விவசாயப் பயிர் புதிய பயிர்ச் செய்கைஊக்குவிப்பு திட்டம்* | *104.30* | *95.64* | *மிளகு 444.03 ஹெக்டேர், கோகோ 109.93 ஹெக்டேர், கிராம்பு 45.30 ஹெக்டேர், ஜாதிக்காய் 48.12 ஹெக்டேர், சிற்றநெல்லா 2.0 ஹெக்டேர், லெமன்கிராஸ் 0.2 ஹெக்டேர், குடம்புளி 1.40 ஹெக்டேர், அரபிகா கோப்பி 396.35 ஹெக்டேர், ரோபஸ்டா காபி 58.05 ஹெக்டேர், ஏலக்காய் 66.71 ஹெக்டேர், வெணிலா 35.4 ஹெக்டேர், மஞ்சள் 56.23 ஹெக்டேர் மற்றும் இஞ்சி 57.85 ஹெக்டேர் என்பன செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.*<br><br>*(மொத்தம் 1321.59 ஹெக்டேர் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.)* |
| *1.2. சிறிய அளவிலான பயிர்ச் செய்கை ஊக்குவிப்புத் திட்டம்* | *42.53* | *36.68* | *380,727 மிளகு செடிகள், 15,182 கொக்கோ செடிகள், 10,989 கிராம்பு செடிகள், 7,663 ஜாதிக்காய் செடிகள், 56,826 வெற்றிலை செடிகள், 16,080 குடம்புளி செடிகள், 5,500 லெமன்கிராஸ் செடிகள், 96,596 அரபிகா கோப்பி செடிகள், 77,035 கோப்பி செடிகள், 108,459 ஏலக்காய் செடிகள் மற்றும் 124,053 வெணிலா செடிகள், 665 மஞ்சள் செடிகள் விநியோகம் செய்யப்பட்டன.*<br>*(மொத்தம் 899,775 செடிகள் விநியோகம்* |

| நிகழ்ச்சித் திட்டம்/ செயற்திட்டம் | ஒதுக்கிய தொகை (மில். ரூபாய்) | செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|
| | | | செய்யப்பட்டன.) |
| 1.3 ஏற்றுமதி விவசாயப் பயிர் ஊக்குவிப்புத் திட்டம் | 4.39 | | இல்லை |
| 1.4 பாக்கு ஊக்குவிப்புத் திட்டம் | 41.60 | 46.20 | 1,532,525 பாக்குக் கன்றுகள் விநியோகம் செய்யப்பட்டன |
| 02. ஏற்றுமதி விவசாயப் பயிர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | | | |
| 2.1 விதை மற்றும் நடுகைப் பொருட்கள் பெற்றுக் கொள்ளல் | 1.00 | 0.89 | 136,500 பாக்கு மரக்கன்றுகளும், 12,390 ஜாதிக்காய் மரக்கன்றுகளும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.<br>18.75 கிலோ கோப்பி விதைகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. |
| 2.2 தாவர உற்பத்திக்கான உள்ளீடுகளை கொள்வனவு செய்தல். | 6.00 | 5.92 | 5x8 பைகள் 900,000 கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. 275 (கியூப்) வளர்ப்பு ஊடகம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.<br>- |
| 2.3 வலை இல்லங்கள், நீர் வழங்கல் மற்றும் இதர வசதிகளை விருத்தி செய்தல் | 3.00 | 1.14 | -<br>கஸ்னாவ மத்திய நாற்று நிலையத்தில் கிணறு ஒன்றும் மித்தெனிய ஏற்றுமதி விவசாய பயிர் பூங்காவில் நிரப்பு கொட்டகை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. |
| 2.4 பண்ணை நில முகாமைத்துவத்துக்குத் தேவையான உள்ளீடுகளை கொள்வனவு செய்தல். | 2.50 | 0.22 | 161 உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. |
| 03. நில பயனுறுதித் தன்மையை அதிகரிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டம் | | | |
| 3.1 நில பயனுறுதித் தன்மையை அதிகரிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டம் | 23.72 | 7.66 | மிளகு 467.72 ஹெக்டேர், கொக்கோ 11.6 ஹெக்டேர், கிராம்பு 4.8 ஹெக்டேர், ஜாதிக்காய் 3.4 ஹெக்டேர், அரபிகா கோப்பி 9.10 ஹெக்டேர், ரோபஸ்டா கோப்பி 4.5 ஹெக்டேர், வெணிலா 2.5 ஹெக்டேர் என்பன பயிரிடப்பட்டுள்ளன.<br>மிளகு 2636.14 ஹெக்டேர், கோகோ 200.9 ஹெக்டேர், அரபிகா காபி 600.11 ஹெக்டேர், ரோபஸ்டா காபி 60.42 ஹெக்டேர், ஜாதிக்காய் 59.24 ஹெக்டேர், கிராம்பு 43.49 ஹெக்டேர், ஏனையவை 2.00 ஹெக்டேர் பயிற்சித் திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன. (மொத்தம் 4,105.91 ஹெக்டேர் பயிரிடப்பட்டுள்ளது.) |
| 3.2 பீடை மற்றும் பயிர் சேதம் தடுப்பு சாதனங்கள் | 3.00 | 0.58465 | 13 தொகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. |

| நிகழ்ச்சித் திட்டம்/ செயற்திட்டம் | ஒதுக்கிய தொகை (மில். ரூபாய்) | செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|
| /தொகுதிகளை வழங்குவதற்கான நிகழ்ச்சித் திட்டம் | | | |
| 3.3 நுண்ணீர்ப் பாசனத் தொகுதிகளை நிறுவுவதற்கான நிகழ்ச்சித் திட்டம் | 3.00 | 1.33 | 18 தொகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. |
| 3.4 தாவரப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம் | 18.00 | 6.86 | பூஞ்சைக் கொல்லிகள் 1650 கிலோ கிராம், பீடைக்கொல்லிகள் லீட்டர், 20 தெளிப்பான்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. |
| 04. சிறந்த விவசாய நடைமுறைகளை செயல்படுத்துதல்/ சான்றளித்தல் | | | |
| 4.1 சேதன மற்றும் விவசாய கைத்தொழில் நடைமுறைகள் (GAP) விவசாய தர சான்றளிக்கப்பட்ட பயிர்ச் செய்கைகளை ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம் | 0.30 | 0.02 | 03 சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் 03 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. |
| 4.2 பொருத்தமான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஏற்றுமதி விவசாய பயிர்களின் தரத்தை மேம்படுத்துதல் | 20.00 | 30.30 | 144 அலகுகள் மற்றும் 02 நிலையங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. |
| 4.3 விற்பனை ஊக்குவிப்பு திட்டம் | 20.00 | 11.72 | ஒரு நிகழ்ச்சி நடத்தப்பட்டது |
| 4.4 சிறந்த விவசாய நடைமுறைகளை செயற்படுத்தல் /சான்றளிப்பு | 1.00 | 0 | 02 சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. |
| 4.54.5 பங்குதாரர்களை பதிவு செய்யும் நிகழ்ச்சித் திட்டம் | - | - | - |
| | - | - | 745 பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| 4.64.6 தொழில்முனைவு மற்றும் வர்த்தக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 0.50 | 0.11 | 02 விழிப்புணர்வுப் பட்டறைகள் நடத்தப்பட்டன |
| | - | - | - |
| | 2.00 | - | - |
| 05. ஏற்றுமதி விவசாயப் பயிர் ஊக்குவிப்பு | | | |
| 5.0 ஊடகம் மற்றும் கண்காட்சி என்பவற்றுக்கூடக ஏற்றுமதி விவசாயப் பயிர் ஊக்குவிப்பு | 20.00 | 20.52 | 51 தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் 111 வானொலி நிகழ்ச்சிகளும் ஒளி/ஒலிபரப்பப்பட்டுள்ளன. ஏனைய 45 நிகழ்ச்சிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. 08 கண்காட்சிகள் நடத்தப்பட்டுள்ளன. 500 துண்டு பிரசுரங்கள், 197 சுவரொட்டிகள், பேனர்கள் அச்சிடப்பட்டன. 03 |

| நிகழ்ச்சித் திட்டம்/ செயற்திட்டம் | ஒதுக்கிய தொகை (மில். ரூபாய்) | செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|
| | | | விளம்பரங்கள் ஒளிபரப்பப்பட்டுள்ளன. |
| *06. ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் பங்குதாரர்களின் திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டம்* | | | |
| *6.1. ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் பங்குதாரர்களின் திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டம்* | *5.00* | *3.74* | *2,230 விவசாயிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. 234 கள நாள் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. (56,161 பயனாளிகள் பங்கேற்றனர்).* |
| *6.2. சேவை பதிப்பு பயிற்சி நிகழ்ச்சிகள்* | *2.00* | *1.14* | *அதிகாரிகளுக்கான 18 பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் 16 ஏனைய பயிற்சிகள் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. விவசாயிகளுக்கான 01 பயிற்சி நிகழ்ச்சி, 03 கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் நடத்தப்பட்டுள்ளன.* |
| *6.3 டிஜிட்டல் விரிவாக்க நிகழ்ச்சித் திட்டங்களை எளிதாக்குதல் மற்றும் நடைமுறைப்படுத்தல்* | *1.00* | *0* | *-* |
| | *-* | *-* | *21 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.* |
| *6.4 கறுவா செய்கை ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம்* | *63.16* | *85.27* | *458.53 ஹெக்டேருக்கான கறுவா நாற்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.* |

- *ஏற்றுமதி விவசாயப் பயிர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மற்றும் ஏற்றுமதி விவசாயப் பயிர் ஆராய்ச்சி மற்றும் ஒருங்கிணைந்த நோய்/ பீடைக் கட்டுப்பட்டுத் திட்டத்தின் ( 2001, 2104, 2105, 2506, 2002, 2003, 2102, 2103 மற்றும் 2401 செலவுத் தலைப்புடன் தொடர்பான) 2024.12.31 திகதிக்கான முன்னேற்றம்*

| நிகழ்ச்சித் திட்டம்/ செயற்திட்டம் | ஒதுக்கிய தொகை (மில். ரூபாய்) | செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|
| இயந்திரங்கள் மற்றும் இயந்திரங்களைப் பழுதுபார்த்தல் | *4.00* | *1.21* | *11 பிரதிபண்ணும் இயந்திரங்கள், 11 கணினிகள் மற்றும் 05 UPS கள், 02 மடிக்கணினிகள், 01 கண்ணாடி வெட்டும் கறுவு, 02 நீர் இறைக்கும் இயந்திரங்கள் என்பன பழுதுபார்க்கப்பட்டுள்ளன.* |
| | *1.00* | *0.82* | *05 பழுதுபார்க்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.* |
| வாகனங்களைப் பழுதுபார்த்தல் | *9.00* | *6.64* | *57 வாகனங்கள் பழுதுபார்க்கப்பட்டுள்ளதுடன் டயர்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.* |
| | *3.00* | *4.72* | *34 வாகன பழுதுபார்க்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.* |

| நிகழ்ச்சித் திட்டம்/ செயற்திட்டம் | ஒதுக்கிய தொகை (மில். ரூபாய்) | செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|
| இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்தல் | *4.00* | *3.86* | *01 UPS, 01 சுடுநீர் குழாய்கள், 01 நீர் சுத்திகரிப்பு இயந்திரம், 15 மின்விசிறிகள், 04 தொலைநகல் இயந்திரங்கள், 02 டிஜிட்டல் திரைகள், 04 அச்சிடும் இயந்திரங்கள், 03 பிரதியெடுக்கும் இயந்திரங்கள், 01 ஜெனரேட்டர் பேட்டரிகள், 01 PA தொகுதிகள், 02 திரைகள், 01 தராசு, 01 எரிவாயு அடுப்பு, 02 மடிக்கணினிகள் என்பன கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.* |
| | *1.00* | *0.66* | *10 கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.* |
| அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்தல் | *3.50* | *3.13* | *06 UPS, 01 அலுவலக கோப்பு அலமாரி, 02 நிறைவேற்று மேசைகள், 01 நிறைவேற்று நாற்காலிகள் மற்றும் 02 விருந்தினர் நாற்காலிகள், 02 மொனிட்டர்கள், 05 மடிக்கணினிகள், 07 டெஸ்க்டாப் கணினிகள் மற்றும் 01 வன் தட்டுகள் என்பன கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.* |
| | *1.50* | *1.50* | *18 கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.* |
| திறன் விருத்தி மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகள் | *1.00* | *0.48* | *669 அதிகாரிகள் பயிற்சி பெற்றுள்ளனர்.* |
| *ஏற்றுமதி விவசாயப் பயிர் ஆராய்ச்சி மற்றும் ஒருங்கிணைந்த நோய்/ பீடைக் கட்டுப்பாட்டுத் செயற்திட்டம்* | | | |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி உதவி நிகழ்ச்சித் திட்டம் | *18.00* | *13.17* | *ஆராய்ச்சிகளுக்குத் தேவையான 49 பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.* |

- *நிர்மாணப பணிகள் மற்றும் பழுதுபார்ப்பு என்பவற்றுடன் தொடர்பான 2001, 2104, 2105 மற்றும் 2506 செலவுத் தலைப்பின் கீழ் 70 செயற்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதுடன் 100% பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*புகைப்பட இலக்கம் 59 - 60*

## 04. தேசிய அறுவடைக்குப் பிந்தைய முகாமைத்துவ நிறுவனம்

1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க அரச விவசாய அமைப்புச் சட்டத்தின் விதிகளின் கீழ் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 1137/10 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலிற்கு அமைய 2000 ஆம் ஆண்டு ஜூன் 19 ஆம் திகதி அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்ப நிறுவனம் நிறுவப்பட்டது. 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் 27 ஆம் திகதிக்குரிய இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 2093/26 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் இந்த நிறுவனத்தின் பெயர் தேசிய அறுவடைக்கு பிந்தைய முகாமைத்துவ நிறுவனமாக (NIPHM) மாற்றப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டளவில் விவசாயப் பயிர்களின் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளை விரைவில் அழுகிப் பழுதடையக்கூடிய பயிர்களில் 5% வரையும் இலகுவில் பழுதடையாத பயிர்களில் 25% வரையும் குறைத்தல் மற்றும் விவசாயத்துடன் தொடர்புடைய தொழிற்துறைகளை உருவாக்குதல்/ அபிவிருத்தி செய்தல் என்பன நிறுவனத்தின் பிரதான நோக்கங்களாகக் காணப்படுவதுடன் அவற்றுக்குத் தேவையான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள், தொழில்நுட்ப பரப்பல் நடவடிக்கைகள், தொழில்நுட்ப ஆலோசனை சேவைகள் மற்றும் ஆய்வக சேவைகளை மேற்கொள்ளல் என்பன இந்நிறுவனத்தின் பிரதான பணிகள் ஆகும்.

### 4.1. 2025 ஆம் ஆண்டின் நிதி இலக்குகள்

| தொ/ இல | பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | மதிப்பிடப்பட்ட தொகை (மில். ரூபாய்) |
|---|---|---|
| 1 | மூலதன செலவுகள் | 33.05 |
| 2 | மீண்டுவரும் செலவுகள் | 187.95 |

### 4.2. 2025 ஆம் ஆண்டின் பௌதீக இலக்குகள்

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|
| 1 | ஆராய்ச்சிகள் | அறுவடைக்குப் பிந்தைய துறையின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக இனங்காணும் புதிய தொழில்நுட்பங்கள் | 15 ஆராய்ச்சிகள் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் புதிய தொழில்நுட்பங்களை இனங்காணல் | 11.23 |
| 2 | அபிவிருத்தி செயற்திட்டங்கள் | களத்தில் நிறுவப்பட்ட முறையான அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பங்களின் அளவு மற்றும் அறுவடைக்குப் பிந்தைய சேதக் குறைப்பு சதவீதம் | | |
| 2.1 | பழங்கள் மற்றும் காய்கறிகளின் போக்குவரத்தின் போது ஏற்படும் அறுவடைக்குப் பிந்தைய சேதத்தை குறைக்க பாதுகாப்பான பொதியிடும் முறைகளை அறிமுகம் செய்தல் | | வழங்கல் சங்கிலி பங்குதாரர்களுக்கு 29000 பாதுகாப்பான பொதிகளை (2 வகைகளில்) வழங்குதல் | 67.62 |
| 2.2 | கிராமப் புறங்களில் ய வீடுகளில் அரிசி பதப்படுத்தும் | | நாடு முழுவதும் தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் 75 வீட்டு மட்ட அரிசி | 5.92 |

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|
| | தொழிற்துறையை உருவாக்குதல் | | பதப்படுத்தும் அலகுகளை நிறுவுதல் | |
| 2.3 | கிராமிய மட்டத்தில் வாசனைப் பொருட்களைப் பதப்படுத்தும் நுண் தொழில்முனைவோரை அறிமுகம் செய்தல் | | 10 வாசனைப் பொருட்கள் பதப்படுத்தும் அலகுகளை நிறுவுதல் | 1.71 |
| 2.4 | பூகோள பின்னணியின் அடிப்படையில் அறுவடைக்குப் பிந்தைய பதப்படுத்தும் அலகுகளை நிறுவுதல் | | ஏனைய 10 அறுவடைக்குப் பிந்தைய பதப்படுத்தும் அலகுகளை நிறுவுதல் | 2.50 |
| 2.5 | விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க அரிசி, சோளம் மற்றும் தானிய வகைகளை களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு வீடுகளில் களஞ்சிய வசதிகளை விருத்தி செய்தல் | | தானியங்களை களஞ்சியப்படுத்த 100 வீட்டுக் களஞ்சியங்களை விருத்தி செய்தல் | 5.05 |

*4.3. 31.12.2024 ஆம் திகதிக்கான நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி முன்னேற்றம்*

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | 2024 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கிய தொகை (மில். ரூபாய்) | 31/12/2024 ஆம் திகதி வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | நிதி முன்னேற்றம் சதவீதத்தில் (%) |
|---|---|---|---|---|
| 1 | மூலதன செலவுகள் | 35.00 | 25.30 | 72 |
| 2 | மீண்டுவரும் செலவுகள் | 171.38 | 139.95 | 82 |
| | | | | |
| | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | 32.70 | 26.45 | 81 |

*4.4. 31/12/2024 திகதி வரையிலான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதீக முன்னேற்றம்*

| செயற்திட்டம் | நோக்கம் | முன்னேற்றம் | | | | நடைமுறைப் படுத்தப்பட்ட மாவட்டங்கள் |
|---|---|---|---|---|---|---|
| | | நிதி இலக்கு | நிதி முன்னேற்றம் | பௌதீக இலக்கு | பௌதீக முன்னேற்றம் | |
| *செலவுத் தலைப்பு -118-02-03-083-2506 இன் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம்* | | | | | | |
| *1. கிராமப் புறங்களில் ய வீடுகளில் அரிசி பதப்படுத்தும் தொழிற்துறையை உருவாக்குதல்* | *விவசாயி தனது நெல் அறுவடையை விற்பனை செய்யாமல் அதற்கு பெறுமதி சேர்க்கும் வகையில் அரிசியாக சந்தைக்கு வழங்குவதன் மூலம் விவசாயியின் பொருளாதாரத்தை வலுப்படுத்துதல்.* | *4.96 மில். ரூபாய்* | *4.51 மில். ரூபாய்* | *83 அரிசி பதப்படுத்தும் அலகுகளை நிறுவுதல்.* | *83 பயனாளிகளுக்காக அரிசி பதப்படுத்தும் அலகுகள் நிறுவப்பட்டுள்ளன.* | *அனுராதபுரம், குருநாகல், புத்தளம், அம்பாறை, கண்டி, நுவரெலியா மற்றும் முல்லைத்தீவு* |
| *2. விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க அரிசி, சோளம் மற்றும் தானிய வகைகளை களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு வீடுகளில் களஞ்சிய வசதிகளை விருத்தி செய்தல்* | *மொத்த தானியங்களில் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகள் 10-12% எனும் பெறுமானத்தை கொண்டதாகக் காணப்படுகிறது. அதில் சுமார் 6% வீதமான இழப்புகள் களஞ்சியப்படுத்தலின் போது நிகழ்கிறது. எனவே, களஞ்சியப்படுத்தலின் போது ஏற்படும் அறுவடைக்குப் பிந்தைய* | *5.15 மில். ரூபாய்* | *4.84 மில். ரூபாய்* | *105 வீட்டு களஞ்சிய வசதிகளை விருத்தி செய்தல்* | *105 வீட்டு களஞ்சிய வசதிகள் விருத்தி செய்யப்பட்டன.* | *அனுராதபுரம், அம்பாறை, முல்லைத்தீவு, கண்டி, குருநாகல் மற்றும் ஹம்பாந்தோட்டை* |

| செயற்திட்டம் | நோக்கம் | முன்னேற்றம் | | | | நடைமுறைப் படுத்தப்பட்ட மாவட்டங்கள் |
|---|---|---|---|---|---|---|
| | | நிதி இலக்கு | நிதி முன்னேற்றம் | பௌதீக இலக்கு | பௌதீக முன்னேற்றம் | |
| | இழப்புகளை குறைத்தல். | | | | | |
| 3. கிராமிய மட்டத்தில் வாசனைப் பொருட்களைப் பதப்படுத்தும் நுண் தொழில்முனைவோரை அறிமுகம் செய்தல் | சிறு/நடுத்தர அளவிலான வாசனைப் பொருட்களை பதப்படுத்தும் தொழில்நுட்பத்தைப் விரிவாக்கம் செய்வதன் மூலம் கிராமிய அளவிலான வாசனைப் பொருட்களை பதப்படுத்தும் நுண் தொழில்முனைவோரை உருவாக்குதல் | 1.74 மில். ரூபாய் | 1.33 மில். ரூபாய் | 14 வாசனைப் பொருட்களை பதப்படுத்தும் அலகுகள் | 14 வாசனைப் பொருட்களை பதப்படுத்தும் அலகுகள் உருவாக்கப்பட்டுள்ளன. | அனுராதபுரம், குருநாகல், அம்பாறை, கண்டி, ஹம்பாந்தோட்டை, நுவரெலியா மற்றும் முல்லைத்தீவு |
| 4. பழ விநியோகச் சங்கிலியில் பங்குதாரர்களை வலுவூட்டும் வகையில் பழ பதப்படுத்தும் மையத்தை நிறுவுதல் | ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் பழக் கூழ் பதனிடும் நிலையத்தை அமைத்தல் மற்றும் அதன் மூலம் அந்தப் பிரதேசத்தில் பயிர் செய்யப்படும் மா, புளியம் பழம், விளாம்பழம், கொடித்தொடை போன்ற பழவகை பயிர்களின் கூழ்களைத் தயாரித்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளுக்கு வழங்குவதன் மூலம் வருமானத்தை பிறப்பித்தல். | 18.35 மில். ரூபாய் | 13.34 மில். ரூபாய் | | இந்த நிலையத்தின் மூலம் ஏற்கனவே பழக் கூழ் தயாரித்து ஏற்றுமதி செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. | ஹம்பாந்தோட்டை |

| செயற்திட்டம் | நோக்கம் | முன்னேற்றம் | | | | நடைமுறைப் படுத்தப்பட்ட மாவட்டங்கள் |
|---|---|---|---|---|---|---|
| | | நிதி இலக்கு | நிதி முன்னேற்றம் | பௌதீக இலக்கு | பௌதீக முன்னேற்றம் | |
| 5. விவசாய விநியோகச் சங்கிலியில் பங்குதாரர்களுக்கு பங்குதாரர்களை வலுவூட்டும் வகையில் நாட்டின் ஒவ்வொரு பிரதேசத்தின் சாத்தியத் தன்மைகளை அடிப்படையாகக்கொண்டு அறுவடைக்குப் பிந்தைய பதப்படுத்தும் மையங்களை நிறுவுதல் | ஒவ்வொரு பகுதியிலும் விளையும் பயிர்கள் மற்றும் அந்த பகுதிகளின் சந்தை வாய்ப்புகளை ஆய்வு செய்து புதிய தொழில்முனைவோரை உருவாக்குதல். | 2.50 | 2.23 | 7 பதனிடும் அலகுகள் | அறுவடைக்குப் பிந்தைய 8 பதப்படுத்தும் அலகுகள் நிறுவப்பட்டன. அதன் பிரகாரம், 3 பழப் பதப்படுத்தும் அலகுகள், 2 பழங்கள் மற்றும் காய்கறிகள் உலர்த்தும் அலகுகள், அரிசியைக்கொண்டு தயாரிக்கப்படும் ஐஸ்கிரீம் உற்பத்தி செயும் ஒரு அலகு, வாசனைப் பொருட்களைக் கொண்ட தயாரிப்புகளை உற்பத்தி செய்யும் 2 அலகுகள் என்பன நாட்டின் 7 மாவட்டங்களில் நிறுவப்பட்டுள்ளன. | ஹம்பாந்தோட்டை, அனுராதபுரம், குருநாகல், மொனராகலை, கண்டி, நுவரெலியா, கம்பஹா, யாழ்ப்பாணம், அம்பாறை, புத்தளம் |
| மீண்டுவரும் செலவுகள் (செலவுத் தலைப்பு - 118-02-03-073-1509) இன் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் | | | | | | |
| அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பத்தைப் பிரபலப்படுத்துவதற்கான பயிற்சி நிகழ்ச்சிகள் | முறையானதும் பொருத்தமானதுமான அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பங்களை களத்தில் பிரயோகிப்பதற்கு அறிமுகப்படுத்துதல் மற்றும் அதற்காக | | | முறையானதும் பொருத்தமானதுமான அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பங்களின் பயன்பாடு தொடர் | 160 வதிவிட மற்றும் களப் பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டு 3470 பேர் (விவசாயிகள், பெண் விவசாயிகள், மற்றும் உழவர் அமைப்புகளின் உறுப்பினர்கள், சிறு மற்றும் நடுத்தர அளவிலான | |

| செயற்திட்டம் | நோக்கம் | முன்னேற்றம் | | | | நடைமுறைப் படுத்தப்பட்ட மாவட்டங்கள் |
|---|---|---|---|---|---|---|
| | | நிதி இலக்கு | நிதி முன்னேற்றம் | பௌதீக இலக்கு | பௌதீக முன்னேற்றம் | |
| | வழங்கல் மற்றும் பெறுமதி சங்கிலிப் பங்குதாரர்களுக்கு பயிற்சியளித்தல் தொழில்நுட்ப விரிவாக்க நடவடிக்கைகள் மூலம் மேற்கொள்ளல் | | | *பான 100 பயிற்சி நெறிகள் (வதிவிட மற்றும் களப் பயிற்சி நிகழ்ச்சிகளாக) நடாத்துவதன் மூலம் 2000 பயனாளிகளுக்குப் பயிற்சி அளித்தல் அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பத்துறைக்கு புதிய தொழில்முனைவோரை அறிமுகம் செய்தல்.* | *விவசாய பொருட்களை சேகரிப்பவர்கள், போக்குவரத்து துறையில் ஈடுபடுவோர் மற்றும் வியாபாரிகள், தொழில்முனைவோர், விவசாய தயாரிப்புகளை பதனிடுவோர், அரச, கூட்டுறவு, தனியார் மற்றும் அரசு சாரா நிறுவன விரிவாக்க அலுவலர்கள் எனும் வகையில்) முறையான அறுவடைக்கு பிந்தைய நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சிகளைப் பெற்றுக்கொண்டணர். 15 புதிய தொழில்முனைவோர் உருவாக்கப்பட்டுள்ளனர்.* | |

*புகைப்பட இலக்கம் 61 - 62*

## *05.* ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம் *(HARTI)*

*5.1.* அறிமுகம்

ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம் *1972* ஆம் ஆண்டின் *5* ஆம் இலக்க விவசாய நடவடிக்கைகள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி வழங்கும் நிறுவன சட்டத்தின் கீழ் *1972* ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. கமத்தொழில் அமைச்சின் கீழ் இது ஒரு நியதிச்சட்ட நிறுவனமாக இயங்குகிறது. இந்நிறுவனம் நிறுவப்பட்டுள்ள பிரதான இலக்குகளாக கொள்கை மைய ஆராய்ச்சிகளை ஊக்குவிப்பது மற்றும் விவசாய மற்றும் கிராமிய துறைகளில் காணப்படும் பயிற்சித் தேவைகளை நிறைவு செய்வது என்பனவாகும். விவசாயம் மற்றும் கமநல நடவடிக்கைகள் அபிவிருத்தியுடன் தொடர்பான சமூக-பொருளாதார ஆராய்ச்சிகளை மேற்கொள்வதும், அவ்வாராய்ச்சிகளின் முடிவுகளை கொள்கை ரீதியான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு கொள்கை வகுப்பாளர்களுக்கு வழங்குவதும் அதன் முக்கிய பணிகளாகக் காணப்படுகின்றன.

*5.2.* தொலைநோக்கு

நிலைபேறான விவசாய மற்றும் கிராமிய அபிவிருத்திக்கான அறிவை உற்பத்தி செய்து விநியோகிப்பதில் முன்னணி நிறுவனமாக திகழ்தல்.

*5.3.* செயற்பணி

ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நடவடிக்கைகளுக்கு ஊடாக விவசாய மற்றும் கிராமியத் துறைகளைப் பலப்படுத்துதல்.

*5.4. 2025* ஆம் ஆண்டின் நிதி இலக்குகள்

| தொ/இல | பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபா) |
|---|---|---|
| *1* | மீண்டுவரும் செலவுகள் | *330.15* |
| *2* | மூலதன செலவுகள் | *38.00* |

*5.5. 2025* ஆம் ஆண்டின் பௌதீக இலக்குகள் (நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள்)

| தொ/இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|
| *1.* | விவசாயம் மற்றும் கிராமப்புறத் துறையை உள்ளடக்கும் வகையில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் (உரிய துறைகளைக் இனக்கண்டு தற்போது திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன). | ஆராய்ச்சிகள் அறிக்கைகள் | *100* | *23.00* |
| *2.* | கல்வி மற்றும் பயிற்சி | பயிற்சி நிகழ்ச்சிகள் எண்ணிக்கை | *100* | *5.00* |
| *3.* | தகவல் மற்றும் தொடர்பாடல் | | *100* | *5.00* |
| *4.* | ஆராய்ச்சிகள் மற்றும் பயிற்சி நடவடிக்கைகளுக்கான வளங்கள் | | *100* | *5.00* |
| | மொத்தம் | | | *38.00* |

*5.6. 31.12.2024 ஆம் திகதிக்கான நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் முன்னேற்றம்*

| தொ / இல | நிகழ்ச்சித் திட்டம் | 2024 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கிய தொகை (மில். ரூபாய்) | 31/12/2024 ஆம் திகதி வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | நிதி முன்னேற்றம் சதவீதத்தில் (%) |
|---|---|---|---|---|
| 1 | மீண்டுவரும் செலவுகள் | 207.30 | 189.5 | 91 |
| 2 | மூலதன செலவுகள் | 30.00 | 24.47 | 81 |
| | வெளிப்புற நிதியுதவி செயற்திட்டங்கள் | | | |
| 1 | விவசாயிகள் மற்றும் சேகரிப்பாளர்களுக்கு இடையேயான ஒப்பந்தத்தின் கீழ் மாம்பழ அறுவடை இழப்புகளை மதிப்பீடு செய்வதற்கான ஆய்வு (UoP) | 1.00 | 0.72 | 72 |
| 2 | இரட்டை இணையதளங்களை நிறுவுதல் மற்றும் பராமரித்தல் (Govimina Agri Hub.lk & Govimina Agri Hub.Com (DevPro Guaranty Ltd) | 1.09 | 0.70 | 70 |
| 3 | தரமான விதை மற்றும் நடுகைப் பொருட்கள் உற்பத்திம், தர உத்தரவாதம் மற்றும் சந்தைப்படுத்தல் அமைப்பை வலிவூட்டல் தொடர்பான செயற்திட்டம் (FAO) | 7.52 | 2.01 | 27 |
| 4 | FRESH நோக்கங்கள் (International Food Policy Research Institute) | 3.67 | 1.02 | 28 |
| 5 | இலங்கையில் விவசாயப் உற்பத்திகளின் செலவுகள் மற்றும் பங்கிலாபம் ( unique land use GmbH) | 2.20 | 2.20 | 100 |

ஆராய்ச்சி கற்கைகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகளின் பட்டியல் மற்றும் அவற்றின் முன்னேற்றம் 5.7 மற்றும் 5.8 ஆகிய அட்டவணைகளில் தரப்பட்டுள்ளன.

*5.7. ஆராய்ச்சிக் கற்கைகள்*

| தொ/ இல | செயற்திட்டம் | நிதி (மில். ரூபாய்) | | பௌதீக (%) | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு | முன்னேற்றம் | இலக்கு | முன்னேற்றம் |
| 1 | இலங்கையில் நிலையான வாழ்வாதாரத்தை மேம்படுத்த விவசாய சுற்றுலாத் துறையைப் பயன்படுத்துதல் | 1.20 | 1.29 | 100 | 75 |
| 2 | புதிய விவசாய வணிகத்தை மேம்படுத்துதல்: நிலையான தொழில்முனைவுக்கான பயனுள்ள தலையீடுகளை வடிவமைத்தல் | 1.68 | 1.75 | 100 | 75 |
| 3 | இலங்கையின் நகர்ப்புற பாடசாலை மாணவர்களின் உணவு நுகர்வு முறைகள்: ஆரோக்கியமான உணவுப் பழக்கவழக்கங்களுக்குக் காணப்படும் தடைகள், தாக்கங்கள் மற்றும் சாத்தியப்பாடுகள் பற்றிய ஆய்வு | 1.10 | 1.15 | 100 | 75 |
| 4 | மாம்பழம் மற்றும் அன்னாசிப்பழத்தின் பெறுமதிச் சங்கிலிகளில் விவசாயிகளுக்கும் | 1.50 | 1.10 | 100 | 75 |

| தொ/ இல | செயற்திட்டம் | நிதி (மில். ரூபாய்) | | பௌதீக (%) | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு | முன்னேற்றம் | இலக்கு | முன்னேற்றம் |
| | சேகரிப்பாளர்களுக்கும் இடையிலான ஒப்பந்தங்கள் பற்றிய ஆய்வு | | | | |
| 5 | இலங்கையில் உள்ள விஷேட பொருளாதார மையங்களின் செயல்திறன் மற்றும் நிலைத்தன்மை பற்றிய ஆய்வு | 2.09 | 1.50 | 55 | 50 |
| 6 | உரங்களுக்கு அப்பால்: நெல் உற்பத்தியை அதிகரிப்பதற்கான நிலையான போசணை முகாமைத்துவம் பற்றிய ஆய்வுகள் | 1.52 | 1.31 | 100 | 75 |
| 7 | இலங்கையில் நெல் விவசாயம் குறித்த காலநிலை மீள்திறன் கணிப்புகளுக்கு விவசாயிகளின் தழுவல் பற்றிய ஆய்வு | 1.20 | 1.10 | 100 | 75 |
| 8 | போசாக்குமிக்க உணவுப் பட்டியல்களுக்கான செலவுகள் மற்றும் தாங்கத்தகுதிறன்: போசணைத் தரப் பகுப்பாய்வு நிலை பகுப்பாய்வு மற்றும் பன்முக கொள்கை மற்றும் அமைப்பு மாற்றங்களை நோக்கிய படிகள் மூலம் முடிவெடுப்பதை வலுப்படுத்துதல் – விமர்சன ரீதியான அணுகல் | - | - | 100 | 75 |
| 9 | தாழ்நாட்டு ஈர வலயத்தில் அரிசியை அடிப்படையாகக்கொண்ட சூழல் தொகுதியின் பங்கேற்பு பாதுகாப்பு மற்றும் உற்பத்தி என்பவற்றை வலுப்படுத்துதல் - | 0.50 | 0.33 | 100 | 70 |
| 10 | விவசாயத்தில் மண்புழு உரம் மற்றும் சேதன திரவ உரங்களின் உற்பத்தி மற்றும் பயன்பாட்டை ஊக்குவித்தல் | 0.80 | 0.74 | 100 | 100 |
| 11 | பழம் மற்றும் காய்கறி விநியோகச் சங்கிலிகளில் பிளாஸ்டிக் பெட்டிகளின் பயன்பாடு: அதன் செயல்திறனை மதிப்பீடு செய்தல் | 0.93 | 0.85 | 100 | 60 |
| 12 | டிஜிட்டல் ஆற்றலைத் திறத்தல்: இலங்கையின் விவசாயத் துறையில் டிஜிட்டல் விவசாய விரிவாக்கத்தை மேம்படுத்துவதற்கான சவால்கள் மற்றும் உத்திகள். | 0.80 | 4.90 | 70 | 60 |

*5.8. 2024 ஆம் ஆண்டின் பயிற்சி நிகழ்ச்சிகள்*

| | பயிற்சி நிகழ்ச்சிகள் | நிதி *(மில். ரூபாய்)* | | பௌதீக *(%)* | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு | முன்னேற்றம் | இலக்கு | முன்னேற்றம் |
| *1* | விவசாய தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி நிகழ்ச்சி (முதல் கட்டம்)<br>விவசாய தொழில்முனைவோரை உருவாக்க இளைஞர் சமுதாயத்தை வலுவூட்டுவதற்கான மூன்று நாள் பயிற்சி நிகழ்ச்சி | *1.4* | *1.17* | *100* | *100* |
| *2* | வீட்டு அலகுகளில் உணவுப் பாதுகாப்பைப் பேணுதல் | *1.4* | *1.59* | *100* | *100* |
| *3* | விவசாய அமைப்புகளை வலுப்படுத்து தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி | *2.2* | *1.71* | *100* | *100* |

*5.9. 31/12/2024 திகதி வரையிலான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதீக முன்னேற்றம்*

*2024 ஆம் ஆண்டில், விவசாயத் துறையின் பல்வேறு துறைகளை இலக்காகக் கொண்டு வரவுசெலவு ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி பதினொரு ஆராய்ச்சிக் கற்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த ஆய்வுகள் கிராமப்புற மேம்பாடு மற்றும் நிலையான விவசாயம் என்பவற்றில் விசேடம் கவனம் செலுத்தி பல தலைப்புகளின் கீழ் செயல்படுத்தப்பட்டன.*

*கிராமியத் துறை அபிவிருத்தி : கிராமப்புறப் பொருளாதாரத்தில் வளர்ந்து வரும் துறைகளை ஆராய இரண்டு ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டன – அவை, விவசாய சுற்றுலா மற்றும் புதிய விவசாய வணிகங்களின் முன்னேற்றம்; நிலையான தொழில்முனைவுக்கான பயனுள்ள தலையீடுகளை திட்டமிடல் என்பனவாகும். 2024 டிசம்பர் இறுதியளவில், ஆய்வுகள் 75% பௌதீக முன்னேற்றத்தை அடைந்துள்ளன.*

*உணவு மற்றும் போஷாக்கு பாதுகாப்பு: இலங்கை உட்பட பல நாடுகள் எதிர்கொள்ளும் சவாலான உணவு மற்றும் போஷாக்கு பாதுகாப்பை உறுதி செய்வது பொருளாதார திட்டமிடலின் முதன்மை நோக்கமாகும். இந்தத் துறையை இலக்காகக் கொண்டு கொள்கைப் பரிந்துரைகளை வழங்க, 2024 இல் இரண்டு ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டன. முதலாவது நகர்ப்புற இளைஞர்களிடையே உணவு நுகர்வு முறைகள் மற்றும் நடத்தைகளை ஆராய்கிறது, இது எதிர்கால உணவு தேவையை வடிவமைப்பதில் முக்கியமான மக்கள்தொகை கணக்கெடுப்பாகக் கருத முடியும். இரண்டாவது ஆய்வு, இது நிலையான உணவுக் கொள்கைகளை உருவாக்குவதற்கு அவசியமான காரணிகளான அத்தியாவசிய போசனைமிக்க உணவுகளின் விலை மற்றும் தாங்கத்தகுதிறன் என்பவை தொடர்பாக மதிப்பிடுவதில் கவனம் செலுத்துகிறது, து. இந்த ஆய்வுகளின் பாதக முன்னேற்றம் 75% ஆகும்.*

*காலநிலைக்கு சீரமைவான விவசாயம்: காலநிலைக்கு சீரமைவான விவசாயத் தீர்வுகளை செயல்படுத்தும் நோக்கத்துடன் 2024 ஆம் ஆண்டில் நான்கு ஆய்வுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வுகள் காலநிலை மாற்றம், நிலைபேறான போசணை முகாமைத்துவம் மற்றும் சூழல் நட்புத்தன்மை ஆகியவை தொடர்பாக ஆய்வு செய்வதில் கவனம் செலுத்தின.*

*1. இலங்கையில் நெற் செய்கையில் காலநிலை நிலைத்தன்மைகளை எதிர்கொள்ளும் ஆற்றலுக்காக மேற்கொள்ளும் முன்னறிவிப்புகளுக்கு விவசாயிகளின் தழுவல் பற்றிய ஆய்வு – விவசாயிகள் எவ்வாறு காலநிலை தொடர்பான மாற்றங்களை முன்கூட்டியே வானிலை முன்னறிவிப்புகளைப் பயன்படுத்தி மாற்றியமைக்கிறார்கள் என்பதை ஆராயும் இந்த ஆய்வு 75% நிறைவடைந்துள்ளது.*
*2. நெல் உற்பத்தியை அதிகரிப்பதற்கான நிலையான போசணை முகாமைத்துவம் பற்றிய ஆய்வு – போசணை முகாமைத்துவத்துக்கான ஒரு விரிவான அணுகுமுறையான இந்த ஆய்வு சூழல் சமநிலையை ஊக்குவிக்கும் அதே வேளையில் அரிசி உற்பத்தித்திறனை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது அதன் பௌதீக முன்னேற்ற இலக்கில் 75% எட்டியுள்ளது.*
*3. தாழ்நாட்டு ஈர வலயத்தில் அரிசியை அடிப்படையாகக்கொண்ட சூழல் தொகுதியின் பங்கேற்பு பாதுகாப்பு மற்றும் உற்பத்தி என்பவற்றை வலுப்படுத்துதல் - இந்த ஆய்வு நெல் சூழல் தொகுதிகளைப் பாதுகாத்தல் மற்றும் அவற்றின் உற்பத்தித்திறனை அதிகரித்தல் என்பவற்றில் கவனம் செலுத்தும் இந்த ஆய்வு 70% பௌதீக முன்னேற்றத்தை அடைந்துள்ளது.*
*4. மண்புழு உரம் மற்றும் சேதன திரவ உரங்களின் உற்பத்தி மற்றும் விவசாயத்தில் அவற்றின் பயன்பாட்டை ஊக்குவித்தல் - இந்த ஆய்வு சேதன உரத்தின் பயன்பாட்டை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்ட இந்த ஆய்வு சூழலுக்கு உகந்த விவசாய நடைமுறைகளுக்கு மாறுவதற்கு உதவுகின்றது. 2024 ஆம் ஆண்டின் டிசம்பர் மாத இறுதியில், அதன் பௌதீக இலக்குகளில் 100% ஐப் பூர்த்தி செய்துள்ளது.*

*பெறுமதிச் சங்கிலிகள் தொடர்பான ஆய்வுகள்: மாம்பழம் மற்றும் அன்னாசிப்பழத்தின் பெறுமதிச் சங்கிலிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தங்களின் ஒப்பந்த ஏற்பாடுகளை ஆராய்வதற்காகவும், இலங்கையில் உள்ள விஷேட பொருளாதார மையங்களின் செயல்திறன் மற்றும் நிலைபேறானதன்மையை ஆராய்வதற்காகவும் இரண்டு ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த ஆய்வுகள் முறையே 75% மற்றும் 50% பௌதீக முன்னேற்றத்தை அடைந்துள்ளன.*

*சந்தை தகவல் சேகரிப்பு மற்றும் பரப்புதல் தொடர்பான செயற்திட்டம் - விவசாய சந்தை தகவல்களை சேகரித்தல், குறிப்பாக உணவு பொருட்களின் விலைகளை சேகரித்தல், வழங்குதல், மற்றும் பரப்புதல் இதன் மூலம் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் ஆகும். இது இந்த காலப்பிரிவில் 100% பௌதீக முன்னேற்றத்தை பதிவு செய்துள்ளது. வாராந்த உணவுப் பொருட்கள் தொடர்பான பிரசுரங்கள் (சிங்களம் மற்றும் ஆங்கிலம்) மற்றும் மாதாந்த தகவல் பிரசுரங்கள் (ஆங்கிலம்) ஆகியன வெளியிடப்பட்டன.*

*பயிற்சி நிகழ்ச்சிகள் - 2024*

*2024 ஆம் ஆண்டில் நான்கு பயிற்சி நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட்டு, இதுவரை 43 அமர்வுகள் நிறைவடைந்துள்ளன. இதில் மன்னார், வவுனியா மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட உணவுப் பாதுகாப்பு தொடர்பான 19 ஒரு நாள் பயிற்சித் நிகழ்ச்சிகள் உள்ளடங்கியதுடன், 753 பயிற்சியாளர்கள் பங்குபற்றியுள்ளனர். விவசாய அமைப்புகளை வலுப்படுத்துவதை மையமாகக் கொண்ட 20 ஒரு நாள் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஹம்பாந்தோட்டை மற்றும் குருநாகலில் நடைபெற்றதுடன் இதில் 927 விவசாயிகள் கலந்து கொண்டனர். பொலன்னறுவை மாவட்டத்தில் தொழில்முனைவோர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் இரண்டாம் கட்ட நிகழ்வில் தொழில்களை ஆரம்பித்த 105 பயிற்சியாளர்கள் பங்குபற்றினர். மேலும், கம்பஹா, இரத்தினபுரி மற்றும் கண்டி ஆகிய இடங்களில் விவசாய தொழில்முனைவோரை உருவாக்குவதற்கு இளைஞர் சமூகம் வலுவூட்டும் வகையில் பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டதுடன் 73 இளைஞர் சமூகங்கள் இவற்றில் கலந்து கொண்டன.*

2024 ஆம் ஆண்டுக்கான வெளியீடுகள்: இதுவரை நிறுவனம் இந்த ஆண்டில், மூன்று ஆராய்ச்சி அறிக்கைகளையும் ஒன்பது கொள்கை விளக்கங்களையும் வெளியிட்டுள்ளது. இவற்றுக்கு மேலதிகமாக, Sri Lanka Journal of Agrarian Studies எனும் சஞ்சிகை (தொகுதி 20, இலக்கம் 1 மற்றும் 2) மற்றும் விவசாய நடவடிக்கைகள் கற்கைகள் (தொகுதி 14, இலக்கம் 1) ஆகியவை வெளியிடப்பட்டன. "கொவி ஜனதா" என்ற சிங்கள சஞ்சிகையின் இரண்டு இதழ்கள் (தொகுதி 26, எண். 1-2 மற்றும் 3), தேசிய புத்தரிசி திருவிழா - 2024க்கான சிறப்பு வெளியீடும் வெளியிடப்பட்டது. மனித-வனவிலங்கு மோதல் மற்றும் காலநிலை மாற்றம் குறித்த சிங்கள சிறு நூல்கள் என்பன இந்த ஆண்டில் வெளியிடப்பட்டன. மேலும், நிறுவனம் 39 சிறு ஆவணப்படங்களை (சிங்களத்தில் 33 மற்றும் தமிழில் 6 உட்பட) தயாரித்து தனது அறிவுப் பரப்பல் முயற்சிகளை விரிவுபடுத்தியது. இலங்கையர்களுக்கு சமீபத்திய செய்திகள் மற்றும் விவசாய தொழில்நுட்பங்களை அறிந்துகொள்ளும் வகையில் "Govmina" எனும் இணையத்தளம் தொடங்கப்பட்டது.

புகைப்பட இலக்கம் 63 - 65

## 06. நெல் சந்தைப்படுத்தல் சபை (PMB)

6.1. நியதிச்சட்டங்களுக்கு அமைவாக நிறுவனத்தின் பணிகள்

நெல் விவசாயிகளுக்கு விற்பனை விலையை உறுதி செய்வதற்காக உத்தரவாத விலையில் நெல்லைக் கொள்வனவு செய்தல், நெல் மற்றும் அரிசியின் சந்தை விலையை நிலையாக வைத்திருத்தல், இலங்கையர்களுக்கு உணவுப் பாதுகாப்பை உருவாக்குதல் மற்றும் நெல் மற்றும் அரிசி இருப்புகளை பராமரித்தல்

6.2. நோக்கங்கள்:

நெல்லுக்கு சந்தையில் நிலையான உயர் விலையைப் பெற்றுக் கொடுத்தல், நியாயமான விலையில் அரிசி வழங்குதல், அரிசி இடித்தல் மற்றும் களஞ்சியப்படுத்தலை முறைப்படுத்துதல், களஞ்சியப்படுத்தல் கொள்ளளவை அதிகரித்தல், பயன்படுத்தப்படாத களஞ்சியங்களை புனர்நிர்மாணம் செய்தல், விஞ்ஞான ரீதியாக நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய களஞ்சியங்களை அமைத்தல், தாங்கிருப்புத் தொகுதிகளை பாதுகாப்பாக வைத்திருப்பதற்குப் பொருத்தமான களஞ்சியசாலைகளை உருவாக்குதல்.

6.3. 2025 ஆம் ஆண்டின் அபிவிருத்திச் செயற்திட்டங்கள்

1. நெல் இருப்பு சேகரிப்பு தொடர்பான ஒழுங்குறுத்துகை நடவடிக்கைகள்
2. அரிசி பதப்படுத்தல் தொடர்பான ஒழுங்குறுத்துகை நடவடிக்கைகள்
3. நெல் கொள்வனவு, காப்பு இருப்பை பேணுதல் மற்றும் விற்பனை

6.4. நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்

- நிதி முன்னேற்றம்

| விபரம் | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) | செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | நிதி முன்னேற்றம் சதவீத்த்தில் |
|---|---|---|---|
| மூலதனம் செலவுகள் | - | - | 0 |
| மீண்டுவரும் செலவுகள் | 184.6 | 174.6 | 95 |
| உரிமை பங்களிப்பு | 2813.67 | 2,813.67 | 100 |

- பௌதீக முன்னேற்றம்

*2023/24 பெரும் போகத்திற்கு திறைசேரியிலிருந்து பெற்ற ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி 2,637,826 கிலோ கிராம் நெல் கொள்வனவு செய்யப்பட்டு, அவை விற்பனை செய்யப்பட்டு திறைசேரியிலிருந்து பெறப்பட்ட ஒதுக்கீடுகள் மீளச் செலுத்தப்பட்டது.*

*2024 சிறு போகத்திற்கு திறைசேரி ஒதுக்கீட்டைக் அடிப்படையாகக்கொண்டு கொள்வனவு செய்யப்பட்ட 119, 699 கிலோ கிராம் கீரி சம்பா இருப்பை விற்பனை செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறன.*

## *07. விவசாய மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை (AAIB)*

*7.1. நியதிச்சட்டங்களுக்கு அமைவாக நிறுவனம்*

*விவசாயப் பொருளாதாரமொன்றுக்கு உரிமைகோரும் இலங்கையில், அவசர அனர்த்த நிலைமைகளில் உள்நாட்டு விவசாயத் துறை மற்றும் விவசாய சமூகம் ஆகியவற்றைப் பாதுகாத்தல் எனும் அரசின் மீதுள்ள கடமையை நிறைவேற்றும் நோக்கில் 1973 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க கமத்தொழில் காப்புறுதிச் சட்டத்தின் மூலம் கமத்தொழில் காப்புறுதிக்காகக் காணப்பட்ட ஒரே அரச காப்புறுதி நிறுவனமாக கமத்தொழில் காப்புறுதிச் சபை நிறுவப்பட்டது. 1999 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சட்டத்தினால் கமத்தொழில் காப்புறுதிச் சபை, கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை எனும் பெயரில் மீள நிறுவப்பட்டது.*

*7.2 பணிகள்*

*7.2.1 விவசாய இடர்நேர்வுகளை முகாமைத்துவம் செய்தல்*

*இடர்நேர்வுக முகாமைத்துவ வழிமுறையாக இலங்கையின் விவசாயத் துறைக்கு பயிர், கால்நடை மற்றும் பொதுக் காப்புறுதி ஆகிய துறைகளின் கீழ் விவசாயக் காப்புறுதி முறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் விவசாய இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கு பங்களிப்புச் செலுத்துதல், அவசர அனர்த்தங்களின் போது விவசாயிகளின் பொருளாதாரத்தில் ஏற்படும் வீழ்ச்சிகளைக் குறைக்க உதவுதல் மற்றும் விவசாயக் கடன்களை வழங்கும் நிதி நிறுவனங்களுக்கு அவற்றின் நிதிசார் ஸ்திரத்தன்மையை அதிகரித்தலுக்கு உதவுதல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதுடன் பயிர்க் காப்புறுதித் திட்டங்கள் (நெல் மற்றும் ஏனைய பயிர்கள்), கால்நடை வளக் காப்புறுதித் திட்டங்கள், ஆயுள் காப்புறுதித் திட்டங்கள், விவசாய உபகரணக் காப்புறுதித் திட்டம், களஞ்சியக் காப்புறுதித் திட்டம் மற்றும் துவிச்சக்கர, நான்கு சக்கர டிராக்டர்கள் மற்றும் ஏனைய மூன்றாம் தரப்பு காப்புறுதித் திட்டங்கள் என்பன அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.*

*7.2.2 சமூக நலனோம்பல்*

*சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம், இலங்கையின் விவசாயத் துறையுடன் தொடர்புபட்டுள்ள விவசாயிகளின் ஓய்வுநிலை காலத்தில் பாதுகாப்பு வழங்குதல் மற்றும் மருத்துவ உதவித் திட்டங்களின் மூலம் மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் விவசாயிகளுக்கு நிதி நிவாரணம் வழங்குதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதேவேளை, விவசாயிகளின் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம், மீனவர்*

ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம், சுவசெத்த சுகாதாரக் காப்பீட்டுத் திட்டம் மற்றும் விபத்துக் காப்பீட்டுத் திட்டம் என்பன இதன் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

*7.3. 2025 ஆம் ஆண்டின் நிதி இலக்குகள்*

| தொ/ இல | பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை *(மில். ரூபா)* |
|---|---|---|
| மீண்டுவரும் செலவு | | |
| *01.* | விவசாய மற்றும் மீனவ ஓய்வூதியங்களை வழங்குவதற்கு *(118-02-03-049-1509)* | *5,634.40* |
| மூலதன செலவு | | |
| *02.* | மூலதன செலவு *(118-02-03-049-2201)* | *20.00* |
| *03.* | கட்டாயப் பயிர்க் காப்புறுதி *(118-02-03-43-2202)* | *4,516.58* |

*7.4. 31.12.2024 ஆம் திகதிக்கான நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி முன்னேற்றம்*

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | *2024 ஆம்* ஆண்டுக்கு ஒதுக்கிய தொகை *(மில். ரூபாய்)* | *31/12/2024 ஆம்* திகதி வரை செலவு செய்த தொகை *(மில். ரூபாய்)* | நிதி முன்னேற்றம் சதவீதத்தில் *(%)* |
|---|---|---|---|---|
| *1* | மூலதன செலவு | | | |
| | கட்டாயப் காப்புறுதி *(118-02-03-43-2202)* | *1,000.00* | *1,000.00* | *100%* |
| *2* | மீண்டுவரும் செலவு | | | |
| | விவசாய மற்றும் மீனவ ஓய்வூதியங்களை வழங்குவதற்கு *(118-02-03-049-1509)* | *5,386.00* | *5,011.63* | *93%* |

*7.5. 31/12/2024 திகதி வரையிலான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதீக முன்னேற்றம்*

*i.)* விவசாயிகள்/ மீனவ ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

சமூக மற்றும் பொருளாதார ரீதியாக திருப்தியடைந்த விவசாயிகள் மற்றும் மீனவ சமூகங்களைக் கட்டியெழுப்பும் நோக்கில் விவசாயிகள்/ மீனவ ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன்புரித் திட்டமானது நடைமுறைப்படுத்தப்படுகிறது. அதற்கமைவாக, *2024* டிசம்பர் *31* ஆம் திகதியளவில், விவசாயிகள்/ மீனவ ஓய்வூதியம் பெறுவோர் எண்ணிக்கை *185,438* ஆகக் காணப்பட்டதுடன் *5,011.63* மில். ரூபாய் ஓய்வூதியக் கொடுப்பனவாக வழங்கப்பட்டது.

புகைப்பட இலக்கம் *66*

*ii.)* விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படும் *6* பயிர் வகைகளுக்கான கட்டாய பயிர் காப்பீட்டு முறையை நடைமுறைப்படுத்தல்

அரச பங்களிப்பின் கீழ் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படும் *6* பயிர் வகைகளுக்கான (நெல், சோளம், பெரிய வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு மற்றும் சோயா போஞ்சி) கட்டாய பயிர் காப்பீட்டு முறையை நடைமுறைப்படுத்தல் எனும் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படை நோக்கம் இலங்கைக்கு மிகவும் பொருத்தமான விவசாய இடர்நேர்வு முகாமைத்துவ முறையை நடைமுறைப்படுத்துவதாகும். அதற்கமைவாக, *2024* ஆம்

*ஆண்டில், நாடு முழுவதையும் உள்ளடக்கும் வகையில், 2023/24 பெரும் போகம் மற்றும் 2024 சிறு போகம் ஆகியவற்றின் போதான பயிர் இழப்புகளுக்கு 78,887 விவசாயிகளின் 133,852 ஏக்கர் நிலப் பரப்புக்கு 1,790.00 மில். ரூபா இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டதுடன் இதற்கான அரசு ஒதுக்கீடு 1000.00 மில். ரூபாய் ஆகும்.*

*புகைப்பட இலக்கம் 67*

## *08. இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கை சபை (SLCARP)*

*8.1. அறிமுகம்*

*இது 1987 ஆம் அண்டு 47 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் கீழ் விவசாய ஆராய்ச்சி முகாமைத்துவத்தை விஷேட நோக்கமாகக் கொண்டு நிறுவப்பட்ட ஒரு நிறுவனமாகக் காணப்படுவதுடன் இந்நிறுவனத்தின் முக்கியப் பொறுப்பாக தேசிய விவசாய ஆராய்ச்சிகள் தொடர்பான ஆலோசனை வழங்குவதாகும். இதற்கு மேலதிகமாக, தேசிய விவசாய ஆராய்ச்சிகளுடன் தொடர்பான தேசிய விவசாய ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு நிதியுதவி வழங்கல், ஊக்குவித்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் மேற்பார்வை ஆகிய நடவடிக்கைகளையும் இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபை மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்காக குறித்த சட்டத்தின் மூலம் 13 அத்தியாவசிய பணிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அதன்படி, விவசாய ஆராய்ச்சி கொள்கைகள் மற்றும் மூலோபாயங்களை தயாரித்தல், ஆராய்ச்சி முன்னுரிமைத் துறைகளை இனங்காணல், ஆராய்ச்சி முன்மொழிவுகளை பரிந்துரை செய்தல், முகாமைத்துவ முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல், இறுதி முன்னேற்ற அறிக்கைகளை மதிப்பீடு செய்தல், தொடர்புடைய துறைகளில் தகவல்களைப் பரிமாறிக்கொள்வதன் மூலம் ஆராய்ச்சிகளின் போது எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்த்தல் மற்றும் விவசாய விஞ்ஞானிகளுக்கான முதுகலை வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் விவசாய ஆராய்ச்சித் துறையில் மனித வள அபிவிருத்தியை மேற்கொள்ளல், விவசாய ஆராய்ச்சி நிறுவனங்களின் பௌதீக மற்றும் மனித வளத் தகவல்களை சம்பந்தப்பட்ட அமைச்சுகளுக்கு அறிவித்தல், விவசாய ஆராய்ச்சியாளர்களை ஊக்குவிக்கும் நிகழ்ச்சிகளை நடாத்துதல் என்பன இதன் பிரதான செயற்பாடுகளாகும்.*

*8.2. 2025 ஆம் ஆண்டின் நிதி இலக்குகள்*

| தொ/ இல | பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | மதிப்பிடப்பட்ட தொகை (மில். ரூபாய்) |
|---|---|---|
| 1 | மூலதன செலவுகள் | 77.65 |
| 2 | மீண்டுவரும் செலவுகள் | 93.50 |
| 3 | தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டம் | 56.12 |

*8.3. 2025 ஆம் ஆண்டின் ஆராய்ச்சிகள் நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதீக இலக்கு (நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள்)*

| தொ / இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | ஒரு அலகுக் கானசெலவு (மில். ரூபா.) | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|---|
| 01 | 2025 ஆம் ஆண்டிற்கான தேசிய விவசாய ஆராய்ச்சி அமைப்புக்கு (NARS) நிறுவனங்களிடமிருந்து ஆராய்ச்சி செயல் திட்டங்களை சேகரித்தல் மற்றும் குறுகிய மற்றும் நடுத்தர கால ஆராய்ச்சி முன்னுரிமைகளின் அடிப்படையில் செயல் திட்டங்களை பகுப்பாய்வு செய்தல். | நிறுவனங்களின் செயல் திட்டங்கள் | 25 | 0.008 | 0.20 |
| | அரசுக்கு பரிந்துரைத்தல் மற்றும் ஆலோசனை வழங்கல் | கொள்கை அறிக்கைகள் | 2 | 0.25 | 0.50 |
| | தேசிய விவசாய ஆராய்ச்சித் செயற்திட்டம் (NARP) / நிறுவனங்களுக்கு இடையேயான மற்றும் பல்துறை ஆராய்ச்சி மானியத் திட்டம் (IIMDRGS) என்பவற்றுக்கான எண்ணக்கரு ஆவணங்களை மதிப்பீடு செய்தல். | எண்ணக்கரு ஆவணங்கள் | 100 | 0.005 | 0.50 |
| 02 | தேசிய விவசாய ஆராய்ச்சி கொள்கைகள் மற்றும் முன்னுரிமைகளை தயாரித்தல் | அறிக்கைகள் | 06 | 0.10 | 0.60 |
| | தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டம்/ நிறுவனங்களுக்கு இடையேயான மற்றும் பல்துறை ஆராய்ச்சி மானியத் திட்டங்களை மதிப்பீடு செய்தல் | எண்ணக்கரு ஆவணங்கள் | 100 | 0.004 | 0.40 |
| 03 | ஆராய்ச்சி இடைவெளி பகுப்பாய்வு/ ஆராய்ச்சி வெளியீடு கணக்கெடுப்பு (பட்டறைகள்/ கணக்கெடுப்பு) | பட்டறைகள் | 1 | 1.00 | 1.00 |
| 04 | விவசாய ஆராய்ச்சி முகாமையாளர்களுக்கான தகவல் தரவுத்தள முகாமைத்துவம் செய்தல். | தரவுத்தளம் | 30 | 0.03 | 1.00 |
| 05 | நிறுவனங்களின் வெளிப்புற மீளாய்வு | நிறுவனங்கள் | 4 | 0.50 | 2.00 |
| | மதிப்பாய்வு செய்யப்பட்ட நிறுவனங்களின் பின்தொடர் நடவடிக்கைகள் | நிறுவனங்கள் | 2 | 0.25 | 0.50 |
| 06 | தேசிய விருது வழங்கும் விழா | மாநாடு | 1 | 10.00 | 10.00 |
| 07 | வருடாந்த உரையாடல் செயலமர்வு | செயலமர்வுகள் | 1 | 0.80 | 0.80 |
| 08 | நிறுவனங்களுக்கு இடையேயான பல்துறை ஆராய்ச்சி மானியத் திட்டம் - நிதி | செயற்திட்டங்கள் | 15 | 1.33 | 20.00 |
| 09 | இலங்கை உணவு மற்றும் விவசாய சஞ்சிகை | இதழ்கள் | 2 | 0.30 | 0.60 |
| | இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைப் சபையின் குறுஞ் செய்திமடல் | இதழ்கள் | 1 | 0.20 | 0.20 |
| | Agrinet மற்றும் நூலகம் | - | - | 2.00 | 2.00 |
| 10 | தேசிய மற்றும் சர்வதேச அளவில் விவசாய ஆராய்ச்சி நிறுவனங்களுக்கிடையேயான உறவுகளை விருத்தி செய்தல் (ஆசியா பசிபிக் விவசாய ஆராய்ச்சி நிறுவனங்கள் / புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்) | பயிற்சிகள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் | 12 | 0.83 | 10.00 |

| தொ / இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | ஒரு அலகுக் கானசெலவு (மில். ரூபா.) | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|---|
| *11* | விவசாய ஆராய்ச்சிகள் தொடர்பான சர்வதேச, தேசிய மற்றும் நிறுவனங்களுக்கு இடையேயான பிரச்சினைகள் குறித்த மாநாடுகள் மற்றும் செயலமர்வுகளை ஏற்பாடு செய்தல். | செயலமர்வுகள் | *3* | *3.33* | *10.00* |
| *12* | விவசாய ஆராய்ச்சி ஊழியர்களுக்கு முதுகலை பயிற்சி மற்றும் வெளிநாடுகளில் அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி நிறுவனங்களுடன் விஞ்ஞானிகளை பரிமாறிக்கொள்வதற்கான ஏற்பாடுகள். | பயிற்சிகள் | *10* | *0.20* | *2.00* |
| *13* | விவசாய ஆராய்ச்சிச் செயற்திட்டங்கள், நிறுவனங்கள் மற்றும் துறைகளின் செயல்திறனை காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்தல். | செயற்திட்டங்கள் | *50* | *0.05* | *2.70* |

*8.4. 31/12/2024* திகதி வரையிலான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி முன்னேற்றம்

| விபரம் | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை *(மில். ரூபாய்)* | செலவு செய்த தொகை *(மில். ரூபாய்)* |
|---|---|---|
| மூலதன செலவுகள் | *30.00* | *16.32* |
| ஆராய்ச்சிகளுக்கு | *15.88* | *13.48* |
| மீண்டுவரும் செலவுக்கள் | *103.38* | *59.32* |

*8.5. 31/12/2024* திகதி வரையிலான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதீக முன்னேற்றம்

| செயற்பாடுகள் | இலக்கு | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|
| *2025* ஆம் ஆண்டிற்கான தேசிய விவசாய ஆராய்ச்சி அமைப்புக்கு *(NARS)* நிறுவனங்களிடமிருந்து ஆராய்ச்சி செயல் திட்டங்களை சேகரித்தல் மற்றும் குறுகிய மற்றும் நடுத்தர கால ஆராய்ச்சி முன்னுரிமைகளின் அடிப்படையில் செயல் திட்டங்களை பகுப்பாய்வு செய்தல். | *25* நிறுவனங்களிடமிருந்து ஆராய்ச்சி செயல் திட்டங்களை சேகரித்தல் | தேசிய விவசாய ஆராய்ச்சி அமைப்பின் *(NARS) 24* நிறுவனங்களின் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. |
| தேசிய விவசாய ஆராய்ச்சித் செயற்திட்டம் *(NARP) /* நிறுவனங்களுக்கு இடையேயான மற்றும் பல்துறை ஆராய்ச்சி மானியத் திட்டம் *(IIMDRGS)* என்பவற்றுக்கான எண்ணக்கரு ஆவணங்களை மதிப்பீடு செய்தல். | மீளாய்வு செய்யப்பட வேண்டிய திட்டங்களின் எண்ணிக்கை - *50* | *2024* ஆம் ஆண்டிற்காக, *80* புதிய ஆராய்ச்சிக் எண்ணக்கரு ஆவணங்கள் பெறப்பட்டு மதிப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. |
| தேசிய விவசாய ஆராய்ச்சி கொள்கைகள் மற்றும் முன்னுரிமைகளை தயாரித்தல் | உணவுப் பயிர்கள், பெருந்தோட்டப் பயிர்கள், மலர் வளர்ப்பு, காடு | மலர் வளர்ப்பு, காடு வளர்ப்பு, மீன்வளம் மற்றும் நீர்வாழ் வளங்கள் மற்றும் கால்நடை |

| செயற்பாடுகள் | இலக்கு | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|
| | வளர்ப்பு, மீன்வளம் மற்றும் நீர்வாழ் வளங்கள், கால்நடை வளங்கல் ஆகிய பிரிவுகளை உள்ளடக்குதல். | வளங்கள் ஆகிய துறைகளுக்கான 04 ஆராய்ச்சி முன்னுரிமைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. உணவுப் பயிர்கள், பெருந்தோட்டப் பயிர்கள் என்பவற்றுக்கு செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. |
| தேசிய விவசாய ஆராய்ச்சித் செயற்திட்டம் (NARP) / நிறுவனங்களுக்கு இடையேயான மற்றும் பல்துறை ஆராய்ச்சி மானியத் திட்டங்களுக்கான (IIMDRGS) முன்மொழிவுகளை மதிப்பீடு செய்தல் | 2024 ஆம் ஆண்டுக்கான ஆராய்ச்சி முன்மொழிவுகளின் எண்ணிக்கை – 50 | 2024 ஆம் ஆண்டுக்கான 34 புதிய ஆராய்ச்சிகளுக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது. |
| ஆராய்ச்சி இடைவெளி பகுப்பாய்வு/ ஆராய்ச்சி வெளியீடு கணக்கெடுப்பு (பட்டறைகள்/ கணக்கெடுப்பு) | புதிய கண்டுபிடிப்புகளை அறிமுகம் செய்வதற்கான பட்டறைகளை நடாத்துதல் | விவசாய ஆராய்ச்சி ஊழியர்களின் முதுகலைப் பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்களால் புதிய கண்டுபிடிப்புகளை அறிமுகப்படுத்த 04 பட்டறைகள் நடத்தப்பட்டன. |
| விவசாய ஆராய்ச்சி முகாமையாளர்களுக்கான தகவல் தரவுத்தளத்தை (INFORM) முகாமைத்துவம் செய்தல் | தகவல் வழங்க வேண்டிய தேசிய விவசாய ஆராய்ச்சி தொகுதி (NARS) நிறுவனங்களின் எண்ணிக்கை 30 ஆகும் | 2020, 2021 ஆம் ஆண்டுகளுக்கு தரவுத் தளம் மற்றும் வெளியீடுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.<br>2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கு 29 நிறுவனங்கள் தரவுகளைத் தந்துள்ளன. |
| நிறுவனங்களின் வெளிப்புற மீளாய்வு | 02 நிறுவனங்களைத் தெரிவு செய்தல். | தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் ஆகியவற்றின் வெளிப்புற மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டன. |
| தேசிய விருது வழங்கும் விழா | 2021 ஆம் ஆண்டின் தேசிய விருது வழங்கும் விழாவை நடாத்த திட்டமிடப்பட்டது. | 2021 ஆம் ஆண்டின் தேசிய விருது வழங்கும் விழா 2024 ஆண்டில் 09-12-2024 ஆம் திகதி நடாத்தப்பட்டது. |
| வருடாந்த உரையாடல் செயலமர்வு | வருடாந்த கலந்துரையாடல் செயலமர்வை நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது | 2024 ஆம் ஆண்டின் வருடாந்த கலந்துரையாடல் செயலமர்வு 24-12-2024 ஆம் திகதி நடாத்தப்பட்டது. |
| நிறுவனங்களுக்கு இடையேயான பல்துறை ஆராய்ச்சி மானியத் திட்டம் (IIMDRGS) - நிதி | நிறுவனங்களுக்கு இடையேயான மற்றும் பல்துறை ஆராய்ச்சி மானியத் திட்டத்தினால் | 05 நிறுவனங்களுக்கு இடையேயான மற்றும் பல்துறை ஆராய்ச்சிகளுக்கு நிதியுதவி வழங்கப்பட்டதுடன் மேற்கொண்டு வரும் |

| செயற்பாடுகள் | இலக்கு | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|
| | ஆராய்ச்சிகளுக்கு நிதி வழங்கப்பட்டுள்ளது. | ஆராய்ச்சிகள் செயற்திட்டங்களின் முன்னேற்றம் பெறப்பட்டது. |
| இலங்கை உணவு மற்றும் விவசாய சஞ்சிகை (Sri Lanka Journal of Food and Agriculture) | புதிய ஆய்வுச் சுருக்கங்களை கோரல். | தொகுதி 8 மற்றும் 9 என்பவற்றுக்கு புதிய ஆய்வுக் கட்டுரைகள் கோரப்பட்டுள்ளன. |
| இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைப் சபையின் செய்திமடல் (News Letter) | 2023 இதழை வெளியிடல். | 2023 செய்திமடல் நிறைவு செய்யப்பட்டுள்ளது. |
| தேசிய மற்றும் சர்வதேச அளவில் விவசாய ஆராய்ச்சி நிறுவனங்களுக்கிடையேயான உறவுகளை விருத்தி செய்தல். ஆசியா பசிபிக் விவசாய ஆராய்ச்சி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திடல். | 04 அதிகாரிகளுக்குப் பயிற்சி வழங்கல். | மலேசிய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு அமைச்சரவையின் ஒப்புதலைப் பெறுதல்..<br><br>20 அதிகாரிகள் KOICA நிறுவனத்தின் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டனர்.<br><br>ஆசிய பசுபிக் விவசாய ஆராய்ச்சி நிறுவனங்களின் சங்கம் 03 பயிற்சி வாய்ப்புகளை வழங்கியது. |
| விவசாய ஆராய்ச்சிகள் தொடர்பான சர்வதேச, தேசிய மற்றும் நிறுவனங்களுக்கு இடையேயான பிரச்சினைகள் குறித்த மாநாடுகள் மற்றும் செயலமர்வுகளை ஏற்பாடு செய்தல். | தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுக்கு இடையேயான மாநாடு ஒன்றை ஏற்பாடு செய்தல். | தாவரவியல் பூங்கா திணைக்களத்துடன் இணைந்து 20240-12-06 அன்று அலங்கார மலர்ச் செய்கை ஆராய்ச்சிகள் தொடர்பான மாநாடு ஒன்று நடாத்தப்பட்டது. |
| விவசாய ஆராய்ச்சி ஊழியர்களுக்கு முதுகலை பயிற்சி மற்றும் வெளிநாடுகளில் அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி நிறுவனங்களுடன் விஞ்ஞானிகளை பரிமாறிக்கொள்வதற்கான ஏற்பாடுகள். | விவசாய ஆராய்ச்சி பதவி அணியினரின் பட்டப்பின் படிப்பு பயிற்சிகளுக்கு 05 அதிகாரிகளை தெரிவு செய்தல். | விவசாய ஆராய்ச்சி பணியாளர்கள் முதுகலை பயிற்சிக்கு 17 புதிய அலுவலர்கள் தேர்வு செய்யப்பட்டனர். |
| விவசாய ஆராய்ச்சிச் செயற்திட்டங்கள், நிறுவனங்கள் மற்றும் துறைகளின் செயல்திறனை காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்தல். | 62 ஆராய்ச்சி செயற்திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வை மேற்கொள்ளல். | 2023 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட 62 ஆராய்ச்சி செயற்திட்டங்களின் முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்டது. 15 ஆராய்ச்சி செயற்திட்டங்களின் இடஞ்சார் முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்டது. |

புகைப்பட இலக்கம் 68 - 71

## *09. விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (FTF)*

*9.1. ஆரம்பம்*

*விவசாயிகள் நம்பிக்கை பொறுப்பு நிதியம் 1994 மார்ச் மாதம் 09 ஆந் திகதி அரசின் சார்பில் நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் நிதியத்தின் சார்பில் அப்போதைய விவசாய அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் செயலாளர், அவ் அமைச்சின் இராஜாங்க செயலாளர், விவசாய உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பான அமைச்சின் செயலாளர், கமநல சேவை ஆணையாளர் மற்றும் திறைசேரியின் பிரதிச் செயலாளர் ஆகியோரை உள்ளடக்கிய சபையொன்று கைச்சாத்திட்ட நம்பிக்கைப் பொறுப்பு உறுதியொன்றின் மூலம் தாபிக்கப்பட்டது.*

*9.2. செயற்பணி*

*சிறு விவசாயிகளின் விவசாய அபிவிருத்தி மற்றும் நலனோம்பலுக்குத் தேவையான பின்னணியை உருவாக்கி சிறு விவசாயிகளின் செயலூக்கமிக்க பங்களிப்புடன் விவசாய ரீதியில் தன்னிறைவடைந்த இலங்கையை உருவாக்குதல்.*

*9.3 நோக்கங்கள்*

*1994 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட நம்பிக்கை உறுதியில் குறிப்பிட்டுள்ள விதத்திலும் 2002 ஆம் ஆண்டில் அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றின் மூலம் குறிக்கோள்களை விரிவுபடுத்தியன் மூலம் விவசாயிகள் நம்பிக்கை பொறுப்பு நிதியம் பின்வரும் குறிக்கோள்களுடன் இயங்கி வருகின்றது.*

- *இலங்கையில் விவசாய அபிவிருத்தி மற்றும் விவசாயிகளின் நலனோம்பலை மேம்படுத்துதல்.*
- *சிறு விவசாயிகளுக்கு குறுகிய கால விவசாயக் கடன் வசதிகளை வழங்குதல்.*
- *சிறு விவசாயிகளுக்கு விவசாய உள்ளீடுகளை வழங்குதல்.*
- *சிறு விவசாயிகளின் நிதிக் கஷ்டங்களைப் போக்கிக் கொள்ளும் பொருட்டு சிறு விவசாயிகளுக்கு சந்தைக் கடன் வசதிகளை வழங்குதல்.*
- *சிறு விவசாயிகளின் விவசாய அபிவிருத்தி மற்றும் நலனோம்பலுக்கான அறிவூட்டல் நிகழ்ச்சிகளை நடாத்துதல்.*
- *பயிர் மற்றும் விலங்கு உற்பத்தி செயற்பாடுகள் மற்றும் உற்பத்தித் தயாரிப்பு என்பவற்றுக்கு சிறு விவசாயிகளுக்குத் தேவையான ஏனைய உதவிகளை வழங்குதல்.*
- *விவசாய அபிவிருத்திக்கு உதவி வழங்கும் நோக்கில் விசேட விவசாய நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துதல்.*

*செயற்படும் முறை*

*ஒவ்வொரு ஆண்டும் அனைத்து மாகாண சபைகள் மற்றும் மாவட்ட செயலாளர்கள், விவசாயம் நடவடிக்கைகள் தொடர்பான உரிய அரசாங்க திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்படும் அபிவிருத்தி முன்மொழிவுகள் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன, அதற்காக சபை பொருத்தமான உரிய செயற்திட்டங்களை பரிசீலித்து பொருத்தமானவற்றுக்கு அங்கீகாரம் வழங்குகின்றது. அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்கள் விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் வரவுசெலவுத் திட்ட அறிக்கையில் சேர்க்கப்படுகின்றன.*

*9.4. நிதியத்தின் பிரதான வருமான மூலம்*

*நிதியாத்தின் பிரதான வருமான மூலங்கள் கொவிசெத்த லொத்தர் சீட்டு விற்பனையின் மூலம் பெறப்படும் தொகையின் குறிப்பிட்டதொரு வீதம் (10%) மற்றும் இந்நிதியத்தின் மேலதிக நிதியை முதலீடு செய்வதன் மூலம் பெறப்படும் வட்டி என்பனவாகும்.*

*9.5. மானியம், முற்பணம் மற்றும் கடன் எனும் முறைகளில் இந்த நிதியத்தின் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள் நடைமுறைப்படுகின்றன.*

*9.5.1. மானியங்களின் கீழ் செயல்படுத்தப்படும் செயற்திட்டங்கள்*

| தொ / இல | செயற்திட்டம் | நோக்கம் | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) | உண்மை யான தொகை (மில். ரூபாய்) | நிதி முன் னேற்ற ம் |
|---|---|---|---|---|---|
| i. | நடுத்தர அளவிலான கோழி வளர்ப்பு அலகுகளை நிறுவும் செயற்திட்டம். (தேசிய கால்நடை அபிவிருத்தி சபை) | முட்டை பிரச்சனைக்கு தீர்வாகவும், குழந்தைகள் மற்றும் கர்ப்பிணி தாய்மார்களின் ஊட்டச்சத்து குறைபாட்டை நீக்கி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல். | 32.80 | 17.24 | 53 |
| | கால்நடை வளர்ப்பில் ஈடுபடும் குடும்பங்களுக்கு ஒரு மாத குஞ்சுகளை வழங்குதல். (ஹதபிம அதிகார சபை) | | 10.00 | 4.36 | 44 |
| ii. | சிறு போகத்தில் நெல் நிலங்களில் உளுந்துச் செய்கையை ஊக்குவித்தல். (மாவட்டச் செயலகம் - வவுனியா) | 882 ஏக்கர் நெற் செய்கை நிலங்களின் விவசாயிகளுக்கு 8580 கிலோ கிராம் உளுந்து விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. | 13.35 | 10.64 | 80 |
| iii. | பெண் விவசாயிகள் அமைப்புகளின் ஒருங்கிணைப்பு அலுவலர்கள் மற்றும் பெண் விவசாயிகள் அமைப்புகளின் தலைவர்களுக்கான நிதி முகாமைத்துவம் தொடர்பான பாடநெறிக் கட்டணம் செலுத்துதல். | குறித்த துறையில் திறமையானவர்களின் குழுவொன்றை நாடளாவிய ரீதியில் உருவாக்குதல் | 10.00 | 3.23 | 32 |
| iv. | திடீர் வெள்ளம் காரணமாக ஏற்பட்ட அனர்த்தங்களுக்கு நிவாரணம் வழங்குதல். | சேதமடைந்தவற்றை திருத்தியமைத்தல் | 20.00 | 2.21 | 11 |
| v. | தேசிய புத்தரிசித் திருவிழா - 2023 | ஒரு கலாச்சார நிகழ்வு | 3.00 | | |

*9.5.2. முற்பணக் கொடுப்பனவுகளைக் கொண்டு செயல்படுத்தப்படும் செயற்திட்டங்கள்*

| தொ / இல | செயற்திட்டம் | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) | உண்மையான தொகை (மில். ரூபாய்) | நிதி முன்னேற்றம் | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|
| *i.* | தேசிய விதை உற்பத்தி திட்டம் (விவசாயத் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகிறது) | *125.00* | *125.00* | *100* | இந்த செயற்திட்டத்தின் மூலம் விவசாயிகளிடமிருந்து 15 வகையான விதைகள் (253,895 கிலோ கிராம்) கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. |
| *ii.* | தேனீ வளர்ப்புப் பெட்டிகள் மற்றும் ஏனைய பாகங்களை உற்பத்தி செய்யும் செயற்திட்டம் (விவசாய திணைக்களம் - பிந்துனுவெவ தேனீ அபிவிருத்தி பிரிவினால் அமுல்படுத்தப்பட்டது) | *2.50* | *2.50* | *100* | இந்த செயற்திட்டத்தின் மூலம் 500 தேனீ வளர்ப்புப் பெட்டிகள், 500 புகை அடிக்கும் கருவிகள் மற்றும் தேனீ வளர்ப்புப் பெட்டிகளுக்கான 5000 வாயில் தகடுகள் என்பன தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த தயாரிப்புகள் விவசாயிகளுக்கு விற்கப்படுகின்றன. |

*9.5.3. விவசாய கடன் திட்டங்களை செயல்படுத்துதல்*

| தொ / இல | செயற்திட்டம் | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) | உண்மையான தொகை (மில். ரூபாய்) | நிதி முன்னேற்றம் | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|
| *i.* | 2023/24 பெரும் போகம் நெல் கொள்வனவு செய்வதற்கு கடன் வழங்குதல். (நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு) | *100.00* | *100.00* | *100* | 881,930 கிலோ கிராம் நெல் கொள்வனவு செய்தல் |
| *ii.* | 'க்ருஷி சக்தி' கடனுதவித் திட்டம். (பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து) | *200.00* | *125.10* | *62* | 256 விவசாயிகளுக்கு கடன் வழங்குதல் |
| *iii.* | சிறிய அளவிலான விவசாயிகளுக்கு குறுகிய கால விவசாயக் கடன் வசதிகளை வழங்குதல். (கமநல அபிவிருத்தித் திணைக்களம்) | *235.00* | *175.00* | *74* | |

## *10. தேசிய உரச் செயலகம்*

*10.1. அறிமுகம்*

*1988 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க உரங்களை ஒழுங்குபடுத்தற் சட்டத்தின் சட்ட ரீதியான நடவடிக்கைகள் மற்றும் தேசிய உரச் செயலகத்தின் மாவட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் என்பவற்றை மேற்கொள்ளல்.*

*10.2. தொலைநோக்கு மற்றும் செயற்பணி*

*இலங்கையில் பயிர் செய்யப்படும் அனைத்து பயிர் வகைகளினதும் உற்பத்திப் பயனுறுதித் தன்மையை அதிகரிப்பதற்கு உரிய தர நிர்ணயத்துடன் கூடிய அசேதன மற்றும் சேதன உரங்களை வழங்குதல் மற்றும் அவற்றின் முறையான பாவனையை உறுதிப்படுத்தல் நிறுவனத்தின் தொலைநோக்காகும். மேலும் உரத்தை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் வழிமுறைகளுக்கு அமைவாக உரிய அனைத்து பங்குதாரர்களையும் ஒருங்கிணைத்து விஞ்ஞான ரீதியான சிபாரிசுகளின் அடிப்படையில் உரத் தேவையை மதிப்பீடு செய்தல், உர இறக்குமதி மற்றும் இருப்புகளை நிர்வகித்தல், உரிய தரத்தைக் கொண்ட உரத்தை விநியோகம் செய்தல் மற்றும் சந்தைப்படுத்தல் என்பவற்றை உறுதி செய்தல், சேதன மற்றும் அசேதன உரப் பாவனையின் போது சூழல் நட்புடன் கூடிய முறையிலான உரப் பாவனையை ஊக்குவித்தல், விவசாய சமூகத்தின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கைக் கொண்ட உர மானிய நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்துதல் மற்றும் உரப் பாவனைத் துறையில் காணப்படும் முறைகேடுகளை தடுப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்ளல் என்பது இதன் செயற்பணியாகும். 1988 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க உரச் சட்டத்தை முறையாகச் செயல்படுத்துவதே நிறுவனத்தின் பிரதான பணியாகும்.*

*10.3. 2025 ஆம் ஆண்டின் நிதி இலக்குகள்*

| தொ/ இல | பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) |
|---|---|---|
| 1 | மீண்டுவரும் செலவுகள் | 72.39 |
| 2 | மூலதன செலவுகள் | 29.16 |

** இந்த மதிப்பிடப்பட்ட செலவுகள் கீழே உள்ள அட்டவணையில் தொடர் இலக்கம் 01, தொடர் இலக்கம் 02 மற்றும் தொடர் இலக்கம் 03 இல் சேர்க்கப்பட்டுள்ளன.*

*10.5. 2025 ஆம் ஆண்டின் பௌதீக இலக்குகள் நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள்*

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | அனுமதிப் பத்திரமொன்றிற்கான கட்டணம் (மில். ரூபாய்) | மொத்த வருமானம் (மில். ரூபாய்) |
|---|---|---|---|---|---|
| 01 | (i) சேதன உர புதிய உற்பத்தியாளர்களுக்கு உரிமம் வழங்குதல். | | 02 | 0.02 | 0.04 |
| | (ii) சேதன உர பழைய உற்பத்தியாளர்களின் | | 54 | 0.015 | 0.81 |

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | அனுமதிப் பத்திரமொன்றிற்கான கட்டணம் (மில். ரூபாய்) | மொத்த வருமானம் (மில். ரூபாய்) |
|---|---|---|---|---|---|
| | உரிமங்களை புதுப்பித்தல் | | | | |
| | *(iii)* உர இறக்குமதிக்கு உரிமம் வழங்குதல் | | *02* | *0.15* | *0.30* |
| | *(iv)* உர இறக்குமதி உரிமத்தை புதுப்பித்தல் | | *176* | *0.10* | *17.60* |
| | *(v)* சேதனமல்லாத உர வகைகளை உற்பத்தி செய்வதற்கான உரிமம் வழங்குதல். | | *00* | *00* | *00* |
| | *(vi) )* சேதனமல்லாத உர வகைகளை உற்பத்தி செய்வதற்கான உரிமத்தைப் புதுப்பித்தல் | | *08* | *0.10* | *0.80* |
| | *(vii)* உரக் கலவைக்கான உரிமம் வழங்குதல். | | *00* | *00* | *00* |
| | *(viii)* உரக் கலவைக்கான உரிமத்தைப் புதுப்பித்தல். | | *58* | *0.10* | *5.80* |
| | மொத்தம் | | *300* | | *25.35* |
| | | அளவீட்டு அலகு | இலக்கு | ஓரலகுக்கான செலவு (மில். ரூபா.) | மொத்த செலவு |
| | இருப்பை சரிபார்த்தல் மற்றும் களஞ்சியப் பரிசோதனைகள் | | | | மொத்த செலவு *2025* ஆம் ஆண்டின் நிதி இலக்குகளில் உள்ளடக்கப்படுள்ளது. |
| | *a.* கமநல அபிவிருத்தி நிலையங்கள் | | *935* | | |
| | *b.* பிராந்திய களஞ்சியங்கள் | | *42* | | |
| | *c.* தனியார் விற்பனை நிலையங்கள் மற்றும் சேதன உர உற்பத்தித் தொழிற்சாலைகளைப் பரிசோதித்தல் | | *2,922* | | |
| *02* | பயிற்சி நிகழ்ச்சிகள் | | *97* | | |
| *03* | உரங்களின் தரத்தை உறுதி செய்வதற்காக உர மாதிரிகளைப் பெறல் | | | | |
| | *3.1* கமநல அபிவிருத்தி நிலையங்கள் | | *108* | | மொத்த செலவு *2025* ஆம் ஆண்டின் நிதி இலக்குகளில் உள்ளடக்கப்படுள்ளது. |
| | *3.2* பிராந்திய களஞ்சியங்கள் | | *28* | | |
| | *3.3* தனியார் விற்பனை நிலையங்கள் மற்றும் சேதன | | *545* | | |

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட் டு அலகு | இலக்கு | அனுமதிப் பத்திரமொ ன்றிற்கான கட்டணம் (மில். ரூபாய்) | மொத்த வருமானம் (மில். ரூபாய்) |
|---|---|---|---|---|---|
| | உர உற்பத்தி நிலையங்களை பரிசோதித்தல் | | | | |
| | 3.4 களத்திலிருந்து உர மாதிரிகளைப் பெறல் | | 400 | | |
| 04 | முன்னேற்ற ஆய்வுக் கூட்டங்கள், உரக் குழுக் கூட்டங்கள் மற்றும் உபசரிப்பு செலவுகள் | | 70 | | |
| 5.0 | தயாரிப்பு ஊக்குவிப்பு பிரிவு – 2025 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டம் | | | | |
| 5.1 | பயிற்சித் நிகழ்ச்சி (உயர்தர Single Super Phosphate உர உற்பத்தியாளர்கள் தொடர்பானது) | | 03 | | நிதிச் செலவு உரிய நிறுவனங்களில் இருந்து பெற்றுக்கொள்ள ப்படவுள்ளது. |
| 6.0 | தரக் கட்டுப்பாட்டுப் பிரிவு - 2025 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டம் | | | | |
| 6.1 | உரங்களின் தரத்தை உறுதி செய்வதற்காக உர மாதிரிகளைப் பெறல் | | 1,900 | | |
| 7.0 இறக்குமதிப் பிரிவு - 2025 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டம் | | | | | |
| 7.1 | இரசாயன உரங்கள் இறக்குமதி தொடர்பான ஆவணங்கள் மற்றும் பதிவுகளை ஆய்வு செய்வதற்கான கோப்புகளைத் தயாரித்தல். | | 1,200 | | நிதிச் செலவுகள் எதுவும் இல்லை |
| 7.2 | இறக்குமதிக்குப் பின் சுங்க அனுமதிக்கான பரிந்துரைகளைத் தயாரித்து சமர்ப்பித்தல் – (Clearance) | | 1,200 | | நிதிச் செலவுகள் எதுவும் இல்லை |
| 7.3 | சந்தைப்படுத்தல் அங்கீகாரம் (Marketing Approval) | | 1,200 | | |
| 8.0 தகவல் மற்றும் முகாமைத்துவப் பிரிவு - 2025 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டம் | | | | | |
| உர விநியோக திட்டத்தை செயல்படுத்துதல். | | | | | |
| 8.1 | நெல் மற்றும் தானியங்களுக்கான – சிறு போகம் | | மார்ச் - ஆகஸ்ட் 2025 | | |
| 8.2 | நெல் மற்றும் தானியங்களுக்கான – பெரும் போகம் | | செப்டம்பர் 2025 - பிப்ரவரி 2026 | | |
| 8.3 | ஏனைய பயிர்களுக்கானது | | ஜனவரி - டிசம்பர் 2025 | | |

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | அனுமதிப் பத்திரமொன்றிற்கான கட்டணம் (மில். ரூபாய்) | மொத்த வருமானம் (மில். ரூபாய்) |
|---|---|---|---|---|---|
| 9.0 | நிறுவனப் பிரிவு - 2025 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டம் | | | | |
| 9.1 | அதிகாரிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சிகள் (உள்நாட்டு) | | 02 | | |
| 10.0 | திட்டமிடல் பிரிவு - 2025 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டம் | | | | |
| 10.1 | நிகழ்ச்சித் திட்டமிடல் | | 03 | | |
| 10.2 | முன்னேற்ற ஆய்வு | | 01 | | |

*10.6. 31.12.2024 ஆம் திகதிக்கான நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி முன்னேற்றம்*

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | 2024 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) | 31/12/2024 ஆம் திகதி வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | நிதி முன்னேற்றம் சதவீதத்தில் (%) |
|---|---|---|---|---|
| 2.1 | சேதன உரங்களை உற்பத்தி செய்யும் புதிய உற்பத்தியாளர்களுக்கு உரிமம் வழங்குதல், பழைய சேதன உர உற்பத்தியாளர்களின் உரிமங்களைப் புதுப்பித்தல், இருப்பு சரிபார்ப்பு மற்றும் களஞ்சியப் பரிசோதனை, பயிற்சி நிகழ்ச்சிகள்மற்றும் உர மாதிரிகளைப் பெறல் - மொத்த எரிபொருள் செலவுகள் | 2.09 | 1.50 | 72 |
| 2.2 | முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் உரக் குழுக் கூட்டங்கள் மற்றும் உபசார செலவுகள் | 0.175 | 0.15 | 84 |
| 2.3 | தினசரி ஊதியம் | - | - | - |
| 2.4 | பயண செலவுகள் | - | - | - |
| 2.5 | காகிதாதிகள் | 0.80 | 0.69 | 86 |
| மொத்தம் | | 3.065 | 2.33 | 76 |

| தொ/ இல | மீண்டுவரும் செலவுகள் | 2024.12.31 வரை | |
|---|---|---|---|
| | | செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | செலுத்த வேண்டிய விலைப்பட்டியல்கள் (மில். ரூபாய்) |
| பிரதான காரியாலயம் | | 20.77 | 1.61 |

## *11. ஸ்டேட் பேர்ட்டிலைசர் கம்பனி லிமிட்டட்*

*11.1. அறிமுகம்*

*'லக்பொஹர' மற்றும் "கொமர்ஷல் பொஹர" ஆகிய வர்த்தகநாமங்களிற்கு இலங்கையின் விவசாயிகளிடையே நற்பெயர் காணப்படுவதன் காரணமாக, சேதன மற்றும் இரசாயன உரங்கள் மற்றும் ஏனைய விவசாய உள்ளீடுகள் மற்றும் சேவைகளை வழங்கும் இலாபகரமான வர்த்தக அலகுகளாகப் பேணுவதை நோக்கமாகக் கொண்டு, 21/0118/323/005 ஆம் இலக்க மற்றும் 2021.02.01 ஆம் திகதிக்குறியதும் CP/22/0706/514/001 ஆம் இலக்க மற்றும் 2022/05/30 ஆம் திகதிக்குறியதுமான அமைச்சரவைத் தீர்மானங்களுக்கு அமைவாக, இலங்கை உரக் கம்பனி மற்றும் கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி என்பன இணைக்கப்பட்டு 2024.07.11 ஆம் திகதி State Fertilizer Co.Ltd எனும் நிறுவனம் உருவாக்கப்பட்டது.*

*11.2. 2025 ஆம் ஆண்டின் நிதி இலக்குகள்*

| தொ/ இல | பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | மதிப்பிடப்பட்ட தொகை (மில். ரூபாய்) |
|---|---|---|
| 1 | மூலதன செலவுகள் | 31.03.2025 ஆம் திகதிக்குப் பிறகு திட்டமிடப்படும். |
| 2 | மீண்டுவரும் செலவுகள் | |

*11.3. 2025 ஆம் ஆண்டின் பௌதீக இலக்குகள் (நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள்)*

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | ஓரலகுக்கான செலவு (மில். ரூபா.) | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|---|
| 1 | 2025 ஆம் ஆண்டில் 22,475 மெற்றிக் தொன் கலப்பு உரங்கள் மற்றும் 35,000 மெற்றிக் தொன் நேரடி உரங்கள் என்பன விற்பனை செய்யப்பட்டன. | மெற்றிக் தொன் | 57,475 | 0.17 | 9,600.00 |
| 2 | இலங்கை தேயிலை சபையுடன் கூட்டாக செயற்படுத்தப்படும் தேயிலை உர விநியோக செயற்திட்டத்துடன் இணைந்து ஒப்பந்தம் செய்யப்பட்ட 30,000 மெற்றிக் தொன் உரத்தில் மேலும் விநியோகிப்பதற்கு எஞ்சியுள்ள உரத் தொகையை விற்பனை செய்தல். | மெற்றிக் தொன் | 15,388 | 0.15 | 2,308.00 |
| 3 | தென்னை பயிர்ச்செய்கை சபையுடன் இணைந்து மானிய விலையில் தேங்காய் உரம் விற்பனை செய்தல். | மெற்றிக் தொன் | 42,525 | 0.57 | 2,412.00 |
| 4 | இயந்திரத்தின் மூலம் உர இருப்புகளைக் கலத்தல், ஏற்றுதல், பொதி செய்தல், அடுக்கி வைத்தல் என்பவற்றுக்குத் தேவையான கலவை உர இயந்திரம் மற்றும் ஒரு பை அச்சிடும் இயந்திரம் என்பவற்றைக் கொள்வனவு செய்தல் | தினசரி மெற்றிக் தொன் | 200 | - | 110.00 |
| 5 | வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனியின் தலைமை அலுவலக வளாகத்தை அரச | - | - | - | - |

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | ஓரலகுக்கான செலவு (மில். ரூபா.) | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|---|
| | நிறுவனமொன்றுக்கு குத்தகைக்கு வழங்க திட்டமிடல். | | | | |
| 6 | மனித வள முகாமைத்துவம் மற்றும் மதிப்பீட்டிற்கான மென்பொருள்த் தொகுதியொனறை அறிமுகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளல் | - | - | - | 1.00 |
| 7 | ஒவ்வொரு பகுதிக்கும் பரிந்துரைக்கப்படும் உரங்களின் பயன்பாடு குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்த நடவடிக்கை மேற்கொள்ளல். | - | - | - | 20.00 |
| 8 | Hyosung ONB உடன் இணைந்து நிறுவனத்தின் வர்த்தக நாமத்தைப் பயன்படுத்தி 500 மெற்றிக் தொன் சேதன உரங்களை விற்பனை செய்தல் மற்றும் பயிர்களுக்கு கலப்பின உரங்களை அறிமுகப்படுத்தல் ஆகியவற்றுக்குத் திட்டமிடல். | மில். ரூபாய் | 4.20 | - | 4.20 |
| 9 | அனைத்து அளவுருக்களும் பரிசோதிக்கக்கூடியவகையில் நிறுவன ஆய்வகத்தை விருத்தி செய்தல் மற்றும் அதன் மூலம் அதை இலாபகரமான அலகாக மற்ற திட்டமிடுதல். | மில். ரூபாய் | - | - | 20.00 |
| 10 | நிறுவன வளாகத்தில் தெரிவு செய்யப்பட்ட கூரைகளில் சூரிய சக்தி மின்பிறப்பக்க தொகுதிகளை நிறுவுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளல். | மாதந்த அலகு | 65,000 | - | 40.00 |

*11.4. 31.12.2024 ஆம் திகதிக்கான நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் முன்னேற்றம்*

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | 2024 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) | 31/12/2024 ஆம் திகதி வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | நிதி முன்னேற்றம் சதவீதத்தில் (%) |
|---|---|---|---|---|
| 1 | மூலதன செலவுகள் | 214.38 | - | - |
| 2 | மீண்டுவரும் செலவுகள் | 399.13 | 201.73 | 51 |
| | | | | |
| | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | | | |
| 1 | இலங்கை தேயிலை சபையுடன் கூட்டாக செயற்படுத்தப்படும் தேயிலை உர விநியோக செயற்திட்டம் | 2,178.00 | 2,178.00 | 100 |

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | 2024 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) | 31/12/2024 ஆம் திகதி வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | நிதி முன்னேற்றம் சதவீதத்தில் (%) |
|---|---|---|---|---|
| 2 | 54930.68 மெற்றிக் தொன் MOP உர இருப்பின் சுங்க நடவடிக்கைகளை 18 நாட்களுக்குள் நிறைவு செய்தல். | 1,614.00 | 750.00 | |

## 12. இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை (தேசிய உணவு ஊக்குவிப்பு சபை)

*12.1. அறிமுகம்*

இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை எனும் தேசிய உணவு ஊக்குவிப்பு சபை 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு சட்டத்தின் பிரகாரம் தாபிக்கப்பட்டுள்ளது.

*16.2 தொலைநோக்கு மற்றும் செயற்பணி*

விவசாயிகள் மற்றும் வசதி குறைந்த மக்கள் ஆகியோரின் கௌரவத்தை மீண்டும் ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக பொருளாதார சுதந்திரத்தையும் தன்னம்பிக்கையையும் ஏற்படுத்தல் இதன் தொலைநோக்கு ஆகும். பயனாளிகளின் பொருளாதார சுயாதீனத்தை ஏற்படுத்தும் பொருட்டும், பிறரில் தங்கி வாழும் கலாசாரத்திலிருந்து விடுவிக்கும் பொருட்டும் விவசாய, கால்நடை மற்றும் ஏனைய துறைகளின் திறன் விருத்திக்கான ஒத்துழைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துதல் இதன் செயற்பணி ஆகும்.

*12.3. நோக்கங்கள்*

i.) அரசாங்கத்தினால் தயாரிக்கப்படுகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கிணங்க சமூக, பொருளாதார அபிவிருத்திகளை ஏற்படுத்தும் பொருட்டு உள்நாட்டு, வெளிநாட்டு, அரச சார்பற்ற முகவராண்மைகளின் நன்கொடைகளைப் பெற்றுக் கொள்ளுதல்

ii.) பொது வசதிகள், சமூக நலனோம்பல், பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்துகையில் நிறுவனங்களுக்கும் பிற சபைகளுக்கும் உதவுதல்

iii.) விவசாய, கைத்தொழில் அபிவிருத்தியின்பால் ஈடுபடுத்தப்பட்ட குறித்துரைத்த செயற்றிட்டங்களுக்கு நன்கொடை வழங்குதலும் அச்செயற்திட்டங்களை மேம்படுத்தலும், ஒருங்கிணைப்பு செய்தலும்.

iv.) விவசாய, கைத்தொழில் உற்பத்திகளை அதிகரிப்பதற்காக செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் அரச சார்பற்ற முகவராண்மையை ஊக்குவித்தல்

v.) சர்வதேச பட்டினி ஒழிப்பு இயக்கம் மற்றும் ஏனைய அதனையொத்த வெளிநாட்டு நிறுவனங்கள், சங்கங்கள் அல்லது அமைப்புகளுடன் ஒத்துழைத்தல்

*12.4. 2025 ஆம் ஆண்டின் நிதி இலக்குகள்*

| தொ/ இல | பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபா) |
|---|---|---|
| 1 | மூலதன செலவுகள் | 83.90 |
| 2 | மீண்டுவரும் செலவுகள் | 7,790.00 |

*12.6. 2025 ஆம் ஆண்டின் பௌதீக இலக்குகள் (நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்/ செயற்திட்டங்கள்)*

| தொ/ இல | அளவீட்டு அலகு | இலக்கு | மொத்த செலவு (மில். ரூபா.) | அளவீட்டு அலகு |
|---|---|---|---|---|
| 1 | நாராஹேன்பிட்ட நாற்று மற்றும் விவசாய உள்ளீடுகள் விற்பனை நிலையம் | 30.00 | ஒரு வருடத்தில் 2,500 தரத்தில் உயர்ந்த நாற்றுகளை உற்பத்தி செய்தல் | 24.87 |
| 2 | தெஹிவளை அக்ரோ ஃப்ரெஷ் சூப்பர் விற்பனை நிலையம் | 61.00 | - | 56.90 |
| 3 | தெஹிவளை நாற்று மற்றும் விவசாய உள்ளீடுகள் விற்பனை நிலையம் | 14.00 | ஒரு வருடத்தில் 2,000 தரத்தில் உயர்ந்த நாற்றுகளை உற்பத்தி செய்தல் | 12.99 |
| 4 | தனமல்வில விவசாயப் பண்ணை செயற்திட்டம் | 3.00 | - | 2.88 |
| 5 | புத்தள விவசாயப் பண்ணை பராமரிப்பு | 0.10 | - | 26.49 |
| 6 | அரிசி போசனையூட்டல் செயற்திட்டம் | 1,400.00 | ஒரு நாளைக்கு 500,000 குழந்தைகளுக்கு மாவட்டங்களின் எண்ணிக்கை = 12 | 1,544.50 |
| 7 | கால்நடை உணவுக்காக சோளத்தை இறக்குமதி செய்தல் | 150.00 | 5,000 மெற்றிக் தொன் | 7,674.15 |
| 8 | உள்நாட்டில் சோளம் கொள்வனவு செய்தல் | 2.00 | 15,000 மெற்றிக் தொன் | 1.84 |
| 9 | பாடசாலை மாணவர்களுக்கு மத்தியில் பழங்கள் மற்றும் விதை வகைகளை பிரபல்யப்படுத்தல் | – | சேவை வழங்கல் | 9.00 |
| 10 | கனோருவ உணவு ஆராய்ச்சி பிரிவில் NFPB விற்பனை நிலையத்தை நிறுவுதல். | 2.00 | 1 | 1.13 |
| 11 | வாழை இலை பொதிபொருள் தயாரிப்பு செயற்திட்டம் | 1.00 | ஒரு இயந்திரத்திலிருந்து ஒரு நாளைக்கு 25,000 போதிபோருட்கள் | 11.00 |
| 12 | போசனையூட்டிய அரிசியைக்கொண்டு பிஸ்கட் உற்பத்தி செய்யும் செயற்திட்டம் | 10.00 | வாரத்திற்கு 100,000 பிஸ்கட் உற்பத்தி செய்தல் | 12.00 |
| 13 | பெருந்தோட்டப் பகுதி மக்களுக்கு மத்தியில் கோதுமை மாவுக்கு பதிலாக அரிசி மாவை பிரபலப்படுத்தும் முன்னோடி | – | சேவை வழங்கல் | 13.00 |

| தொ/ இல | அளவீட்டு அலகு | இலக்கு | மொத்த செலவு (மில். ரூபா.) | அளவீட்டு அலகு |
|---|---|---|---|---|
| | செயற்திட்டம் | | | |
| *14* | தெஹிவளையில் ,ஹெல்த்தி புட் கார்னர், விற்பனை நிலையத்தை நிறுவுதல். | *5.00* | *5* | *4.43* |

*12.7. 31.12.2024* ஆம் திகதிக்கான நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் முன்னேற்றம்

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | *2024* ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) | *31/12/2024* ஆம் திகதி வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | நிதி முன்னேற்றம் சதவீதத்தில் (%) |
|---|---|---|---|---|
| *1* | மூலதன செலவுகள் | - | - | - |
| *2* | மீண்டுவரும் செலவுகள் | *40.00* | *63.75* (இந்தத் தொகையில் *23.75* மில்லியன் ரூபாய் நிறுவனத்தின் சுயநிதி மூலம் செலவிடப்பட்டுள்ளது.) | *100* |
| | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | | | |
| *1* | நாராஹேன்பிட்ட நாற்று மற்றும் விவசாய உள்ளீடுகள் விற்பனை நிலையம் | *14.13* | *11.70* | *83* |
| *2* | தெஹிவளை அக்ரோ ஃப்ரெஷ் சூப்பர் விற்பனை நிலையம் | *52.00* | *51.72* | *99* |
| *3* | தெஹிவளை நாற்று மற்றும் விவசாய உள்ளீடுகள் விற்பனை நிலையம் | *10.07* | *9.52* | *95* |
| *4* | அரச தனியார் ஒத்துழைப்பின் கீழ் சன்ஃப்ரோஸ்ட் தனியார் நிறுவனத்துடன் இணைந்து பெறுமதி கூட்டப்பட்ட அரிசி மாவு கலந்த இடியப்ப மாவு உற்பத்தி செய்யும் செயற்திட்டம் | *3.963* | *2.10* | *53* |
| *5* | தனமல்வில விவசாயப் பண்ணை செயற்திட்டம் | *2.46* | *1.58* | *64* |
| *6* | கால்நடை உணவுக்காக *25,000* மெற்றிக் தொன் சோளத்தை இறக்குமதி செய்தல் | *1.15* | *0.02* | *2* |
| *7* | அரிசி போசனையூட்டல் செயற்திட்டம் | *140.75* | *107.15* | *76* |
| *8* | உள்நாட்டில் சோளம் கொள்வனவு செய்தல் | *8.40* | *1.49* | *18* |
| *9* | புத்தள விவசாயப் பண்ணை மற்றும் சேதன உர உறபத்திச் செயற்திட்டம் | *13.56* | *1.669* | *12* |

*12.8. 31.12.2024 ஆம் திகதிக்கான நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதீக முன்னேற்றம்*

*1. நாற்று விற்பனை நிலையம் மற்றும் வீட்டுத் தோட்டம் - நாரஹேன்பிட்ட*

*கிராமப்புற மக்களைப் போன்றே நகர்ப்புற மக்களும் தங்களுக்குத் தேவையானதைத் தங்கள் தோட்டங்களில் இயலுமான வழிகளில் பயிரிட்டு உண்ணுவதற்குத் தலைப்பட்டுள்ளதன் காரணமாக, 'நச்சுப் பொருட்கள் அற்ற' உணவு வகைளை ஊக்குவிப்பதை நோக்காகக்கொண்ட இந்த நிறுவனம், நகர்ப்புற மக்களுக்கு வீட்டுத் தோட்டச் செய்கை மேற்கொள்வதற்குத் தேவையான அனைத்து வகையான காய்கறிச் செடிகள் உள்ளிட்டவற்றை மலிவு விலையில் வழங்குவதை நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டமாக நாரஹேன்பிட்டி தாவர நாற்றுமேடை அறிமுகப்படுத்தப்படலாம். மருத்துவ தாவரங்கள், மலர் செடிகள் மற்றும் பழச்செடிகள் (குறிப்பாக குறைபாவனையுள்ள பழங்கள்) மற்றும் பழங்கள் மற்றும் காய்கறி விதைகள், காய்கறி மற்றும் பூ உரங்கள், இயற்கை உரங்கள், பூச்சி விரட்டிகள், விவசாய உபகரணங்கள் போன்றவற்றை இந்த இடத்திலிருந்து கொள்வனவு செய்யக்கூடிய அதேவேளை பயிர் செய்கை குறித்த ஆலோசனைகளையும் இந்த இடத்தில் இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும்.*

*இந்த செயற்திட்டத்தின் செயற்பாட்டுச் செலவு 14.13 மில்லியன் ரூபாவாகும். மேலும் வருடத்திற்கான நிகர லாபம் 3.30 மில்லியன் ரூபாய் ஆகும். மேலே உள்ள எண் தரவுகளின்படி, இந்த செயற்திட்டம் முந்தைய ஆண்டை விட முன்னேற்றம் அடைந்துள்ளது.*

*புகைப்பட இலக்கம் 72*

*2. நாற்று விற்பனை நிலையம் – தெஹிவளை*

*நாரஹேன்பிட்டி விற்பனை நிலையத்தினால் மேற்கொள்ளப்படும் அனைத்து விற்பனை செயற்பாடுகளும் தெஹிவளை நிலையத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் மூலம் செயற்பாட்டு வருமானமாக 1.61 மில். ரூபாய் ஈட்டப்பட்டுள்ளதுடன், இந்த ஆண்டு செயற்பாட்டு செலவு 10.07 மில். ரூபாய் ஆகும்.*

*புகைப்பட எண் – 73*

*3. விவசாய உற்பத்திப் பொருட்கள் மற்றும் உணவுக் விற்பனை நிலையம் - தெஹிவளை*

*விவசாயிகளின் உற்பத்திப் பொருட்கள், உள்ளூர் தொழில்முனைவோரின் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திப் பொருட்கள், அத்துடன் இந்நிறுவனம் தயாரிக்கும் பாரம்பரிய அரிசி வகைகள் (சுவந்தால், களுஹீனட்டி, பச்சைப்பெருமாள் போன்ற அரிசி வகைகள்), மவ்போஷா, சுவபோஷா (போசாக்கு உணவு), தோசை மாவுக் கலவை, விஷேட அரிசி மாவுக் கலவை போன்ற நச்சுத்தன்மை அற்ற உணவு வகைகளை பிரபலப்படுத்தும் நோக்கில் இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

*மேலும், இதன் கீழ் இயங்கும் சிற்றுண்டிச்சாலை மூலம் போசணைமிக்கதும் தரமானதுமான உணவு வகைகளை காலை மற்றும் மதியம் வேளைகளுக்கு பொதுமக்களுக்கு சலுகை விலையில் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.*

*இந்த ஆண்டு செயற்திட்டத்தின் செயல்பாட்டு செலவு 52.00 மில். ரூபாய் ஆகும். இதன் இயக்க வருமானம் 44.303 மில். ரூபாய் ஆகும்.*

*புகைப்பட எண் - 74*

*4. புத்தல பண்ணை அபிவிருத்தி – சேதன உரங்கள் உற்பத்தி*

*புத்தல மற்றும் தனமல்வில பிரதேசத்தில் பண்ணை அபிவிருத்தி செயற்திட்டம் 1986 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு தற்போது வரை நடைபெற்று வருகின்றது. 2017ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டமான சேதன உர உற்பத்தித் செயற்திட்டம் தற்போது வரை தொடர்ச்சியாக செயற்பாட்டு வருகிறது. இங்கு கூட்டுப்பசளை, தென்னை நார்த் தூள், மற்றும் நடுகை ஊடகக் கலவைகள் ஆகிய உர வகைகள் வெற்றிகரமாக உற்பத்தி செய்யப்படுகின்ற. மேலும் இரசாயன உரங்களின் இறக்குமதிக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இந்த செயற்திட்டத்தின் தயாரிப்புகளுக்கு மிக அதிக கேள்வி உருவாகியுள்ளது.*

*2024 ஆம் ஆண்டில், கூட்டுப்பசளை செயற்திட்டத்தின் செயல்பாட்டு வருமானம் 0.39 மில். ரூபாய் ஆகும். மேலும் இதன் இயக்க செலவு 13.56 மில். ரூபாய் ஆகும்.*

*5. பண்ணை அபிவிருத்தி - தனமல்வில*

*தனமல்வில பண்ணையானது தனமல்வில பிரதேசத்தில் உள்ள பட்டினியில் வாடும் குடும்பங்களின் பங்களிப்புடன் தனமல்வில பண்ணையானது ஒரு மாதிரிப் பண்ணையாக செயற்பட்டு வருகின்றது.*

*தனமல்வில பண்ணையின் பொதுவான செயற்பாட்டு செலவு 2.46 மில். ரூபாய் ஆகும்.*

*6. பெறுமதி சேர்க்கப்பட்ட இடியாப்ப மாக் கலவையை உற்பத்தி செய்யும் செயற்திட்டம்*

*நச்சுத்தன்மையற்ற உள்நாட்டு உணவு வகைகளை சந்தைக்கு அறிமுகம் செய்தல் மற்றும் அந்தப் பொருட்களை பிரபலப்படுத்தி ஆரோக்கியமான தேசத்தை உருவாக்குவதே இந்த செயற்திட்டத்தின் நோக்கமாகும். இது ஹேலிஸ் நிறுவனத்தின் துணை நிறுவனமான சன்ஃப்ராஸ்ட் தனியார் நிறுவனத்துடன் இணைந்து மேற்கொள்ளும் ஒரு அரச-தனியார் கூட்டுச் செயற்திட்டமாகும். இந்த செயற்திட்டத்தின் கீழ், பெறுமதி சேர்க்கப்பட்ட இடியாப்ப மாக் கலவைகள் தயாரிக்கப்படும். இவற்றுக்கு பெறுமதி சேர்க்கும் வகையில் சங்குப்பூ மற்றும் முருங்கை தூள் என்பன பயன்படுத்தப்படுகின்றன. இவை சிறந்த எதிர்ஒட்சியேற்ற பண்புகளைக் கொண்டுள்ளன.*

*கன்னோருவை உணவு ஆராய்ச்சிப் பிரிவில் இயங்கும் தேசிய உணவு ஊக்குவிப்பு சபையின் தொழிற்சாலையில் இந்த உற்பத்திகள் மேற்கொள்ளப்படுகிறன.*

*2024 இல் இந்த செயற்திட்டத்தின் செயல்பாட்டு வருமானம் 4.623 மில்லியன் ரூபாய் ஆகும். மேலும் இதன் இயக்க செலவு 3.69 மில். ரூபாய் ஆகும்.*

*புகைப்பட எண் 75*

*7. சோள இறக்குமதி*

*கோழி வளர்ப்பில் கோழித் தீவனத்தின் பிரதான மூலப்பொருளாக சோளம் பயன்படுகிறது. இதன் காரணமாக இலங்கையில் கோழி மற்றும் முட்டை உற்பத்தியாளர்களிடமிருந்து இதற்கு அதிக கேள்வி காணப்படுகிறது. எனினும், இலங்கையில் 200,000 மெற்றிக் தொன் சோளமே உற்பத்தி செய்யப்படுகிறது, ஆனால் இது வருடாந்தத் தேவையின் 50% ஐ மட்டுமே பூர்த்தி செய்யப் போதுமானது.*

*தற்போது, தனியார் நிறுவனங்கள் சோளம் இறக்குமதி செய்யப்படுவதுடன் அவற்றால் சோளத்தில் ஒரு ஏகபோக உரிமை பேணப்படுகிறது. இதன் காரணமாக, கோழி தீவனத்தின் விலை அதிகரிப்பதுடன், கோழிப் பண்ணை விவசாயிகள் கடும் சிரமத்துக்கு ஆளாகின்றனர். அதன்படி, தனியார் துறையின் உதவியுடன் 25,000 மெற்றிக் தொன் சோளத்தை இறக்குமதி செய்யப்பட்டதுடன் அவதன் மூலம் 84.40 மில் ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது.*

*8. அரிசி போசனையூட்டல் செயற்திட்டம்*

*ஆரம்பநிலைப் பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவு வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் 2024 ஆம் ஆண்டு 500,000 பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்குவதற்கு போசனையூட்டப்பட்ட அரிசி தயாரிக்கும் பணி களங்குட்டி தொழிற்சாலையில் இடம்பெற்று வருவதுடன் உலக உணவுத்திட்டம் இதற்கு பங்களிப்பு செலுத்தியுள்ளது. இந்தத் செயற்திட்டத்தின் செயற்பாட்டுச் செலவு 140.75 மில். ரூபாய் ஆகும்.*

*புகைப்பட இலக்கம் 76*

## *13. இலங்கை ஹதபிம அதிகாரசபை (தேசிய விவசாய பல்வகைப்படுத்தல் மற்றும் குடியேற்ற அதிகாரசபை)*

*13.1 தொலைநோக்கு*

*நிலைபேறான காணிகள் மற்றும் இயற்கை வள முகமையின் பொருட்டு சேவை பல்வகைப்படுத்தலின் ஊடாக பசுமை நிறைந்த சூழல் – வளம் நிறைந்த நாடு*

*13.2. செயற்பணி*

*பயனுறுதிமிக்க காணி முகமைத்துவம் மற்றும் முறையான நீர் பாதுகாப்பு மற்றும் உச்ச அளவில் மனிதவளத்தை பயன்படுத்துவதன் ஊடாக சூழலியல் சமூக கலாசார மற்றும் பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்குத் தேவையான பங்களிப்பை நல்குதல்.*

*13.3. நோக்கம்*

*1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விவசாய விவசாய சட்டவாக்கல் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 2026/45 ஆம் இழக்க வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாக சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்கள் பினருமாறு;*

- *i.) விவசாய பல்வகைப்படுத்தல், குடியேற்ற அபிவிருத்தி மற்றும் முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட ஈரநில முகாமைத்துவத்திற்கு திட்டங்களை தயாரித்தல் மற்றும் கூட்டுத்தாபனம் அல்லது அரசு அல்லது அரசு சாரா நிறுவனங்களால் குறித்த திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்துதல்.*
- *ii.) விவசாய உற்பத்திகளை தயாரித்தல் மற்றும் சந்தைப்படுத்துதல்.*
- *iii.) வணிக ரீதியான விவசாயச் செய்கை அல்லது வேறு ஏதேனும் விவசாய முயற்சிகளில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விவசாய முதலீடுகளை மேற்கொள்ள தூண்டுதல், ஊக்குவித்தல் மற்றும் உதவி வழங்கல்.*

*13.4. 2025 ஆம் ஆண்டின் நிதி இலக்குகள்*

| தொ/இல | பிரதான அபிவிருத்தி இலக்கு | மதிப்பிடப்பட்ட தொகை (மில். ரூபாய்) |
|---|---|---|
| 01 | மூலதன செலவுகள் | 541.00 |
| 02 | மீண்டுவரும் செலவுகள் | 207.66 |

*13.5. 2025 ஆம் ஆண்டின் பௌதீக இலக்குகள் (நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள்)*

| தெ/இல | | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | ஒரு அலகுக்கான செலவு | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|---|---|
| | | | | | ரூபாய் | |
| 1 | 1.1 | மண் அரிப்பு மற்றும் அழிவை குறைக்க விவசாய நிலங்களில் மண் பாதுகாப்பு கட்டமைப்புகளை நிறுவுதல் | ஹெக்டயர் | 1,000 | 35,000.00 | 35.00 |
| | 1.2 | சேதன உரங்களின் உற்பத்தி மற்றும் பயன்பாட்டை ஊக்குவித்தல் | விவசாய உள்ளீடுகள் தொகுதி | 5,000 | 10,000.00 | 50.00 |
| | 1.3 | | ராக் பாஸ்பேட் (ERP) கிலோ கிராம் | 200,000 | 30.00 | 6.00 |
| | 1.4 | மண் பாதுகாப்பிற்கான தொழில்நுட்ப உபகரணங்களைப் பயன்படுத்துவதை பிரபலப்படுத்துதல் | தொழில்நுட்ப கருவித் தொகுப்புகளின் எண்ணிக்கை | 10 | 500,000.00 | 5.00 |
| 2 | 2.1 | நீர் ஆதாரங்களைப் பாதுகாத்தல் மற்றும் நீர் ஆதாரங்களுடன் தொடர்பான வசதிகளை வழங்குதல் | நீர் ஆதார பாதுகாப்பு கட்டமைப்புகள் | 45 | 1,200,000.00 | 54.00 |
| | 2.2 | நீர்ப் பிடிப்புப் பகுதிகளுக்கான பாதுகாப்பு முறைகளைப் பயன்படுத்துதல் | நடுகை செய்த தாவரங்களின் எண்ணிக்கை | 20,000 | 200.00 | 4.00 |
| | 2.3 | சமூக பங்கேற்பு நீர் ஆதார பாதுகாப்பு மற்றும் சுகாதார திட்டம் | சமூக பங்கேற்பு திட்டங்களின் எண்ணிக்கை | 50 | 50,000.00 | 2.50 |
| 3 | 3.1 | வீட்டுத்தோட்டச் செய்கை ஊக்குவிப்பு | விவசாய உள்ளீடுகளின் தொகுப்புகளின் எண்ணிக்கை | 8,000 | 7,000.00 | 56.00 |
| | 3.2 | பொருளாதார பயிர்களின் செய்கையை ஊக்குவித்தல் | நாற்றுகள் எண்ணிக்கை | 20,000 | 500.00 | 10.00 |
| | 3.3 | மேலதிக உணவுப் பயிர்களின் செய்கையை ஊக்குவித்தல் | ஹெக்டயர் | 500 | 30,000.00 | 15.00 |
| | 3.4 | காட்டு விலங்குகளால் பயிர்களுக்கு ஏற்படும் சேதத்தை குறைத்தல் (50% பங்களிப்பில்) | மின்சார வேலி | 500 | 40,000.00 | 20.00 |
| | | | பாதுகாப்பு வலை வேலி | 500 | 60,000.00 | 30.00 |
| | | | காற்று துப்பாக்கி | 1,500 | 30,000.00 | 45.00 |

| தெ/இல | | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | ஒரு அலகுக்கான செலவு ரூபாய் | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|---|---|
| 4 | 4.1 | வணிக ரீதியான தேனீ வளர்ப்பை ஊக்குவித்தல் (50% பங்களிப்பில்) | தேனீ வளர்ப்பு அலகுகள் | 10 | 250,000.00 | 2.50 |
| | 4.2 | காளான் உற்பத்தி தொழில்முனைவோரை உருவாக்குதல். (50% பங்களிப்பில்) | விளைச்சல், விவசாயிகளின் எண்ணிக்கை | 10 | 250,000.00 | 2.50 |
| | 4.3 | பெறுமதி சேர்க்கப்பட்ட பொருகளை உற்பத்தி செய்யும் தொழில்முனைவோரை உருவாக்குதல் (50% பங்களிப்பில்) | தொழில்நுட்ப அறிவு வழங்கப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை | 10 | 500,000.00 | 5.00 |
| | 4.4 | தொழில் முனைவோர் மட்டத்தில் பழ கிராமங்களை பிரபலப்படுத்துதல் | விளைச்சல்/பயிரிடப்பட்ட பகுதியின் அளவு | 50 | 1,000,000.00 | 50.00 |
| | 4.5 | அதிக அடர்த்தி விவசாயத்தை பிரபலப்படுத்துவதன் மூலம் தொழில்முனைவோரை உருவாக்குதல் (50% பங்களிப்பில்) | அதிக அடர்த்தி கொண்ட பயிர்ச் செய்கை அலகுகளின் எண்ணிக்கை | 50 | 500,000.00 | 25.00 |
| | 4.6 | மண்ணில்லா பயிர்ச் செய்கை முறைகளை ஊக்குவித்தல் (50% பங்களிப்பில்) | மண்ணில்லா பயிர்ச் செய்கை அலகுகளின் எண்ணிக்கை | 10 | 500,000.00 | 5.00 |
| | 4.7 | சிறிய அளவிலான தொழில்முனைவோருக்கு முட்டை அடைகாக்கும் இயந்திரங்களை வழங்குதல். (50% பங்களிப்பில்) | முட்டை அடைகாக்கும் இயந்திரங்கள் | 50 | 200,000.00 | 10.00 |
| | 4.8 | சிறிய அளவிலான தொழில்முனைவோருக்கு பாதுகாப்பு வளர்ப்பு இல்லங்களை வழங்குதல். (50% பங்களிப்பில்) | பாதுகாப்பு வளர்ப்பு இல்லங்கள் | 10 | 500,000.00 | 5.00 |
| 5 | 5.1 | பாடசாலைகளை அடிப்படையாகக்கொண்ட சூழல் தொடர்பான நிகழ்ச்சிகள் | நிகழ்ச்சிகள் | 60 | 50,000.00 | 3.00 |
| | 5.2 | சமூகம் சார்ந்த சூழல் திட்டங்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் | நிகழ்ச்சிகள் | 60 | 50,000.00 | 3.00 |
| 6 | 6.1 | பகுதியளவு வீடுசார் கோழி வளர்ப்பு | கோழிக் குஞ்சுகள் | 75,000 | 850.00 | 63.75 |
| 7 | 7.1 | சமூக உயிர்ப்பூட்டல் முறைகள் மூலம் பங்கேற்பு அபிவிருத்தி கிராம அணுகல் செயற்திட்டங்கள் (பிஆர்ஏ) | பங்கேற்பு அபிவிருத்தி கிராம அணுகல் | 60 | 35,000.00 | 2.10 |

| தொ/இல | | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | ஒரு அலகுக்கான செலவு ரூபாய் | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|---|---|
| | | ஊடாக விவசாய சமூகத்தின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளல். | திட்டம் (PRA) | | | |
| | 7.2 | விவசாய சமூகத்துக்கு தொழில்நுட்ப பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் சமூக உயிர்ப்பூட்டல் நிகழ்ச்சிகளை நடத்துவதன் ஊடாகஅவர்களை வலுவூட்டுதல் மற்றும் விவசாயத்தில் அவர்களுக்கு வழிகாட்டுதல். | பயிற்சி நிகழ்ச்சிகள் | 120 | 20,000.00 | 2.40 |
| | 7.3 | தொழில்முனைவோருக்கு தேவையான பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துதல். | பயிற்சி நிகழ்ச்சிகள் | 10 | 100,000.00 | 1.00 |
| | 7.4 | விவசாயத் துறையின் வளர்ச்சியுடன் பொருளாதாரம் ரீதியாக அபிவிருத்தி அடைந்த விவசாய சமூகத்தை மதிப்பீடு செய்தல். | சமூக மதிப்பீட்டுத் நிகழ்ச்சிகள் | 1 | 2,000,000.00 | 2.00 |
| 8 | 8.1 | பௌதீக வளங்களை அபிவிருத்தி செய்தல் | பௌதீக வளங்கல் | - | 0.00 | 10.00 |
| | 8.2 | மனித வளங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் திறன் விருத்தி | பயிற்சி நிகழ்ச்சிகள் | 100 | 100,500.00 | 10.05 |
| | 8.3 | மாதாந்த முன்னேற்ற மீளாய்வு | கூட்டங்களின் எண்ணிக்கை | 12 | 100,000.00 | 1.20 |
| | 8.4 | இலத்திரனியல் மற்றும் ஊடக நிகழ்ச்சிகள் | நிகழ்ச்சிகள் எண்ணிக்கை | 20 | 150,000.00 | 5.00 |
| மொத்தம் | | | | | | 541.00 |

*13.6. 31.12.2024 ஆம் திகதிக்கான நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் முன்னேற்றம்*

| தொ/இல | நிகழ்ச்சித் திட்டங்கள் | 2024 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) | 31/12/2024 ஆம் திகதி வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | நிதி முன்னேற்றம் சதவீதத்தில் (%) |
|---|---|---|---|---|
| 01 | மூலதன செலவுகள் | 220.00 | 210.74 | 96 |
| 02 | மீண்டுவரும் செலவுகள் | 139.00 | 133.39 | 96 |
| அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | | | | |
| 01 | இளைஞர் விவசாய தொழில்முனைவோர் கிராம நிகழ்ச்சித் திட்டம் | 2.79 | 2.79 | 100 |

*13.7. 31/12/2024 திகதி வரையிலான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதீக முன்னேற்றம்*

*நோக்கெல்லை : உச்ச அளவு நிலப் பயனுறுதித் தன்மையை அடைதல்*

*1.1. மண் அரிப்பு மற்றும் மண் அழிவு என்பவற்றை குறைப்பதற்கு சரிவான விவசாய நிலங்களைப் பாதுகாத்தல்*

*மண் அரிப்பு மற்றும் மண் அழிவு என்பன காரணமாக மத்திய மலைநாட்டைச் சேர்ந்த பெரும்பாலான விவசாய நிலங்கள் மிகவும் பாதிப்படைந்துள்ளன. நில பயன்பாட்டு முறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள், காடழிப்பு மற்றும் நகரமயமாக்கல் ஆகியன காரணமாக மண் அரிப்பு மற்றும் மண் வளம் என்பவற்றில் ஏற்படும் வீழ்ச்சியை குறைக்கும் நோக்கில் இந்த அபிவிருத்திச் செயற்திட்டம் செயல்படுத்தப்பட்டது.*

*அதன் பிரகாரம், உயிரியல் மற்றும் உழவியல் முறைகள் மூலம் நிலத்தின் உற்பத்தித்திறனை உயர் மட்டத்திற்கு கொண்டு வருவதற்கு விவசாயிகளுடன் இணைந்து, கண்டி, மாத்தளை, கேகாலை, கொழும்பு, கம்பஹா, பதுளை, குருநாகல் மற்றும் காலி ஆகிய மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் இந்த நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.*

*அதற்கு அமைவாக, 2024 ஆம் ஆண்டில் 600 ஹெக்டேர் விவசாய நிலத்துக்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டதுடன் 15.00 மில். ரூபாய் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகையாக வழங்கவும் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி, 30.12.2024 ஆம் திகதியளவில், 600 ஹெக்டேர் நிலப்பரப்பின் பாதுகாப்புப் பணிகள் நிறைவு செய்யப்பட்டதுடன் அதற்காக 15.00 மில். ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.*

*புகைப்பட இலக்கம் 77*

*1.2 சேதன உரங்களின் உற்பத்தி மற்றும் பயன்பாட்டை ஊக்குவித்தல்*

*மண் பாதுகாப்பு மேற்கொள்ளப்பட்ட விவசாய நிலங்களின் உற்பத்தித்திறனை மேலும் அதிகரிப்பதன் மூலம் வளமான மண்ணை உருவாக்கும் நோக்கத்துடன் இதந்த நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. கண்டி, மாத்தளை, நுவரெலியா, கேகாலை, கொழும்பு, கம்பஹா, அநுராதபுரம், பதுளை, வவுனியா, முல்லைத்தீவு, ஹம்பாந்தோட்டை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் இந்த நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. மேலும், 2024ம் ஆண்டில், 3,200 மெற்றிக் தொன் சேதன உரங்களை உற்பத்தி செய்வதற்கு, 3,200 தொகுப்பு விவசாய உபகரணங்களை வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டதுடன் இதற்காக 24.00 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேலும் அந்த உர உற்பத்தியின் தரத்தை மேலும் அதிகரிக்கும் வகையில் வழங்கப்படும் 160,000 கிலோ கிராம் எப்பாவல ரொக் பொஸ்பேட் உரத்தை வழங்க 4.00 மில். ரூபாய் ஒதுக்கப்பட்டது. இதன்படி, 31.12.2024 ஆமா திகதியளவில், சேதன உர அலகுகள் உற்பத்திக்காக வழங்கப்படும் 3,200 தொகுதி கருவிகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டதுடன 160,000 கிலோ கிராம் ரொக் பொஸ்பேட் உரமும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதன்போது, விவசாயக் உபகரணத் தொகுதிகளுக்கு 21.84 மில். ரூபாய் மற்றும் ரொக் பொஸ்பேட் உரத்திற்கு 3.47 மில். ரூபாய் நிதியும் செலவிடப்பட்டுள்ளது.*

*புகைப்பட இலக்கம் 78*

*நோக்கெல்லை: பாதுகாக்கப்பட்ட நீர் வளங்கல்*

*2.1 நீர் ஆதாரங்களைப் பாதுகாத்தல்*

*நீர் ஆதாரங்கள் மற்றும் சுற்றுப்புற சூழலை பாதுகாத்தல், குறித்த பிரதேச மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்தல் மற்றும் அவர்களின் விவசாய நடவடிக்கைகளுக்கு தேவையான நீரை வழங்குதல் போன்ற நோக்கத்துடன் இந்த நிகழ்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. கண்டி, மாத்தளை, கேகாலை, ஹம்பாந்தோட்டை, மன்னார் மற்றும் காலி ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் இந்நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகிறது.*

*2024 ஆம் ஆண்டில் 25 நீர் ஆதாரங்களை பாதுகாப்பதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இந்த செயற்திட்டத்திற்கு 25.00 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதன்படி 31.12.2024 அன்று 24 நீர் ஆதாரங்களின் பாதுகாப்பு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டன. அதற்கு 23.95 மில். ரூபாய் செலவிடப்பட்டது.*

*நீர் பிடிப்புப் பகுதிகளைச் சுற்றிப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் நீர் பிடிப்புப் பகுதிகளின் நிலையான பயன்பாட்டிற்காக இந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. அதற்காக, நீர்வாழ் தாவரங்களை நடுவதற்கு 20,000 நீர்வாழ் தாவரங்கள் வழங்க திட்டமிடப்பட்டதுடன் அதற்கு 2.00 மில். ரூபாய் செலவு மதிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், 31.12.2024 ஆம் திகதியளவில் 1.322 மில். ரூபாய் செலவிடப்பட்டு 10,460 நீர்வாழ் தாவரங்கள் வழங்கப்பட்டுள்ளன.*

*புகைப்பட இலக்கம் 79*

*2.2. சமூக பங்கேற்பு நிகழ்ச்சிகளை நடத்துதல்*

*நீர் ஆதாரங்களைச் சுற்றியுள்ள பகுதிகளை பாதுகாப்பதன் மூலம் குடிநீர்த் தேவைக்கான சுத்தமான நீரை பெறுதல், பல்வேறு மனித நடவடிக்கைகளால் பாழடைந்த நீர் ஆதாரங்களைச் சுற்றியுள்ள சூழலைச் சுத்தப்படுத்துதல் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் என்பவற்றுக்கு சமூகப் பங்கேற்புத் நிகழ்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதன் முதன்மை நோக்கம் ஆகும். அதன்படி 2024 ஆம் ஆண்டில் இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் 50 திட்டங்களை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டதுடன் அதற்கு 1.00 மில். ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதற்கு அமைவாக, 31.12.2024 திகதியளவில், 15 சுத்திகரிப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதுடன் அதற்காக 547,795.00 ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.*
*புகைப்பட இலக்கம் 80*

*நோக்கெல்லை: உணவு இருப்பு மற்றும் பாதுகாப்பு என்பவை உறுதி செய்யப்பட்ட ஆரோக்கியமான மற்றும் வளமான சமூகம்*

*3.1 வீட்டுத்தோட்டச் செய்கை ஊக்குவிப்பு*

*நோக்கில் விதைகள் மற்றும் நடுகைப் பொருட்களை வழங்குவதன் மூலம் உணவுப் பாதுகாப்பை அதிகரிக்க விவசாயிகளால் தயாரிக்கப்பட்ட விதைப் பொதிகள், விவசாய கருவிகள், திரவ உரங்கள் என்பவற்றை வழங்கல் மற்றும் தேவையான தொழில்நுட்ப அறிவை வழங்கல் என்பன இந்த அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. கண்டி, மாத்தளை, கேகாலை, கொழும்பு, கம்பஹா, அனுராதபுரம், பதுளை, ஹம்பாந்தோட்டை, வவ்னியா, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் இந்த நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.*

வீட்டுத்தோட்டச் செய்கை ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், 30,000 நாற்றுகளை வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. மேலும், வீட்டுத்தோட்டச் செய்கைக்கான 6,000 தொகுப்பு விவசாய உபகரணங்கள், தலா ஒரு லீட்டர் வீதம் 6000 லிட்டர் சேதன திரவ உரம் என்பவற்றை வழங்கவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்ததுடன் 30.00 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதன்படி, 31/12/2024 வரை தயாரிக்கப்பட்ட 6000 நிலைபேறான வீட்டுத்தோட்டங்களுக்கான விவசாய உபகரண தொகுப்புகள், நாற்றுகளின் தொகுப்புகள், மற்றும் சேதன திரவ உரங்கள் என்பன வழங்கும் நடவடிக்கைகள் நிறைவுற்றுள்ளதுடன் இதற்காக 29.09 மில். ரூபா செலவிடப்பட்டுள்ளது.

புகைப்பட இலக்கம் 81

3.2 வணிக ரீதியான வீட்டுத்தோட்டத்தை ஊக்குவித்தல்

வணிக அளவில் வீட்டுத்தோட்டச் செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு வீட்டுத்தோட்டச் செய்கைக்குத் தேவையான மண்வெட்டி, 50 மீட்டர் தண்ணீர் குழாய், மண்வெட்டி முனை, சட்டி, தெளிப்பான் இயந்திரம் போன்ற விவசாய இடுபொருள் கருவிகலும் வணிக வீட்டுத்தோட்டச் செய்கைத் திட்டத்தின் 20 நாற்றுச் சாடிகள் கீழ் 500 வணிக அளவிலான விவசாயிகளுக்கு வழங்க திட்டமிடப்பட்டதுடன் 31/12/2024 ஆம் திகதியளவில், 500 விவசாயிகளுக்கும் மேற்படி உபகரணப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளதுடன் அதற்காக 6.98 மில். ரூபாய் செலவிடப்பட்டது.

3.3 பொருளாதார பயிர்களின் செய்கை ஊக்குவித்தல்

முருங்கை, பாக்கு, தென்னை, செவ்விளநீர், மிளகு, வெணிலா, கறுவா, கோப்பி மற்றும் எலுமிச்சை போன்ற பொருளாதாரப் பயிர்களை வழங்குவதன் மூலம் பொருளாதாரப் பயிர்களை வளர்க்கும் விவசாயிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் இந்த செயற் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, 20,000 பொருளாதார பயிர்க் கன்றுகளை வழங்க திட்டமிடப்பட்டதுடன் அதற்கு 5.00 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 31/12/2024 ஆம் திகதியளவில், 28,845 கன்றுகள் வழங்கப்பட்டுள்ளதுடன் அதற்காக 5.00 மில். ரூபாய் செலவிடப்பட்டது

3.4 மேலதிக உணவுப் பயிர்களின் செய்கையை ஊக்குவித்தல்

உணவுப் பாதுகாப்பை அதிகரித்தல் மற்றும் விவசாயிகளுக்கு மேலதிக வருமானத்தை ஈட்டல் என்பவற்றை நோக்காகக்கொண்டு மேலதிக உணவுப் பயிர் ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம் 2024ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டது. அதன் மூலம், 100 ஹெக்டயர் மேலதிக உணவுப் பயிர்களின் பயிர்ச் செய்கைக்கு விவசாயிகளுக்கு கௌப்பி, பாசிப்பயறு, நிலக்கடலை, குரக்கன், மிளகாய் மற்றும் உளுந்து ஆகிய பயிர்களின் விதைகளை விவசாயிகளுக்கு வழங்கும் வகையில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அதற்கு 5.00 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் கண்டி, மாத்தளை, ஹம்பாந்தோட்டை, அநுராதபுரம், பதுளை, வவுனியா, முல்லைத்தீவு மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு 3,716 கிலோ கிராம் விதைகள் விநியோகம் செய்யப்பட்டதுடன் 31/12/2024 ஆம் திகதி வரை 127 ஹெக்டயரில் அந்த விதைகள் பயிரிடப்பட்டுள்ளன. இதற்காக ஒதுக்கப்பட்ட தொகையில் இருந்து 4.98 மில். ரூபாய் செலவிடப்பட்டது.

3.5 காட்டு விலங்குகளால் பயிர்களுக்கு ஏற்படும் சேதத்தை குறைத்தல்

இலங்கையில் வன விலங்குகளால் ஏற்படும் வருடாந்த பயிர் சேதம் 40% என ஆய்வு அறிக்கைகள் உறுதிப்படுத்தியுள்ளன. அதனால் ஏற்படும் விலங்கு சேதங்களைத் தடுப்பதற்காக, விவசாயிகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் முதன்மை நோக்கத்துடன் விவசாயிகளின் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கான சேவைகளை வழங்குதல் எனும் இலங்கை ஹதபிம அதிகாரசபையின் நோக்கத்துக்கு அமைவாக, 2023 ஆம் ஆண்டு ஒரு

*அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமாக இது ஆரம்பிக்கப்பட்டது. இதற்குக் காணப்படும் அதிக கேள்வியின் காரணமாக 2024 ஆம் ஆண்டும் இந்த நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன்படி பயனாளிகளிடம் இருந்து 50% பங்களிப்பை பெற்று மின்சார வேலி மற்றும் வாயுத் துப்பாக்கிகளை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. அதற்காக 700 வாயுத் துப்பாக்கிகள் மற்றும் 75 மின்சார வேலி அலகுகளை வழங்கும் 20.00 மில். ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் 701 வாயுத் துப்பாக்கிகள் மற்றும் 75 மின் வேலி அலகுகள் பயனாளிகளுக்கு 31.12.2024 ஆம் அதிகதி வரை வழங்கப்பட்டுள்ளன. அதற்கு 19.97 மில். ரூபாய் தொகை செலவிடப்பட்டுள்ளது.*

*கண்டி, மாத்தளை, கேகாலை, ஹம்பாந்தோட்டை, கொழும்பு, கம்பஹா, அநுராதபுரம், பதுளை, காலி, வவுனியா மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் பிரதேச செயலாளரினால் பரிந்துரைக்கப்பட்ட தேவையுள்ள விவசாயிகளுக்காக இந்த அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.*

*புகைப்பட எண் 82*

*நோக்கெல்லை: உகந்த உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி அறிவு மற்றும் தொழில்நுட்பத்துடன் வலுவூட்டப்பட்ட புதிய விவசாயத் தொழில்முனைவோர்*

*4.1 வரத்தக ரீதியான தேனீ வளர்ப்பை ஊக்குவித்தல்*

*வரத்தக ரீதியான தேனீ வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாய சமூகத்தை மேலும் வலுவூட்டுவதற்கான வசதிகளை வழங்கும் நோக்கில் இந்த நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன்படி, பயனாளிகளின் செயற்திட்ட முன்மொழிவுகளின் அடிப்படையில், அதிக சாத்தியத்தன்மைகளைக்கொண்ட நிலைபேறான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்த திட்டமிட்டு செயல்படுத்தப்பட்டன. இதற்கு 01.00 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன், யட்டியந்தோட்டை, வரக்காபொல, அரநாயக்க, வெலிமடை, அபன்பொல, வாரியபொல, ரிதீமாலியத்த, இமதுவ மற்றும் உடுதும்பறை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த 13 பயனாளிகள் 50% சமூக பங்களிப்பின் கீழ் பயனடைந்துள்ளனர். இதற்கு செலவிடப்பட தொகை 954,300 மில். ரூபாய் ஆகும்.*

*4.2 காளான் தயாரிப்பு தொழில்முனைவோரை உருவாக்குதல்*

*வரத்தக ரீதியான காளான் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழில்முனைவோரை கண்டறிந்து அவர்களை மேலும் வலுப்படுத்துவதே இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும். இந்த திட்டத்திற்கு அமைவாக, 50% சமூக பங்களிப்பின் கீழ் அவர்களுக்குத் தேவையான வசதிகளை வழங்க திட்டமிடப்பட்டது. அதன்படி, இந்த செயற்திட்டத்திற்கு 1.25 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் இது மீரிகம, வலஸ்முல்ல, வீரகட்டிய, யட்டிநுவர, ரிதிமாலியத்த, வெலிமடை, மாவத்தகம மற்றும் ரம்புக்கனை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள 15 பயனாளிகளின் செயற்திட்ட முன்மொழிவுகளை பரிசீலித்ததன் பின்னர் அவர்களுக்கு செயற்திட்டம் மூலம் உதவிகள் செய்யப்பட்டன. அதற்கு 1.25 மில். ரூபாய் நிதி செலவிடப்பட்டுள்ளது.*

*4.3 விவசாய பெறுமதி சேர்த்தல் துறையில் தொழில்முனைவோரை உருவாக்குதல்*

*விவசாய பெறுமதி சேர்த்தல் உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிறுவனத்திற்கு 50% சமூக பங்களிப்பின் கீழ் வசதிகளை வழங்குவதே இந்த செயற்திட்டத்தின் நோக்கமாகும். இதற்கு 1.25 மில். ரூபா நிதி ஒதுக்கப்பட்டது. இது கண்டி, குருநாகல் மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் இருந்து கோரப்பட்ட செயற்திட்ட அறிக்கைகளை பரிசீலித்தன் பின்னர் 22 பயனாளிகளுக்கு உலர்த்தும் இயந்திரங்கள், வாசனை பொருட்கள் அறைக்கும் இயந்திரங்கள், தெளிப்பான் நீர்த் தொகுதிகள், முட்டை அடைகாக்கும் இயந்திரங்கள், நீராவி அவிகலங்கள்*

*மற்றும் நெல் உலர்த்தும் பாய்கள் (கார்பெட்) ஆகியவை வழங்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு 1.23 மில். ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.*

*4.4 வரத்தக ரீதியான பழக் கிராமங்களை மேம்படுத்துதல்*

*ஏற்றுமதி சந்தையை வென்றெடுக்கும் வகையில், மாதிரி பழக் கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் இதன் கீழ் முன்னெடுக்கப்பட்டது. அதன்படி, 17 பழக் கிராமங்களுக்கு 30.00 மில். ரூபாய் மதிப்பிடப்பட்டதுடன் அந்த தொகையில், 29.66 மில். ரூபாய் நிதி முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது. யட்டியந்தோட்டை, அம்பன்பொல, அரநாயக்க, ரம்புக்கன, கல்நேவ, முல்லைத்தீவு, வவுனியா, மீரிகம, மஹர, திவுலப்பிட்டிய, இமதுவ, கரந்தெனிய, வலஸ்முல்லை, அம்பலாந்தோட்டை, தங்கல்ல, அங்குனுகொலபலஸ்ஸ, தெஹியத்தகண்டிய மற்றும் ரிதீமாலியத்த ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் இக்கிராமங்கள் அமைந்துள்ளன.*

*நோக்கெல்லை: பாதுகாக்கப்பட்ட சூழல்*

*5.1 பாடசாலை சார்ந்த சூழல் நிகழ்ச்சித் திட்டங்கள்*

*அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் அனைத்து பிரதேச செயலகங்களிலும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் சீரமைவான வீட்டுத் தோட்டத்தை உருவாக்கும் நோக்கில் இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அதன்படி, 60 நிகழ்ச்சித் திட்டங்களை செயல்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டதுடன் 1.20 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 31.12.2024 ஆம் திகதி வரை 15 நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அவற்றுக்கு 0.87 மில். ரூபாய் தொகை செலவிடப்பட்டுள்ளது. கண்டி, மாத்தளை, கேகாலை, கம்பஹா, கொழும்பு, பதுளை, அனுராதபுரம் மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளை இலக்காகக் கொண்டு இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.*

*5.2 சமூகம் சார்ந்த சுற்றுச்சூழல் திட்டம் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்*

*அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் அனைத்து பிரதேச செயலகங்களிலும் உள்ள சமூகத்திற்கான சுற்றாடல் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதே இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கம் ஆகும். அதன்படி இதற்கு 0.60 மில். ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு 20 நிகழ்ச்சித் திட்டங்களை செயல்படுத்த திட்டமிடப்பட்டது. 31.12.2024 ஆம் திகதி வரை வலஸ்முல்ல, யட்டிநுவர, கண்டி, தங்காலை, கட்டுவன, அம்பலாந்தோட்டை, அம்பகமுவ, மீரிகம, மஹர, களனி, உடுநுவர ஆகிய பிரதேசங்களில் 0.57 ரூபா செலவில் 15 நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.*

*நோக்கெல்லை: ஆரோக்கியமான சமூகம்*

*6.1 கிராமிய மக்களின் புரதத் தேவையைப் பூர்த்தி செய்ய முட்டை மற்றும் கோழி இறைச்சி உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் விவசாயிகளை வலுவூட்டல்.*

*புரத ஊட்டச்சத்து குறைபாடு இன்று கிராமப்புற மக்களிடையே ஒரு கடுமையான பிரச்சனையாக மாறியுள்ளது. எனவே, கிராமிய சமூகத்தினரின் தினசரி விலங்குப் புரத நுகர்வை அதிகரித்தல், உள்நாட்டு சந்தையில் முட்டை விலை ஏற்ற இறக்கத்தை குறைத்தல் மற்றும் கிராமிய மக்களுக்கு மேலதிக வருமான வழியை உருவாக்குதல் உள்ளிட்ட நோக்கங்களுடன் அரை இல்ல கோழி வளர்ப்பு நிகழ்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.*

*கண்டி, மாத்தளை, கேகாலை, ஹம்பாந்தோட்டை, கொழும்பு, கம்பஹா, அனுராதபுரம், பதுளை, காலி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் இந்த அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.*

*இதற்காக 2024 ஆம் ஆண்டில் 45,000 கோழிக் குஞ்சுகளை வழங்க 31.50 மில். ரூபாய் ஒதுக்கப்பட்டதுடன் 31.12.2024 ஆம் திகதி வரையில் பயனாளி குடும்பங்களுக்கு 31.43 மில். ரூபாய் செலவில் 45,000 குஞ்சுகள் வழங்கப்பட்டன.*

*6.2 சிறிய அளவிலான தொழில்முனைவோருக்கு ஒரு நாள்/ 03 மாத கோழிக் குஞ்சுகளை வழங்குதல்.*

*கிராமப்புற மக்களிடையே புரதச் சத்து குறைபாட்டைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்ட இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் 50% சமூக பங்களிப்பின் கீழ் இறைச்சி உற்பத்திக்காக ஒரு நாள் மற்றும் மூன்று மாத ஆண் கோழிக் குஞ்சுகளை வழங்க திட்டமிடப்பட்டது. அதற்கு 0.80 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் வருட இறுதிக்குள் 5000 குஞ்சுகளை வழங்க உத்தேசிக்கப்பட்டிருந்தது. எனினும், 31/12/2024 ஆம் திகதி வரையில், 500 குஞ்சுகள் மட்டுமே கேகாலை மாவட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளதுடன் அதற்காக 36,750.00 ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.*

*நோக்கெல்லை: விவசாய - தொழில்நுட்ப அறிவுடன் விவசாயிகளை மேம்படுத்துதல்*

*7.1 சமூக உயிர்ப்பூட்டல் நிகழ்ச்சிகளுக்கு ஊடாக பங்கேற்பு அபிவிருத்தி கிராம அணுகல் திட்டத்தின் மூலம் விவசாய சமூகத்தின் பங்களிப்பைப் பெர்ருக்கொள்ளல்*

*இதன் கீழ், சமூக உயிர்ப்பூட்டல் திட்டங்களை செயல்படுத்தி வலுவூட்டுவதற்கும், விவசாயத்தை நோக்கி கவனம் செலுத்தச் செய்வதற்கும், சமூக உயிர்ப்பூட்டல் மூலம் பங்கேற்பு அபிவிருத்தி கிராம அணுகல் நிகழ்ச்சித் திட்டத்தின் (PRA) ஊடாக விவசாய சமூகத்தின் பங்களிப்பைப் பெறுவதற்கும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ள என எதிர்பார்க்கப்பட்டது. அதன்படி, 2024 ஆம் ஆண்டுக்கு 60 நிகழ்ச்சிகளை நடாத்த 1.50 மில். ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டதுடன் 31/12/2024 திகதி வரையிலான 60 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளதுடன் 1.37 மில். ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. மேலும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.*

*7.2 விவசாய சமூகத்திற்கான தொழில்நுட்பப் பயிற்சித் நிகழ்ச்சிகளை நடத்துதல் மற்றும் விவசாயிகளை வலுவூட்டுதல்*

*இதன் கீழ் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு இணையாக விவசாய சமூகத்தினருக்கான தொழில்நுட்ப பயிற்சி நிகழ்ச்சிகளும் நடாத்தப்படுகின்றன. அதற்கு 1.20 மில். ரூபாய் என மதிப்பிடப்பட்டதுடன் விவசாயிகளுக்கான 120 பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. 31.12.2024 ஆம் திகதி வரையில், விவசாயிகளுக்கான 120 பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டதுடன் அதற்காக 0.82 மில். ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.*

*நோக்கெல்லை: ஊழியர்களுக்கான ஊக்கமளிப்பு நிகழ்ச்சிகள் மூலம் சேவை பயனுறுதித் தன்மையை மேம்படுத்துதல்*

*இந்த நோக்கெல்லையின் கீழ் பௌதீக வளங்களின் அபிவிருத்தி எனும் பகுதியின் கீழ் பௌதீக வளங்களைப் பெறுவதற்காக 4.20 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் 31.12.2024 ஆம் திகதிக்கு, 4.19 மில். ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.*

*2024 ஆம் ஆண்டில், நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னேற்றம், களப் பணியாளர்கள் மற்றும் நிறுவனத்தின் அலுவலர்கள் தலைமையில் மாதந்தோறும் மதிப்பாய்வு செய்வதற்குத் திட்டமிடப்பட்டதுடன், 12 முன்னேற்ற மீளாய்வுக்*

*கூட்டங்களை நடத்த திட்டமிடப்பட்டது. 31/12/2024 ஆம் திகதிக்கு 8 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. அவற்றுக்காக ஒதுக்கப்பட்ட தொகையான 1.00 மில். ரூபாய் நிதியில் 0.46 மில். ரூபாய் செலவிடப்பட்டது.*

*அவ்வாறே, நிறுவனத்தின் பணியாளர்களது கருத்தியல், தொழில்நுட்ப மற்றும் மனித வளத் திறன்களை விருத்தி செய்தல் மற்றும் அறிவை புதுப்பித்தல் ஆகியவற்றுக்கு மனித வள அபிவிருத்தி மற்றும் பயிற்சித் நிகழ்ச்சிகள் 2.00 மில். ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. அந்த தொகையில் இருந்து 1.66 மில். ரூபாய் செலவு செய்யப்பட்டு 19 அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.*

# கால்நடை வளங்கள் பிரிவு

## *செலவுத் தலைப்பு இலக்கம் 118 இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பிரதான அபிவிருத்தித் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம்*

*1. கால்நடை இனப்பெருக்கம் மற்றும் பண்ணை அபிவிருத்தி - செலவுத் தலைப்பு இலக்கம் 118-2-03-078-2507*

*2024 ஆம் ஆண்டில் கால்நடை வளப் பிரிவின் செயல் திட்டத்திற்கு அமைவாக, கால்நடை இனப்பெருக்க மற்றும் பண்ணை அபிவிருத்தி செயற்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட 50.00 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டிலிருந்து 4.65 மில்லியன் ரூபாய் 2023 ஆம் ஆண்டின் செலுத்த வேண்டிய பொறுப்புகளுக்கு செலுத்தப்பட்டதுடன் 45.35 மில்லியன் ரூபாய் நிதி வடமத்திய, வடமேற்கு, தென் மற்றும் மேல் மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களங்களின் கால்நடை இனப்பெருக்கம் மற்றும் பண்ணை அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டது.*

*அதற்கு அமைவாக, வடமத்திய மாகாணத்தில் சாஹிவால் இனவிருத்தி அலகு அமைப்பதற்காக 10.00 மில். ரூபாயும், செயற்கை கருவூட்டலை வலுப்படுத்தும் பொருட்டு செயற்கை சினைப்படுத்தல் கருவிகளை கொள்வனவு செய்வதற்கு 3.88 மில். ரூபாயும் செலவிடப்பட்டுள்ளது. மேல் மாகாணத்தில் கொட்டதெனியாவ கால்நடை வளர்ப்பு பயிற்சிப் பாடசாலையின் இனவிருத்திப் பிரிவின் கூரையை பழுதுபார்க்கும் வேலைகளுக்கு 6.45 மில். ரூபாய் செலவிடப்பட்டதுடன், அந்தத் தொகை 2025 ஆம் ஆண்டிற்கான நிதிப் பொறுப்பாக மாறியுள்ளது. வடமேல் மாகாணத்தில் ஆட்டு இனப்பெருக்க பண்ணை ஒன்றை அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்ட போதிலும் திருத்தப்பட்ட மதிப்பீடு மற்றும் வீட்டுத் திட்டம் தயாரிப்பதில் ஏற்பட்ட தாமதம் என்பன காரணமாக அந்த செயற்திட்டத்தை முன்னெடுக்க முடியவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. தென் மாகாணத்தில் அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டமான கெக்குனுதுறை பண்ணையில் ஆட்டு இனப்பெருக்க அலகு ஸ்தாபிக்கும் பணி மாகாண ஒதுக்கீட்டின் கீழ் நிறைவேற்றப்பட்டுள்ளது.*

*2. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கால்நடை வள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் (உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்)*

*2.1 இடைக்கால கால்நடை வள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்*

*கால்நடை வளத் துறையை விருத்தி செய்வதை இலக்காகக் கொண்டு வட மாகாணத்தில் காணப்படும் முக்கியமான சாத்தியப்பாடுகளை கருத்தில் கொண்டு கால்நடை வைத்திய அலுவலகங்கள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை நிறுவுவதன் மூலம் கால்நடை வளத் துறையில் சேவை வழங்கலை விருத்தி செய்யும் நோக்கில் இந்தச் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.*

*இந்த செயற்திட்டத்தின் கீழ் பகுதியளவில் நிர்மாணிக்கப்பட்ட பருத்தித்துறை கால்நடை வைத்திய காரியாலயத்தின் நிர்மாணப் பணிகளை நிறைவுசெய்வதற்காக 2024 ஆம் ஆண்டுக்கு 60.00 மில். ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் அந்த ஒதுக்கீட்டிலிருந்து 10.73 மில். ரூபாய் ஆரம்ப முற்பணமாக ஒப்பந்ததாரருக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.*

*2.2. பன்றி வளர்ப்புப் பண்ணைகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம்*

*களத்தில் உள்ள பன்றி வளர்ப்பாளர்களுக்கு உயர்தர பன்றிக் குட்டிகளை வழங்கும் நோக்கில் வடமத்திய மாகாணத்தில் உள்ள திரப்பனை அரச பண்ணையில் பன்றி வளர்ப்பு அலகு ஒன்றை நிர்மாணிப்பதற்காக 2024 ஆம் ஆண்டில் 5.00 மில். ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது.*

*மீளாய்வு காலஎல்லையின் இறுதியில், கழிவுப் பொருட்களை பொருத்தமான முறையில் முகாமைத்துவம் செய்யும் முறையொன்றை நிறுவுதல், பன்றி வளர்ப்பு இல்லமொன்றை நிறுவுதல், பன்றிக் குட்டிகளை கொள்வனவு செய்தல், மிருகங்களுக்கான உபகரணங்கள் மற்றும் மருந்துகளை கொள்வனவு செய்தல் ஆகிய செயற்பாடுகள் உள்ளிட்ட பன்றி இனப்பெருக்க அலகின் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளன. அவற்றுக்கான நிதிப் பொறுப்புகளாக 2025 ஆம் ஆண்டில் 4.90 மில்லியன் ரூபாய் செலுத்த வேண்டியுள்ளது.டன், 2023 ஆம் ஆண்டில் செலுத்த வேண்டியிருந்த பொறுப்புகளுடன் தொடர்பான கொடுப்பனவுகளாக இந்த ஆண்டில் 1.84 மில். ரூபாயும் செலுத்தப்பட்டுள்ளது.*

*2.3. கோழிப் பண்ணை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்*

*குறைந்த செலவில் பண்ணை நடவடிக்கைகளை பராமரிக்கும் நோக்கில் வட மாகாணத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ள அச்சுவெளி அரச பண்ணையில் சூரிய மின்தகடுகளை நிறுவுவதற்கு 5.15 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வடமாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தினால் இந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது*

*பெறுகை நடவடிக்கையில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக இந்த செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாமல் போனது என 20.12.2024 அன்று அமைச்சுக்குத் தெரிவிக்கப்பட்டது.*

*2.4. கறவை மாடு (பாற் பசு) வளர்ப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்*

*புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களை அறிமுகப்படுத்தி பால் உற்பத்திச் செலவைக் குறைப்பதும், முறையான இனப்பெருக்கம் மற்றும் ஊட்டச்சத்து முகாமைத்துவம் மூலம் பண்ணை உற்பத்தியை மேம்படுத்துவதும் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான நோக்கங்களாகும். மதிப்பாய்வில் உள்ள ஆண்டிற்கான இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு 77.79 மில். ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டதுடன், இதன் கீழ் செயற்படுத்தப்பட்ட செயற்பாடுகள் பின்வருமாறு.*

| *மாகாணம்* | *செயற்திட்டம்* | *ஒதுக்கீடு (மில். ரூபாய்)* | *31/12/2024 ஆம் திகதி வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்)* |
|---|---|---|---|
| *வட மாகாணம்* | *கிளிநொச்சி பிராந்திய பயிற்சி பாடசாலையில் சூரிய மின்தகடுகளை நிறுவுதல்* | *5.00* | *4.26* |
| *ஊவா மாகாணம்* | *பதுளை பொரலந்த பண்ணையில் சூரிய மின்தகடுகளை நிறுவுதல்* | *9.00* | *-* |
| *மேல் மாகாணம்* | *கொட்டதெனியாவ கால்நடை வளர்ப்பு பயிற்சி நிலையத்தில் கால்நடை தீவன உற்பத்தியை விருத்தி செய்தல்* | *5.00* | *4.74* |
| *வட மத்திய மாகாணம்* | *திறப்பனை கால்நடை இனப்பெருக்க பயிற்சி நிலையத்தில் விவசாயக் கிணறை அமைத்தல்* | *5.00* | *4.19* |
| *வட மேல் மாகாணம்* | *வன்னிகம பண்ணையில் குஞ்சுகளுக்கான கூட்டு வசதிகளை விருத்தி செய்தல் மற்றும் போசணை முகாமைத்துவம்* | *3.00* | *3.00* |

*இதற்கமைய, மேற்படி செயற்பாடுகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதுடன் ஊவா மாகாணம் தவிர்ந்த ஏனைய நான்கு மாகாணங்களிலும் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டுள்ளன. ஊவா மாகாணத்திற்கான 9.00 மில். ரூபாய் நிதிப் பொறுப்பாக 2025 ஆம் ஆண்டில் செலுத்தப்பட வேண்டும்.*

*புகைப்பட இலக்கம் 01 - 02*

*மேற்கூறிய நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக, இந்த செயற்திட்டத்தின் மூலம் கால்நடைத் வளத் துறையுடன் தொடர்பான தரவு சேகரிப்பதற்கான தகவல் தொகுதியோன்றை அறிமுகம் செய்தல் மற்றும் கறவை மாட்டு அபிவிருத்தி அலகுகளை நிறுவுதல் என்பவற்றுக்கு 48.52 மில். ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. எவ்வாறாயினும், தற்போது வெளிநாட்டு நிதியுதவிச் செயற்திட்டமொன்றின் மூலம் ஒட்டுமொத்த விவசாயத் துறைக்குமான தரவு சேகரிப்புக்கான தொகுதியொன்றை நிறுவும் நடவடிக்கைகளை தொடங்கியுள்ளதால், இந்த நடவடிக்கையை மேற்கொள்வதில்லை என முடிவு செய்யப்பட்டுள்ளது, எனவே அந்த ஒதுக்கீடுகளை திரும்பப் பெற்றுக்கொள்ளுமாறு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.*

*2.5. திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டம்*

*2024 ஆம் ஆண்டில் இந்தச் செயற்திட்டத்திற்கு 2.06 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், அதிகாரிகள், விவசாயிகள் மற்றும் இளம் தொழில்முனைவோரின் திறன் விருத்தி மற்றும் கால்நடை வளத் துறையுடன் தொடர்பான கொள்கைகளை உருவாக்குதல் ஆகியவை இதன் பிரதான நோக்கங்களாகும். இதன் கீழ், பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.*

- *பெரிய அளவிலான பண்ணைகளை அமைப்பதற்கான சூழல் வழிகாட்டுதல்களை தயாரிப்பதற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அதிகாரிகளைக் கொண்ட துணைக் குழுவினால் கள கண்காணிப்பு விஜயங்களை ஏற்பாடு செய்தல்.*
- *கடந்த வருடத்தில் மாகாண மட்டத்தில் அமுல்படுத்தப்பட்ட கால்நடை அபிவிருத்திச் செயற்திட்டங்கள் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.*
- *பால் உற்பத்திப் பொருட்களின் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாணங்களில் தயிர் உற்பத்தியாளர்களுக்கான பயிற்சி பட்டறைகளை ஏற்பாடு செய்தல். அதற்காக ஒரு மாகாணத்திற்கு தலா 200,000 ரூபா வீதம் 1 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. வடமேல் மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தினால் மாத்திரமே இந்தப் பயிற்சித் திட்டம் நடத்தப்பட்டுள்ளது.*
- *கால்நடை வளத் துறையுடன் தொடர்பான பல்வேறு துறைகளில் கொள்கை ரீதியான மாற்றங்கள் மற்றும் கலந்துரையாடல்களை மேற்கொள்ளல். இதற்காக இந்த ஆண்டில் 527,867.00 ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.*

*3. சிறு மற்றும் நடுத்தர அளவிலான கால்நடை வள அபிவிருத்தி (அபிவிருத்தி உதவி)*

*3.1 கறவை/எருமை மாட்டு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்*

*இந்த செயற்திட்டத்திற்கு 31.26 மில். ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் இதன் மூலம் இரண்டு பிரதான செயற்பாடுகள் நடைபெறுகின்றன.*

*3.1.1. பால் மற்றும் பால் பொருட்களின் தரத்தை மேம்படுத்துதல்*

*எருமை வளர்ப்பு இலங்கையில் உள்ள கிராமப்புற விவசாயிகளின் பாரம்பரிய வாழ்வாதாரமாகும், மேலும், பெரும்பாலான விவசாயிகள் தங்கள் வருமானத்தை மேலும்*

*அதிகரிக்கும் பொருட்டு பெறுமதி சேர்க்கப்பட்ட பொருளாக பாலைத் திறளச் செய்வதன் மூலம் தயாரிப்புகளை மேற்கொள்கின்றனர். இலங்கை தர நிர்ணய நிறுவனம் பாலுக்கான தரநிலைகளை ஸ்தாபித்துள்ள போதிலும், பல சிறிய அளவிலான பால் உற்பத்தியாளர்கள் இது தொடர்பில் போதிய விழிப்புணர்வு இல்லாத காரணத்தினால் பொருத்தமற்ற உற்பத்தி முறைகளை பயன்படுத்துகின்றனர். எனவே, பாலின் சுகாதார நிலையை அதிகரிக்கவும், பால் பொருட்களை பழுதடையாது பேணக்கூடிய தன்மையை அதிகரிக்கவும் பாலின் தரத்தை மேம்படுத்துவது மிகவும் முக்கியம் ஆகும். இலங்கையர்கள் மத்தியில் ஆரோக்கியமான மற்றும் போசணைமிகு பால் மற்றும் பால் உற்பத்திப் பொருட்களுக்கான அதிக கேள்வி காணப்படுவதன் காரணமாக, ஒரு நிலைபேறான வணிகத்திற்காக பால் மற்றும் பால் உற்பத்திப் பொருட்களின் போசணைத் தரம் மற்றும் தரப்பண்புகள் என்பவற்றை மேம்படுத்துவது இன்றியமையாததாகும். அதன் பிரகாரம், தேர்ந்தெடுக்கப்பட்ட பண்ணைகளில் பால் மற்றும் பால் உற்பத்திப் பொருட்களின் தரத்தை மேம்படுத்துவதற்கு தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் அவற்றுக்குத் தேவையான ஏனைய உள்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் என்பவற்றுக்கு 15.35 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.*

*புகைப்பட இலக்கம் 03*

*அதன் பிரகாரம், பொருத்தமான உபகரணங்கள் கொள்வனவு, பண்ணை மற்றும் அதனுடன் தொடர்புடைவற்றை அபிவிருத்தி செய்தல் என்பன 25 பால் உற்பத்தி அலகுகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. 2024 ஆம் ஆண்டின் இறுதியில், 25 செயற்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் அதற்காக முதலீடு செய்த தொகை 10.06 மில்லியன் ரூபாய் ஆகும். மதிப்பாய்வு செய்யப்பட்ட காலத்தில் 7.33 மில். ரூபாய் பெறுமதியான ஒதுக்கீட்டை சம்பந்தப்பட்ட பயனாளிகளுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 2025 ஆம் ஆண்டிற்கான நிதிப் பொறுப்பாக 2.49 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

*3.1.2 சிறந்த கால்நடை வளர்ப்பு நடைமுறைகள் மற்றும் மாதிரி பண்ணைகளை நிறுவுதல்*

*சிறந்த கால்நடை வளர்ப்பு நடைமுறைகளின் பயன்பாட்டைப் பிரபல்யப்படுத்தல், ஆரோக்கியமான கால்நடைகளைத் தேர்ந்தெடுத்து கொள்வனவு செய்து வளர்ப்பது மற்றும் அவற்றின் நலனில் இருந்து உகந்த பால் உற்பத்திகளைப் பெற்றுக்கொள்வதற்கு பண்ணையில் பின்பற்றப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் மேம்படுத்துவதன் மூலம் பண்ணையின் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன் 2024 ஆம் ஆண்டில் இந்த செயற்திட்டம் செயல்படுத்தப்பட்டது.*

*சிறந்த கால்நடை வளர்ப்பு நடைமுறைகளின் பயன்பாட்டின் கீழ் வளர்ப்பு இல்லங்களை விருத்தி செய்தல், பாலின் தரம் மற்றும் உற்பத்திக் கொள்ளளவை அதிகரித்தல் மற்றும் பால் பண்ணையை இலாபகரமாக்கும் நிலைக்கு உயர்த்துவதற்கு பண்ணையை அபிவிருத்தி செய்யும் பொருட்டு அரச உதவியாக பண்ணை ஒன்றுக்கு 0.5 மில். ரூபாய் வழங்கப்படுவதுடன் பயனாளிகளின் பங்களிப்பு மொத்த செயற்திட்ட மதிப்பீட்டில் 50% ஆகும். அதன்படி, 2024ஆம் ஆண்டு 30 பால் பண்ணைகளை அபிவிருத்தி செய்வதற்காக 15.00 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

*2024 டிசம்பர் மாத இறுதியளவில், 29 மாதிரி பண்ணைகளின் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், அதற்காக முதலீடு செய்யப்பட்ட தொகை 13.78 மில். ரூபாய் ஆகும். 2023 ஆம் ஆண்டின் பொறுப்புகளைத் தீர்ப்பதற்கு செலுத்த வேண்டிய தொகையான 6.15 மில். ரூபாய் இந்த ஆண்டு செலுத்தப்பட்டது.*

*புகைப்பட எண் 04*

*3.2 சிறிய மற்றும் நடுத்தர கோழிப் பண்ணை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்*

*நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்த செயற்திட்டத்தின் ஊடாக, கோழிப் பண்ணைகள் தொடர்பான உற்பத்திகளில் நாட்டை தன்னிறைவு அடையச் செய்து கோழி உற்பத்திப் பொருட்களின் நுகர்வை பிரபலப்படுத்தவும், கோழிப்பண்ணைகளை நிறுவுவதன் மூலம் புதிய தொழில் முயற்சியாளர்களை கோழிப்பண்ணை முகாமைத்துவத் துறைக்கு வழிநடத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை 35.00 மில். ரூபாய் ஆகும்.*

*இதன் கீழ் இரண்டு முக்கிய செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. அதாவது, ஒரு பயனாளிக்கு 10 ஒரு மாத வயதுடைய பெட்டைக் கோழிகள் அல்லது 15 பாலினம் தீர்மானிக்கப்படாத நாட்டுக் கோழிகள் வழங்குவதற்காக 31.98 மில். ரூபாய் மற்றும் வடமத்திய மாகாணத்தின் அநுராதபுரம் மாவட்டத்தில் மதிய உணவு வழங்கும் பாடசாலைகளில் மதிய உணவாக முட்டை ஒன்றை வழங்கும் நோக்கில் முன்னோடிச் செயற்திட்டமாக தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்கும் பிள்ளைகளின் பெற்றோருக்கு ஒரு மாத கோழிக் குஞ்சுகளை வழங்குவதற்கு 2.0 மில். ரூபாய் நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டது.*

*இதன் போது, ஒவ்வொரு மாகாணத்தின் தேவைக்கேற்ப பெட்டைக் கோழிகள் அல்லது பாலினம் தீர்மானிக்கப்படாத நாட்டுக் கோழிகள் வழங்கப்பட்டதுடன் இதற்காக 27.93 மில். ரூபாய் செலவிடப்பட்டு 2,521 பண்ணைகள் நிறுவப்பட்டுள்ளன. பயனாளிகளால் கோழி வளர்ப்பு இல்லங்கள் தயாரித்தல் மற்றும் கோழி உணவு வழங்கல் ஆகியவற்றை மேற்கொண்டனர். வட மத்திய மாகாணத்தின் அனுராதபுரம் மாவட்டத்தில் மதிய உணவு வழங்கும் தெரிவு செய்யப்பட்ட கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் உள்ள பிள்ளைகளின் 166 பெற்றோருக்கு ஒருவருக்கு தலா 10 குஞ்சுகள் வீதம் ஒரு மாத வயதுடைய குஞ்சுகளை வழங்குவதற்கு 1.99 மில். ரூபாய் செலவிடப்பட்டது.*

*புகைப்பட எண் 05*

*3.3 பன்றி வளர்ப்புத் தொழிற்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்*

*சுற்றுச்சூழல் பிரச்சினைகளை குறைத்து, பன்றி வளர்ப்புத் தொழிற்துறையை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான உள்ளீடுகளை வழங்கும் நோக்கில், 2024 ஆம் ஆண்டில் உந்த செயற்திட்டத்ததை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டது. இதற்காக 10.30 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.*

*இது முறையான ஒரு கழிவு முகாமைத்துவ அமைப்பை உருவாக்குதல், பன்றி வளர்ப்பு இல்லங்களின் நிலையை விருத்தி செய்தல் மற்றும் உயிர்வாயு அலகுகளை நிறுவுதல் ஆகிய செயற்பாடுகள் மூலம் சூழலுக்கு உகந்த முறையில் பண்ணையை அபிவிருத்தி செய்வதற்கு வழிவகுக்கும். 2024 டிசம்பர் மாத இறுதியில், மேற்கு, வடமேற்கு, வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் ஊவா ஆகிய மாகாணங்களுக்கான 68 பன்றி வளர்ப்புப் பண்ணைகளின் செயற்திட்ட அறிக்கைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அதன்படி, அந்த மாகாணங்களில் சூழல் நட்பு 55 பன்றிப் வளர்ப்புப் பண்ணைகளின் பணிகளை நிறைவு செய்யப்பட்டுள்ளன. இதற்கு 8.85 மில். ரூபாய் நிதி செலுத்தப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட பன்றி வளர்ப்புப் தொழிற்துறை செயற்திட்டத்திற்காக. செலுத்த வேண்டியிருந்த 1.84 மில். ரூபாய் தொகையை இந்த ஆண்டில் செலுத்தப்பட்டுள்ளது.*

*புகைப்பட எண் 06*

*3.4 ஆடு வளர்ப்புத் தொழிற்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்*

*2024 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டத்தின்படி, கால்நடை அபிவிருத்திப் பிரிவின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்த செயற்திட்டத்திற்காக, கிழக்கு, தெற்கு மற்றும் வட மாகாணங்களில் ஆடு வளர்ப்புக் கொத்தணிக் கிராமங்களை நிறுவுவதற்காக 15.45 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இவற்றில், கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களில் தலா 2 ஆடு வளர்ப்புக் கொத்தணிக் கிராமங்களும், தென் மாகாணத்தில் ஒரு ஆடு வளர்ப்புக் கொத்தணிக் கிராமமும் உருவாக்கப்பட்டன.*

*தெரிவு செய்யப்பட்ட மாகாணங்களில் ஆடு வளர்ப்புக்கு அதிக சாத்தியக்கூறுகள் கொண்ட, மிருக வைத்தியப் பிரிவுகள் வளர்ப்புக் கொத்தணிக் கிராமங்களை உருவாக்கத் தேர்ந்தெடுக்கப்படுவதுடன், அந்தக் கிராமங்களில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இந்த செயற்திட்டத்தின் கீழ் உதவிகள் வழங்கப்பட்டதுடன், உயர்தர ஆடுகளை கொள்வனவு செய்வதற்கு அல்லது ஆட்டுக் கொட்டில்களை நிர்மாணிப்பதற்கு பயனாளியின் 50% பங்களிப்பின் கீழ் ஒரு பயனாளிக்கு 200,000 ரூபாய் வீதம் உதவி வழங்கப்பட்டது.*

*2024 ஆம் ஆண்டில், ஆடு வளர்ப்புக் கொத்தணிக் கிராம செயற்திட்டத்திற்கு பின்வரும் விதத்தில் நிதி ஒதுக்கப்பட்டது.*

| மாகாணம் | மாவட்டம் | மிருக வைத்தியப் பிரிவு | ஒதுக்கப்பட்டது செய்த தொகை (மில். ரூபா) |
|---|---|---|---|
| கிழக்கு | திருகோணமலை | குச்சவெளி | 6.12 |
| | மட்டக்களப்பு | வவுணதீவு | |
| வடக்கு | மன்னார் | முருங்கன் | 6.12 |
| | வவுனியா | வவுனியா | |
| தெற்கு | மாத்தறை | வெலிகம | 3.06 |
| மொத்தம் | | | 15.30 |

*தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தில் வெலிகம கால்நடை வைத்திய பிரிவைச் சேர்ந்த 15 பயனாளிகளுக்கு 3.06 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும் 8 பயனாளிகள் மட்டுமே இந்த செயற்திட்டத்திற்கு பங்களிப்புச் செய்திருந்ததோடு, மீளாய்வுக் காலம் முடிவடைவதற்குள் அனைத்து மாகாணங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி விடுவிக்கப்பட்டு செயற்திட்டத்தின் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.*

*புகைப்பட இலக்கம் 07*

## *2024 ஆம் ஆண்டில் வெளிநாட்டு நிதியுதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்திட்டங்களின் முன்னேற்றம்*

*01. சிறிய அளவிலான பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கங்களை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம்*

*இலங்கையில் பால் உற்பத்தித் தொழிற்துறையை ஊக்குவிக்கும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்படும் இந்த செயற்திட்டத்தின் பிரதான நோக்கம், அந்தந்த பிரதேசங்களில் பெறுமதி சேர்க்கப்பட்ட பால் பொருட்களை உற்பத்தி செய்து, பால் உற்பத்திப் பொருட்களின் நுகர்வை பிரபல்யப்படுத்துவதன் மூலம் சமூகத்தின் போஷாக்கு மட்டத்தை அதிகரிப்பதாகும். இதன் கீழ் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் 06 சிறிய அளவிலான பால் பதப்படுத்தும் நிலையங்களை நிறுவி அபிவிருத்தி செய்வதற்கான முதலீடு 13.90 மில்லியன் யூரோக்கள் ஆகும். இந்த செயற்திட்டம் 01.01.2020 முதல் 31.12.2024 வரை நடைமுறைப்படுத்தப்பட்டது.*

| தொ/ இல | பால் பதப்படுத்தும் நிலையம் | பௌதீக முன்னேற் றம் (%) | உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பித்த காலம் |
|---|---|---|---|
| 01. | சிறிய அளவிலான பால் பண்ணை அபிவிருத்தி சங்கம், வாரியபொல | 100 | 2023.07.04 |
| 02. | சக்சீட் இண்டர்நஷனல் (தனி) நிறுவனம், வென்னப்புவ | 100 | 2024.01.19 |
| 03. | வரையறுக்கப்பட்ட பொலன்னறுவை மாவட்ட பால் வழங்குநர்களின் கூட்டுறவுச் சங்கம் | 100 | 2024.04.05 |
| 04. | வரையறுக்கப்பட்ட நாவலப்பிட்டி பல்நோக்கு கூட்டுறவு சங்கம், நாவலப்பிட்டி | 100 | 2024.01.04 |
| 05. | ஹெரிடேஜ் ஹெல விவசாய அபிவிருத்தி சங்கம், கெப்பிட்டிப்பொல | 100 | 2025 ஆம் ஆண்டில் உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. |
| 06. | அத்தனகல்ல பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 100 | 2024.09.25 |

*இந்த செயற்திட்டத்துடன் தொடர்பான வழங்கல் ஒப்பந்த உடன்படிக்கையானது 2019.02.27 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டது. அதன் பிரகாரம், தெரிவு செய்யப்பட்ட 03 பயனாளிப் பால் உற்பத்தி கூட்டுறவு சங்கங்கள் மற்றும் 03 தனியார் பால் உற்பத்தி விவசாயச் சங்கங்கள் என்பவற்றுக்கு நாளாந்த 5000 லீட்டர் பால் உற்பத்திக் கொள்ளளவைக் கொண்ட சிறிய அளவிலான 06 பால் பதப்படுத்தும் நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. தற்போது இத்தொழிற்சாலைகளின் முழுமையான பரிசோதனை பணிகள் (commissioning) அனைத்தும் நிறைவு செய்யப்பட்டுள்ளன.*

*செயற்திட்ட ஒப்பந்தத்திற்கு அமைவாக, அரசுத் தரப்பின் தலையீட்டின் கீழ் நிறைவு செய்யப்பட வேண்டிய பணிகள் அனைத்தும் 31.12.2023க்குள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. பண்டாரகம ஹெரிடேஜ் ஹெல விவசாய அபிவிருத்திச் சங்கத்திற்குச் சொந்தமான தொழிற்சாலையில் உற்பத்தியை ஆரம்பிப்பதற்காக பயனாளி தரப்பினரால் நிறைவு செய்யப்பட வேண்டிய பணிகள் தற்போது இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளன. இந்த செயற்திட்டத்துடன் தொடர்பான இயந்திரங்களை இறக்குமதி செய்வதற்கு 12.56 மில்லியன் யூரோக்கள் செலவிடப்பட்டுள்ளன.*

*புகைப்பட இலக்கம் 08 - 09*

*கால்நடை வளங்கள் பிரிவின் கீழ் உள்ள*
*நிறுவனங்கள் மூலம் நடைமுறைப்படுத்தும் பிரதான அபிவிருத்தித் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம்*

## *01.* கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்

### 1.1. அறிமுகம்

1978 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் இலங்கையில் கால்நடை அபிவிருத்திக்கான பிரதான அரச நிறுவனம் ஒன்றாகும். அது விவசாய அமைச்சின் கீழ் செயற்படுகின்றது. அவ்வாறே கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் நாட்டில் ஏற்படுகின்ற கால்நடை நோய்களை கட்டுப்படுத்துதல் மற்றும் ஒழித்தல் போன்றவற்றிற்காக சட்டரீதியில் உருவாக்கப்பட்ட ஒரு தேசிய நிறுவனமாகும். அத்துடன் இத்துறையில் ஆய்வு மற்றும் அபிவிருத்தி, தொழில்நுட்பத் தலைமைத்துவத்திற்கான ஏற்பாடுகள், மற்றும் கால்நடை இனவிருத்தி நடவடிக்கைகள் பொருட்டு விஷேட ஆலோசணைகள் மற்றும் உதவி சேவைகளை வழங்குதல் தொடர்பாக சட்டரீதியான அதிகாரத்தை கொண்டுள்ள ஒரு தேசிய நிறுவனமாகும். தீவு முழுவதையும் உள்ளடக்கியதாக மேற்கொள்ளப்படுகின்ற வேறு பிரதான நடவடிக்கைகளுல் கால்நடை வளர்ப்பு தொடர்பில் பயிற்சியாளர்களை பயிற்றுவித்தல், இத்துறையை மேம்படுத்தும் பொருட்டு உரிய கருத்திட்டங்களை தயாரித்தல், பொருளாதார மதிப்பீடு மற்றும் விஷேட அபிவிருத்தி திட்டங்கள் என்பனவாகும். கால்நடைவள துறையில் அபிவிருத்தி வசதிகளை திட்டமிடுவதன் பொருட்டு இத்திணைக்களத்தினால் சட்டங்களை கொண்டு செயற்படுத்தப்படுகின்றன. மாகாண சபைகளினது உருவாக்கத்துடன் கா.உ.சு.திணைக்களத்தின் வெளிக்கள செயற்பாடுகள் 9 மாகாண கா.உ.சு.திணைக்களத்தின் பால் பகிர்ந்தளிக்கப்பட்டன.

தேசிய கா.உ.சு. திணைக்களத்தினால் தொழில்நுட்ப தலைமைத்துவம், நிபுனத்துவச் சேவை, மற்றும் உதவி சேவை என்பவற்றை மா.கா.உ.சு. திணைக்களம் வழங்குவதன் மூலம் கால்நடை துறையில் பாரிய செயற்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மிருக வைத்திய பணிமனைகள் மிருக வைத்தியர்களினால் முகாமை செய்யப்படுகின்றன. இதுவே கா.உ.சு.திணைக்களத்தின் பிரதான செயற்பாட்டு அலகாகும். 337 பிரதேச மிருக வைத்திய பணிமனைகள் நாடு முழுவதிலும் பரந்து காணப்படுகின்றன. இப்பணிமனைகள் மா.கா.உ.சு.திணைக்களத்தின் கீழ் செயற்படுகின்றன. சகல கால்நடை அபிவிருத்தி நிகழ்ச்சிகளும் இதன் மூலம் செயற்படுத்தப்படுகின்றன.

### 1.2. 2025 ஆம் ஆண்டின் நிதி இலக்கு

| தொ.இ | பிரதான அபிவிருத்தி வேலைத்திட்டம் | மதிப்பிடப்பட்ட நிதி (ரூ.மி) |
|---|---|---|
| 1 | மூலதன செலவு | 898.00 |
| 2 | மீண்டுவரும் செலவு | 932.93 |

**1.3. 2025 ஆம் ஆண்டு பௌதீக இலக்கு (செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள வேலைத்திட்டம் மற்றும் கருத்திட்டம்)**

| தொ. இல | வேலைத்திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | மொத்த செலவு (ரூ.மி) |
|---|---|---|---|---|
| 1 | கால்நடை இனவிருத்தி வேலைத்திட்டம் | | | 200.00 |
| | செயற்கைமுறை சினைப்படுத்தல் செயறபாட்டு வேலைத்திட்டம் | உற்பத்தி செய்யப்பட்ட மாட்டு விந்து சொட்டுக்களின் எண்ணிக்கை | 230,000 | |
| | | ஒவ்வொரு மிருக வைத்திய பணிமனை பிரிவுகளில் மேற்கொள்ளப்படுகின்ற செயற்கை முறை சினைப்படுத்தல்களின் எண்ணிக்கை | 260,000 | |
| | | கன்றுகளின் பிறப்பு எண்ணிக்கை | 100,000 | |
| | உத்தியோகத்தர்கள் மற்றும் பண் ணையாளர்கள் பொருட்டு அறிவூட்டும் வேலைத் திட்டங்களை நடாத்துதல். | பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்கள் மற்றும் பண்ணையாளர்களின் எண்ணிக்கை | 180 | |
| | விலங்கு தீவனம் அபிவிருத்தி கருத்திட்டம். | | | |
| | புல் அபிவிருத்தி முயற்சியான்மையாளர்களை பதிவு செய்தல் | பதிவு செய்யப்பட்டுள்ள புல் அபிவிருத்தி முயற்சியான்மையாளர்களது எண்ணிக்கை | 50 | |
| | மேம்படுத்தப்பட்ட புல் இனங்களின் நடுகை பொருள் வினியோகிக்கும் பொருட்டு வசதிகள் செய்து கொடுத்தல். | வினியோகிக்கப்பட்ட நடுகை பொருள் எண்ணிக்கை | கேள்விக் கு ஏற்ப | |
| 2. | விலங்குகளின் தொற்றுநோய் தடுப்பு வேலைத்திட்டம் | தடுப்பூசி ஏற்றப்பட்ட விலங்குகளின் எண்ணிக்கை | | 46.00 |
| | | கால்வாய்- | 270,000 | |
| | | கருங்காலி | 100,000 | |
| | | தொண்டையடைப்பான்- | 135,000 | |
| 3 | கால்வாய் நோய் தடுப்பூசி உள்நாட்டு உற்பத்தி | உற்பத்தி செய்யப்பட்ட தடுப்பூசிகளின் எண்ணிக்கை | 300,000 | 45.00 |
| 4 | மடியழற்சி கட்டுப்பாட்டு வேலைத்திட்டம். | உற்பத்தி செய்யப்படுகின்ற பாலூட்டி வெளியேற்றங்களின் எண்ணிக்கை | 30,000 | 20.00 |
| 5 | உயர் தரமான விலங்கு தடுப்பூசிகளை உள்நாட்டில் உற்பத்தி செய்தல். | உற்பத்தி செய்யப்படுகின்ற தடுப்பூசிகளின் எண்ணிக்கை | | 30.00 |
| | | | | |
| | | தொண்டை அடைப்பான் (HS), | 250,000 | |
| | | கருங்கால் நோய் (BQ), | 130,000 | |
| | | ரெனிகேட் (ND), | 4.5 மில் | |
| | | Fowl Cholera, | கேள்விக் கு ஏற்ப | |
| | | Swine pasteurella | | |
| 6 | கோழி சுகாதார முகாமையின் ஊடாக கோழி இறைச்சி மற்றும் முட்டை ஏற்றுமதி | பறவைக் காய்ச்சல் நோய் தொற்று பற்றி பரீட்சிப்பு செய்த மாதிரிகளின் எண்ணிக்கை | 33,150 | 10.00 |
| | | சல்மனெல்லா நோய் கட்டுப்பாடு | 290 | |

| தொ. இல | வேலைத்திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | மொத்த செலவு (ரூ.மி) |
|---|---|---|---|---|
| | வசதிகளை திட்டமிடல். | தொடர்பாக பரீசோதிக்கப்பட்ட இனவிருத்தி மற்றும் விதை அடைகாப்புகளின் எண்ணிக்கை | | |
| 7 | கால்நடைவள ஆராய்ச்சி வேலைத்திட்டம் | செயற்படுத்தப்படுகின்ற ஆய்வு கருத்திட்டங்களின் எண்ணிக்கை | 27 | 80.00 |
| | | ஆய்வுகூட சேவைகளை பெற்றுக் கொள்வதன் பொருட்டு பதிவு செய்யப்பட்ட வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை | 3,500 | |
| 8 | மிருக வைத்திய பணிமனைகளில் சேவை வழங்கும் முறையை மேம்படுத்துதல் (விலங்கு தடுப்பு நிலையம், மற்றும் ஏற்றுமதி முறையை வளையமைத்தல் மற்றும் எண்மானப்படுத்தல்). | திட்டமிடப்பட்ட செயற்பாடுகளின் வீதமாக | 100% | 25.00 |
| 9 | விலங்குகளை இனங்காணும் வேலைத்திட்டம் | காதடையாளம் இடப்பட்ட விலங்குகளின் எண்ணிக்கை | 100,000 | 20.00 |
| 10 | விலங்கு தனிமைப்படுத்தல் அலகுகளை விரிவாக்குதல் மற்றும் நவீனமயப்படுத்தல். | திட்டமிடப்பட்ட நீர்மானங்களின் சதவீதம் | 100% | 5.00 |
| 11 | வனவிலங்கு நோய் கட்டுப்பாட்டுத் திட்டம். | கட்டுப்படுத்தப்பட்ட நோய்களின் எண்ணிக்கை | 05 | 2.00 |
| 12 | கால்நடைத் தீவனம் மற்றும் கால்நடை உற்பத்திகளின் தரத்தை சான்றுபடுத்துதல். | பகுப்பாய்வு செய்யப்பட்ட கால்நடைத் தீவன மாதிரிகளின் எண்ணிக்கை | 5,000 | 40.00 |
| 13 | விலங்கு பரிபாலன டிப்ளோமாதாரர்களை உருவாக்கும் இயலுமையை வலுப்படுத்துதல். | விலங்கு பரிபாலன டிப்ளோமாதார மாணவர்களின் எண்ணிக்கை | 80 | 60.00 |
| 14 | கால்நடைப் புலனாய்வு நிலையங்களில் கோழி மற்றும் மீன் நோய்களை கண்டறிந்து கட்டுப்படுத்துதல். | ஏற்றுமதி வசதிகள் பொருட்டு சான்றுபடுத்தப்பட்ட மீன் உற்பத்தி நிலையங்களின் எண்ணிக்கை | 125 | 5.00 |
| 15 | குண்டசாலை செயற்கைமுறை சினைப்படுத்தல் நிலையத்தை மேம்படுத்துவதன் ஊடாக தரத்தில்கூடிய மாட்டு விந்து உற்பத்தி வினியோகத்தை மேம்படுத்தும் வேலைத்திட்டம். | இறக்குமதி செய்யப்பட்ட உயர் உற்பத்தி இயலுமையுடன் கூடிய உயர்ந்த காளைகளின் எண்ணிக்கை | 12 | 100.00 |
| 16.1 | தரப்பாதுகாப்பு வேலைத்திட்டம் | | | 20.00 |
| | கால்நடை தீவனங்களில் தரத்தினை சான்றுபடுத்தல் | பதிவு உற்பத்தி எண்ணிக்கை | 3,600 | |

| தொ. இல | வேலைத்திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | மொத்த செலவு (ரூ.மி) |
|---|---|---|---|---|
| | கால்நடை தீவனங்கள் மற்றும் கால்நடை தீவனங்களில் அடங்கியுள்ள பொருள் ஒழுங்கு முறையின் ஊடாக சர்வதேச வர்த்தகத்திற்கு வசதிகள் செய்து கொடுத்தல் | முன் அனுமதிகள் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | 7,000 | |
| | நிலையான மதிப்பீட்டு செயற்பாடுகளின் ஊடாக கால்நடை மருந்து உற்பத்தி மற்றும் உயிரியல் விஞ்ஞான உற்பத்தி ஒழுங்கு முறைகள் மற்றும் பதிவு செய்தல்/அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொடுத்தல் | பதிவு செய்தல்/புதுப்பித்தல் எண்ணிக்கை | கேள்விக் கு ஏற்ப | |
| | கோழி மூதாதையர்கள் மற்றும் பெற்றோர் பரம்பரை இனவிருத்தி பண்ணைகளை ஸ்தாபிப்பதற்கு உரிய ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளல் மற்றும் ஏற்றுமதி நாடுகளின் இறக்குமதிகளை பதிவு செய்தல் | பதிவு செய்தல்/புதுப்பித்தல் எண்ணிக்கை | 200 | |
| 16.2 | சமூக பொருளாதார அபிவிருத்தி வேலைத்திட்டம் | மேற்கொள்ளப்பட்ட கற் கைகள்/ஆய்வுகளின் எண்ணிக்கை | 04 | |
| | | வெளியிடப்பட்ட வெளியீடுகளின் எண்ணிக்கை | 10 | |
| 16.3 | கால்நடைவள பிரபள்யப்படுத்தும் வேலைத்திட்டம். | தயாரிக்கப்பட்ட தொலைக்காட்சி/வானொலி நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | வானொலி -50 தொலைக ட்சி - 20 | |
| | | நடாத்தப்பட்ட கண்காட்சிகளின் எண்ணிக்கை | விண்ணப் பத்திற்கு அமைய | |
| 16.4 | புத்தகம் மற்றும் வெளியீட்டு வேலைத்திட்டம். | நூலகத்திற்கு புத்தகம் கொள்வனவு செய்தல். | | |

**1.4. 2024 ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டு இறுதியில் நிறுவன வேலைத் திட்டங்களின் நிதி முன்னேற்றம் (2024.12.31 ஆம் திகதி வரை)**

| இல | வேலைத்திட்டம் | 2024 ஆண்டிற்கு ஒதுக்கிய நிதி (ரூ.மி) | 2024.12.31 ஆம் திகதி வரையிலான செலவு | நிதி முன்னேற்றத்தின சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | மூலதன செலவு | 73.00 | 36.29 | 49.73 |
| 2 | மீண்டுவரும் செலவு | 870.43 | 824.76 | 94.75 |
| | **அபிவிருத்தி வேலைத்திட்டம்** | | | |
| 1 | கால்நடை சுகாதாரம் மற்றும் கால்நடை ஆராய்ச்சி | 233.20 | 196.80 | 84.39 |
| 2 | கால்நடைவள அபிவிருத்தி மற்றும் பயிற்சி | 358.80 | 233.51 | 65.08 |
| | **விவசாய நவீனமயமாக்கள் வேலைத்திட்டம் மற்றும் அமைச்சின் ஒதுக்கீடு** | | | |
| 1 | உள்நாட்டு பால் உற்பத்தியை திறனாக மேம்படுத்துவதன் ஊடாக பாற்பண்ணையாளர்களின் வருமானத்தை உயர்த்துதல் மற்றும் பாற் பண்ணையாளர்களின் முயற்சியான்மை அபிவிருத்தி வேலைத்திட்டம். | 35.00 | 26.32 | 75.21 |
| | **வெளிநாட்டு கருத்திட்டம்** | | | |
| 1 | FAO/TCP/SRI/3903 – தரமான புல் மற்றும் அவரையினங்களை இனங்காணல் மற்றும் அவற்றின் போசனை தரத்தை முகாமை செய்வதன் ஊடாக சிற்றளவிலான பாற்பண்ணையாளர்களை மேம்படுத்தும் கருத்திட்டம். | 16.00 | 8.1 | 50.62 |
| 2 | ஆய்வுகூட வளையமைப்பை வலுப்படுத்துதல். | 1.44 | 0.43 | 30.23 |

**1.5. 2024.12.31 ஆம் திகதியாகின்ற போது அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் பௌதீக முன்னேற்றம்.**

**1. கால்நடை இனவிருத்தி அலகு**

**1.1 கால்நடை இனவிருத்தி கருத்திட்டம்**

**1.1.1 செயற்கை முறை சினைப்படுத்தல் வேலைத்திட்டம்.**

செயற்கைமுறை சினைப்படுத்தல் வேலைத்திட்டத்தின் கீழ் 2024.12.31 ஆம் திகதி ஆகின்ற போது செயற்கைமுறை சினைப்படுத்தல்கள் 202,082 உம், கர்ப்ப பரிசோதனை 67,111 உம், கன்றீனல் 61,189 உம் மேற்கொள்ளப்பட்டன. குண்டசாலை செயற்கை முறை சினைப்படுத்தல் நிலையத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற மாட்டு விந்துகளின் எண்ணிக்கை 216,292 ஆகும். செயற்கைமுறை சினைப்படுத்தல் நுட்பவியலாளர்களுக்கான பயிற்சி வேலைத்திட்டம் நடாத்துவதன் கீழ் 180 தொழில்நுட்பவியலாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

**1.1.2 கால்நடை தீவன வள மேம்பாடு**

இந்த வேலைத் திட்டத்தின் 36 பேர் பதிவு செய்யப்பட்டு உரிய சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. இனவிருத்தி நிலையங்களில் புல் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் குண்டசாலை செயற்கை

முறை சினைப்படுத்தல் நிலையத்தில் மேம்படுத்தப்பட்ட புற் செய்கையின் பொருட்டு உரிய நீர் வழங்கள் வளையமைப்பு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அந்த நிலையங்களில் புல் பாதுகாப்பு நடவடிக்கையின் பொருட்டு தேவையான ஹே பேய்லர் (Hay Bailer) இயந்திரம் 02 கொள்வனவு செய்யப்பட்டு அங்கு மாதிரி நடவடிக்கைகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளன. புல் நடுகைப் பொருட்களை பெற்றுக் கொள்வதன் பொருட்டு இது வரையில் கோரப்பட்டுள்ள சகல தேவைப்பாடுகளும் பூரணப்படுத்தப்பட்டுள்ளன.

### 1.1.3 ஆடு இனத்தை மேம்படுத்ததல்

ஆடு இனத்தை அபிவிருத்தி செய்வதன் கீழ் இனவிருத்திக்கு பொருத்தமான ஆடுகள் வினியோகிப்பதற்கு உரியதான பட்டி ஆடுகள் 35 (கடாய் -06, மறியாடு – 29) களத்திற்கு வினியோகிக்கப்பட்டுள்ளன. இம்புலன்தண்ட ஆடு இனவிருத்தி நிலையத்தில் Caprine Arthritis Encephalitis (CAE) நோய் பரவியதன் காரணமாக விலங்குகள வினியோகிப்பது 2024 ஏப்ரல் மாதம் முதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

## 1.2. குண்டசாலை செயற்கைமுறை சினைப்படுத்தல் நிலையத்தை அபிவிருத்தி செய்வதன் ஊடாக தரத்தில்கூடிய மாட்டு விந்து சொட்டுக்ளை உற்பத்தி செய்தல் மற்றம் வினியோகித்தலை மேம்படுத்தும் கருத்திட்டம்.

| விபரம் | 2024.12.31 ஆம்திகதி அன்று முன்னேற்றம் |
|---|---|
| காலை மாடுகளின் இறக்குமதி<br><br>நிலிரவி - 02<br>சஹிவால் - 05 | பொருட் கொள்வனவு செயற்பாட்டை பின்பற்றி காளை மாடுகளை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் அது வெற்றியடையாமை காரணமாக தற்போது Government to Government முறைமையின் கீழ் காளை மாடுகள் கொள்வனவு செய்வதற்கு நடவடிகை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| உயிரியல் பாதுகாப்பு வேலியை நிர்மானித்தல். | தற்போது விலைமனு கோரப்பட்டுள்ளது. |
| உபகரண கொள்வனவு | புதிய உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டள்ளதோடு அதன் மூலம் செயற்கை முறை சினைப்படுத்தலுக்கு தேவையான மாட்டு விந்து உற்பத்திக்கு தேவையான மாட்டு விந்து உற்பத்தியை திறனாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |

## 1.3. தரமான புல் மற்றும் அவரை இனங்களை இனங்காணல் மற்றும் அவற்றின் போசனை நிலமையை முகாமை செய்வதன் ஊடாக சிற்றளவிலான பாற் பண்ணையாளர்களை மேம்படுத்தும் வெளிநாட்டு கருத்திட்டம்.

இந்த கருத்திட்டத்திற்குரிய மேம்படுத்தப்பட்ட புல் மற்றும் அவரை இனங்கள் 02 (Stylosanthus guanensis var. guanensis மற்றும் Napier hybrid CO-6) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அதற்குரியதான தாய் புல் நாற்று மேடைகள் 03 ஸ்தாபிக்கப்பட்டு (பொலன்னறுவை செயற்கைமுறை சினைப்படுத்தல் நிலையம்/தெலஹர ஆடு இனவிருத்தி நிலையம்/மிருக ஆராய்ச்சி நிறுவனத்தின் பண்ணை) நடாத்திச் செல்லப்படுகின்றன. மாகாண மட்டத்தில் மாதிரிப் புல் நாற்று மேடைகள் 42 வடக்கு, ஊவா, தெற்கு, மத்திய, வடமத்திய, வடமேல், மற்றும் கிழக்கு போன்ற மாகாணங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதோடு, நடுத்தர அளவிலான முயற்சியான்மையாளர்கள் 49 பேர் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளார்கள். இந்த கருத்திட்டத்தின் பயிற்சி வேலைத் திட்டங்களுக்கு உரிய மாகாணங்கள் 07 இன்

உத்தியோகத்தர்கள், பயனாளி பண்ணையாளர்கள் மற்றும் முயற்சியான்மையாளர்கள் 371 பேரும் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்.
*புகைப்பட இலக்கம் 10 - 12*

**02. கால்நடை சட்ட ஒழுங்கு அலகு**

**2.1. விலங்குகளை இனங்காணும் வேலைத்திட்டம்.**

இந்த கருத்திட்டத்தின் கீழ் கள விரிவாக்கள் உத்தியோகத்தர்களால் பதிவு செய்யப்படுகின்ற பண்ணைகள் அவதானிக்கப்படுவதுடன் அவற்றில் உள்ள கால்நடைகள் காதடையாளம் இடப்படுகின்றன. மீளாய்வு கால இறுதியின் போது 81,720 விலங்குகள் காதடையாளமிடப்பட்டு உள்ளதோடு அச்சிடப்பட்ட மற்றும் வினியோகிக்கப்பட்ட காதடையாளங்களின் எண்ணிக்கை 93,012 ஆகும். இது விலங்குகளின் எண்ணிக்கை தொடர்பான சரியான தரவுகளை பேனுவதற்கும், சட்டத்திற்கு முரனாக விலங்குகளை கொண்டு செல்லல் மற்றும் அறுத்தல் போன்றவற்றை தவிர்ப்பதற்கும், எதிர்கால பால் உற்பத்தியில் எதிர்வு கூறவும் மற்றும் திறனற்ற விலங்குகளை நீக்குவதற்கும் துனையாக உள்ளது.

**2.2. விலங்கு தனிமைப்படுத்தல் அலகினை விஸ்தரித்தல் மற்றும் நவீனமயப்படுத்தல்.**

இக்கருத்திட்டத்திற்காக 292-02-03-06-2507 செலவுத் தலைப்பின் கீழ் 2024 ஆம் ஆண்டின் பொருட்டு ரூபா 4.00 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2023 ஆம் ஆண்டு இநத செலவு தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பிரதான செயற்பாடுகள் 02 கெரீழும்பு விலங்கு தனிமைப்படுத்தல் பணிமனையின் கூறை மற்றும் படலையை திருத்தம் செய்வதன் பொருட்டும் மற்றும் கட்டுநாயக்க விலங்கு தனிமைப்படுத்தல் பணிமனையின் பொருட்டு லெப்டொப் கணனி 03 கொள்வனவு செய்வதன் பொருட்டு ரூபா 3.03 நிதி செலுத்தப்பட்டது.

அவ்வகையில் 2024 ஆம் ஆண்டு மீதி ரூபா 962,000 2024.10.29 ஆம் திகதி திருத்தம் செய்வதற்கு உட்படுத்தப்பட்டுள்ள பொருட் கொள்வனவு திட்டமிடலுக்கு அமைய அதன் செயற்பாடுகள் பொருட்டு பயன்படுத்தப்பட்டது. இந்த ஆண்டு மூன்றாம் காலாண்டில் அச்சு இயந்திரங்கள் 04 (ரூ.0.3மி), ஒளிப்படப்பிரதி இயந்திரம் (ரூபா.0.36 மில்லியன்) மற்றும் Micro Chip Readers 04 உம் (ரூபா 0.31 மில்லியன்) கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதோடு அங்கு Micro Chip Readers 04 இனை ஏனைய இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டது. எதிர்பார்த்த விலை மனுவிற்கு அமைய ஒப்பீட்டளவில் சந்தையில் விலை மனு உயர்ந்ததன் காரணமாக Micro Chip Readers 04 கொள்வனவு செய்ய முடியாது போனது.

**2.3. தரபாதுகாப்பு வேலைத்திட்டம்**

"தர பாதுகாப்பு மற்றும் தனிமைப்படுத்தல் நடவடிக்கை" வேலைத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளுள் 2024 ஆம் ஆண்டின் பொருட்டு இனங்காணப்பட்ட இலக்குகளாக கால்நடை தீவனம் தொடர்பாக நடவடிக்கைகள், கால்நடை மருந்து அதிகார சபையின் நடவடிக்கைகள், கால்நடை மற்றும் கால்நடை உற்பத்திகளது ஏற்றுமதி இறக்குமதி நடவடிக்கைகள் பொருட்டு முன் அனுமதி கடிதங்களை வெளியிடுதல் மற்றும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளல் போன்ற நடவடிக்கைகள் பொருட்டு மொத்தமாக 76% அளவு முன்னேற்றம் அடையப் பெற்றுள்ளன.

**03. கால்நடை சுகாதார அலகு**

**3.1. கால்நடைகளில் தொற்று நோய்களை தடுக்கும் வேலைத்திட்டம்**

இந்த வேலைத் திட்டத்தின் கீழ் நாடு பூராகவும் உள்ள விலங்கு நோய்களை கட்டுப்படுத்தும் பொருட்டு நடவடிக்கைகள் மற்றும் கால்நடைப் புலனாய்வு நிலையங்களில் நோய் பரீட்சிப்பு செய்யப்படுகின்றன. மேலும் தொற்று நோய் தடுப்பூசி உட்பட கால்நடை நோய் கட்டுப்பாட்டிற்கு உரிய சகல செயற்பாடுகளும் இதனூடாக மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த கருத்திட்டத்தின் கீழ் கால்வாய் நோய் தடுப்பூசி சொட்டுக்கள் 281,340 உம், கருங்காலி நோய் தடுப்பூசி சொட்டுக்கள் 60,598 உம் மற்றும் தொண்டையடைப்பான் தடுப்பூசி சொட்டுக்கள் 148,620 உம் களத்திற்கு வினியோகம் செய்யப்பட்டன. அத்துடன் கால்வாய் நோய்க்கான தடுப்பூசி ஏற்றுதல் 254,174 உம் கருங்காலி நோய்க்கான தடுப்பூசி ஏற்றுதல் 72,324 உம் தொண்டையடைப்பு நோய்க்கான தடுப்பூசி ஏற்றம் 92,650 உம் தற்போதைக்கு களத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முன்னேற்றம் ரூபா 13.2 ஆகும்.

**3.2. கோழி சுகாதார முகாமையின் ஊடாக கோழி இறைச்சி மற்றும முட்டை ஏற்றுமதிக்கான வசதிகள் செய்து கொடுத்தல்**

கோழி சுகாதார முகாமையின் ஊடாக கோழி இறைச்சி மற்றும் முட்டை ஏற்றுமதியை மேம்படுத்துவது இக்கருத்திட்டத்தின் நோக்கமாகும். அதன் பொருட்டு பொருளாதார ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த சல்மனெல்லா, ரெனிகட் மற்றும் பறவைக் காய்ச்சல் கட்டுப்பாட்டு வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

சல்மனெல்லா நோய் கட்டுப்பாடு வேலைத் திட்டத்தின் கீழ் கோழி இனவிருத்தி பண்ணைகளை 89 கண்கானிப்புக்களும், அடைகாப்பு கண்கானிப்பு 104 உம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ரெனிகேட் நோய் கட்டுப்பாட்டின் கீழ் தடுப்பூசிகள் 5,280,600 உம் வினியோகிக்கப்பட்டன. பறவைக் காய்ச்சல் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் இரத்த மாதிரிகள் 3,207 மற்றும் சாணம் மாதிரிகள் மற்றும் Cloacal swabs 19,146 உம் பறவைக் காய்ச்சல் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ன.

**3.3. கால்நடைப் புலனாய்வு நிலையங்களில் கோழி மற்றும் மீன் நோய்களை இனங்காணல் மற்றும் தடுப்பு வசதிகளை மேம்படுத்துதல்**

இந்த கருத்திட்டத்தின் கீழ் விஷேடமாக ஏற்றுமதியை நோக்காகக் கொண்டு அழகு மீன் பண்ணைகள் பொருட்டு அவசரமாகவும், பொதுவானதாகவும் மிகவும் இலாபகரமானதுமான முறையின் கீழ் மூலக்கூற்று உயிரியல் பரிசோதனை மூலமாக நோய் சிகிச்சையளிப்பு எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் ஊடாக அந்த நோயை கட்டுப்படுத்துவதற்கு உடனடியான நடவடிக்கை மேற்கொள்வதற்கு பண்ணை உரிமையாளருக்கு சந்தர்ப்பம் கிடைக்கின்றன. அதற்கும் மேலாக 2023 ஆம் ஆண்டு இறுதி காலாண்டு முதல் இந்த கருத்திட்டத்தின் கூமூலமாக ஏற்றுமதியை அடிப்படையாகக கொண்ட அழங்கார மீன் பண்ணைகளில் உயிரியல் பாதுகாப்பு பரீசோதனை மேற்கொள்வதற்கு ஆரம்பிக்கப்பட்டுளள்ளன.

திணைக்களத்தினால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்பக் குழு 02 இல் ஏதோ ஒரு குழுவினால் அந்த மீன் பண்ணைகளுக்குச் சென்று அங்கு உயிரியல் பாதுகாப்பின் பொருட்டு உரிய சிபாரிசுகள் வழங்கப்பட்டன. அதற்கு இணையாக கால்நடை பலனாய்வு உத்தியோகத்தரினால் அப்பண்ணைகளில் இருந்து வருடத்திற்கு இரண்டு முறை மாதிரிகளை பெற்றுக் கொள்ளல் மற்றும் தேவையான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதோடு தேவைப்படுமிடத்து மத்திய கால்நடை பலனாய்வு

நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. மூலக்கூற்று உயிரியல் விஞ்ஞான பரிசோதனையின் பொருட்டு தேவையான ஆய்வுகூட பொருட்கள் உட்பட பரிசோதனை தொகுதிகள் இந்த கருத்திட்டத்தின் ஊடாக மத்திய கால்நடை புலனாய்வு நிலையத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. பிரதானமாக அதிகம் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட அழங்கார மீன் பண்ணைகள் பலவற்றினைக் கொண்ட மேல்மாகான மற்றும் வடமேல் மாகாணங்களை அடிப்படையாகக் கொண்டு நாடு முழுவதும் இந்த கருத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

### 3.4 வனவிலங்கு நோய் கட்டுப்பாட்டு வேலைத்திட்டம்

இந்த வேலைத்திட்டம் அம்பாறை, திருகோணமலை, அனுராதபுரம், நுவரெலியா, குண்டசாலை, தம்புல்லை, ஹோமாகம, பெலன்னறுவை மற்றும் இரத்தினபுரி கால்நடை புலனாய்வு நிலையங்களின் கீழ் செயற்படுத்தப்பட்டது. அதன் ஊடாக வனவிலங்குகளில் நிலவுகின்ற கால்நடை நோய்கள் இல்லமுறையிலான மற்றும் விவசாய விலங்குகளுக்கு பரவுவதை கட்டுப்படுத்தும் பொருட்டும் மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போதைக்கு வனவிலங்கு வலயம் சார்ந்த மாவட்ட கால்நடை புலனாய்வு நிலையங்களின் ஊடாக வனவிலங்கு வலயத்தை உள்ளடக்கும் வகையில், நோய்களினால் இறந்து போன விலங்குகளது மரண பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு உரிய மாதிரிகள் ஆய்வுகூடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கும் மேலாக மாவட்ட கால்நடை புலனாய்வு உத்தியோகத்தர்கள் மற்றும் வனஜீவி உத்தியோகத்தர்கள் பொருட்டு பயிற்சி வேலைத் திட்டங்கள் நடாத்தி அறிவூட்டல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த வேலைத்திட்டத்தின் ஆய்வுகூட வசதிகளை மேம்படுத்துவதன் கீழ் முன்னேற்றம் 90% ஆகும்.

## 04. மனித வள அபிவிருத்தி அலகு

### 4.1 விலங்கு பரிபாலன டிப்ளோமாதாரத்களை உருவாக்கும் இயலுமையை வலுப்படுத்தல்.

2024.12.31 ஆம் திகதி ஆகின்ற போது கரந்தகொல்லை விலங்கு பரிபாலன பாடசாலையில் 50 மாணவர்கள் NVQ 5/6 இரண்டு வருட விலங்கு பரிபாலன டிப்ளோமா (2024/26 குழு) பயின்று கொண்டுள்ளதோடு 2024.10.15 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டு மாணவர்கள் 24 பேரினைக் கொண்ட சீப்புக்குளம் விலங்கு பரிபாலன பாடசாலையின் NVQ 4  6 மாத விலங்கு பரிபாலன டிப்ளோமா தற்போது வரை வெற்றிகரமாக நடாத்திச் செல்லப்படுகின்றது.

### 4.2. கால்நடைவள மேம்படுத்தும் வேலைத்திட்டம்

தற்போதைக்கு கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சியான்மையாளர்களுக்கு கால்நடை வளர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு விருப்பம் உள்ள மாணவர்கள் மற்றும் பொது மக்களுக்கு புதிய தொழில்நுட்பம் தொடர்பான அறிவு மற்றும் தகவல்கள் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன. 2024 செப்டம்பர் மாதம் முடிவடைகின்ற போது கண்காட்சிகள் 03 இன் பொருட்டு பங்களிப்பு செய்வதற்கும் தொலைக்காட்சி வேலைத்திட்டம் 18 மற்றும் வானொலி நிகழ்ச்சி 51 உம் ஒலிபரப்பு செய்ய முடியுமாக இருந்தது.

### 4.3. புத்தகங்கள் மற்றும் வெளியீடுகள்

சீப்புக்குளம் மற்றும் கரந்தகொல்ல விலங்கு பரிபாலன பாடசாலை மற்றும் திணைக்கள நூலகத்தின் பொருட்டு புத்தகங்கள் கொள்வனவு செய்வதன் பொருட்டு 2024 ஆம் ஆண்டு ரூபா 0.5 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டது. திணைக்களத்தில் நூலகருக்கான பதவி வெற்றிடம் காணப்படுவதுடன்

தேவைக்கு ஏற்ப புத்தகங்களை கொள்வனவு செய்வது சிக்கலான செயற்பாடாக காணப்படுவதால் புத்தகங்கள் கொள்வனவு செய்வதை தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டது.

**4.4. பயிற்சி இயலுமையை மேம்படுத்துதல்.**

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் மனித வள அபிவிருத்தி அலகின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற மிருக வைத்திய பட்டதாரிகள் பொருட்டு உள்ளக பயிற்சிகள் பெற்றுக் கொடுக்கப்படுவதன் கீழ் புதிய மிருக வைத்திய பட்டதாரிகள் 78 பேர் பொருட்டு உள்ளக பயிற்சி பெற்றுக் கொடுக்கப்பட்டது. கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் பதவியனியினருக்கு பயிற்சி தேவைப்பாடுகள் பொருட்டு பயிற்சி வேலைத் திட்டங்கள் 35 உம் மீளாய்வு கால எல்லை முடிவுறுகின்ற போது நடாத்தப்பட்டு இருந்தன. அவ்வாறே தேவைக்கு ஏற்ப பண்ணையாளர்கள் மற்றும் ஏனைய முயற்சியான்மையாளர்கள் பொருட்டு பயிற்சி வேலைத் திட்டங்கள் 05 சீப்புக்குகளம் விலங்கு பரிபாலன பாடசாலையின் ஊடாக நடாத்தப்பட்டன.

**4.5. உள்நாட்டு பால் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதன் ஊடாக பாற் பண்ணையாளர்களது வருமானத்தை உயர்த்தும் பாற்பண்ணை முயற்சியான்மை அபிவிருத்தி கருத்திட்டம்.**

இந்த கருத்திட்டம் இலங்கையில் ஆறு மாகாணங்களில் மிருக வைத்திய பிரிவுகள் 22 இனை உள்ளடக்கியதாக செயற்படுத்தப்படுவதுடன், தற்போது தங்கி வாழ் மட்டத்தில் உள்ள ஆயினும் உயர் உற்பத்தி திறனுள்ள பண்ணைகளுக்கு தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்து கொடுப்பதன் மூலம் சிற்றளவிலான பால் உற்பத்தி முயற்சியான்மையாளர்களாக உருவாக்குவதை நோக்காக் கொண்டு மாகாண மட்டத்தில் பாற் பண்ணையாளர்கள் 157 பேர் (மத்திய - 20, வடமேல் - 63, ஊவா – 27, வடக்கு – 21, மேல் - 12, தெற்கு – 14) தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்ட பண்ணைகள் பொருட்டு பாற் பண்ணை பொருளாதார மொடியூல் (Economic model) மற்றும் சிறந்த பண்ணை நிர்வாக முறை 12 உம் (Best Practices) செயற்படுத்தும் பொருட்டு பிரதான பயிற்சி வேலைத் திட்டங்கள் 18 உம் நடாத்தப்பட்டு தெரிவு செய்யப்பட்ட பண்ணையாளர்கள் மற்றும் உரிய உத்தியோகத்தர்கள் அறிவூட்டப்பட்டனர். இந்த முயற்சியான்மையாளர்கள் பொருட்டு பாற் பண்ணை முயற்சியான்மையாளர்களுக்கு கையேடுகள் மற்றும் குறிப்பு புத்தகங்கள் தயாரித்து அச்சிடப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. பயிற்சி வேலைத் திட்டங்கள் முடிவுறுத்தப்பட்டதும் சகல பண்ணையாளர்கள் பொருட்டும் வெவ்வேறாக பண்ணை செயற்பாட்டு திட்டமிடல்கள் 157 தயாரித்து முடிவுறுத்தப்பட்டுள்ளன.

*புகைப்பட இலக்கம் 13-15*

தெரிவு செய்யப்பட்ட முயற்சியான்மையாளர்கள் பொருட்டு overalls 150 மற்றும் Boot Pairs 150, பால் மறந்த பசு மாடுகள் பொருட்டு மடியழற்சி உரிய எரிகனைகள் (Mastitis dry cow infusions) (2,000), வேர் விடப்பட்ட புல் தண்டு வெட்டுத் துண்டங்கள் (Rooted CO5 cuttings) (10*300) பெற்றுக் கொடுக்கப்பட்டன.
பண்ணை செயற்பாட்டு திட்டமிடலின் ஊடாக இனங்காணப்பட்ட உற்பத்தி இலக்கினை அடைந்து கொள்வதன் பொருட்டு சிறந்த பண்ணை நிர்வாக முறையினை செயற்படுத்துவதன் பொருட்டு தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்து வைத்தல் மறறுறம் தேவையான உபகரணங்கள் மற்றும்

பொருட்களை இணங்காணல். அதன் பொருட்டு நிதி பங்களிப்பை வினவிய சகல மாகாணங்கள் பொருட்டும் செலுத்தல்கள் தற்போது முடிவுறுத்தப்பட்டுள்ளன.

தெரிவு செய்யப்பட்ட மாகாணங்கள் 06 இன் பொருட்டு நடமாடும் சிகிச்சை நடாத்தப்பட்டதுடன், அதற்கு இணையாக பண்ணை விலங்குகள் பொருட்டு தேவையான கனிப்பொருட் கலவை பக்கற்றுக்கள் (Mineral mixtures) 750 உம், புழு மருந்து (Deworming) 05 கி.கிராம், உண்ணிகள் நீக்கும் பொருட்டு பயன்படுத்தப்படுகின்ற மருந்து போத்தல் (Tickamits) 450 உம், bypass fat 750 கி.கி., பசுக்கன்றுகள் பொருட்டு பால் போத்தல் (calf feeding bottle), மடியழற்சி நோய் பொருட்டு தடுப்பூசி (Mastitis vaccine), சோள விதை (Sorghum seeds) பெற்றுக் கொடுக்கப்பட்டன.

### 05. கால்நடை வள திட்டமிடல் மற்றும் பொருளாதார அலகு

### 5.1 சமூக பொருளாதார அபிவிருத்தி வேலைத்திட்டம்.

இதன் கீழ் கால்நடை வளத்துரையில் உற்பத்தி தரவுகள், கால்நடை எண்ணிக்கை, பண்ணை எண்ணிக்கை மற்றும் மிருக வைத்திய பணிமனைகளினல் மனித மற்றும் பௌதீக வள தகவல்கள் ஒன்று சேர்க்கப்படும். அந்த தகவல்களுக்கு அமைய Livestock Statistical Bulletin, Livestock Outlook, Annual Report போன்ற வெளியீடுகள் வெளியிடப்படுகின்றன. கால்நடை வளத்துறையில் முயற்சியான்மை மற்றும் உற்பத்தியாளர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்ற புள்ளிவிபரத்தை அடிப்படையாகக் கொண்டு Poultry forecast, Poultry bulletin, Dairy bulletin வெளியிடப்படுகின்றன.

இந்த கருத்திட்டத்தின் ஊடாக கறவை மாடுகள், கோழி மற்றும் ஆடு வளர்ப்பு துரைகளின் கீழ் சமூக பொருளாதார ஆய்வுகள் 04 உம் 2024 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்டது. மேலும் பண்ணை பதிவுகளை இற்றைப்படுத்துதல், தரவு தளத்தை ஸ்தாபிக்கப்பட்டுள்ளதோடு அது திறனாகவும் முறையாகவும் நடாத்திச் செல்லும் நோக்கில் சகல மாகாணங்களிலும் உள்ள மிருக வைத்தியர்கள் மற்றும் ஏனைய பதவியனியினர் பொருட்டு அறிவூட்டும் வேலைத்திட்டம் நடாத்தப்பட்டன. மீளாய்வு கால முடிவின் போது பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த பண்ணைகளின் எண்ணிக்கை 83,262 ஆகும்.

### 5.2. மிருக வைத்திய பணிமனைகளில் சேவை வழங்கும் வளையமைப்பை மேம்பாடு செய்தல்.

இந்த கருத்திட்டத்தின் கீழ் 2024 ஆம் ஆண்டு பொருட்டு கால்நடை சட்ட ஒழுங்கமைப்பின் ஊடாக கால்நடை தனிமைப்படுத்தல் நிலையங்களை தொடர்புபடுத்தி டிஜிட்டல் வளையமைப்பு ஒன்றினை தயாரிக்கும் பொருட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் தற்போதைக்கு அதன் பொருட்டு பொருட் கொள்வனவு குழுவின் நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டள்ளதுடன் தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்திடம் இருந்து அதன் சாத்தியம் பற்றி ஆராய்ந்து அறிக்கை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த கருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற திணைக்களத்தின் புதிய இணையதளத்தில் 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமாகின்ற போது முழுமைப்படுத்தி வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### 6. மிருக ஆராய்ச்சி நிறுவனம்

### 6.1 உயர் தரத்தினாலான கால்நடை தடுப்பூசியை உள்நாட்டில் உற்பத்தி செய்தல்

2018 ஆம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த கருத்திட்டம் ஊடாக உயர் தரத்தினாலான கால்நடை தடுப்பூசிகள் உள்நாட்டில் உற்பத்தி செய்வது மேலும் விரிவாக்கப்பட்டது. தற்போது உற்பத்தி செய்யப்படுகின்ற தடுப்பூசி நிலமைகளை மேம்படுத்தும் பொருட்டு புதிய தடுப்பூசிகள்

புதிதாக உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றன. அதற்கு அமைய இந்த கருத்திட்டத்தின் கீழ் 2024 ஆம் ஆண்டு தொண்டையடைப்பான், கருங்காலி மற்றும் ரெனிகேட் தடுப்பூசியை உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்கு தேவையான வசதிகள் மேம்படுத்தப்பட்டன.

| தடுப்பூசி வகை | வருடாந்த இலக்கு | 2024.12.31 ஆம் திகதி யாகின்ற போது உற்பத்தி செய்யப்பட்ட தடுப்பு மருந்து அளவு |
|---|---|---|
| தொண்டையடைப்பான் (Alum) | 40,000 | 40,020 |
| தொண்டையடைப்பான் (Oil adjuent) | 150,000 | 150,000 |
| கருங்காலி | 130,000 | 65,868 |
| ரெனிகட் | 4,571,400 | 4,891,800 |
| தனியார் நிறுவனங்கள் பொருட்டு கேள்விக்கு அமைய தடுப்பூசி உற்பத்தி செய்து வினியோகிக்கப்படும். | | |
| கோழி கொலரா | கேள்விக்கு அமைய | 235,080 |
| பன்றி தொண்டையடைப்பான் | | 3,060 |
| ரெனிகட் | | 1,900,600 |

<u>6.2. உணவு பாதுகாப்பு மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகள் இலகுபடுத்துதல் பொருட்டு விலங்கு உணவு மற்றும் கால்நடை உற்பத்திகளின் தரத்தை சான்றுபடுத்துதல்.</u>

2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த கருத்திட்டத்தின் ஊடாக கால்நடை தீவணம் மற்றும் கால்நடை உற்பத்திகளின் தரத்தை சான்றுபடுத்துவதன் ஊடாக ஏற்றுமதியை இலகுபடுத்துதல் மற்றம் உணவு பாதுகாப்பு உறுதி செய்யப்படுகின்றன. இந்த கருத்திட்டத்தின் கீழ் இவ்வாண்டில் விலங்கு உணவு மற்றும் கால்நடை உற்பத்தி மாதிரிகள் 6,654 தரம் பற்றி பகுப்பாய்வு செய்யப்பட்டன.

### 6.3. கால்நடைவள ஆய்வு வேலைத் திட்டங்கள்

இந்த கருத்திட்டத்தின் கீழ் ஆய்வு கருத்திட்டங்கள் 27 தற்போது செயற்படுத்தப்படுகின்றன. வேண்டுகோலுக்கு அமைய மாதிரி பரீட்சிப்புக்கள் மற்றும் உயிரியல் உற்பத்தி மேற்கொள்ளப்படுவது ஆகிய இதன் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன.

| செயற்பாடு | வருடாந்த இலக்கு | 2023.09.30 ஆம் திகதியாகின்ற போது முன்னேற்றம் |
|---|---|---|
| **உயிரியல் உற்பத்தி** | கேள்விக்கேற்ப | |
| மடியழற்சி நோயை இணங்காணும் பொருட்டு CMT reagent | | 164 லீற்றர் |
| Pullorum antigen doses | | 69,500 |
| MRT antigen doses | | 10,000 |
| Teat dip solution | | 188 லீற்றர் |

### 6.4. கால்வாய் நோய் தடுப்பூசி உள்நாட்டில் உற்பத்தி செய்தல்

இந்த கருத்திட்டத்தின் கீழ் உள்நாட்டில் கால்வாய் நோய் தடுப்பூசி தயாரிக்கப்பட்டது. 2024 ஆம் ஆண்டு பொருட்டு தடுப்பூசி சொட்டுக்கள் 300,000 உற்பத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டது. 2024.12.31 ஆம் திகதி ஆகின்ற போது தடுப்பூசி சொட்டுக்கள் 295,380 உற்பத்தி செய்யப்பட்டன.

### 6.5. மடியழற்சி நோயை கட்டுப்படுத்தல்

இந்த கருத்திட்டத்தின் கீழ் மடியழற்சி நோய் சிகிச்சையளிப்புகள் 30,000 மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளன. மீளாய்வு காலத்தின் போது மடியழற்சி சிகிச்சைமுறை 21,588 உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

## *02. மில்கோ (தனியார்) லிமிடெட்*

*2.1 அறிமுகம்*

*மில்கோ நிறுவனம் 03 பிரதான துறைகளின் ஊடாக தனது செயல்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.*

*i.) உள்நாட்டு பால் பண்ணையாளர்களின் பால் விளைச்சலை சேகரித்தல்*
*ii.) பால் சார்ந்த உற்பத்திளை மேற்கொள்ளல்*
*iii.) குறித்த உற்பத்திகளை "ஹைலண்ட்" வியாபாரப் பெயரில் நாடு முழுவதும் விநியோகித்தல்*

*2.2. 2025 ஆம் ஆண்டின் நிதி இலக்குகள்*

| தொ/இல | பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபா) |
|---|---|---|
| 1 | மூலதன செலவுகள் | 1,239.00 |
| 2 | மீண்டுவரும் செலவுகள் | 18,353.00 |

*2.3. 2025 ஆம் ஆண்டின் பௌதீக இலக்குகள் (நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள்)*

| தொ/இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | ஒரு அலகுக்கான செலவு (ரூ/) | மொத்த செலவு மற்றும் நிதி மூலம் (மில். ரூபா.) |
|---|---|---|---|---|---|
| 1 | சிறிய அளவிலான விவசாய வியாபார பங்கேற்பு செயற்திட்டத்துடன் (SAPP) இணைந்து மேற்கொள்ளும் பால் பண்ணை விவசாயிகளை அபிவிருத்தி செய்யும் திட்டம் | விவசாயிகளின் எண்ணிக்கை | 3,000 | - | (SAPP நிதி) |
| 2 | பசும் புல் வளர்ப்புச் செயற்திட்டம் | ஏக்கர் | 575 | - | (விவசாயிகளின் நிதி) |
| 3 | நடமாடும் கால்நடை வைத்திய சிகிச்சை முகாம்களை நடாத்தல் | சிகிச்சை முகாம்கள் | 1,819 | 6,500.00 | 11.80 |
| 4 | அதிக பால் உற்பத்திக்காக மாடுகளுக்கு குடிநீரைத் தொடர்ச்சியாக வழங்குதல் (நீர் கொள்கலன்களை வழங்குதல்) | நீர் கொள்கலன்களின் எண்ணிக்கை | 800 | 6,000.00 | 4.80 |
| 5 | பாலின் தரத்தை மேம்படுத்த புதிய தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் | பால் குளிரூட்டல் மையங்களின் | 95 | - | (உலக வங்கியின் |

| தொ / இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | ஒரு அலகுக்கான செலவு (ரூ/) | மொத்த செலவு மற்றும் நிதி மூலம் (மில். ரூபா.) |
|---|---|---|---|---|---|
| | கருவிகளை அறிமுகம் செய்தல்(பால் கொள்வனவை டிஜிட்டல் மயமாக்கல்) | எண்ணிக்கை | | | நிதியுதவி) |
| 6 | மாலையில் பால் சேகரிப்பு நடவடிக்கைகளை முறைப்படுத்துதல் மற்றும் பால் குளிரூட்டல் வசதிகளை வழங்குதல் | அதிகரிக்கும் தினசரி பால் சேகரிப்பு (லீட்டர்) | 7,000 | - | (உலக வங்கியின் நிதியுதவி) |
| 7 | விவசாயிகளிடமிருந்து நேரடியாக பால் கொள்முதல் செய்வதை வலுப்படுத்துதல் | புதிய தன்னாட்சி பால் பண்ணையாளர் சங்கங்களின் எண்ணிக்கை | 50 | - | (உலக வங்கியின் நிதியுதவி) |
| | | புதிய பால் பண்ணையாளர்களின் எண்ணிக்கை | 500 | - | (உலக வங்கியின் நிதியுதவி) |
| 8 | பால் பண்ணையாளர்களுக்கு ஒரு நாள் பயிற்சி பட்டறைகளை நடத்துதல் | பட்டறைகளின் எண்ணிக்கை | 446 | 20,000 | 8.90 |
| 9 | தன்னாட்சி பெற்ற பால் பண்ணையாளர் சங்கங்களில் நடைமுறையில் உள்ள செயற்பாடுகள் தொடர்பாக அவற்றின் அலுவலர்களுக்கு ஒரு நாள் பட்டறைகள் மூலம் பயிற்சி அளித்தல் | பட்டறைகளின் எண்ணிக்கை | 190 | - | 5.60 |
| 10 | புதிய உரிமை பெற்ற விற்பனை நிலையங்கள் ஆரம்பித்தல் | விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை | 500 | - | (வெளிப்புற நிதி) |
| 11 | சந்தைக் கணக்கெடுப்பை நடத்தி அதன் மூலம் சந்தைப்படுத்துதலைத் வினைத்திறன்மிக்கதாக மாற்றுதல் | மாதாந்த விற்பனை வருமானம் (மில்லியன் ரூபாய்) | 2,500 | - | 3.00 |
| 12 | படல்கம பால் உற்பத்திச் தொழிற்சாலையில் உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பித்தல் | - | - | - | 2,600.00 (அரச அனுசரணை) |

2.4. 31.12.2024 ஆம் திகதிக்கான நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் முன்னேற்றம்

| நிகழ்ச்சித் திட்டம் | 2024 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) | 31/12/2024 ஆம் திகதி வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | நிதி முன்னேற்றம் சதவீதத்தில் (%) |
|---|---|---|---|
| மூலதன செலவுகள் | 687.00 | 65.00 | 9 |
| மீண்டுவரும் செலவுகள் | 17,993.00 | 15,613.00 | 87 |
| | | | |
| அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | | | |
| சிறிய அளவிலான விவசாய வியாபார பங்கேற்பு செயற்திட்டம் (SAPP) | 18.00 | 0.20 (2024.09.30 ஆம் திகதிக்கு) | 1 |
| பசும் புல் வளர்ப்புச் செயற்திட்டம் | 17.50 | 0.00 (நிதி ஒதுக்கப்பட்டிருப்பினும், பின்னர் விவசாயிகளின் நிதி பங்களிப்பு மூலம் இதனை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது. | 0 |
| கால்நடை இனப்பெருக்க செய்பாடுகளை வினைத்திறனாக்கல் நடமாடும் கால்நடை வைத்திய சிகிச்சை முகாம்களை நடாத்தல் | 7.60 | 3.73 | 49 |
| அதிக பால் உற்பத்திக்காக மாடுகளுக்கு குடிநீரைத் தொடர்ச்சியாக வழங்குதல் (நீர் கொள்கலன்களை வழங்குதல்) | 2.50 | 1.20 | 48 |
| பால் பண்ணையாளர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துதல் | 3.20 | 3.02 | 94 |
| புதிய உற்பத்திகளை சந்தைக்கு அறிமுகம் செய்தல் | 0.20 | 0.02 | 10 |

2.5. 31/12/2024 திகதி வரையிலான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதீக முன்னேற்றம்

1. தினசரி 100 லிட்டர் வீதம் பால் உற்பத்தி செய்யும் பண்ணைகளை விருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம்.

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் (முன்(முயற்சியின் கீழ், நாளொன்றுக்கு 100 லீற்றர் வரை பால் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட பால் பண்ணைகளை நாடளாவிய ரீதியில் அபிவிருத்தி செய்யும் ஒரு செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதன்படி, உற்பத்தித்

திறனினை அடிப்படையாகக்கொண்டு, ஒரு நாளைக்கு 65,000 லிட்டர் பால் உற்பத்தி செய்யும் நோக்கத்துடன் இதற்கான சாத்தியப்பாடுகளைக் கொண்ட 650 பால் பண்ணைகளைத் மில்கோ நிறுவனம் தேர்ந்தெடுத்தது.

இந்த பால் பண்ணையாளர்களுக்கு தேவையான தத்துவார்த்த மற்றும் நடைமுறை அறிவை வழங்குவது மில்கோ கள அலுவலர்கள் மற்றும் 'சந்தை சார்ந்த பால் பண்ணை விவசாயிகள் அபிவிருத்தித் திட்டத்தின் (MOD)' அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டது. மேலும் 2023 ஆம் ஆண்டில், பயிற்சித் திட்டங்கள் மூலம் அறிவை வழங்குதல், 10 பிரதான செயல்திறன் குறிகாட்டிகளின் கீழ் ஒவ்வொரு பண்ணைக்கும் தனித்தனியாக பிரத்தியேக பண்ணை திட்டம் தயாரிக்கும் பணிகள் என்பன நிறைவு செய்யப்பட்டுள்ளன. 2024 செப்டம்பர் மாத இறுதியளவில், 624 பண்ணை திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதுடன் அவற்றில் 510 பண்ணை திட்டங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மூன்றாம் காலாண்டின் முடிவில் அதன் ஒவ்வொரு பிரதான செயல்திறன் குறிகாட்டிகளிலும் காணப்பட்ட முன்னேற்றம் பின்வருமாறு.

| தொ/ இல | செயல்திறன் குறிகாட்டி | முன்னேற்றம் (%) |
|---|---|---|
| 01 | தொடர்ச்சியாக குடிநீர் வழங்கல் | 88 |
| 02 | ஆண்டு முழுவதும் தரத்தில் சிறந்த புற்களை வழங்குதல் | 80 |
| 03 | கறவை மாடு வளர்ப்பு | 77 |
| 04 | கன்றீணா இளம்பசு வளர்ப்பு | 55 |
| 05 | பசுக் கன்று வளர்ப்பு | 51 |
| 06 | சைலேஜ்/பேழைப்பதனம் தயாரித்தல் மற்றும் போசணை | 33 |
| 07 | முழுமையான கலப்பு தீவன பங்கீடு (TMR) உருவாக்குதல் மற்றும் போசணை | 37 |
| 08 | பிறந்து 6 மணி நேரம் கழித்து தாயிடமிருந்து கன்றுகளைப் பிரித்தல். | 37 |
| 09 | மாட்டுத் தொகை முகாமைத்துவம் | 32 |

புகைப்பட இலக்கம் 16 - 17

2. பசும் புல் வளர்ப்புச் செயற்திட்டம்

இந்த செயற்திட்டத்தின் கீழ், 2024 ஆம் ஆண்டில், நாடளாவிய ரீதியில் 2,000 ஏக்கர் நிலப் பரப்பில் பசும் புல் வளர்ப்புச் செய்வதற்கும் 100,000 விலங்குணவு மரங்களைப் (fodder trees) பயிரிடப்பட்டு நிர்வகிக்கவும் திட்டமிடப்பட்டது. அதன்படி, 2024 ஆம் ஆண்டு இறுதியளவில், மில்கோ கள அலுவலர்களின் வழிகாட்டுதல் மற்றும் தொழில்நுட்ப உதவி என்பவற்றின் கீழ், 575 ஏக்கருக்கும் அதிகமான நிலப் பரப்பில் தீவனப் புல் வகைகள் நடப்பட்டதுடன், 60,533 விலங்குணவு மரங்கள் நடப்பட்டுள்ளன. இதற்கான செலவுகளை சம்பந்தப்பட்ட விவசாயிகளால் பொறுப்பேற்கப்பட்டன.

புகைப்பட இலக்கம் – 18

3. சிறிய அளவிலான விவசாய வணிக பங்கேற்பு நிகழ்ச்சித் திட்டம் (SAPP)

விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தினால் (IFAD) இலங்கையில் அமுல்படுத்தப்படும் சிறிய அளவிலான விவசாயப் பங்கேற்புத் திட்டம் (SAPP) மில்கோ நிறுவனத்துடன் இணைந்து 3,000 பால் பண்ணையாளர்களை அபிவிருத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டு ஊவா, மத்திய,

வடமேற்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் இந்த நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இதன் கீழ், 2024ம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு இறுதிக்குள், விவசாயிகளுக்கு 1,078 கால்நடைக் கொட்டகைகள், 51 விவசாயக் கிணறுகள், 387 அசொல்லா குளங்கள் என்பவற்றை அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டதுடன், 20 புல் துண்டாக்கும் இயந்திரங்கள் விவசாயிகளுக்கு மத்தியில் விநியோகிக்கப்பட்டுள்ளன. அத்துடன், 191 பால் பண்ணையாளர்களுக்கு கடன் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

புகைப்பட இலக்கம் 19 – 20

4. கால்நடை இனப்பெருக்கத்தை செயற்திறன்மிக்கதாக மாற்றுதல்

பண்ணைகளிலே கறவை மாடுகளின் நோய்களைக் கண்டறிதல், சிகிச்சை அளித்தல், நோய் தடுப்பு ஆலோசனைகள் வழங்குதல் மற்றும் ஏனையே உடல்நலப் பிரச்சனைகளை நிர்வகித்தல் போன்ற நோக்கத்துடன் நடமாடும் கால்நடை மருத்துவ முகாம்களை நடாத்தல் மற்றும் செயற்கை கருவூட்டல் நடவடிக்கை ஆகியவற்றை தொடர்ச்சியாக மில்கோ நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

2024 ஆம் ஆண்டில் 1,140 நடமாடும் கால்நடை மருத்துவ முகாம்களை நடத்தவும், 5,000 செயற்கை கருவூட்டல்களை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டது. அதற்கு அமைவாக, 2024 ஆம், ஆண்டின் இறுதியில், 662 கால்நடை மருத்துவ முகாம்களும், 5,961 செயற்கை கருவூட்டல்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்காக மில்கோ நிறுவனம் சுமார் 4 மில். ரூபாய் செலவிட்டுள்ளது.

5. அதிக பால் உற்பத்திக்காக மாடுகளுக்கு குடிநீரைத் தொடர்ச்சியாக வழங்குதல்

பால் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு கறவை மாடுகளுக்கு தொடர்ச்சியாக குடிநீரைப் பெற்றுக் கொடுப்பது அவசியம் ஆகும். விவசாயிகள் இதனைப் பின்பற்ற ஊக்கமளிக்கும் வகையில், 2024 ஆம் ஆண்டு விவசாயிகளுக்கு 500 தண்ணீர் கொள்கலன்கள் வழங்கத் திட்டமிடப்பட்டது. இதன்போது இதற்கான செலவில் அரைவாசியை விவசாயிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளும் அடிப்படையிலே இந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படாது. அதற்கு அமைவாக, 2024 ஆம் ஆண்டின் இறுதிக்குள் மத்திய, வடமேற்கு, மேற்கு, வடமத்திய, ஊவா மற்றும் சப்ரகமுவ மாகாணங்களை உள்ளடக்கிக்கும் வகையில், விவசாயிகளுக்கு 229 குடிநீர் கொள்கலன்கள் தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன. இதற்காக மில்கோ ஒரு மில்லியன் ரூபாய்க்கு மேல் செலவிட்டுள்ளது.
புகைப்பட இலக்கம் - 21

6. பால் பண்ணையாளர்களுக்கு பயிற்சிச் செயலமர்வுகளை நடத்துதல்

வினைத்திறனான, பயனுறுதிமிக்க மற்றும் தொடர்ச்சியான பால் உற்பத்தியை உறுதி செய்வதற்காக, மில்கோ கள ஊழியர்கள் நடைமுறை ரீதியான மற்றும் தத்துவார்த்த அறிவை வழங்குவதோடு, பால் பண்ணையாளர்களுக்கு தொடர்ச்சியான பயிற்சி நடவடிக்கைகளையும் அளித்து வருகின்றனர். அதன்படி, 2024ஆம் ஆண்டு நாடளாவிய ரீதியில் 5,425 பால் பண்ணையாளர்களுக்குப் பயிற்சியளிக்க திட்டமிடப்பட்டு, 2024ஆம் ஆண்டு இறுதிக்குள் 5,150 பால் பண்ணையாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இதற்காக மில்கோ நிறுவனம் சுமார் 3 மில். ரூபாய் நிதியை செலவிட்டுள்ளது.
புகைப்பட இலக்கம் - 22

## *03. தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபை*

*3.1. அறிமுகம்*

*1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விவசாயக் கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபையானது 1973 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டதுடன் அதன் கள நடவடிக்கைகள் 1974 இல் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது, சபைக்குச் சொந்தமாக 32 பண்ணைகளைக் உள்ளன. மேலும் இந்த பண்ணைகள் மாடுகள், எருமைகள், ஆடுகள், செம்மறி ஆடுகள், பன்றிகள் மற்றும் கோழி வளர்ப்பு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதுடன் விவசாயிகளுக்கு இனப்பெருக்கத்திற்காக விலங்குகளை வழங்குவது சபையின் பிரதான நோக்கம் ஆகும். மேலும், பால், முட்டை, இறைச்சி போன்ற பண்ணை உற்பத்திப் பொருட்களை உயர்தரத்திலான உற்பத்திகளாக நுகர்வோர் சமூகத்துக்கு வழங்குகிறது. மேலும், சபையின் அனைத்து பண்ணைகளிலும் விவசாயிகள் மற்றும் மாணவர்களுக்கு கால்நடை வளர்ப்பு குறித்து ஆண்டுதோறும் பயிற்சி அளிக்கப்படுகிறது. தேசிய கால்நடை அபிவிருத்தி சபை கடந்த 50 ஆண்டுகளாக நாட்டின் கால்நடை வளத் துறையில் அபிவிருத்தி முன்னோடியாக செயற்பாட்டு வருகிறது.*

*3.2. 2025 ஆம் ஆண்டின் நிதி இலக்கு*

| தொ/ இல | பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபா) |
|---|---|---|
| 1 | மூலதன செலவுகள் | 630.00 |
| 2 | மீண்டுவரும் செலவுகள் | 6,710.00 |

*3.3. 2025 ஆம் ஆண்டின் பௌதீக இலக்குகள் (செயல்படுத்தப்பட உத்தேசித்துள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள்)*

| நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | ஒரு அலகுக்கான செலவு (மில். ரூபா.) | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|
| பசுப் பால் உற்பத்தி | மில்லியன் லீட்டர் | 6.80 | 230.72 | 1,938.00 |
| எருமைப் பால் உற்பத்தி | மில்லியன் லீட்டர் | 0.93 | 402.42 | 398.40 |
| ஆட்டுப் பால் உற்பத்தி | லீட்டர் | 25,914 | 648.85 | 10.97 |
| ஒரு நாள் வயதுடைய பிராய்லர் கோழிக் குஞ்சுகள் | எண்ணிக்கை மில்லியன் | 4.08 | 128.92 | 451.22 |
| ஒரு நாள் வயதுடைய முட்டையிடும் கோழிக் குஞ்சுகள் | எண்ணிக்கை மில்லியன் | 1.1 | 195.96 | 195.96 |
| பிராய்லர் கோழி இறைச்சி | கிலோ கிராம் | 31,920 | 723.58 | 189.29 |
| முட்டை உற்பத்தி | எண்ணிக்கை மில்லியன் | 6.5 | 36.84 | 291.04 |
| தேங்காய் உற்பத்தி | காய்கள் - மில்லியன் | 17.8 | 49.53 | 950.88 |
| இனப்பெருக்கத்திற்காக விலங்குகளை வழங்குதல் | | | | |
| மாடு - ஆண் | | 1,102 | | |
| பெண் மாடு – பசு | | 79 | | |
| எருமை மாடு - ஆண் | | 445 | | |
| எருமை மாடு - பெண் | | 30 | | |

